

விகடன் பிரசுரம்



# கனவு மெய்ப்பட வேண்டும்



தமிழருவி மணியன்

# கனவு மெய்ப்பட வேண்டும்

தமிழருவி மணியன்

www world

விகடன்
பிரசுரம்

Title :
KANAVU MEYPADA VEANDUM
© THAMIZHARUVI MANIAN
ISBN : 978-81-8476-367-6

விகடன் பிரசுரம்: 602

நூல் தலைப்பு:
கனவு மெய்ப்பட வேண்டும்

நூல் ஆசிரியர்:
© தமிழருவி மணியன்

அட்டை ஓவியம்:
ஷிவராம்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2011

விலை : ₹ 85

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்
www.t.m ... ksworld
ஆசிரியர்:
கே.அசோகன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்
இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.
விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail:publications@vikatan.com

# மனிதம் போற்றிய மகாகவி!

தொலைநோக்குப் பார்வையோடும், சமதர்ம சிந்தனையோடும் சமூகத்தை உற்று நோக்கியவர் மகாகவி பாரதி. இனம், மொழி, நாடு, சாதி என்று அனைத்தையும் கடந்து சிந்தித்த அற்புத பிறவி! அடித்தட்டு மக்கள் சந்திக்கும் அவலங்களை எளிய கவிதை வரிகளாலே உணர்த்திய மாமனிதர்!

அவருடைய புரட்சிகர சிந்தனைகளில் பெண்கல்வி, விதவை மறுமணம், பெண் விடுதலை, மதநல்லிணக்கம். கலப்புத் திருமணம் என எல்லாமே சமுதாய சீர்திருத்த நோக்குடன் அமைந்தவை. கொள்கைகள் யாருடையதானாலும், அதிலுள்ள குறைகளையும் நிறைகளையும் சமூக நலன் சார்ந்த கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து, தன் கருத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்துவதில் பாரதிக்கு இணை பாரதிதான்! .

சமூக மறுமலர்ச்சியையும், தேசத்தின் விடுதலையையும் தனது உயிர்மூச்சாகப் பாவித்த பாரதியின் கவிதைகள், உரைநடைகள், கடிதங்கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி, புரட்சிகரமான நடையில் இந்த நூலை எழுதியிருக்கிறார் தமிழருவி மணியன்.

www.t.me/tamilbooksworld

மானுடத்துக்கும் மனிதநேயத்துக்கும் சான்றாக அமைந்திருக்கும் கவிஞரின் எண்ணங்களையும், அவர் ஏற்படுத்திய எழுச்சி மிகு மாற்றங்களையும் இந்த நூலில் தெளிவாக விளக்குகிறார். தேசத்தின் ஒற்றுமைக்கும், சமுதாய மேம்பாட்டுக்கும் உகந்த ஆழ்ந்த சிந்தனைகளைக் கொட்டிக் குவித்த 'பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டும்' என்பதை தன் எழுத்தின் வன்மையோடு விளக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

தேசியம், தெய்விகம், மதம் என பல விஷயங்களிலும் பாரதியின் பார்வை எத்தகையது என்பதைப் படித்தறிய - பகுத்தறிய உதவும் நூல் இது.

- ஆசிரியர்

# நுழைவாயில்...

அறிவு கண்விழிக்கத் தொடங்கிய காலம்தொட்டு என்னுடைய ஆதர்ச ஆசானாக நெஞ்சுள் நான் நேர்ந்து கொண்ட மனிதன் மகாகவி பாரதி.

அவனுடைய ஒவ்வொரு எழுத்தும் என் சிந்தனையைச் செதுக்கிச் செப்பனிட்டது.

‘பொய்மை, இரட்டுற மொழிதல், நடிப்பு, வஞ்சனை ஆகியவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப்பிழைப்பு’ என்று அவன்தான் எனக்கு ஞானோபதேசம் அருளினான்.

இயன்றவரை வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்வதற்கு வழிகாட்டியவனும் அவனே.

www.t.me/tamilbooksworld

கால நடையில் இந்தக் கல்லைச் சிற்பமாக்கியது அவனுடைய கவிதை உளி.

மனம் சோர்வுற்றுச் சலிப்புறும்போதெல்லாம் ஊக்கம் தந்து உள்ளொளி பெருக்குவது அவன் தந்துவிட்டுச் சென்ற தமிழே.

உலகில் அவனைவிட உயர்வான, உண்மையான நண்பனும் வழிகாட்டியும் எனக்கு வேறெவரும் இல்லை.

நம் மண்ணில் தோன்றிய மகாகவிகளில் பலவகையில் வேறுபட்டவன் பாரதி. மனித சமூகத்தின் மீது அவனுக்கிருந்த அளவற்ற அன்பும் அக்கறையும் இதுநாள்வரை இன்னொரு கவிஞனுக்கு இருந்திருக்குமா என்பது சந்தேகம்.

முள்படுக்கையில் படுத்தபடி முகம் மலரச் சிரிக்கும் அபூர்வமான ஒரு யோகியைப்போல, வறுமை நெருப்பு வீட்டைச் சுட்டெரித்தபோதும், ‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா!’ என்று ஆனந்தக் கூத்தாட அவனால் மட்டுமே முடிந்தது.

‘எமக்குத் தொழில் கவிதை’ என்றான் அவன். உண்மையில், கவிதை எழுதுவது அவனுக்குத் தொழிலாக இருக்கவில்லை.

எல்லா உயிர்களிடத்தும் பேதமற்று அன்பு செய்து, அவ்வுயிர்களின் இன்பம் பெருக்குவதுதான் அவனுடைய ஒரே தொழிலாக இருந்தது.

அந்தத் தொழிலை ஒழுங்காகச் செய்வதற்கு அவனுக்கு ஒரு கருவி தேவைப்பட்டது. அந்தக் கருவிதான் கவிதை.

சுயநலம் சிறிதுமின்றி, மக்கள் நலன்சார்ந்து சிந்தித்து இலக்கியத்தை ஜனநாயகப்படுத்திய முதல் கவிஞன் அவன்தான்!

அவனைப்போல் தமிழ்க் கவிதையின் பாடுபொருளை விரிவுபடுத்தியவன் வேறொருவன் இல்லை.

கிழடு தட்டிப்போன தமிழிலக்கியத்துக்குப் புத்திளமை தந்த புதுயுகக் கவிஞன் அவன்.

அவனுக்குள் ஆயிரம் கனவுகள் சிறகசைத்தன. ஆனால், அவற்றுள் ஒன்றுகூட, சொந்த சுகம் சார்ந்ததில்லை.

தன்னைப்பற்றியே நினைந்து வாழ்ந்த சராசரி மனிதர்களுக்கு நடுவில், சதாசர்வகாலமும் நம் மண்ணைப்பற்றியே சிந்தித்துச் செயற்பட்ட மகாகவிஞன் அவன்!

www.t.me/tamilbooksworld

'கனவு மெய்ப்பட வேண்டும்' என்னுள் கருவானதுக்குச் சில காரணங்கள் உண்டு.

பார்ப்பன குலத்தில் பிறந்த பாவத்துக்காகவே பாரதியைப் பழிப்பதில் சிலருக்குச் சுகானுபவம் உண்டு.

சாதிக் கண்கொண்டு அவனை அணுகுதல் எந்த வகையிலும் சகிக்கவொண்ணாதது. பாரதியின் படைப்பில் உள்ள நேர்மை, அவனைப் பழிதூற்றுபவர்களிடம் இல்லை. ஈழத்தை அவன் 'சிங்களத்தீவு' என்று பாடிவிட்டதுக்காகப் பகைப்பவர்கள் சிலர். வடமொழியை அவன் வாழ்த்தியதுக்காக வசைபாடுபவர்கள் சிலர். வருணப் பகுப்பை அவன் வரவேற்றதற்காக விமர்சிப்பவர்கள் சிலர். வன்முறையை அவன் ஏற்காததால் 'பூர்ஷ்வா' என்று சித்திரிப்போர் சிலர். கட்டற்ற விடுதலைக் காதலை மறுத்ததால் கண்டிக்கும் பெண்ணியவாதிகள் சிலர். பாவம் பாரதி!

ஒன்றின் மீது எல்லை கடந்த விருப்பும் வெறுப்பும் உள்ளவர்க்கு உண்மை முழுமையாக தரிசனம் தருவதில்லை.

இரண்டு எல்லைகளில் நிற்காமல் நடுப்பாதையில் நடப்பவர்கள்தான் நியாயத்தின் நிறம் காண முடியும்.

எந்தச் சிந்தனையாளனின் கருத்துக்களையும் அப்படியே எல்லாராலும் ஏற்க இயலாது.

எந்த தலைவனின் கொள்கைகளையும் முழுமையாக பின்பற்ற முடியாது. தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதைக் கொள்வதுதான் விவேகம். பாரதியும் இதில் விலக்கில்லை.

இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தியே இருக்க வேண்டும் என்றார் அம்பேத்கர். வலிமை மிக்க மத்திய அரசுக்காக வாதாடியவர் அவர். அதற்காக அண்ணல் அம்பேத்கரின் மகத்தான மானுட சேவையை யாராவது மறுக்கக் கூடுமா?

'தமிழ் காட்டுமிராண்டி மொழி' என்றார் பெரியார்.

'ஆங்கிலமே தமிழரின் வீட்டுமொழியாக இருக்க வேண்டும்' என்றார் அவர். அதற்காகப் பெரியாரின் தியாக வாழ்வைப் புறந்தள்ளும் நன்றியற்ற மனிதர் யாராவது உண்டா?

www.t.me/tamilbooksworld

பாரதியின் சில கொள்கைகளில் எனக்கும் உடன்பாடில்லை. மாறி வரும் சமூகப் போக்கில் எந்தக் கருத்தும் விமர்சனத்துக்குரியதே.

ஆனால், அவன் மீது சாதிச்சாயம் பூசுவதில் எனக்குச் சம்மதமில்லை. அவன் காலத்தில் அவனளவு முற்போக்காக சிந்தித்தவன் எவனுமில்லை என்பதுதானே சரித்திரம்!

போகட்டும். பாரதியை என் அறிவுக்கு எட்டியவரை நியாயத் தராசில் நிறுத்தி, இந்த நூலில் அளந்திருக்கிறேன்.

விமர்சகர்கள் மேலும் கத்தியைத் தீட்டுவதோ, தீட்டிய கத்தியை வீசியெறிவதோ, அவர்கள் விருப்பம்.

பாரதியின் கவிதைகள் பேசப்படும் அளவுக்கு அவனுடைய உரைநடை பேசப்படுவதில்லை.

பாரதி என்ற இலக்கிய நாணயத்தின் ஒரு பக்கம் கவிதை; மறுபக்கம் உரைநடை.

இந்த நூலில் ஓர் இலக்கிய நோக்கம் கருதியே அவனுடைய உரைநடையை அதிகமாக மேற்கோள் காட்டியிருக்கிறேன்.

இந்த நேரத்தில், இதயம் நிறைந்த அன்புடன் தமிழக அரசின் பாரதியார் விருதை எனக்கு வழங்கி, என்னை நெகிழச் செய்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

என்னளவில் அவர் தந்த 'பாரதியார் விருது' நோபல் பரிசைவிட உயர்ந்தது.

இந்த நூல் உருவாவதற்கு அவர் அளித்த விருதும் ஓர் உந்துதல்.

ஒரு மேலான கவிதைக்குரிய நேர்த்தியோடு தூரிகையின் துணைகொண்டு ஓவியங்கள் தீட்டும் ஷிவராமின் கைவண்ணம் முகப்பட்டையாகக் கனிந்ததில் மகிழ்ச்சி.

என்னுடைய கட்டுரைகளை முதலில் 'தென்திசை' மூலமாக வெளியிட்ட நண்பர்கள் மை.பா.நாராயணன், திருமாவேலன் ஆகியோருக்கு நன்றி.

www.t.me/tamilbooksworld

இப்போது இந்த 'கனவு மெய்ப்பட வேண்டும்' விகடன் பிரசுரம் மூலமாக வெளிவருவதில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி.

என் வாழ்வில் எழுதுகோல் மூலம் அர்த்தமுள்ள பணிகளை நான் செய்வதற்கு 'விகடன் குழுமம்' அடித்தளமாக இருக்கிறது. ஆனந்த விகடனில் நான் எழுதிய 'ஊருக்கு நல்லது சொல்வேன்!' தனி நூலாக வெளிவந்து வாசகர்களிடம் பெற்ற வரவேற்பைப் போன்றே, சக்தி விகடனில் வெளிவந்த 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' தொடரும், ஜூனியர் விகடனில் வெளிந்த 'எங்கே போகிறோம் நாம்?' தொடரும் நூல்களாக வெளிவந்து பெரிய வரவேற்பைப் பெற்றதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

கருத்துச் சுதந்திரத்தின் காவல் தேவதையாகத் திகழும் விகடன் குழுமத்துக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும்.

அன்புடன்,

தமிழருவி மணியன்

**இந்த நூல்...**

*ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், வ.ரா., தோழர் ஜீவா உள்ளிட்ட பாரதி ஆய்வாளர்கள்தம் பாத மலர்களுக்கு...*

www.t.me/tamilbooksworld

# 1



# சொல் புதிது பொருள் புதிது...

*தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்*

*இமைதிற வாமல் இருந்த நிலையில்*

*தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்*

www.t.me/tamilbooksworld

*தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்*

*இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.*

*- பாவேந்தர் பாரதிதாசன்*

மகாகவி பாரதி... மாளிகை முற்றங்களில் மட்டும் இதமாக வீசிக்கொண்டிருந்த கவிதைத் தென்றலை மண் குடிசைக்குள் குடியேற்றிய முதல் மக்கள் கவிஞன். வானத்து நிலாவையும், முடிமன்னர்களின் உலாவையும் கிழடு தட்டிப்போன பழைய உவமைகளின் துணையோடு பாடிக்கொண்டிருந்த இலக்கணப் புலவர்களுக்கு இடையில் 'மரங்களைப்போல் மழையில் நனைந்து, விறகுகளைப்போல் வெயிலில் காய்ந்த பாதையோரத்துப் பஞ்சைகளின்' பக்கம் பார்வையைத் திருப்பிய புதுயுகக் கவிஞன் அவன்.

மன்மதனின் மலர்க்கணைப்பட்டு, மாலைத் தென்றலில் மதிமயங்கி, ஆளன் வருகைக்காக அணையாத விரக நெருப்பை நெஞ்சில் சுமந்து, காற்றையும் கிளியையும் தூதனுப்பித் துடித்து நிற்கும் தோகையரின் காமப் புலம்பலை ரசனையுடன் இலக்கியமாக்கிய கவிராயர்களுக்குப்

பின்னால் கவிதையைக் கௌரவிப்பதற்காகவே எழுதுகோல் ஏந்தியவன் பாரதி.

ஜமீன்தார்களின் மலினமான மனஉணர்ச்சிகளுக்குத் தீனி போடுவதற்காகவே விறலி விடு தூதும், கூளப்ப நாயக்கன் காதலும் பாடி இலக்கியத்தைச் சிலர் சிறுமைப்படுத்திய வேளையில், தன் வாழ்காலச் சமூகத்தின் இழிவுகளைப் போக்குவதற்கு அமில தாரை வழியும் அருவியாகத் தன்னுடைய பேனா மையை ரசவாதம் செய்து, சமூகப் புரட்சிக்குக் கவிதையைச் சக்திமிக்க ஆயுதமாக மாற்றிக் காட்டிப் புதிய சரித்திரம் படைத்தவன் பாரதி. அதனால்தான், 'தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான்' என்று பாவேந்தர் நெஞ்சம் நெகிழ்ந்து தன் பாடலில் பதிவு செய்தார்.

'மனித வர்க்கத்துக்கு உய்வு கலையும் கவிதையும்தான். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம் கவிதைதான். தத்துவத்திலே தர்க்கம் நிறைந்திருக்கலாம்; சயன்சிலே அறிவு மிதந்து கிடக்கலாம்; மதத்திலே பக்தி பூரித்து நிற்கலாம்; காதலிலே கனிவும் கீதமும் குழைவும் மண்டிக்கிடக்கலாம்; கலையிலே அழகும் ஆனந்தமும் விம்மி விழிக்கலாம். ஆனால், இவை எல்லாவற்றையும் தனக்கு அங்கங்களாகக் கொண்டிருக்கும் கவிதையைக் கடவுள் என்று நான் போற்றுகிறேன். ஒப்புயர்வில்லாத கவிதையைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார் என்று நான் உரக்கக் கூவுகின்றேன்...' என்றார் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை அழகாக எழுத்தில் வடித்துக் கொடுத்த வ.ரா. ஆம்! மகாகவி பாரதியின் கவிதைகள் அனைத்தும் ஒப்புயர்வில்லாதவை என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது.

www.t.me/tamilbooksworld

நமக்குத் தொழில் கவிதை

உலகத்தின் போக்கில் எவையெல்லாம் எப்படி இருக்கின்றன என்று பார்த்து அவற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது படைப்பாளியின் கடமையாகாது. நிகழ்வுகளை அவை நிகழ்ந்தவண்ணம் பதிவு செய்வது ஒரு வரலாற்றாசிரியன் வேலை. கவிஞன் வெறும் வரலாறு எழுதுபவனில்லை. தன்னுடைய உயர்ந்த கனவை, உன்னதமான லட்சியத்தை, தான் வாழும் சமூகம் எப்படியிருக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தும் வலிமைமிக்க ஒரு கருவியாகக் கவிதையை அவன் கைக்கொள்கிறான். ஓர் உண்மையான கவிஞனுக்கு எழுத்து ஒருபோதும் வணிகப் பொருள் இல்லை. அது

அவனுடைய வாழ்காலத் தவம்.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்

இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்; உமைக்கினிய

மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்;

சிந்தையே, இம் மூன்றும் செய்.

- என்று பிரகடனம் செய்கிறான் பாரதி.

தமிழ் இலக்கிய உலகத்தில் இதுபோன்ற சமூகநலன் சார்ந்த பிரகடனத்தை பாரதிக்கு முன்பு வேறு யாரும் செய்ததில்லை. ‘நமக்குத் தெரிந்த தொழில் கவிதை’ என்கிறான். தொழில் வேறு; வேலை வேறு. தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒருவன் எதைச் செய்தாலும் அதற்குப் பெயர் வேலை. சமூக நலனுக்காக ஒருவன் முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றுவதற்குப் பெயர்தான் தொழில். சக மனிதர்களின் நலன் காக்கச் செயற்படும் தளமாக பாரதி கவிதையை நேர்ந்து கொண்டான். அதனால், கவிதையே அவனுடைய தொழிலாயிற்று. இந்தப் பிரபஞ்சத்தோடு ஆழ்ந்த அர்த்தமுள்ள உறவுகொள்ள அதுவே பாரதிக்குப் பாலமாயிற்று. இமைப்பொழுதும் சோராமல் கவிதையின் மூலம் நாட்டுக்கு உழைப்பதுதான் அந்த மகாகவியின் ஒரே நோக்கமாயிற்று.

www.t.me/tamilbooksworld

‘கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும் என்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி’ என்பது பாரதியின் வாக்குமூலம். ‘A poet’s life should be a true poem’ என்றான், ‘இழந்த சொர்க்கம்’ தந்த இறவாக் கவிஞன் மில்டன். பாரதிக்கும் மில்டனுக்கும் வாய்த்தது ஒரே பார்வை.

‘கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும்’ என்று பாரதி துடிக்கவில்லை. ஆனால், அவனுடைய சமூகச் சார்பான சிந்தனைகள் அவனுடைய பேனாவை மூடி வைக்க விடவில்லை. புறச்சார்புத் தன்னுணர்ச்சி ததும்பும் தனிக் கவிதைகள், குறுங்காவியம், கவிதை, நாடகம், கட்டுரைகள், குழந்தை இலக்கியம், புதினம், பயணநூல், வரலாறு, மொழி பெயர்ப்புகள், புதுக்கவிதை, சுயசரிதம் என்று ஒவ்வொரு துறையிலும் தமிழில் அவன் தனிப்பாதை அமைத்தான்.

‘அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகு படுத்தாமலும் இருக்கவில்லை’ என்று டாக்டர் ஜான்சன் என்பவர் கோல்டுஸ்மித் என்ற மேதாவி எழுத்தாளரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இதையே இன்னும் அதிகமான அழுத்தத்துடன் பாரதியாரைப் பற்றிச் சொல்ல முடியாதா? என்று வ.ரா.கேட்பதை இங்கே யார்தான் மறுக்க முடியும்!

*மானுடம் பாடிய மகாகவி*

*‘கடவுள்மீது பாடினாலும். காதல்மீது பாடினாலும் நம் கவிதைகள் பல கஞ்சாக் கவிதைகள். நமது புலவர்களும் கவிதையைப் புகலிடமாகக் கொள்ளும் வழியில்தான் சென்றுவிட்டார்கள். காரணம், நமது புலவர்களுக்கு ஈனக் கவலைகள் அதிகம். அந்தக் கவலையை மறப்பதற்குக் கடவுளோ, கள்ளோ, காமமோ கவிப்பொருளாய் நின்று அவர்களுக்கு உதவியிருக்கிறது’ என்று கடும் விமர்சனத்தை வைக்கிறார் பாரதி ஆய்வாளர் தொ.மு.சி. ரகுநாதன்.*

*தன்னுடைய சொந்தக் கவலைகளுக்கு இலக்கிய முக்கியத்துவம் தராமல் சமூகக் கவலைகளை நெஞ்சிலேற்றி, பாட்டுத் திறத்தால் இந்த வையகத்தைப் பாலித்திட எழுதுகோல் ஏந்திய பாரதிக்கு இந்த விமர்சனம் இம்மியும் பொருந்தாது.*

www.t.me/tamilbooksworld

*மனிதரைப் பாடுவதே மாபெரும் குற்றமாகக் கருதப்பட்ட காலமொன்று தமிழிலக்கிய உலகில் உண்டு. சங்க இலக்கியங்களில் நாம் சந்திக்கும் சாதாரண மாந்தரை பக்தி இலக்கியக் காலம் தொட்டுப் பார்க்க முடியவில்லை. சமூகத்தின் பிரச்னைகள் இலக்கியத்தில் இடம்பெறவில்லை.*

*பேரின்பப் பெருவெளியை நோக்கிச் சமயச் சிறகசைத்து, மண்ணிலிருந்து முற்றாக விடுபட்டு மேலே, மேலே இலக்கியப் பறவை பறந்துகொண்டிருந்தது. விண்ணில் கடவுளும், மண்ணில் காதலுமே பாடுபொருளானது. காலநடையில் மனிதக் காதலும் மறைந்து கடவுட் காதலே கவிதையாகக் கனிந்தது.*

‘வாய் கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன்’ என்று பெருமிதம் பொங்கப் பறைசாற்றினார் நம்மாழ்வார். ‘நாக்கொண்டு மானிடம் பாடேன்’ என்று நவின்றார் திருமழிசை ஆழ்வார். ‘செவிக்கின்பமாவது செங்கண்மால் நாமம்’ என்பதே மந்திரமாக மாறிப்போனது. தாயுமானவரும் வள்ளலாரும் கவிதையை எளிமைப்படுத்தினர். சாதாரண மனிதர்கள் குறித்துப் பாட்டில்

சிந்தித்தனர். ஆனால், அவர்களுடைய படைப்புகளில் சமூகச் சார்பைவிட, சமயச் சார்பே அதிகமாக நிறம் காட்டியது. அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஆண்டவனிடம் காட்டும் ஈடுபாடே தீர்வைத் தருமென்று திசை திருப்பியது.

பாரதி பேனா பிடித்தான். 'தமிழரிடையே புதிய யுகம் பிறந்தது. தமிழுக்குப் புதிய உயிரும், புதிய உணர்வும் வந்து சேர்ந்தது. தமிழ்க் கவிதையுலகம் புதிய பரிமாணத்தைப் பெற்றது. இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையில் இருந்த இடைவெளி நீங்கியது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சமுதாயச் சார்புடைமை இரண்டறக் கலந்தது. விண்ணை நோக்கி விரிந்த கவிதை மண்ணில் வேர்பிடித்து மானுடப் பூக்கள் மலரும் மரமாக மாறியது. இந்த இலக்கிய அதிசயம் பாரதி ஒருவனால்தான் முதன்முதலில் நிகழ்ந்தது.

பாரதியின் சாதனை சாதாரண மனிதர்களைப் பற்றிச் சாதாரண மொழியில் பாடியதுதான். 'சாதாரணத்தின் அசாதாரணத்தை, எளிமையின் ஏற்றத்தை உணர்த்தியதுதான் பாரதியின் இலக்கியப் புரட்சி. இதை அவர் பார்வையிலும் (vision) நடையிலும் (style) பார்க்கலாம். பாரதி பயன்படுத்தியவை இலக்கியத்தின் சொற்களல்ல; இதயத்தின் சொற்கள். அவருடைய கவிதை வெறும் சொற்சிலம்பமல்ல; சத்தியத்தின் உணர்ச்சிக் கோவை' என்கிறார் பேராசிரியர் கா.செல்லப்பன்.

www.t.me/tamilbooksworld

பண்டிதர் பரணிலிருந்து இலக்கியத்தை இறக்கிப் பாமர மக்களின் நெஞ்சுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்லவே எளிய சொற்களில், நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, வழிநடைச் சிந்து போன்ற நாட்டுப்புற இசை மரபுகளில், மறவன், கோணங்கி, அம்மாக்கண்ணு, வண்டிக்காரன், பள்ளர் வாய்மொழியாகப் பாட்டை வடித்தான் பாரதி. அவனுடைய திட்டமிட்ட கவிதை நோக்கத்தால் இலக்கியக்கனி ஏழை வீட்டு இலையில் விழுந்தது. அதனால்தான் பாரதிதாசன், 'அந்நாளில் பொருளில் விரியும் தமிழ்ச் செய்யுட்கள் இருந்தன. பொருள் புரியும் தமிழ்ச் செய்யுட்கள் இல்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டில் விழுந்த தமிழகம் பாரதியாரின் பாட்டு வரும் வரைக்கும் எழுந்திருக்கவே இல்லை' என்று குறிப்பிட்டார்.

'அருமையில் எளிய அழகே போற்றி' என்று ஆண்டவனை மட்டுமல்ல, கவிதையையும் அழைக்கலாம். ஒரு நல்ல கவிதை அரிய கருத்தை எளிய நடையில் அழகிய வடிவில் சொல்ல வேண்டும்.

‘கவிதைக் காதலி! வா... நீயும் நானும் தனிமையில் சந்திப்போம், வரும்போது என் அணிகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு வா. நாம் பேசும்போது அவை சத்தமிடக்கூடும்’ என்ற கவியரசர் தாகூரின் நோக்கம் அணிநயங்கள் என்ற அரிதாரம் இல்லாமல் கவிதை எளிமையாக, இயல்பாக இருக்க வேண்டும் என்பதுதான்.

‘ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுத வேண்டும்’ என்பதே பாரதியின் இலக்கிய லட்சியம்.

செல்லரித்த நெஞ்சின் சிறகொடிந்த கற்பனைகள் இல்லை

‘கவித் திறமை இருப்பதற்குப் பாண்டித்யம் ஒருவாறு அவசியம் என்றாலும், பாண்டித்யம் இருப்போர்க்கெல்லாம் கவிதாசக்தி இருப்பதில்லை என்பதை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். இலக்கண வித்வான்கள்கூடத் தாம் கவி பாடாமல் இருந்தால் அது மதிப்புக்குறைவென்று நினைத்துக்கொள்கிறார்கள். இங்ஙனமாக உண்மைக் கவிதை இந்த நாட்டில் மறைந்து போய்விட்டது’ என்று உண்மை நிலையை உணர்த்தும் பாரதி, ‘சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண, அலௌகிக நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்’ என்று குற்றம் சாட்டுகிறான்.

www.t.me/tamilbooksworld

கவிதையைப் பாமர மக்களும் எளிதாகப் புரிந்து கொள்கிறாற்போல் எளிமைப்படுத்த வேண்டும் என்பதே பாரதியின் தலையாய நோக்கமாக இருந்துவந்திருப்பதை நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

திரும்பத் திரும்ப அல்லிவிழி, தாமரை முகம், கயல்கண்கள், காந்தள் விரல்கள், கார்கூந்தல் என்று சாயம் வெளுத்துப்போன உவமைகளையும், உருவகங்களையும், மோனையும் எதுகையும் மாறி மாறி முத்தமிடும் சத்திழந்த வார்த்தைகளையும் வைத்துக்கொண்டு கவிதை மாளிகை கட்டிய எழுத்துக் கொத்தனார்களின் மீது பாரதிக்கு எரிச்சல் வந்தது. ‘எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக் கட்டுகளை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படிச் செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்தத் தெய்வத்தின்

மீது புழுதியைச் சொரிகிறான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன், அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான்' என்று பாரதி சொன்னதைப் பாட்டெழுதப் பேனா பிடிக்கும் ஒவ்வொருவரும் நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

கவிதை வானத்திலிருந்து இறங்கி வராது, அது வாழ்க்கை வேர்களில் உறிஞ்சப்படும் அனுபவங்களிலிருந்து வெளிப்பட வேண்டும். இறந்த காலம் சேமித்து வைத்திருக்கும் எண்ணற்ற அனுபவங்களும், நிகழ்காலம் கற்றுத்தரும் கணக்கற்ற பாடங்களும்தான் ஒரு படைப்பாளியின் சிந்தனையைச் செழுமைப்படுத்தும்.

என் கவிதைகள் கவிதைகளைத் தின்பதில்லை

வாழ்க்கையை நான் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொண்டேன்

காதலை ஒரு முத்தத்திலிருந்து கற்றேன்

- என்றான் பாப்லோ நெரூடா.

www.t.me/tamilbooksworld

லத்தீன் அமெரிக்காவின் சிலி நாட்டு விடுதலைப் போராளியாக விளங்கிய நெரூடா 'ஏன் கற்பனைகளைக் கவிதையாக்கவில்லை?' என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முற்படும்போது,

நீங்கள் கேட்பீர்கள்... கனவுகளை, இலைகளை, தாயகத்தின்

பெரிய எரிமலைகளை அவன் கவிதைகள் ஏன் பாடவில்லை?

தெருவிலோடும் செங்குருதியை வந்து பாருங்கள்

என்று முழக்கமிடுகிறான். தமிழ், தமிழர், பாரதம், உலகம் குறித்து நம் பாரதிக்கு ஆயிரம் கனவுகள் இருந்தன. ஆனால், சாரமற்ற கற்பனைகளில் அவன் காலத்தைச் செலவழிக்கவில்லை. அவனுடைய 'ஞானரதம்'கூட ஒரு சமூக நோக்கத்தோடுதான் கனவுலகில் பவனி வந்தது. எதையும் மிகையாக அவன் வர்ணிக்க விரும்பவில்லை. சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழ்க் கவிஞர்களுக்குப் பெண்ணின் முகத்தை நிலவோடு ஒப்பிட்டுப் பாடுவதில் சலிப்பே வரவில்லை. ஆனால் பாரதி,

மாதர் முகத்தை நினக்கினை கூறுவர்

வெண்ணிலாவே! அஃது

வயதிற் கவலையின் நோவிற் கெடுவது

வெண்ணிலாவே!

- என்று சாரமற்ற கற்பனைக்குச் சாவுமணி அடிக்கிறான்.

பாரதி, பாவேந்தருக்கு முன்பும் பின்பும் கவிதை என்ற பெயரில் குவிந்து கிடந்த கற்பனைக் குப்பைகளைக் கண்டு மனம் குமுறிய புதுமைப்பித்தன்,

செல்லரித்த நெஞ்சின் சிறகொடிந்த கற்பனைகள்

இடுப்பொடிந்த சந்தத்தில் இடறிவிழும் வார்த்தைகளில்

ஊரில் பவனி

- என்று சவுக்கடி கொடுத்தார். ஆனால், பாரதியோ அனுபவ நெருப்பில் புடமிட்டெழுந்த புதிய வார்ப்பு.

www.t.me/tamilbooksworld

'உலகத்துப் பொருள்களை நேர் நின்று நீயே பார். உனக்கு புதிதாக ஏதாவது தோன்றலாம். பழைய உவமைகளும் கருத்துகளுமே அதிலிருந்து உதிக்க வேண்டுமென்பதில்லை. உன் அனுபவம் எவ்வளவோ சொல்லிக்கொடுக்கும். ஒவ்வொரு பொருளிலும் எப்போதும் ரகசியம் பதுங்கிக் கிடக்கிறது' என்றார் பிரெஞ்சு எழுத்தாளர் மாப்பசான். அனுபவத்தை அடிப்படையாகக் கொள்ளாத எழுத்துக்கு ஆயுள் குறைவு.

மகாகவி பாரதி... யார்?

'தன்னுடைய வாழ்காலத்து மக்களின் இனிமையை இன்னும் பெருக்குபவனும் தன் காலத்து நாகரிகத்தை மேலும் உயர்த்துபவனுமே மகாகவி என்ற பேருக்குத் தகுதியுடையவன்' என்றார் தத்துவமேதை ராதாகிருஷ்ணன்.

தமிழ்க் கவிதையின் உருவம், உள்ளடக்கம் இரண்டையும் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைத்து, தன் 'கற்பனா கர்வமும், கவிதா சிருஷ்டியும்' கலந்து பிறந்த எழுத்தின் மூலம் சமூகத்தின் சகல தளங்களிலும் ஒரு புரட்சிக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்து, அவசர கதியில் அதன் முழுமையான கட்டுமானத்தையும் கட்டி முடிப்பதற்கு இறுதி வரை முயன்று பார்த்த பாரதியல்லால் வேறு யார்

இந்த மண்ணில் மகாகவி என்ற பேருக்கு முழுத் தகுதியுடையவராக இருக்க முடியும்?

மண்ணடிமைத்தனம், பெண்ணடிமைத்தனம், மதவேற்றுமை, சாதியக்கொடுமை, வர்க்கபேதம் போன்ற இந்திய மக்களின் இழிவுகள் அனைத்தும் பாரதியின் நெஞ்சின் நினைவுகளில் சூறாவளியாக சுழன்றடித்தன. இந்த அவலங்களின் அழுத்தமான தாக்கத்தால் இதயம் முழுவதும் ரணப்பட்டு போனவன் இவற்றை முற்றாகத் துடைத்தெறிய முற்பட்டு, தன் வாழ்வையே வேள்வி நெருப்பாக வளர்த்து, அந்த நெருப்பில் தன்னுடைய உயிரையே ஆகுதியாக அர்ப்பணித்தான்.

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு

உண்மை தெரிந்தது சொல்வேன்

- என்று சுயநலமாக சிந்தித்து நடிப்பு சுதேசிகளுக்கு நடுவே நின்றபடி குரல் கொடுத்தான்.

இலக்கியத்தை இருவகையாக இனம்பிரித்தார் ஆபர் கிராம்பி. கலைச் சுவைக்காகவே படைக்கப்படுவது தனி இலக்கியம் (Pure Literature). சமுதாயம், மொழி, மக்கள் வாழ்வு சார்ந்து படைக்கப்படுவது சார்பு இலக்கியம் (Applied Literature) என்பது அவருடைய கருத்து. கலை கலைக்காகவே என்பதில் பாரதிக்கு உடன்பாடில்லை.

www.t.me/tamilbooksworld

உழைப்பவர் உலகத்தையே தன் படைப்புகளின் பாடுபொருளாக்கி, ருஷ்ய மொழியையே கவிதை மொழியாக்கியவன் மாயாகோவ்ஸ்கி. வாழ்க்கையின் மூடுதிரைகளை விலக்கி, அதன் உண்மை முகவிலாசத்தைத் தேடிக் கொள்வதற்காக எழுத்தை நாடியவன் பாரதி. அவனுக்கென்று சில சமூக நோக்கங்கள் இருந்தன. அந்த நோக்கங்களை அவனுடைய 53 நாட்டுப் பாடல்களிலும், 66 தோத்திரப் பாடல்களிலும், 30 வேதாந்தப் பாடல்களிலும் பரக்கக் காணலாம்.

‘பாஞ்சாலி சபதம்’ போன்று, பாரதியின் கதைகளில்கூட கலைத்தன்மையை மீறிய பிரசார நெடி அதிகம். ‘பொதுவாக நான் கதைகள் எழுதும்போது வெறுமனே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமேயன்றி, ஏதேனும் தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. கதையென்றெடுத்தால் அதில் கற்பனைப் புனைவையே நான் முக்கியமாகக் கருதுவேன். எனினும், என்னை மீறியே கதைகளில்

பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன’ என்று ‘ரெயில்வே ஸ்தானம்’ கதை முன்னுரையில் பாரதி குறிப்பிடுவதைச் சிந்திக்க வேண்டும்.

‘ஒரு நாட்டின் கவிதைகளை இயற்றும் அதிகாரம் மட்டும் என்னிடம் தரப்படட்டும், அந்த நாட்டின் சட்டங்களை யார் இயற்றினாலும் எனக்குக் கவலை இல்லை. அந்த தேசத்தை என்னால் மாற்றி அமைத்துவிட முடியும்’ என்று நம்பிக்கையோடு சொன்ன அண்ட்ரூஸ் ஃப்ளெட்சரைவிட அதிக நம்பிக்கை பாரதிக்குக் கவிதையின் மீதிருந்தது. ஆனாலும், வையத் தலைமை வந்து சேர்ந்தால்தான் ஒவ்வொரு கனவையும் நனவாக்க முடியும் என்று சிந்தித்தவன் பாரதி. அவனுக்குச் செயற்படாத, வெறும் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை.

அடி - உன்னைக் கோடி முறை தொழுதேன் - இனி

வையத் தலைமை யெனக் கருள்வாய்

- என்று காளியிடம் வரம் கேட்கிறான் கவிஞன். எதற்கு வையத் தலைமை? உலகிலுள்ள ஓராயிரம் இன்பங்களை ஒன்றுவிடாமல் ஆசை தீர அனுபவிப்பதுக்காகவா? ஊர் சொத்தைக் கொள்ளையடித்துத் தன் குடும்பத்து வங்கிக் கணக்கைப் பெருக்குவதுக்காகவா? அதிகாரத்தின் அசுரத்தனத்தைச் சுவைப்பதுக்காகவா? இதோ... பாரதியே பதில் சொல்கிறான்.

www.t.me/tamilbooksworld

மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்

வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்

- என்று தன் கவிதா நோக்கத்தை உரத்த குரலில் உலகுக்குப் பிரகடனம் செய்கிறான்.

இல்லை என்ற கொடுமை - உலகில்

இல்லை யாக வைப்பேன்

- என்றுரைக்கும் பாரதி, அதற்காகத்தான் பராசக்தியிடம் வையத் தலைமையை வரமாக வேண்டுகிறான். வேண்டும் தலைமை மட்டும் வாய்த்துவிட்டால், அவன் மேலும் என்னென்ன செய்வான்? ஒரு பட்டியலே போடுகிறான் பாரதி.

‘கல்லை வயிரமணி யாக்கல்- - செம்பைக்

கட்டித் தங்க மெனச் செய்தல்- - வெறும்

புல்லை நெல்லெனப் புரிதல்- - பன்றிப்

போத்தைச் சிங்க வேறாக்கல்- - மண்ணை

வெல்லத் தினிப்பு வரச் செய்தல்- - என

விந்தை தோன்றிட விந் நாட்டை- - நான்

தொல்லை தீர்த் துயர்வு கல்வி- - வெற்றி

சூழும் வீர மறி வாண்மை

கூடும் திரவியத்தின் குவைகள்- - திறல்

கொள்ளுங் கோடி வகைத் தொழில்கள்- - இவை

www.t.me/tamilbooksworld

நாடும் படிக்கு வினை செய்து- - இந்த

நாட்டோர் கீர்த்தி யெங்கு மோங்கக்- - கலி

சாடும் திற னெனக்குத் தருவாய்...

தன்னைப் பற்றியே சதா சர்வகாலமும் சிந்தித்து, ‘நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடும் சராசரி சமூக மனிதர்களிடையே ஒவ்வொரு கணமும் மண்ணையும் மக்களையும் மட்டுமே சிந்தித்துச் செயற்பட்ட ஒரே கவிஞனாக அன்று தொட்டு இன்று வரை தமிழ் இலக்கிய உலகில் தரிசனம் தருபவன்தான் மகாகவி பாரதி.

தனக்கு முன்னால் நடந்த கவிஞர்களின் பாதையில் தடம் மாறாமல் கால்பதிக்க பாரதிக்கு நாட்டமில்லை. சமூகம் சம்பந்தப்பட்ட பழமைப் போக்குகளிலிருந்தும், பெரும்பான்மை கூட்டத்தின் கொள்கைகளிலிருந்தும் விடுபட்டு விலகி நின்ற இலக்கணம் மீறிய கவிதை அவன். அவனுடைய இலக்கிய நோக்கும் போக்கும் ‘மதியை மூடும் பொய்மை இருளெல்லாம் மக்கள் சமூகத்தை முற்றும் விட்டு அகல வேண்டும்’ என்பதுதான்.

அவரவர் மனதுக்குச் சரியென்று படுகின்ற காரியத்தைச் செய்ய

ஜனநாயக தர்மம் மறுக்கிறது. எது எல்லோர்க்கும் சரியோ, எல்லோர்க்கும் ஓரளவு சரியோ, அது தவறே எனினும், அதை அனுமதித்து அடிபணிவது ஜனநாயக தர்மம். அந்தப் பெரும்பான்மையினர் தவறுக்கு மனமறிந்து மண்டியிட்டு, அதனால் ஏற்படும் விளைவுகளையும் அநியாயமாக அனுபவிக்க வேண்டும் என்பது சிறுபான்மையினர் தலையில் இட்ட விதி. இந்த மாதிரிச் சமூக விதிகளை மறுப்பதும் மாற்றுவதும், அதன் அநியாயமான தீர்ப்புகளைக் காலத்தின் முன்னே மறுபரிசீலனைக்கு வைப்பதும் இலக்கியத்தின் பணியாகிறது. எனவேதான், இலக்கியத்தில் ஜனநாயக தர்மம் அனுமதிக்கப் படுவதில்லை. முரண்படுவதற்குச் சம்மதம் அளிக்கிற பண்புதான் இலக்கியப் பண்பாகும்' என்பார் ஜெயகாந்தன். அரசியலில் ஜனநாயகத்துக்குப் போராடிய பாரதி இலக்கியத்தில் ஜனநாயக தர்மத்தை ஆதரிக்கவில்லை என்பதுதான் அவனுடைய தனிச்சிறப்பு.

பாரதி இலக்கிய தளத்தில் போட்ட பாதை புதிது; தேர்ந்து கொண்ட பாடுபொருள் புதிது; பாடுவதற்குப் பயன்படுத்திய சொற்கள் புதிது. 'புரட்சி, பொது உடைமை, அக்கினிக்குஞ்சு, பிள்ளைக்கனியமுது, பேசும் பொற்சித்திரம், நெருப்புச் சுவை, நிலவூறித் ததும்பும் விழிகள், நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்' என்று பாரதி தமிழுக்குக் கொடுத்த 'வானவில் வார்த்தைகள்' ஒவ்வொன்றும் புதிது. மானிடச் சாதி, தமிழ்ச் சாதி, தெய்வச்சாதி, வேடிக்கை மனிதர், விந்தை மனிதர், நிலைகெட்ட மனிதர், பித்த மனிதர், ஊமைச் சனங்கள், கலக மானிடப் பூச்சிகள் போன்ற பதப்பிரயோகங்கள் பாரதிக்கு முன்பு தமிழ் கண்டறியாதது. அதனால்தான், மு.வ., 'தமிழ் இலக்கிய வரலாற்றின் புதிய மறுமலர்ச்சிக் காலம் பாரதியால் தொடங்கப் பெற்றது. இந்த மாபெரும் கவிஞரே இந்த இயக்கத்தின் தலைவராகவும் திகழ்கிறார் என்றார். 'பாரதி சகாப்தம்' என்று பொங்கிப் பூரிக்கிறார் திரு.வி.க.

www.t.me/tamilbooksworld

பாரதி வாழ்ந்த காலத்தில் அவனுடைய எழுத்தின் பெருமை பலருக்குப் புரியவில்லை. புரிந்த சிலருக்கோ அவனைப் போற்ற மனமில்லை. பரலி சு.நெல்லையப்பர், பாரதிதாசன், நாவலர் சோமசுந்தர பாரதியார், வ.ரா. போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய பெருமக்களே பாரதி புகழ் பாடினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பட்ட சங்க இலக்கியப் பாடல்களைத் தேடிப் புறப்பட்ட உ.வே.சா.வுக்கு, உள்ளூரில் பக்கத்தில் இருந்த பாரதியைப் போற்ற மனமில்லை. தனித்தமிழியக்கம் கண்ட மறைமலை அடிகளுக்கோ பாரதி ஒரு கவிஞனாகவே படவில்லை. யாரெல்லாம் கேட்கிறார்கள் என்று பார்த்துக் குயில் எப்போதும் கூவுவதில்லை. குயிலுக்குத் தெரியும் அதன் குரலின் இனிமை. பாரதிக்குத் தெரியும் அவன் பாடல்களின் பெருமை.

எனவேதான்,

சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது

சொற் புதிது சோதி மிக்க

நவகவிதை எந்நாளும் மழியாத

மகா கவிதை

- என்று தன் கவிதையைத் தானே தரம் பிரித்துக் காட்டுகிறான் நம் மகாகவிஞன்!

www.t.me/tamilbooksworld

2



# மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்!

பத்தொன்பதாம்
நூற்றாண்டிலே
மெல்லத்
திரும்பிய
தமிழ்க்
கவிதை
பாரதியார்
பேசியதும்
இம்மண்ணுலக
வாழ்க்கையின்
நட்ட
நடுவில்,
கடைத்தெருவின்
ஓரத்தில்,
அரசியல்
மேடையில்,
உழவர்
பாடுபடும்
வயல்
வெளியில்,
இரும்பைக்
காய்ச்சி
உருக்கிடும்

www.t.me/tamilbooksworld

யந்திரசாலை
ஆரவாரத்தில்,
கேணியருகில்,
தென்னை
மரக்கீற்றின்
பட்டொளியில்...
ஆனால்,
எங்கும்
மனித
இதயத்தின்
அரவணைப்பில்
வந்து
அமர்ந்துகொண்டது.

- பேராசிரியர்
அ.சீநிவாசராகவன்

'**எ**ன் கவிதைகளின் நோக்கம் இதுதான். சாதாரண வாழ்வில் காணப்படும் சந்தர்ப்பங்களையும் நிகழ்ச்சிகளையும் என் பாடல்களுக்குப் பொருளாக்கப் போகிறேன். அவற்றைத்தான் சித்திரிக்க முயல்வேன். உணர்ச்சி வேகத்தில் வெடித்தெழும் சொற்களையே உபயோகிப்பேன். அந்தச் சொற்களின் மாசைக் கழுவினால் போதும். சாதாரண விஷயங்கள் மீது சற்றுக் கற்பனைச் சாயம் ஏற்றிவிட்டால் அவை ஒரு விசித்திர ஒளியைக் காட்டும்.

www.t.me/tamilbooksworld

'கவிதைக்கென்று ஒரு தனி மொழி கிடையாது. முன்பு கவிகள் பயன்படுத்திய உவமைகளையும் உருவகங்களையும் அர்த்தமில்லாமல் உபயோகிப்பது தவறு. அவர்கள் சொன்ன சொற்களில் அப்போது வேகம் இருந்திருக்கலாம். அவற்றை எல்லா சந்தர்ப்பங்களிலும் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினால் அவை வெறும் பதர்களாகவும் சக்கைகளாகவும் காட்சி தரும். கள்ளங்கபடமற்ற ஏழைகளிடம் நிரந்தர உண்மையான உணர்ச்சிகள் இருக்கும். கவி அவற்றுக்குத்தான் உருவம் கொடுக்க வேண்டும்' என்பதுதான் இயற்கையில் இதயத்தை ஈடுபடுத்திய ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த்தின் இலக்கியப் பார்வை. பாரதியின் கவிதைகளில் இந்தப் பார்வை இயல்பாக பொருந்துகிறது.

சாரமற்ற சொற்களையோ, முன்னோர் பயன்படுத்திப் பயன்படுத்திச் சாயம் போன உவமைகளையோ பாரதியிடம் காண முடியாது.

‘கவிதை நம் முயற்சியில் வருவதில்லை. அது ஆண்டவன் அருளாகும்’ என்பார் பிளேக் (Blake). ‘கவிதா சக்தி எங்கிருந்து வருகிறதென்று தெரியாது. ஏதோ ஒன்று என் உள்மனத்தில் பேசுகின்றது. அதை நான் எழுதுகிறேன்’ என்று விளக்கியவர் மில்டன்.

‘நான் ஆண்டவன் கையிலுள்ள வேய்ங்குழல்’ என்பது தாகூரின் வாக்குமூலம்.

செய்யுங் கவிதை பராசக்தி யாலே செயப்படுங்காண்

- என்றுரைப்பான் பாரதி. உரைநடையிலும் இதே கருத்தை அவன் உணர்த்துகிறான். ‘மனிதன் எழுதும் விரலைப் போன்றவன். கடவுள் அதை நடத்தும் சக்தி. இதை நான் நம்புகிறேன்’ என்பது அவன் கட்சி.

பாட்டினிலே காதலை நான் பாட வேண்டிப்

பரமசிவன் பாதமலர் பணிகின்றேனே

- என்று சுயசரிதையில் காதலைப்பாட கடவுளைத் துணைக்கு அழைப்பவன்,

www.t.me/tamilbooksworld

கவிதை, காவல், ஊட்டுதல், வளர்த்தல்

இச்செயல்கள் நமக்கு மகா சக்தி அருள்க

- என்று வசன கவிதையில் வரம் வேண்டுவான். பாரதியின் எழுத்துக்கு இறையருளே உந்து சக்தியாக இருந்ததா என்ற ஆய்வு நமக்கு அவசியமில்லை. ஆனால், பராசக்தியால் செய்யப்படுவது தான் கவிதை என்ற உள்ளுணர்வே அவனை மேன்மையான எழுத்துத் தவம் செய்யத் தூண்டியது என்பது மட்டுமே உண்மை. அந்த உணர்வுக்கு அவன் ஆட்பட்டதனால்தான் மலினமான ஓர் எழுத்தைக்கூட அவன் பேனா மறந்தும் எழுதவில்லை.

ஒத்துணர்வும் ஏற்றுணர்வும்

‘கவிஞன் மக்களுக்காக, மக்கள் உணர்வைப் புரிந்து கொண்டுப் பரிவுடன் படைக்க வேண்டும். அதாவது ஒத்துணர்வும் (Sympathy), கூடுவிட்டுக் கூடு பாய்தலுக்கு ஒப்ப ஏற்றுணர்வும் (Empathy) உடையவனாக இருத்தல் வேண்டும் என்பது பாரதியின் கொள்கை’ என்று தெளிவுபடுத்துகிறார் அ.அ.மணவாளன்.

‘பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடையவனும், பிறர் துன்பத்தைக் காணாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப்பழகுவாராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவனுடைய தொழிலே கவிதை இராது’ (பாரதியார் கட்டுரைகள்) என்ற பாரதியின் கருத்தை அறியும்போது அவனுடைய கவிதைக் கொள்கையின் ஆதர்சம் எது என்பது எளிதில் புரிந்துவிடும். பிறர் துயரைக் களைவதுதான் அந்த மகாகவியின் இலக்கிய நோக்கம்.

நிகழ்கால மனித சமூகத்தின் நிறமும் மணமும் இல்லாமல் கற்பனைத்தேரில் பவனி வரும் படைப்பு ஒருபோதும் உண்மையான இலக்கியமாக உருப்பெறுவதில்லை. இலக்கியத்தின் பாடுபொருள், வாழ்க்கை அனுபவம் சார்ந்து விளங்க வேண்டும்.

‘வெறுப்பை உணராத நான் எப்படி வெகுண்டெழ முடியும்? நாற்காலியில் இன்பமாக அமர்ந்து கொண்டு எப்படி போர்ப் பரணி பாட முடியும்? போர்ப்பாடல்களை ஒரு போர்வீரனால் தான் புனைய முடியும். காதலை நுகர்ந்த நான் காதலைப் பற்றி ஏராளமாகப் பாட முடியும். நான் அனுபவிக்காத பொருள்களை என்னுடைய வசனத்திலோ கவிதையிலோ காண முடியாது. ஒருபோதும் அனுபவம் சாராத போலி உணர்ச்சிகளை நான் வெளியிட்டதில்லை’ என்ற ஜெர்மானியக் கவிஞன் ‘கதே’ அனுபவப் படைப்பே பேரிலக்கியமாகிறது என்று வலியுறுத்துகிறார்.

www.t.me/tamilbooksworld

‘ஒரு வரியில், சில நேரங்களில், மிகச் சில அடைமொழிகளில் படிப்போரின் உள்ளத்தில் பளிச்செனத் தோன்றும் வகையில் பொருளையோ காட்சியையோ படைத்துக்காட்டும் பண்பு வாய்ந்தவர்கள் சங்கப்புலவர்கள். தமக்குத் தெரிந்திராத காட்சிகளைத் தம் பாடல்களில் அவர்கள் காட்டியது கிடையாது. இயற்கையை நேரிடையாகக் கண்டு உணர்ந்தவற்றையே பாடும் இயல்பினர்’ என்ற செய்தியையும் இங்கே சேர்த்து நாம் சிந்திக்க வேண்டும். பாலைநிலம் பற்றிப் பாடிய பெருங்கடுங்கோ நெய்தலைப் பாடவில்லை. நெய்தலைப் பாடிய அம்மூவனார் குறிஞ்சியைப் பாடவில்லை. குறிஞ்சியைப் பாடிய கபிலர் மருதநில வாழ்க்கையைப் பாட முன்வரவில்லை.

சொந்த அனுபவங்களை மட்டுமே அடித்தளமாக்கி, அதீத கற்பனைகளிடம் அடைக்கலம் தேடாமல் இயற்கையோடு இயைந்த மண்ணின் மணத்தைப் பாடியதால்தான் அவர்களுடைய பாடல்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் நம் இதயங்களை நெகிழ்விக்கின்றன.

இன்றோ, பாசாங்குக் கவிதைகள் பல்கிப் பெருகிவிட்டன. இந்த அவலநிலையைக் கண்டு மனம் கொதித்த புதுமைப்பித்தன்,

பண் என்பார் பாவம் என்பார் பண்பு மர பென்றிடுவார்

கண்ணைச் சொருகிக் கவி என்பார் - அண்ணாந்து

கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே

முட்டாளே இன்னமுமா பாட்டு?

- என்று கவிதையில் கணை தொடுத்தார்.

'இன்று வெளிவரும் புத்தகங்களில் சித்த வைத்தியம், சோதிடம், சிற்றின்பம் பற்றியவை தவிர மற்றவெல்லாம் தம்மை ஒரு இலக்கிய மைல்கல் என மார்தட்டிக் கொண்டு வருகின்றன. நல்ல இலக்கியம் என்றால் எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத்துக்கொண்டாலும், அவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும். பனைமரத்தில் ஊசியைச் செருகிக் கொண்டு சுமந்து நடந்த பரமார்த்த குருவின் சீடர்கள் போல, எத்தனை பேர் சுமந்து வந்தாலும் பரங்கிக்காய் குதிரை முட்டையாகிவிடாது' என்று ஏளனம் செய்தார் புதுமைப்பித்தன்.

www.t.me/tamilbooksworld

கவிதை எப்படி இருக்க வேண்டும்?

கவிதை ஒரு மோகனக் கனவாக பாரதிக்கு என்றும் பட்டதில்லை. 'வாழ்க்கையின் ரகசியமறிந்து, அதன் முன்னேற்றத்தைக் காண விழையும்' கருவியாக அதை மாற்ற முயன்றவன் அவன். 'காசிப்பட்டுப்போலே பட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும். மல் நெசவு கூடாது. மஸ்லின் நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும்' என்கிறான். கச்சை வேஷ்டியாக விரைவில் கிழியாமல் நீண்டகாலம் மானம் காக்கும் ஆடையாக இருப்பதுதான் கவிதைக்குரிய நல்ல அடையாளம்.

சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும்

தாங்கிச் சான்றோர்

கவியெனக் கிடந்த கோதாவரி

- என்று கம்பன் காட்டும் கவிதை இலக்கணம்தான் பாரதிக்கு உடன்பாடு. ஒளியும், தெளிவும், குளிர்ச்சியும் மட்டும் பாரதிக்குப் போதவில்லை. மேன்மையும், ஆழமும், நேர்மையும் வேண்டும் என்கிறான்.

இலக்கியத்தில் நேர்மைதான் பாரதிக்கு முக்கியம். அது கவிதையானாலும், வசனமானாலும் நேர்மை துலங்க நடக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய எதிர்பார்ப்பு. ‘உள்ளத்தில் நேர்மையும், தைரியமும் இருந்தால் கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும்’ என்பது பாரதியின் அழுத்தமான கணிப்பு. ஒரு நல்ல கவிதை எப்படி அமைய வேண்டும் என்பதிலும் பாரதிக்குத் தெளிவான பார்வை இருந்தது.

கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல

காற்றையும் வானவெளியையும் சேர்த்து

தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்- - பல

www.t.me/tamilbooksworld

தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்

- என்பது பாரதியின் பாடல். கவிதையில் கள்ளின் இன்பமும் மயக்கமும் கலக்க வேண்டும். அது தீயைப்போல் உள்ளத்து உணர்ச்சிகளைச் சூடேற்றி, சமூகத்தில் தீமைகளை அழிக்கும் உந்து சக்தியாக வேண்டும்; காற்றைப் போல் குளிர்ந்தும், கட்டற்றும் சுதந்திரமாக இயங்க வேண்டும்; எல்லாவற்றையும் உள்ளடக்கி, எல்லையில்லாமல் விரிந்து கிடக்கும் வானவெளியைப்போல் திகழ வேண்டும் என்ற பாரதியின் பார்வை எவ்வளவு அற்புதமானது!

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர

மொழிந்திடுதல், சிந்திப் போர்க்கே

களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல

காட்டல், கண்ணீர்த்

துளிவர உள்ளுருக்குதல்...

- என்று கவிதையின் உயிர்த்தலமான நான்கு பண்புகளைப் பாஞ்சாலி சபதத்தில் ‘கலைமகள் துதி’யில் படம் பிடித்துக் காட்டுகிறான் பாரதி.

புதுக்கவிதைப் பிதாமகன்

எதுகை, மோனை, அணி, அலங்காரம் அனைத்தையும் தவிர்த்துக் கவிதையின் உள்ளடக்கத்தை எளிதில் அணுகும் புதிய முறையை பாரதி ‘காட்சி’யில் தொடங்கி வைத்தான். ‘எளிமை கொண்ட நடையிலே அருமையான உள்ளக் காட்சிகளை எழுதுவது நல்ல கவிதை’ என்றுரைத்த பாரதி, தன்னுடைய சிந்தனை வேகத்துக்கு யாப்பு ஒரு தடையாகும்போது, அந்தத் தடையைத் தகர்க்கவும் அவன் தயங்கவில்லை. பழமை என்பதற்காகவே ஒன்றை விடாமல் பற்றி நிற்க வேண்டும் என்று ஒருபோதும் அவன் எண்ணியதில்லை. புதுமையை நாடிய அந்தப் புதுயுகக் கவிஞன், ‘ஓடுகிற நதி உலகத்துக்கெல்லாம் நன்மை செய்கிறது. புதுநீர் வரவும், பழநீர் கழிவுமில்லாமல் தங்கிக் கிடக்கும் குளம், அழுகி அழுகிப் புழுக்கள் பிடிக்கிறது. மாறுதலில்லாமல் இந்த உலகத்தில் இருக்க முடியாது’ (பாரதி புதையல் II) என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கிறான்.

www.t.me/tamilbooksworld

யாப்பு வடிவத்தை மீறிய பரிசோதனை முயற்சியில் இறங்கிய மகாகவி, ‘அழுக்குத் தலையணை, ஓட்டைத் தலையணை, பழைய தலையணை அதிலுள்ள பஞ்சை எடுத்துப் புதிய மெத்தையிலே போடு. மேலுறையைக் கந்தலென்று வெளியே எறி. அந்த வடிவம் அழிந்துவிட்டது’ என்கிறான். ‘மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் சரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்கு தெளிவும், உண்மையுமே உயிரெனலாம்’ என்று குறிப்பிடுகிற கவிஞனுக்குக் கவிதையின் வடிவத்தைவிட, கவிப்பொருளின் உண்மையும், தெளிவுமே முக்கியமாகப்படுகின்றன. பாஞ்சாலி சபதத்தில் செய்யுள் வடிவத்தில் அடங்க மறுக்கும் மாலை வர்ணனையைச் ‘சூர்யாஸ்தமயம்’ என்ற தலைப்பிட்டு உரைநடைக்குள் அடக்கிவிடுகிறான்.

பாரதிக்கு முன்பு வாழ்ந்த தமிழ்க் கவிஞர்களுள் பலருக்குத் தமிழ் மட்டுமே தெரிந்தது. சிலருக்கு வடமொழியும் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால், பாரதியோ வடமொழியோடு ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளும் அறிந்தவனாக இருந்தான். பிறமொழிக் கவிஞர்கள் குறித்தும், அவர்களுடைய இலக்கியப் போக்கு குறித்தும் அவனால் அறிந்துகொள்ள முடிந்தது தமிழுக்கு வாய்த்த தவப்பயன். பொதுவாகவே, வால்ட்விட்மன் வரைந்த புதுக்கவிதைகளின்

தாக்கத்தில்தான் 'காட்சி' பிறந்ததென்றும், வேதரிஷிகளின் வார்த்தைகளே 'காட்சி'யில் மறுவடிவம் பெற்றதென்றும் ஒருவகை அபிப்ராயம் இலக்கியவுலகில் உண்டு. சிலர் ஜப்பானிய 'ஹைகூ' கவிதைகளும் பாரதியைப் பாதித்ததாகக் கூறுவர்.

'நமக்கு அவனே குரு; அவன் எழுத்தே வேதம்; வார்த்தை சட்டம்; கவிதை சத்தியம்' என்று பாரதியை நெஞ்சில் வைத்துப் பூசிக்கும் கவிஞர் சிற்பி, 'வால்ட் விட்மனைப் பற்றிய பாரதியின் கட்டுரை 1917 நவம்பர் 20-ம் நாளிலும், ஜப்பானியக் கவிதை பற்றிய கட்டுரை 1916 அக்டோபர் 18-ம் நாளிலும் சுதேசமித்திரனில் வெளியாயின. நமக்குக் கிடைத்துள்ள செய்திகளின் அடிப்படையில் பார்க்கும்போது 1911- - 1915-க்குள் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, இந்தத் தர்க்கம் குறித்த கருத்தும் கேள்விக்குரியதாகிறது' என்று புதிய வெளிச்சம் காட்டுகிறார்.

'எதுகை, மோனை, தளை இல்லாத கவிதை வழக்கமில்லை' என்று வால்ட் விட்மனின் கவிதைப் போக்கை முதலில் ஏற்க மறுத்த பாரதி, வசன நடையில் இருந்த வேதவரிகளைக் குறிப்பிடும்போது, 'ரிக் வேதத்திலே ரிஷிகளுடைய கவிதையைப் படிக்கும்போது நமது உள்ளத்தில் தேன் பாய்கிறது. அறிவு தெய்வ வெறி கொள்கிறது' என்று புகழ்ந்துரைக்கிறான். 'எதுகை, மோனை இல்லாத கவிதைதான் உலகத்திலேயே பெரிய பாஷைகளின் பெரும்பகுதியாகும்' என்ற உண்மை பின்பு அவனுக்குப் புரிகிறது. 'சடங்குகளை விலக்கிப் பரம்பொருளை அணுகுவதைப் போலவே, எதுகை மோனைகளை விலக்கி உரிப்பொருளை அணுக முற்படுகிற விளைவே வசன கவிதை'யாக அவனுள் விரிகிறது.

www.t.me/tamilbooksworld

'கிழிந்த பணப்பையில் ஏன் புதுக்காசுகளைப் போட வேண்டும்?' என்று கேட்கும் கவிஞர் பாலா, 'யாப்பின் சிரமங்களைத் தவிர்ப்பதற்கல்ல புதுக்கவிதை. மரபுக் கவிதை தொடாத உயரங்களைப் புதுக்கவிதை தொட வேண்டும். பழைய வடிவங்கள் தராத வசதிகளை அது தர வேண்டும்' என்று வாழ்த்தி வரவேற்கிறார்.

கட்டுப்பாடான வடிவமற்ற புதுக்கவிதை முயற்சியில் இறங்கிய புதுமைப்பித்தன், 'இன்று ரூபமற்ற கவிதையெனச் சிலர் எழுதி வருவது, இன்று எவற்றையெல்லாம் ரூபமெனப் பெரும்பாலோர் ஒப்புக்கொள்கிறார்களோ, அவற்றுக்குப் புறம்பான ரூபத்தை அமைக்க முயல்கிறார்கள் எனக் கொள்ள வேண்டுமே ஒழிய, அவர்கள் வசனத்தில் கவிதை எழுதுகிறார்கள் என்று நினைக்க முடியாது' என்கிறார். காலநடையில் புதுக்கவிதைக்கும் ஒரு வடிவம் வந்து வாய்த்துவிடும்

என்பது அவர் கருத்து.

'கற்பனை நயம் மிகுந்திருந்தாலும் உரைநடை கவிதையாகிவிடாது. எதுகை மோனைகளை அடுக்கிக் கொடுத்துவிட்டாலும் உரைநடை கவிதையாகிவிடாது. கவிதை கவிதைதான். வசனம் வசனம்தான். ஒட்டுவேலை செய்வது சரியெனக் கூற இயலவில்லை' என்ற ம.ரா.போ.குருசாமியின் கூற்றைத் தன்னுடைய 'மகாகவி நூலில் பதிவு செய்யும் 'சிற்பி' பாரதியின் 'காட்சி'யைக் கவிதையென்று சாதிக்கும் க.நா.சு.வுக்கு எதிர்ப்பாகவும் வெளியிடுகிறார். 'மிகவும் வலிந்து க.நா.சு. 'காட்சியைக் கவிதையென்று நிறுவ முயற்சி செய்கிறார்' என்று சொல்லும் சிற்பி, 'காட்சி'யைக் கவிதை உலகத்திலிருந்து அப்புறப்படுத்தவில்லை.

பாரதி ஆய்வாளர் சிதம்பர ரகுநாதன், பாரதி தனது திறமையிலும், வாக்கு வன்மையிலும் நம்பிக்கை குறைந்ததனால்தான் வசன இலக்கியத்தை எழுதியிருக்கக் கூடும் என்று நம்புகிறார். ஆனால், பாரதியை 'மகாகவி' என்று முதன் முதலில் அழுத்தம் திருத்தமாக உலகுக்கு அடையாளம் காட்டிய எழுத்தாளர் கு.ப.ரா., 'செய்யுள் எழுதுவதைக் காட்டிலும் வசன கவிதை எழுதி வெற்றி பெறுவது சிரமம். செய்யுளில் எப்போர்ப்பட்ட வெறும் வார்த்தைக்கும் ஒரு இசை, இன்பத்தை ஊட்டிவிடும். ஆனால், வசன கவிதையில் கருத்தின் வேகமும் உணர்ச்சியும் சொல்லில் தட்டினால்தான் கொஞ்சமாவது கவர்ச்சி கொடுக்கும். சொல்லில் கவிதையின் அம்சம் இல்லாவிட்டால் அது வசன கவிதையாகாது; வெறும் வசனம்தான்' என்று கூறுவது ஆழ்ந்த பரிசீலனைக்குரியது.

www.t.me/tamilbooksworld

புதுக்கவிதை இயக்கத்தைத் தமிழில் தொடங்கி வைத்த ந.பிச்சமூர்த்தி, 'அறிவின் வரம்பை மீறி போகுமானால், அந்த நிமிஷத்திலேயே அது கவிதையாகிவிட்டது என்று நிச்சயிக்கலாம். எவ்வளவுக்கெவ்வளவு உணர்வைத் தீண்டாமல் அறிவுடன் கவி பேசுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு வசனமாகிவிடும்' என்று சொல்வதை வைத்துக்கொண்டு பாரதியின் 'காட்சி'யை அணுகலாம்.

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமை

யுடைத்து. காற்றும் இனிது.

தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று.

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று

ஆறுகள் இனியன.

உலோகமும், மரமும், செடியும், கொடியும், மலரும்

காயும் இனியன.

www.t.me/tamilbooksworld

பறவைகள் இனியன. ஊர்வனவும் நல்லன. விலங்குகளெல்லாம்

இனியவை. நீர் வாழ்வனவும் நல்லன.

மனிதர் மிகவும் இனியர்.

ஆண் நன்று. பெண் இனிது.

குழந்தை இன்பம். இளமை இனிது. முதுமை நன்று.

உயிர் நன்று. சாதல் இனிது (காட்சி-இன்பம்)

'புதுக்கவிதை புதுவாழ்வின் எதிரொலி. வாழ்க்கையின் இன்றைய சிக்கலைச் சிக்கலாகக் காட்டும் சிந்தனை வெறியாம். சிக்கலைச் சுலபமாக்கி சுகம் தேடும் மனப் பிராந்தி அன்று' என்பது க.நா.சு.வின் கருத்து.

அறிஞர் ஜான்சன் சொன்னபடி, 'அறிவுக்குத் துணையாக கற்பனையை அமைத்து, உண்மையோடு இன்பத்தை இணைப்பதே கவிதை'. அது யாப்புக்குள் அடைபட்டாலும், யாப்பிலிருந்து விடுபட்டாலும் கவிதையாக இருக்கிறதா என்பதுதான் முக்கியம்.

சூழவும் எவ்வளவு பழைய முதிய இருட்டு

பழமை என்ற பிரமையில் அரையொளியில்

பொய்களின் பிணங்கள் எப்படி உயிருடன் நடிக்கின்றன

அறிவின் சுயேச்சையை

அமுக்குப் பிசாசுகள் எப்படி சிறைப்படுத்தி விட்டன!

எலும்பும் தெரியும் ஏழ்மை

எவ்வளவு ஏங்கி ஏங்கி அழுகிறது!

நோயின் புலிக்குரல் எப்படி அஞ்ச வைக்கிறது!

உலகம் பொய்; சாவு மெய் என்ற சாஸ்திரிய புலம்பல்

பின் சோனியாகாமல் என்னாவேன்?

www.t.me/tamilbooksworld

- என்று பாரதியின் வழியில் வாழ்க்கையின் இன்னொரு இருண்ட பக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் ந.பிச்சமூர்த்தியின் யாப்பு மீறிய இந்தப் படைப்பு கவிதை இல்லையெனில் கவிதையின் லட்சணமும் நோக்கமும் வேறென்னவாக இருக்க முடியும் என்பதுதான் கேள்வி.

கவிதையில் புதிய பார்வையும், புதிய உள்ளடக்கமும் காலத்தின் அவசியம் என்று கருதியதனால்தான் பாரதி புதுக்கவிதையை ‘காட்சி’யில் தொடங்கி வைத்தான். அவனுக்கு உருவத்தைவிட உள்ளடக்கம் முக்கியமாகப்பட்டது. ஒரு வார்த்தையைக்கூட, எந்த வடிவத்தில் தன் படைப்பிருந்தாலும், அதில் அவசியமின்றிப் பயன்படுத்தாத கவிஞன்; அவன். அவனுக்கு வார்த்தைகள் அனைத்தும் வாழ்வை இயக்கும் மந்திரங்கள். வார்த்தைகளின் வலிமையை முற்றாக அறிந்தவன் பாரதி.

ஆதியில் வார்த்தை இருந்தது

வார்த்தை கடவுளோடிருந்தது

வார்த்தையே கடவுளானது

- என்கிறது விவிலியம். பிரணவ ஒலியிலிருந்து பிறந்ததுதான் பிரபஞ்சம் என்பத இந்த மண்ணின் நம்பிக்கை. அதனால்தான் ‘மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்’ என்றான் மகாகவி.

அரசர்களின் அந்தப்புரங்களிலும், கடவுளைப் பற்றிய கற்பனைகளிலும் நீண்ட காலமாகத் தேங்கிக் குட்டையைப் போல் நாறிக் கொண்டிருந்த தமிழ் இலக்கியம், புதிய திசை நோக்கித் தடம் பதிப்பதற்குப் பாதையைச் செப்பனிட்ட பாரதி ஒவ்வொரு சொல்லையும் மந்திரமாக ஒலிக்கச் செய்தான். அது தமிழர் செவிவழிப் புகுந்து, சிந்தையில் ஆயிரம் அதிர்வலைகளை உருவாக்கியது.

www.t.me/tamilbooksworld

# 3



## எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு...

சமுதாயச்
சூழ்நிலையும்,
அதன்
www.t.me/tamilbooksworld
தேவையும்,
தாகமும்,
தவிப்புமே
ஒரு
நாட்டில்
தோன்றுகின்ற
இலக்கியம்,
கலை
ஆகியவற்றை
வடிவு
கொள்ளச்
செய்கின்றன.
மக்களின்
உயிர்த்தாபத்தையும்,
உள்
ஒளியையும்
பிரதிபலிக்காத
கலை
எதுவும்
கால

வெள்ளத்தில்
கால்
கொள்வதில்லை.
பாரதி
தேசியம்
பாடினார்
என்று
கூறும்போது,
அன்றைய
நமது
வாழ்வின்
பெருந்தவமாக
இருந்த
விடுதலை
லட்சியம்
அதற்கு
அடிப்படையாக
இருந்திருக்கிறது
என்பதை
www.t.me/tamilbooksworld
மறக்கக்கூடாது...
பாரதியின்
தேசியப்
பாடல்கள்
காலத்தால்
அழிந்து
போகின்ற
செய்திக்
கடிதங்களோ
சீட்டுக்கவிகளோ
அல்ல.
மேலும்,
பாரதி
குறிப்பாகப்
பாரத
நாட்டுக்கு
உரிய
கருத்துகளைப்
பேசியபோதிலும்,

உலகம்
முழுவதுக்குமே
உரிய
உயர்ந்த
மானுஷிகப்
பண்பாடுகளின்
தெய்வீக
அம்சத்தை
ஒளியுறப்
பாடுகின்ற
அமர
கீதங்களை
இசைத்து
இருப்பதை
நாம்
உணர
வேண்டும்.
சுதந்திர
ஆர்வம்
என்பது
உலகில்
எந்தெந்த
நாடுகளிலெல்லாம்
தோன்றினவோ,
அந்தந்த
நாட்டு
மக்களையெல்லாம்
போற்றுகின்ற
பரந்த
அகில
உலகத்
தேசியம்
அவருடையது.

- திருலோக சீதாராம்

'பாரதியார் பெருமை' நூலில்.

www.t.me/tamilbooksworld

இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் பாரத தேவியின் அடிமை விலங்கை அடித்து நொறுக்க உரத்த குரலில் பாடிய முதல் கவிஞன் பாரதி. 'தமிழில் ஆய்த எழுத்து ஒன்று' என்று பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பாடம் நடத்திய வேளையில், 247 எழுத்துகளையும் ஆய்த எழுத்துகளாக மாற்றி வெள்ளையர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வீசிப் பார்த்தவன் பாரதி. 'ஆன்மாவை விற்று, உலகம் முழுவதையும் உடைமையாகப் பெற்று என்ன பயன்?' என்று இயேசு கேட்டார். சுதந்திரமில்லாத மனிதனுக்கு எந்தவிதமான சுகங்களும் இருக்க முடியாது என்பது பாரதியின் தீர்ப்பு.

'சுதந்திரம் என்பது ஒரு நித்திய பண்பு. ஒரு நித்திய உண்மை. வாழ்க்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு கற்பு நிலை உண்டு. அதேபோல் ஒரு தேசத்திற்கும் உண்டு ஒரு கற்பு நிலை. அதன் பெயர்தான் சுதந்திரம். அது வெறும் அரசியல் உரிமை பற்றிய தற்காலிக கோஷம் அல்ல. சுதந்திரம் என்பது ஒரு பண்பாடு. பிற எல்லா மனிதப் பண்பாடுகளுக்கும் உயிர்ப்பு தரும் பிராண வாயு அது. அது இன்றேல் பிற பண்பாடுகள் அனைத்தும் வெறும் எலும்புக்கூடுகளே! பிணத்துக்குப் பூட்டிய அணிகலன்களே! சுதந்திரம் என்பது நாகரிக வாழ்வின் முதல் அறிகுறி; முதல் தேவை' என்று 'புதுநெறி காட்டிய பாரதி'யில் மிக அழகாகக் குறிப்பிடுகிறார் மார்க்சிய அறிஞர் ஆர்.கே.கண்ணன்.

www.t.me/tamilbooksworld

நின்னருள் பெற்றி லாதார்

நிகரிலாச் செல்வ ரேனும்

பன்னருங் கல்வி கேள்வி

படைத்துயர்ந் திட்டா ரேனும்

பின்னரும் எண்ணி லாத

பெருமையிற் சிறந்தா ரேனும்

அன்னவர் வாழ்க்கை பாழாம்

அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்

- என்கிறான் மகாகவி.

‘ஓநாயும் வீட்டுநாயும்’ என்பது பாரதியின் கட்டுரைகளில் ஒன்று. சுதந்திரம் மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உருவகத்தில் உணர்த்தும் கதை வடிவிலான கட்டுரை இது. உக்கிரசேனப் பாண்டியன் என்ற பாளையக்காரருக்கு வேட்டையில் பெருவிருப்பம். அவரிடம் பலவகை வேட்டை நாய்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று பகதூர். உக்கிரசேனர் வேட்டையாடுவதற்குப் பகதூருடன் புறப்பட்டார். பகதூர் பார்வைக்கு அழகாக, சதைக் கொழுப்புடன், தினந்தோறும் கழுவப்பட்டதால் தளதளப்புடன் இருந்தது. காட்டில் வேட்டைக்கு எஜமானனுடன் வந்த பகதூரின் பளபளப்பில் ஓர் ஓநாய் மயங்கி அருகில் வந்து உரையாடியது. ஓநாய் பகதூரின் ராஜ வாழ்க்கையைக் கேட்டறிந்து, காற்றிலும் மழையிலும், வெயிலிலும் அலைந்து திரிந்து வருத்தமுறும் தன் வாழ்க்கையை நினைத்து நொந்தது. உக்கிரசேனன் பராமரிப்பில் தனக்கும் ஒரு புகலிடம் கிடைத்தால் நல்லது என்று பகதூரிடம் பரிந்துரைக்க வேண்டியது. பகதூரும் அதற்குப் பெரிய மனதுடன் இசைந்தது. நாயும் ஓநாயும் ஒன்றாக நடந்தன.

பகதூரின் கழுத்தைச் சுற்றி ஒரு அகலமான தழும்பு இருந்ததைப் பார்த்த ஓநாய், ‘உமது கழுத்தில் அவ்வளவு பெரிய தடம்படக் காரணமென்ன?’ என்று கேட்டது. ‘அது ஒன்றுமில்லை. எனக்குக் கழுத்தில் தங்கப்பட்டை போட்டிருந்தது. அதன் தடம் தெரியலாம்’ என்று பகதூர் விளக்கியது. ‘அந்தப் பொன் பதக்கம் எங்கே? நீர் ஏன் அதைப் போட்டுக்கொண்டு வரவில்லை?’ என்று ஓநாய் கேட்டதும், ‘என்னை வெள்ளிச் சங்கிலியால் கட்டும்போதுதான் அதை என் கழுத்தில் போடுவார்கள்’ என்றது பகதூர். ‘உம்மை ஏன் கட்ட வேண்டும்? யார் கட்டுகிறார்கள்?’ என்று வியப்புடன் கேட்டது ஓநாய். ‘என்னுடைய எஜமானன் என்னைக் கட்டுவார். அவரைப் பார்க்க வரும் மனிதர்கள் என்னைக் கண்டு அஞ்சாது இருக்கும்படி என்னைக் கட்டி வைப்பார்கள்’ என்றது பகதூர். பாரதியின் சுதந்திர உணர்ச்சி முழுவதும் ஓநாயின் வார்த்தைகளில் வெளிப்படுகிறது.

www.t.me/tamilbooksworld

‘தூ! பிரஷ்டப் பயலே! என்னை நீ ஏமாற்றப் பார்த்தாய். உன் பிழைப்பும் ஒரு பிழைப்பா? நீ ஒரு அடிமையாக இருந்தும் மெத்த ஜம்பமாகப் பேசினாய். நான் சுதந்திரப் பிரியன். எனக்கு எஜமானனும் இல்லை; சங்கிலியும் இல்லை; கஷ்ட வாழ்வாக இருப்பினும் நான் சர்வ சுதந்திரன். யதேச்சையாக எங்கும் செல்வேன். எதையும் தின்பேன். எதையும் சொல்வேன். எவரோடும் சேர்வேன். பராதீனம் பிராண சங்கடம். ஒருவருடைய ஆக்கினைப்படி வரவோ, போகவோ, உண்ணவோ, உறங்கவோ, மலம் ஜலம் கழிக்கவோ சம்மதித்து இருப்பவன் மகா நீசனாக இருக்க வேண்டும்’ என்ற ஓநாயின்

வார்த்தைகளில் எவ்வளவு எளிமையான, தெளிவான சுதந்திர பிரகடனம்!

தேவிநின் னொளி பெறாத

தேயமோர் தேய மாமோ?

ஆவியங் குண்டோ செம்மை

அறிவுண்டோ? ஆக்க முண்டோ?

காவிய நூல்கள் ஞானக்

கலைகள் வேதங்க ளுண்டோ?

பாவிய ரன்றோ நின்றன்

பாலனம் படைத்தி லாதார்?

- என்ற ‘சுதந்திர தேவியின் துதி’ ஒன்று போதும் பாரதியின் விடுதலை ஆவேசத்தை முழுமையாக நாம் உணர்ந்து உள்வாங்க!

www.t.me/tamilbooksworld

தேசபக்தி என்ற நவீன மார்க்கம்

பாரதி 1909-ல் வெளியிட்ட ‘ஸ்வதேச கீதங்கள்’ முன்னுரையில், ‘சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய தேசபக்தி என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகாங்கிதமாயின’ என்று குறிப்பிடுகிறான். நாட்டின் சர்வ சுபங்களுக்கும் தேசபக்தியே மூலாதாரம் என்று அழுத்தமாக அறிவுறுத்துபவன், அதை ‘நவீன மார்க்கம்’ என்கிறான் . தேசபக்தியை ஒரு மதமாக மாற்றியவன் நம் மகாகவி. சிறந்த பாரதி ஆய்வாளர்கள் இந்தப் புதுமையை வியந்து போற்றுகின்றனர்.

‘பாரதியாரோ தேசபக்தியையே தெய்வபக்தியாக மாற்றிக் கொண்டார். வெறும் தேசபக்தியாக ஓர் உணர்ச்சியிருந்தால் அது வேகமும் அழகும் பெற்றிருக்காது. சமய மரபை அனுஷ்டித்தும், பாரத நாட்டைத் தாயாகவும், நாட்டுப் பற்றைத் தாயன்பாகவும், தேசப்பற்றை பக்தி வைராக்கியமாகவும் கொண்டார் பாரதியார் (இரு மகாகவிகள்)’ என்று தெளிவுபடுத்துகிறார் க.கைலாசபதி.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி., 'பாரதியார் ஒரு புதிய தெய்வத்தைப் பாடினார். அவர் காலத்திலே ஒரு புதிய மதம் பிறந்தது. அது தேசபக்தி மதம். அந்த மதத்தின் பெயரால் ஒரு புதிய தெய்வமும் கற்பிக்கப்பட்டது. அதன் பெயர் பாரதமாதா! அந்தப் புதிய தெய்வத்தை- -பாரதமாதாவை வழிபடுவதற்கான பக்திப்பாடல்களை எழுதிக் குவித்தான் பாரதி. அது அவனுக்குள்ள தனிப்பெருமை. அவன் மூட பக்தன் அல்லன்; பகுத்தறிவுவாதிதான். ஆனால், தமிழகம் தெய்வபக்தி மணக்கும் திருநாடு. அந்தத் தெய்வ பக்தியோடு கலந்து தேசபக்தியை ஊட்டினால்தான் தமிழர் எழுச்சி கொள்வார்கள் என்பது பாரதிக்குத் தெரிந்திருந்தது. ஆனால், தேசபக்தியை மதமாக்கி, அந்த மதத்தின் தெய்வமாக பாரதமாதாவைப் படைத்தான். அந்தத் தெய்வத்தின் மீது பதிகங்கள் பாடினான்' என்று சிறந்த விளக்கம் தருகிறார்.

வந்தே மாதர மென்போம் - எங்கள்

மாநிலத்தாயை வணங்குது மென்போம்

- என்ற பாடல் வரிகளில் ஒரு புதுமைப் புதைந்திருந்தது.

www.t.me/tamilbooksworld

மாதர் நலன் காக்கும் நோக்கில் வெளிவந்த 'சக்கரவர்த்தினி' மாத இதழின் ஆசிரியராக 24 வயதில் பொறுப்பேற்ற பாரதி பங்கிம் சந்திரரின் வங்கமொழிப் பாடலான 'வந்தே மாதர'த்தை மொழிபெயர்த்து வெளியிட்டார். தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் கூடிய கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் (1906) நாட்டின் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்ட 'வந்தே மாதரம்' பாடல், தமிழரிடையே சென்று சேர்ந்து தேசபக்தியைப் பெருக்க வேண்டும் என்று விரும்பிய கவிஞன் அதைத் தமிழில்,

இனிய நீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!

தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை!

பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை

- என்று 27 வரிகளில் முதலில் மொழிபெயர்த்தான். அந்த மொழிபெயர்ப்பு அவனுக்கு நிறைவைத் தரவில்லை போலும்! மீண்டும் வங்கத்தின் 'வந்தே மாதரம்' பாடலை

நளிர்மணி நீரும் நயம்படு கனிகளும்

*குளிர்பூந் தென்றலும் கொழும் பொழிற் பசுமையும்*

*வாய்த்து நன் கிலகுவை வாழிய அன்னை*

- என்று 29 வரிகளில் அழகிய தமிழில் புதிதாக மொழிபெயர்த்தான்.

பாரதி மொழிபெயர்த்த இரண்டு ‘வந்தே மாதரம்’ பாடல்களை விட, அவனே சுயமாக சிந்தித்துத் தமிழில் தந்த ‘வந்தே மாதரம் என்போம்’ என்ற பாடல்தான் இன்றுவரை இறவா வரம் பெற்றுத் தமிழர் நாவில் வலம் வருகிறது. ‘வந்தே மாதரம்’ என்ற கோஷத்தின் பொருளறியாமல் உணர்ச்சி பொங்க முழங்கிய தமிழரைக் கண்டான் கவிஞன். அந்த மந்திரச் சொல்லின் பொருள் புரிந்துவிட்டால் தேசிய உணர்ச்சி பல்கிப் பெருகும் என்ற ரகசியம் அறிந்தவன் ‘வந்தே மாதரம் என்போம்’ என்று முதல் வரியில் எழுதியவன். அதன் உண்மைப் பொருளை அடுத்த வரியில் ‘எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்’ என்று மொழிபெயர்த்தான்.

### எட்டயபுரத்தின் பழிதீர்த்த பாரதி

www.t.me/tamilbooksworld

வெள்ளையருக்கு எதிராக முதலில் புரட்சிக்குரல் கொடுத்தது நெல்லை மண். ‘சிப்பாய் கலகம்’ என்று வெள்ளையராலும், ‘முதல் இந்திய சுதந்திரப் போர்’ என்று சாவர்க்கராலும் வர்ணிக்கப்பட்ட வடஇந்தியக் கலவரம் நிகழ்வதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கி.பி. 1775-ல் சங்கரன்கோவிலுக்கு அருகில் உள்ள நெற்கட்டும் செவ்வலில் கோட்டை கட்டியாண்ட பூலித்தேவன் வெள்ளையருக்கு வரிகட்ட மறுத்து ஆங்கிலத் தளபதி அலெக்சாண்டர் கெரான் என்பவனைப் போரில் புறமுதுகிட்டு ஓடச்செய்தான் என்பது தமிழினத்தின் வீரவரலாறு. பாஞ்சாலங்குறிச்சியில் எதிர்த்து நின்ற வீரபாண்டிய கட்டபொம்மன் வஞ்சகத்தால் பிடிபட்டுத் தூக்கில் தொங்கியது துரோக வரலாறு.

திருச்செந்தூரில் வீரபாண்டியன் ஜக்கம்மாள் விழாவில் பங்கேற்கும் நாள் பார்த்து படைநடத்தச் சொன்னதுடன், 4,000 போர் வீரர்களை வெள்ளையருக்குத் துணையாக அனுப்பித் தன் அடிமை விசுவாசத்தை வெளிப்படுத்திக் கொண்டான் எட்டப்பன். அந்த விசுவாசத்துக்கு விலையாக சிவஞானபுரம் என்ற ஊரையும், தர்பார் நடத்திக்கொள்ளும் அனுமதியையும் பெற்று ஆங்கிலேயரின் அடிவருடியாய் இருப்பதில் அகமகிழ்ந்தவன் எட்டப்பன். துரோகம் விளைந்த அந்த மண்ணில், எட்டு என்ற எண்ணை உச்சரிக்க அஞ்சி, எட்டுக்குப் பதில் ‘மகாராஜா’ என்று உச்சரித்த கோழை மக்களுக்கு நடுவில் பிறந்த பாரதிதான்

பாட்டுத் திறத்தாலே அடிமை இருள் கிழித்துச் சுதந்திரத்தைப் பாலித்திட வந்தான்.

‘சுதேசமித்திரன்’ இதழில் 1904-ல் துணை ஆசிரியர் பொறுப்பேற்ற பாரதி வெறும் ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் ஆத்ம நிறைவை அடைய முடியவில்லை. விடுதலை உணர்வை நாட்டு மக்களிடம் பாட்டின் மூலம் தூண்டுவதற்கு அவன் துணிந்தான். 1906 பிப்ரவரி 13-ம் நாள் சுதேசமித்திரனில் விண்ணப்பம் ஒன்றை வெளியிட்டான்.

‘எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வர்ணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுவதையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர் மாட்டுமிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும், இதிகாசங்களிலும் நாட்டுப் பாடல்களில் நிடதம், கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வர்ணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப்புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக தேசபக்திப் பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும். சிறிய ஆற்றலுடையோனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன் கண்ணே எவ்வாற்றானும் துணை புரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

சி.சுப்பிரமணியபாரதி’.

காலதாமதமின்றி மிக விரைவாக நாட்டுப்பற்றை ஊட்டும் பாடல்களை எழுதியனுப்பும்படி பாரதி செய்துகொண்ட விண்ணப்பத்துக்கு எந்தப் புலவரும் செவிசாய்க்கவில்லை. மீண்டும் ‘ஓர் சுதேசிய விண்ணப்பம்’ விடுத்த பின்பும் எந்தப் பாடலும் வந்து சேரவில்லை. நாட்டுப் படலம் எழுதும்படி வேண்டியிருந்தால் நான்காயிரம் பாடல்கள் வந்து குவிந்திருக்கும். ஒவ்வொரு பாட்டுப் படலமும் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்ததால் எந்தப் புலவரும் எழுதுகோல் ஏந்தத் தயாராக இல்லை. வேறு வழியின்றித் தானே நாட்டுப்பாடல்கள் எழுதுவது என்று முடிவெடுத்தான். அவன்

www.t.me/tamilbooksworld

எழுதிய 53 தனிப்பாடல்களும் தமிழரின் நாடி நரம்பில் தேசிய உணர்வை ஓடச்செய்து, சுதந்திர தாகத்தைப் பெருக்கெடுக்கச் செய்தன. எட்டப்பனால் தீராப் பழியெய்திய எட்டயபுரம் மண் பாரதியைச் சுமந்ததால் அந்தப் பழியிலிருந்து முற்றாக விடுபட்டது.

*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்*

*ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே*

***

*நொந்தே போயினும் வெந்தே மாயினும்*

*நந்தே சத்தர்உ வந்தே சொல்வது*

*வந்தே மாதரம்*

***

*பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் - மிடிப்*

www.t.me/tamilbooksworld

*பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லு வார்*

***

*விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும் போய்*

*மின்மினி கொள்வாரோ?*

*கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்*

*கைகட்டிப் பிழைப்பாரோ?*

***

*என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?*

*என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?*

***

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் - இது

நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் - இந்தப்

பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்வோம் - பரி

பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்

- என்பது போன்ற எளிய சொற்களில், படிப்பறியாப் பாமரர்க்கும் பழகிய நாட்டுப்புறச் சந்தங்களில் பாரதியைப்போல் சுதந்திரக் கனலைப் பாட்டின் மூலம் மூட்டிய கவிஞன் இந்தியாவில் வேறொருவன் இல்லை.

அவன் வாழ்ந்த காலத்தில் முப்பதுகோடி மக்களும் நாட்டு விடுதலையில் நாட்டம் கொள்ளவில்லை. அதற்காக பாரதி அஞ்சிச் சாகவில்லை. பெரும்பான்மை ஆட்டு மந்தையைப் போல் இருந்தது. ஆனாலும், சிறுபான்மை சீற்றத்துடன் பொங்கியெழுந்தால் புரட்சி வெடிக்கும் என்பது கவிஞனின் கணக்கு.

'ஆகாயமளாவிய ரதத்தை விரலத்தனை அச்சாணி நடத்துகிறது. வானத்தை முட்டி நிற்கும் மலை சிற்றுளியால் தகர்க்கப்படுகிறது. சிறிய நெருப்பும் ஒரு பெரிய வைக்கோல் போரைச் சுட்டெரிக்கின்றது. சகல சன்மார்க்க சம்ரக்ஷணத்துக்காக சுதேசிய முறையைக் கைக்கொள்கிறவர்கள் ஒரு சிறு பகுதியாக இருந்தபோதிலும் இந்த முயற்சியால்தான் நன்மை பெருக வேணும்' என்று 'சுதேசியம்' கட்டுரையில் பாரதி தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான்.

www.t.me/tamilbooksworld

திலகரும் பாரதியின் தீவிரவாதமும்

'கவர்மென்டாரிடம் பிச்சை கேட்பதுபோல் மனுச் செய்தும், கெஞ்சியும், காலைப்பிடித்தும், நாடறியத் தாங்கியும், முகமன் கூறியும் கேட்கும் கேள்விகளை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். அவ்வாறு தலைகுனிந்து கேட்பது இந்தியருக்கே பெரிதும் அவமானமும், ஆண்மையற்றதுமான செயலாயிருக்கின்றது. ஆதலால் இந்த இழிந்த வழக்கத்தை விட்டுவிட்டு நமக்கு நாமே துணை என்ற நம்பிக்கையோடு சுதந்திரங்களை நாமே பிறர் உதவியின்றிப் பெறக்கூடிய முறைகளை அனுசரிக்க வேண்டும்' என்பது பாரதியின் கொள்கை.

மிதவாதிகளுக்கு எதிராக, 1907-ல் நடைபெற்ற சூரத் காங்கிரஸிலிருந்து விலகிப் புதிய கட்சியைத் தொடங்கிய திலகரின் லட்சியமும் இதுதான் என்கிறான் பாரதி. காங்கிரஸில் ஈடுபாடு

கொண்ட நாள் முதல் திலகரின் மறைவு வரை மகாகவி அவருடைய தீவிர அரசியல் பாதையையே தன்னுடைய பாதையாகத் தேர்ந்து கொண்டான்.

திலகரின் செல்வாக்கு நம் பாரதியிடம் மிக அதிகமாகக் காணப்பட்டது. திலகரைத் தன்னுடைய அரசியல் குருவாக நெஞ்சில் அங்கீகரித்தவன், அவருக்காகவே அரசியல், சமூக சீர்திருத்தம் குறித்த தன் பார்வையையும் மாற்றிக்கொள்கிறான்.

'சமூக சீர்திருத்தம் இல்லாமல் அரசியல் சீர்திருத்தம் ஒரு கனவே; வெற்றுப் புனைந்துரையே. ஏனெனில், சமூக அடிமைகள் ஒரு போதும் அரசியல் விடுதலையைப் புரிந்துகொள்ள முடியாது' என்று 1904-ல் 'இந்து' இதழில் பாரதி கடிதம் எழுதினான். இந்தியர்களுக்கு முதல் தேவை சமூக சீர்திருத்தம் என்ற தன் அழுத்தமான நம்பிக்கையை அந்தக் கடிதத்தில் வெளிப்படுத்தினான். பின்னாளில் பெரியார் இதே கருத்துடன்தான் காங்கிரஸிலிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கம் கண்டு அரசியல் விடுதலைக்காகப் போராடியவர்களிடமிருந்து விலகி நின்று முழு மூச்சாக சமுதாய விடுதலைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார்.

www.t.me/tamilbooksworld

திலகர், 'உடனடித் தேவை அரசியல் சீர்திருத்தமே. சுதந்திர ஆட்சியில்தான் சமூக சீர்திருத்தம் சாத்தியம்' என்று எழுதியதும், அதற்கேற்ப நம் கவிஞனும் தன் கருத்தை மாற்றிக் கொண்டான். 'இந்தியாவில் ஆசாரத் திருத்தங்கள் நிறைவேறும் வரை ராஜதந்திரங்களுக்கு இந்தத் தேசத்தார் தகுதியுடையவர்களில்லை என்று சொல்லுவோர் அயோக்கியர்களாகவேனும், அல்லது மூடர்களாகவேனும் இருக்க வேண்டும்' என்று 1906-ல் தன்னுடைய 'இந்தியா' இதழில் மாற்றி எழுதினான் மகாகவி.

முதுபெரும் தலைவர் தாதாபாய் நௌரோஜி, பஞ்சாப் சிங்கம் லஜபதிராய் போன்ற சில தேசத்தலைவர்களை மட்டுமே புகழ்ந்து பாடிய பாரதி, 'வாழ்க திலகன் நாமம்!' 'திலக முனிவர் கோன்' என்று இரண்டு பாடல்களை இதயம் நெகிழ்ந்து திலகர் மீது இசைத்தான்.

அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்

அன்பொ டோதும் பெயருடை யாரியன்

- என்று புகழ்கிறான். திலகரின் ஐம்பதாவது பிறந்த நாள் 1906-ல்

புனாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டபோது, பாரதி சென்னையில் தன்னுடைய வீட்டில் கொண்டாடினான். திலகர் தினத்தையொட்டி 1906 - இந்தியா இதழில் எழுதிய கட்டுரையில், 'இந்த மகான் நனவிலும் கனவிலும் பாரத தேசத்தின் சேமத்திற்கும், பெருமைக்கும், சுயாதீனத்திற்கும் பிரார்த்தனை புரிந்து வருகிறார். திலகர் சாமானியமாகத் தேசாபிமானிகளென்று சொல்லித் திரியும் கூட்டத்தாரைச் சேர்ந்தவர் அல்லர். பயங்காளித்தனத்தைப் புத்தி சாதுரியமென்றும், ஆண்மையற்றிருக்கும் அயோக்கியத்தன்மையைத் தீர்க்காலோசனையுடைமையென்றும் திலகர் நினைப்பவரில்லை. சுதேசிய தர்மத்துக்குப் பிரதம குருவாக 'திலகரைக் கருதலாம். மகா வைதீகானுஷ்டானங் கொண்டவராகிய திலக ரிஷி தற்காலத்துப் போலி வைதிகர்களைப் போலக் கண்மூடித்தனமாக அகந்தையும், பொறாமையும் இருதயக் குறுக்கமும் உடையவர் அல்ல' என்று கூறும் பாரதி திலகர் மீது பூண்டிருந்த பக்தியையும், மிதவாதிகள் மேல் கொண்டிருந்த ஆழமான கசப்பையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகிறான்.

தமிழுக்குப் புதிய கந்தர்வ நடையை அறிமுகப்படுத்திய ஞானரதத்தில் தர்மலோகத்தைப் பற்றி எழுதும்போது, 'தர்மராஜாவின் முகத்தைப் பார்த்தேன். பாலகங்காதர திலகரின் முகத்துச்சாயல் கொஞ்சம் தென்பட்டது' என்று குறிப்பிடுவதைப் பார்க்கும்போது பாரதியின் நெஞ்சில் திலகருக்கிருந்த இடம் தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும், திலகரின் அரசியல் சிந்தனைகளைத் தழுவிக்கொண்ட மகாகவி, அவருடைய பிற்போக்கான சனாதனக் கருத்துக்களோடு கைகுலுக்கவில்லை.

www.t.me/tamilbooksworld

மகாகவியும் மகாத்மா காந்தியும்

திலகர் 1920-ல் மறைந்தார். இந்தியாவில் காந்தியுகம் கனிந்தது. காங்கிரஸ் காந்தியின் கட்டளைக்கு காத்திருந்தது. இந்திய மக்களுக்கு மகாத்மாவின் சொல்லே வேதமானது. திலகரின் மறைவுக்குப் பின்பு வன்முறையற்ற சாத்விக சத்தியாக்கிரகப்போரில் காங்கிரஸை ஈடுபடுத்தினார் காந்தி. திலகரின் சீடர்களாகத் தமிழகத்தில் தேசத்தொண்டு புரிந்த வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் முழுமையாகத் தங்களைக் காந்தியத்திற்கு அர்ப்பணிக்க முடியாமல் தயங்கினர். அதன் விளைவாக அவர்கள் ஒதுங்கவும் செய்தனர். ஆனால், திலகரின் தீவிர பக்தனாகத் திகழ்ந்த பாரதி மட்டும் காந்தி என்னும் மனிதருக்குள் மறைந்திருந்த மகாத்மாவை முதலிலேயே இனங்கண்டு அவருடைய தலைமையை ஏற்றிப் போற்றினான்.

*வாழ்க நீ! எம்மான், இந்த*

*வையத்து நாட்டி லெல்லாம்*

*தாழ்வுற்று வறுமை மிஞ்சி,*

*விடுதலை தவறிக் கெட்டுப்*

*பாழ்பட்டு நின்ற தாமோர்*

*பாரத தேசந் தன்னை*

*வாழ்விக்க வந்த காந்தி*

*மகாத்மா! நீ வாழ்க; வாழ்க!*

- என்று காந்தியை மனங்குளிர மகாத்மா என்று வாழ்த்தும் பாரதி அறப்போராட்ட வழிமுறையை மனநிறைவுடன் அங்கீகரிக்கிறான். அதனால்தான்,

www.t.me/tamilbooksworld

*விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன*

*வெம்பிணி யகற்றிடும் வண்ணம்*

*படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்*

*படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்!*

- என்று போற்றுகிறான்.

இந்திய அரசியலரங்கில் மகாத்மாவின் புகழ்க்கொடி உயரப் பறந்த நேரத்தில் பாரதி அவரைப்பற்றி உயர்வு நவிற்சியாகப் பாடினான் என்று நாம் நினைக்கலாகாது. தென்னாப்பிரிக்காவில் காந்தியின் தலைமையில் அறப்போராட்டம் நடந்தபோது, இந்தியாவில் பலர் காந்தியப் போராட்டம் குறித்து எள்ளளவும் அறியாத சூழலில், பாரதி 1909 ஆகஸ்ட் 21 ‘இந்தியா’ இதழில் தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் ஒருங்கிணைத்து விடுதலைப்போரை நடத்த காந்தியைக் காங்கிரஸின் தலைவராக்க வேண்டும் என்று எழுதுகிறான்.

‘ஜனங்களை ஒன்று சேர்த்து ஒரு காரியத்தை நிர்வகித்துக் கொண்டு போவதில் இவருக்குச் சமமானவர் கிடையாது. சட்டத்திற்குட்பட்ட

கிளர்ச்சியை எழுப்புவதில் இவர் ஒருவருக்கும் இரண்டாவது நபர் அல்லர். சாத்வீக எதிர்ப்பை அனுஷ்டிப்பதிலேயே இவரைக் கிட்ட அண்ட ஒருவருக்கும் யோக்கியதை இல்லை...ராஜ்ய தந்திர முறைமையிலும் நல்ல சூட்சுமமான புத்தியுடன் யோசித்துப் பார்த்தால் இவ்வருஷம் லாகூரில் நடைபெறப் போவதாய்ச் சொல்லும் காங்கிரஸூக்கு காந்தியை அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பது ரொம்பவும் உயர்ந்ததும், முக்கியமான விஷயமுமாயிருக்கும் என்ற பாரதியின் தீர்க்க தரிசனம் நம் விழிகளை வியப்பால் விரியச் செய்கிறது.

தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட வன்கொடுமைகளைப் பற்றி நேரில் விளக்க மகாத்மா 1909-ல் லண்டனுக்குச் சென்றார். அவருடைய முயற்சி வெற்றி பெறாத நிலையில் தென்னாப்பிரிக்கா திரும்பியவரை அரசு சிறையில் அடைத்தது. இந்த அராஜகப் போக்கைக் கண்டித்து 1909 டிசம்பர் 18 'இந்தியா'வில் ஒரு கார்ட்டூன் வெளியிட்டுத் தலையங்கமும் எழுதியவன் பாரதி.

காந்திப் பசுவின் மீது சில வெள்ளைப் புலிகள் பாய்வதுபோல் படம்போட்டு, அதன் அடியில், 'ஸ்ரீ காந்தியென்ற பசுவானது தனது கன்றுக் குட்டியாகிய இதர இந்தியர்களின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்துக்குப் போய்ப் பேசிவிட்டு, சிறையிலடைபடுவதற்காக மறுபடியும் திரான்ஸ்வாலுக்கு வந்திருக்கிறது. தென் ஆப்பிரிக்கா உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் இவருடைய மேன்மையை அறியாமல் சிறையிலடைத்தார்கள்' என்று குறிப்பும் எழுதினான்.

www.t.me/tamilbooksworld

தலையங்கத்தில், 'ஸ்ரீ காந்தியின் நெறியையும், திடசித்தத்தையும் பார்த்தால் இப்படிப்பட்ட தெய்வீக குணங்களமைந்த புருஷனும் உலகத்தில் இருக்கிறானாவென்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. இவர் பரம சாதுவாக இருந்துகொண்டு ராட்சசர்களையொத்த விரோதிகளோடு தர்மயுத்தம் புரிந்து நிற்கிறாரென்று தலைச் சித்திரத்தில் நமது புராணக் கதையையொட்டி ஸ்ரீ காந்தியைப் பசுவாகவும், அவருடைய விரோதிகளைப் புலியாகவும் போட்டிருக்கிறது' என்று விளக்குகிறான்.

தென்னாப்பிரிக்காவில் காந்தி நடத்திய அறப்போரில் சிறை சென்றவர்களின் குடும்ப நலனுக்காக 'இந்தியா' இதழ் மூலம் பாரதி நிதி திரட்டும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறான். 1909 டிசம்பர் 25 இந்தியா இதழில், 'தென் ஆப்பிரிக்காவில் சமத்துவத்தின் பொருட்டாகவும், ஆரிய சாதியின் (சான்றாண்மை மிக்க மனிதர்களை எப்போதும் பாரதி 'ஆரிய சாதி' என்று அடைமொழி கொடுத்தே அழைத்திருக்கிறான். ஆரிய சாதி

என்பது அவனளவில் இந்தியர்களைக் குறிக்கும் பொதுப் பெயரேயன்றி ஒரு குறிப்பிட்ட சாதியைக் குறிக்கும் சொல் அல்ல) மானத்தைக் காக்கும் பொருட்டாகவும் நம்மவர்கள் பட்டு வரும் துயரங்களைப் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. வீடு வாசலையும் பொருளையும் இழந்தவர்கள் பலர். துன்பம் பொறுக்க முடியாமல் இந்தியாவுக்குத் திரும்பியோடி வந்துவிட்டவர்கள் பலர். அங்கேயே இறந்தவர்கள் பலர்.

பிராணனுக்குத் தீங்கு நேரிடினும் மானத்தை இழக்க மனமற்றவர்களாய் அந்நாட்டு மிருகச் சட்டத்தை மீறி நடந்து சிறைச்சாலையில் வருந்துவோர் பலர். கல்வியிலும், செல்வத்திலும் குலத்திலும் மகோன்னத ஸ்தானத்திலிருந்தவர்கள் இப்போது அந்நாட்டுச் சிறைக்கூடங்களில் மலக்கூடை சுமப்பது முதலிய வேலை செய்ய நேர்ந்துவிட்டது. அங்குள்ள ஆரியஸ்திரீகளோ தமது கணவரிடமும், சகோதரரிடமும், ‘சிறையிலிருந்து படாத பாடுபட்டு இறந்துவிடும் ஆரிய சாதிக்கு அவமானம் தரும் சட்டத்துக்கு உட்படாதேயுங்கள்’ என்று போதிக்கிறார்கள்.

காய்கறிகள் விற்றும், கையால் உழைத்தும் புருஷரைச் சிறைக்களத்தில் விட்டுவிட்டு நமது உத்தம ஸ்திரீகள் ஜீவனம் செய்கிறார்கள். இப்போது அவ்வித ஜீவனத்திற்கும் பல இடுக்கண்கள் நேர்ந்துவிட்டன. பண உதவி வேண்டுமென்று நமது வீர சகோதரர்களும் சகோதரிகளும் தாமே வாய் திறந்து கேட்கத் தொடங்கிவிட்டார்கள். பம்பாயிலிருந்து ஆயிரக்கணக்கான தொகை போய்விட்டது. பெங்காளத்திலும் பெருந்தொகைகள் சேர்த்து வருகிறார்கள். சென்னப் பட்டணத்தில் இதன்பொருட்டு வைத்திருக்கும் சபையாருக்கு இன்னும் அதிகமாகப் பணம் சேரவில்லை. தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களிலேயே பெரும்பாலோர் தமிழர்கள். அப்படியிருந்தும் நாம் இந்த விஷயத்தில் அசிரத்தையாக இருப்பது கிரமமன்று. ஆகையால், ‘இந்தியா பத்திரிகை நிதி’ என்பதாக ஒன்று சேர்த்துச் சென்னப் பட்டணத்திலுள்ள சபையின் காரியதரிசிக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறது. தமிழர்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும்’ என்று முதல் பக்கத்தில் ஓர் உருக்கமான வேண்டுகோளை வைத்திருக்கிறான்.

‘நாம் எதைச் செய்கிறோமோ அதையே அடுத்தவருக்குச் சொல்ல வேண்டும்’ என்று நம்பி அதன்படி வாழ்ந்தவன் பாரதி. அதனால்தான், ‘தென் ஆப்பிரிக்கா பாரத சகாய நிதி’ என்ற தலைப்பில் நிதியளித்தோர் பட்டியலை வெளியிட்ட பாரதி, தன் பங்காகவும் ரூபாய் ஐந்து அனுப்பியிருக்கிறான். காந்தி தென்னாப்பிரிக்க இந்தியர்களின்

www.t.me/tamilbooksworld

உரிமைகளைக் காப்பதற்கு அறவழியில் சத்தியாக்கிரக ஆயுதத்தை ஏந்திப் போராடி, வெற்றி வீரனாக இந்தியாவுக்குத் திரும்பிய பின்புதான் அரசியல் அரங்கில் மெல்ல மெல்ல அவருடைய முகம் தெரிந்தது. ஒத்துழையாமை இயக்கத்தை 1920-ல் தலைமையேற்று நடத்தியபோதுதான் கரம்சந்த் காந்தி மகாத்மா காந்தியாக அறியப்பட்டார். அதன் பின்புதான் அவருடைய புகழ் நாளுக்கு நாள் வளர்ந்து அவருக்குப் பின்னே ஓர் ஒளிவட்டம் உருவானது. ஆனால், பாரதியோ 1921-ல் இந்த மண்ணுலகை நீத்தான். அதற்குள்ளாகவே மகாத்மாவின் பெருமையை, அவரது தலைமைத் தகுதியை, இயக்கம் கட்டும் ஆற்றலை முழுமையாக உணர்ந்தான்.

காந்தியப் போர் முறையில் அவனுக்கு உடன்பாடு இருந்தாலும், திலகரின் பாதையில் நீண்ட காலம் நடந்ததால், 'ஒரு கன்னத்தில் அறை விழுந்தால் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும்' என்ற கர்த்தர் வழி காந்தியக் கொள்கையை முற்றாக அவனால் ஏற்க முடியவில்லை. மகாத்மாவின் சத்தியம், அகிம்சை, பிரமசரியம், திருடாமை, உடைமையின்மை, உடல் உழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சமய ஒற்றுமை, சுதேசி, தீண்டாமை ஒழிப்பு ஆகிய பதினோரு விரதங்களைப் பற்றி பாரதி தன்னுடைய 'தராசு' கட்டுரையில் எழுதும்போது தன் கருத்தை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்துகிறான்.

www.t.me/tamilbooksworld

'ஸ்ரீமான் காந்தி நல்ல மனுஷர். அவர் சொல்லுகிற சத்ய விரதம், அகிம்சை, உடைமை மறுத்தல், பயமின்மை - இந்த நான்கும் உத்தம தர்மங்கள். இவற்றை எல்லோரும் இயன்றவரை பழக வேண்டும். ஆனால், ஒருவன் என்னை அடிக்கும்போது நான் அவனை திருப்பி அடிக்கக்கூடாதென்று சொல்லுதல் பிழை (ரௌத்திரம் பழகு; கோல் கைக்கொண்டு வாழ். நையப்புடை என்று புதிய ஆத்திச்சூடியில் சொன்னவன் பாரதி) சுதேசியம், சாதி சமத்துவம், தேச பாஷைப் பயிற்சி, தெய்வ பக்தி இந்த நான்கையும் இன்றைக்கே பழகி சாதனை செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது தேசம் அழிந்து போய்விடும்.

'நாக்கைக் கட்டுதல், பிரமசரியம் இவையிரண்டையும் செல்வர்கள் இடையிடையே அனுஷ்டித்தால் அவர்களுக்கு நன்மையுண்டாகும். ஏழைகளுக்கு இந்த உபதேசம் அவசியமில்லை. அவர்களுக்கு நாக்கை ஏற்கெனவே கட்டித்தான் வைத்திருக்கிறது. பிரமசரியத்தை சாதி முழுமைக்கும் ஸ்ரீ காந்தி தர்மமென்று உபதேசம் செய்யவில்லை. அந்த வேலை செய்தால் தேசத்தில் சீக்கிரம் மனிதரில்லாமல் போய்விடும். காந்தி பதினோரு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது

விரதமொன்று சொல்லுகிறேன். அது யாதெனில்- - 'எப்பாடுபட்டும் பொருள் தேடு; இவ்வுலகத்திலே உயர்ந்த நிலை பெறு!' இப்பன்னிரண்டாவது விரதத்தை தேச முழுதும் அனுஷ்டிக்க வேண்டும்' என்கிறான் மகாகவி.

காந்தியிடம் உடன்பட வேண்டிய இடங்களில் உடன்பட்டும், வேறுபட வேண்டிய இடங்களில் வேறுபட்டும் பாரதி தன் மனக் கருத்தை எளிய பேச்சுத் தமிழில் வெளிப்படுத்துகிறான். காந்தி உடைமை மறுப்பை உபதேசிக்க, நம் கவிஞனோ, 'எப்பாடுபட்டும் பொருள் தேடு' என்று வறுமையற்று வாழ்வதற்கான வழியைக் காட்டுகிறான்.

பாரதியும் தாகூரும்

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை பாரதி வாழ்த்தி வரவேற்கிறான். அகிம்சைப்போரைப் புதிய, எளிய, ராஜதந்திர சூழ்ச்சி என்று இனங்கண்டு போற்றுகிறான். ஆனால், பாரதி வாழ்ந்த காலத்தில் உலகப் புகழோடு விளங்கிய ரவீந்திரநாத் தாகூர் காந்தியின் அறப்போர் வியூகத்தை அங்கீகரிக்காமல் எதிர்த்து விமர்சனம் செய்கிறார். 'மகாத்மாவை 'எமது தலைவர்' எனப் பாராட்டிய தாகூர் பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாக அடிமை மனப்பான்மையுடன் காந்தியைப் பின்பற்றுவதைக் கண்டித்தார்' என்று கூறும் க.கைலாசபதி, 'காந்தியின் நெறியையும், திடசித்தத்தையும் பார்த்தால் இப்படிப்பட்ட தெய்வீக குணங்கள் அமைந்த புருஷனும் உலகத்தில் இருக்கிறானா என்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது... ஆனால், கடைசியாக ஜயம் ஸ்ரீ காந்தி பட்சம்தான்' என்ற பாரதியின் பார்வையையும் ஒப்பீடு செய்கிறார்.

www.t.me/tamilbooksworld

'எமது தாய்நாட்டு மக்கள் உடுக்கத் துணியின்றிக் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கும்போது துணிகள் குவிக்கப்பட்டு எரிக்கப்படுவதைப் பாருங்கள். இது என்ன மந்திரம்? உண்மையான பொருளாதாரம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகக் கற்பனை மந்திரம் ஒன்று புகுத்தப்பட்டுள்ளது. அறிவையும், நிதானத்தையும் கைவிட்டு, அடிமைப் புத்தியுடன், மந்திரச் செயல் தழுவிய, பொய்யான பாதையை நாம் எதிர்க்க வேண்டும்' என்று காந்தியின் வெகுஜன இயக்கத்துக்கு எதிரான கருத்தைத் தாகூர் வெளிப்படுத்தியதையும் 'யுத்தம் நடக்கும்போது கவிஞன் யாழைக் கீழே வைக்கிறான்; சட்ட அறிஞன் சட்ட நூல்களையும், மாணவன் பாடப்புத்தகங்களையும் கீழே வைக்கிறான். யுத்தம் முடிந்ததும் கவிஞன் தனது சொந்த ராகத்தைப் பாடுவான்; அந்நிய உடைகளைத் தீயிலிடும்போது எனது வெட்கத்தைக்

கொளுத்துகிறேன். கவியுள்ளம் எதிர் காலத்தைப் பற்றிக் கனவு காணும் என்பதில் சந்தேகமில்லை. இன்று கோடிக்கணக்கான இந்திய மக்கள் ஒரே பாடலைத்தான் கோருகிறார்கள்; அதுதான் சத்துள்ள உணவு. அதைக் கொடுக்க வழியில்லை. தாகூரும் மற்றவர்களைப் போல் நூற்கட்டும்; தனது அந்நிய உடைகளைத் தீயிலிடட்டும்; அதுதான் இன்றைய கடமை' என்று உருக்கமாக மகாத்மா மனம் வெதும்பி உரைத்ததையும் க.கைலாசபதி 'இரு மகாகவிகள்' நூலில் பதிவு செய்கிறார்.

மகாகவி பாரதியோ மகாத்மாவைப் பின்பற்றினால் விடுதலை விரைவில் கனியும் என்று நம்பிக்கைக் குரல் கொடுக்கிறான்.

*விடுதலை பெறுவீர் விரைவா நீர்*

*வெற்றி கொள்ளுவீர் என்றுரைத் தெங்கும்*

*கெடுதலின்றி நந் தாய்த்திரு நாட்டின்*

*கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்*

www.t.me/tamilbooksworld

*சுடுதலுங் குளிரும் உயிர்க் கில்லை;*

*சோர்வு, வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை*

*எடுமினோ அறப்போரினை யென்றான்*

*எங்கோ மேதக மேந்திய காந்தி*

- என்று கெடுதலற்ற கிளர்ச்சியை நாடு முழுவதும் வளர்த்தெடுக்க காந்தியின் அறப்போரை அழுத்தமாக ஆதரித்துக் கவிதை பாடியவன்,

*காந்தி சொற் கேட்டார், காண்பார்*

*விடுதலை கணத்தினுள்ளே*

- என்று உரத்த குரலில் பிரகடனம் செய்கிறான்.

*ராஜாஜி ஏன் அறிமுகம் செய்யவில்லை?*

மகாத்மாவின் மரியாதைக்குரிய அறிஞராக, கவிஞராக, இந்தியப் பண்பாட்டின் பிரதிநிதியாக, தோழராக விளங்கிய தாகூர் காந்தியப்

போராட்டத்தை உளம் நிறைந்த உவப்புடன் ஆதரிக்கவில்லை. மாறாக, காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தையும், சுதேசிப் போரையும் கைராட்டையையும், கதர் இயக்கத்தையும் கடுமையாக விமர்சித்தவர் ரவீந்திரர். ஆனால், பாரதியோ, மகாத்மா முன்னெடுத்துச் சென்ற நோக்கங்களான பலாத்காரமற்ற அரசியல் முறை, சுரண்டலற்ற சமூக அமைப்பு, சத்தியத்தையும் அன்பையும் வழிபடுதல், நிலத்தில் உழைத்து உணவை பெறுதல், கட்டாய உடலுழைப்பு, எளிய வாழ்வில் இன்பம், சமய சகிப்புத்தன்மை ஆகியவற்றை முழுமையாக உள்வாங்கி, அந்த நோக்கங்கள் வெற்றி பெற ஆதரவாக கவிதைக்கரம் நீட்டியவன். அந்த பாரதி 1919-ல் சென்னைக்கு வந்த காந்தியைச் சந்திக்க வந்தபோது நிகழ்ந்ததை வ.ரா.வின் வாக்கின் மூலம் அறிகிறபோது இதயம் ரணமாகிறது.

அந்தச் சந்திப்பை இதோ... வ.ரா.விளக்குறார்: ‘அப்போது ராஜாஜி கதீட்ரல் ரோடு, இரண்டாம் நம்பர் பங்களாவில் குடியிருந்தார். அந்தப் பங்களாவில்தான் காந்தி வந்து நாலைந்து நாட்கள் தங்கியிருந்தார். ஒரு நாள் மத்தியானம் சுமார் இரண்டு மணி இருக்கும். காந்தி வழக்கம்போலத் திண்டுமெத்தையில் சாய்ந்துகொண்டு வீற்றிருந்தார். அவர் சொல்லிக் கொண்டிருந்ததைப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த மகாதேவ தேசாய் எழுதிக் கொண்டிருந்தார்.

www.t.me/tamilbooksworld

‘சேலம் பாரிஸ்டர் ஆதிநாராயண செட்டியார் குடகுக் கிச்சிலிப் பழங்களை உரித்துப் பிழிந்து மகாத்மாவுக்காக ரசம் தயார் பண்ணிக்கொண்டிருந்தார். ஒரு பக்கத்துச்சுவரில் ஏ.ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அந்தச் சுவருக்கு எதிர்ச் சுவரில் ராஜாஜியும் மற்றும் சிலரும் சாய்ந்து கொண்டு நின்றிருந்தார்கள். நான் வாயில் காப்போன். யாரையும் உள்ளே விடக்கூடாது என்று எனக்குக் கண்டிப்பான உத்தரவு.

‘நான் காவல் புரிந்த லட்சணத்தைப் பார்த்துச் சிரிக்காதீர்கள். அறைக்குள்ளே பேச்சு நடந்து கொண்டிருக்கிற சமயத்தில் பாரதியார் மடமடவென்று வந்தார். ‘என்ன ஓய்!’ என்று சொல்லிக் கொண்டே அறைக்குள்ளே நுழைந்துவிட்டார். என் காவல் கட்டுக்குலைந்து போய்விட்டது. உள்ளே சென்ற பாரதியாரோடு நானும் போனேன். பாரதியார் காந்தியை வணங்கிவிட்டு, அவர் பக்கத்தில் மெத்தையில் உட்கார்ந்து கொண்டார். அப்புறம் பேச்சு வார்த்தை ஆரம்பித்தது.

‘மிஸ்டர் காந்தி! இன்றைக்குச் சாயங்காலம் ஐந்தரை மணிக்கு நான் திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப்போகிறேன்.

அந்தக் கூட்டத்துக்கு தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?

'மகாதேவ பாய்! இன்றைக்கு மாலையில் நமது அலுவல்கள் என்ன?'

'இன்றைக்கு மாலை ஐந்தரை மணிக்கு நாம் வேறொரு இடத்தில் இருக்க வேண்டும்.'

'அப்படியானால் இன்றைக்கு தோதுப்படாது. தங்களுடைய கூட்டத்தை நாளைக்கு ஒத்திப்போட முடியுமா?'

'முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி! தாங்கள் ஆரம்பிக்கப் போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்'

'பாரதியார் போய் விட்டார். பாரதியார் வெளியே போனதும், 'இவர் யார்?' என்று காந்தி கேட்டார். தாம் ஆதரித்து வரும் பாரதியாரைப் புகழ்ந்து சொல்வது நாகரிகம் அல்ல என்று நினைத்தோ என்னவோ, ரங்கசாமி ஐயங்கார் பதில் சொல்லவில்லை. காந்தியின் மெத்தையில் மரியாதை தெரியாமல் பாரதியார் உட்கார்ந்து கொண்டார் என்று கோபங்கொண்டோ என்னவோ சத்தியமூர்த்தி வாய் திறக்கவில்லை. ராஜாஜிதான், 'அவர் எங்கள் தமிழ் நாட்டுக்கவி' என்று சொன்னார். அதைக் கேட்டதும், 'இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இதற்கு தமிழ்நாட்டில் ஒருவரும் இல்லையா?' என்றார் காந்தி. எல்லோரும் மௌனமாக இருந்துவிட்டார்கள்'. இதுதான் வ.ரா.வரைந்தளித்த சித்திரம்.

www.t.me/tamilbooksworld

சத்தியமூர்த்தி, ரங்கசாமி ஐய்யங்கார், ராஜாஜி மீது தனக்குள்ள உயர்ந்த மதிப்பீடு காரணமாக வ.ரா. இந்தச் செய்தியைப் பூசி மெழுகுகிறார். பாரதி மகாத்மாவின் பக்கத்தில் வந்து அமர்ந்த அக்கணமே பாரதியை அந்த மூவரில் யாராவது ஒருவர் முன்வந்து உரிய முறையில் அறிமுகம் செய்திருக்க வேண்டும். 'திலகரின் தலைமையேற்றுத் தமிழகத்தில் தேசியக்கனலைப் பெருநெருப்பாக வளர்த்தெடுத்த ஒரே கவிஞர் இவர். 'இந்தியா' என்ற இதழின் ஆசிரியர் பொறுப்பேற்று அமில வார்த்தைகளால் வெள்ளையருக்கு எதிராக எழுத்து வேள்வி நடத்திய பத்திரிகையாளர் இந்த பாரதி. தாங்கள் தென்னாப்பிரிக்காவில் நிறவெறிக் கொடுமைகளுக்கு எதிராக அகிம்சைப்போரை அறவழியில் நடத்தியபோது அதை ஆதரித்துக் கார்ட்டூன் வெளியிட்ட மனிதர் இவர். தங்கள் அறப்போரில் ஈடுபட்டு வாடிய குடும்பங்களின் வறுமை தீர்ப்பதற்கு 'இந்தியா' இதழ் மூலம் நிதிதிரட்டிய பெருமகன் எங்கள் பாரதி' என்று ஏன்

அறிமுகப்படுத்தவில்லை? என்ற கேள்வி நியாய உணர்வுள்ள ஒவ்வொருவர் நெஞ்சிலும் எழத்தான் செய்யும்.

எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்

எல்லோரும் இந்திய மக்கள்

- என்று சொன்னதோடு பாரதி நிற்கவில்லையே.

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே

- என்றல்லவா பாடினான்.

முன்னாளில் ஐயரெல்லாம் வேதம்- - ஓதுவார்

மூன்று மழை பெய்யுமடா மாதம்;

இந்நாளி லேபொய்மைப் பார்ப்பார்- - இவர்

ஏதுசெய்தும் காசுபெறப் பார்ப்பார்

www.t.me/tamilbooksworld

- என்றும் அல்லவா கடுமையாகச் சாடினான்.

பேராசைக் காரனடா பார்ப்பான் - -ஆனால்

பெரியதுரை என்னிலுடல் வேர்ப்பான்

- என்று மறவன் பாட்டில் வேட்டு வைத்தவனும் அவன்தானே. அந்த விமர்சனங்களால் விளைந்த எரிச்சலும், ஆதங்கமும்தான் காந்தியிடம் பாரதியை மூவரில் ஒருவரும் முன்வந்து அறிமுகப் படுத்தாமல் தடுத்திருக்கக்கூடும்.

நடிப்புச் சுதேசிகள்

விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்கள் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றனர். மிதவாதிகள் பழைய கட்சியினர் என்றும், திலகரின் தலைமையேற்ற தீவிரவாதிகள் புதிய கட்சியினர் என்றும் அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் பாரதி, வ.உ.சி., சுப்பிரமணிய சிவா மூவரும் திலகரின் தீவிரவாத அணியில் தளபதிகளாகத் திகழ்ந்தனர். ஆண்டுக்கொரு முறை கூடி அரசுக்கு மனுப் போடும் மிதவாதிகளை

நடிப்புச் சுதேசிகள் என்று பாரதி விமர்சித்தான்.

'கவர்ன்மென்டாரிடம் பிச்சை கேட்பதுபோல் மனுச் செய்தும், கெஞ்சியும், காலைப் பிடித்தும், நாடறியத் தாங்கியும், முகமன் கூறியும் கேட்கும் கேள்விகளை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். அவ்வாறு தலைகுனிந்து கேட்பது இந்தியர்க்கே பெரிதும் அவமானமும், ஆண்மையற்றதுமான செயலாக இருக்கிறது. ஆதலால், இந்த இழிந்த வழக்கத்தை விட்டுவிட்டு நமக்கு நாமே துணையென்ற நம்பிக்கையோடு நமது சுதந்திரங்களை நாமே பிறர் உதவியின்றிப் பெறக்கூடிய முறைகளை அனுசரிக்க வேண்டும்' என்று 'இந்தியா' (27.4.1907) இதழில் எழுதும் பாரதி, சுயலாபங்களுக்காக இயங்கும் நடிப்புச் சுதேசிகளை மிகவும் மூர்த்தண்யமாக விமர்சனம் செய்கிறான்.

'கோயிற் சொத்தைக் கொள்ளையடிப்பதற்காகத் தருமகர்த்தா வேலை பார்ப்பது போலவும், சப்ஜட்ஜ் வேலை வாங்குவதற்காகச் சட்டசபை மெம்பராவது போலவும், சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் சந்நியாசம் பெறுவது போலவும், சென்னை ஆசாமிகள் பலர் தத்தம் சொந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவே பொதுஜனப் பிரதிநிதிகளென்றும், ஜனத் தலைவர்களென்றும் பற்பல போலி நாமங்கள் சூடி உலாவுகின்றனர். இவர்கள் நடந்து கொள்ளும் விதங்களை உற்றுநோக்கினால் இவர்கள் யோக்யதைகள் பட்டப் பகற்போல் விளங்கிவிடும்' என்று போலி தேசபக்தர்களின் பொய் முகமூடியைக் கிழித்தெறிகிறான் பாரதி.

www.t.me/tamilbooksworld

'சென்னையில் பழைய கட்சியார்' என்று 27.4.1907 'இந்தியா'வில் தலைப்பிட்டு மிகக் கடுமையாக எழுதிய கவிஞன், அதே 'இந்தியா' இதழில் (15.6.1907) நடிப்புச் சுதேசிகளைக் கவிதையில் தோலுரிக்கிறான்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி

வஞ்சனை சொல்வா ரடீ! கிளியே!

வாய்ச் சொல்லில் வீரரடீ!

- என்று தொடங்கும் கிளிக்கண்ணிகள் அனைத்தும் பாரதியின் அடிமனத்திலிருந்து வெடித்துக்கிளம்பியவை. பொய் வேடம் புனைந்து பொதுவாழ்வில் நடிப்பவர்களின் மீது பாரதிக்கு இருந்த கோபம் முழுவதும் பின்வரும் இந்தப் பாடல் வரிகளில் எரிமலைப் பிழம்புகளாக

வெளிப்படுகின்றன.

சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்புகளும்

அந்தகர்க் குண்டாகுமோ?- - கிளியே!

அலிகளுக் கின்ப முண்டோ?

கண்கள் இரண்டிருந்தும் காணுந்திறமை யற்ற

பெண்களின் கூட்டமடீ! கிளியே

பேசிப் பயனென் னடீ!

விவேகானந்தரையும் விட்டுவைக்கவில்லை

பாரதி விவேகானந்தரின் முதல் பெண் சீடர் நிவேதிதா தேவியை நெஞ்சில் குருவாக வரித்தவன். திலகரின் மீது 'தேவதா விசுவாசம்' பூண்டிருந்த பாரதி, தன்னுடைய தேசிய கீதங்களை முதன்முதலில் தொகுத்து நூலாக வெளியிட்டபோது அதை நிவேதிதா தேவிக்கே சமர்ப்பணம் செய்தான்.

www.t.me/tamilbooksworld

'கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி, சுதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை சமர்ப்பிக்கின்றேன்' என்றவன் பாரதி.

விவேகானந்தரின் மீது பெருமதிப்பு கொண்டவன் பாரதி. சுவாமி விவேகானந்தரின் செல்வாக்கு பாரதியின் சிந்தனைகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதை யாரும் மறுக்க முடியாது. அவருடைய அறிவின் ஆற்றலை பாரதி வியந்து போற்றுகிறான்.

'சந்யாசத் துறையில் இறங்காமல் சுவாமி விவேகானந்தர் இல்லற வாழ்க்கையைக் கைக்கொண்டிருப்பாராயின், மனுஷ்ய சாதியின் கலியை ஒரேயடியாக வேரறுத்துத் தள்ளியிருப்பார் என்று தோன்றுகிறது. அவர் யோசனை பண்ணாத பெரிய விஷயமே கிடையாது. அவருக்குத் தெரியாத முக்ய சாஸ்திரம் கிடையாது. அவருடைய அறிவின் வேகத்துக்குத் தடையே கிடையாது. அவருடைய தைரியத்துக்கோ எல்லை கிடையாது. கண்ணபிரான் கீதை உபதேசம் புரிந்து சகலவித மனுஷ்ய சம்சயங்களையும் அறுத்து வேத ஞானத்தை நிலை நிறுத்திய

காலத்துக்குப் பின்பு, இந்து மதத்தின் உண்மைக் கருத்துகளை முழுதும் மிகத் தெளிவாக, சர்வ ஜனங்களுக்கும் புலப்படும்படி வெளியிட்டுரைத்த ஞானி விவேகானந்தரே யாவாரென்று தோன்றுகிறது' என்று கவிஞன் கொண்டாடுகின்றான்.

'எனது பாரத புத்திரர்களே, இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள் யாரெனில், பாரத தேசத்தின் முப்பது கோடி ஜனங்களே. இவர்களெல்லாம் மகாசக்தியின் ஆவிர்ப்பாவங்கள். இவர்களை நீங்கள் ஆராதனை செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் சிறந்த மதம் வேறு கிடையாது' என்று விவேகானந்தர் குறிப்பிட்டதை (10.4.1909) 'இந்தியா' இதழின் தலையங்கத்தில் மேற்கோள் காட்டி, சுதேசியப் பெருந்தர்மத்தின் பயனை விளக்குகிறான் பாரதி.

'பாரத நாடு முழுமையும் இம்மதத்தை (தேசியத்தை மதமாகச் சுட்டுகிறான்) முற்றிலும் அங்கீகாரம் செய்து கொண்டிருக்க தமிழர்கள் மட்டிலும் கொஞ்சம் பின்னடைந்திருக்கிறார்கள். இங்ஙனம் பின்பட்டிருப்பது பிழை. தமிழர்களே, இப்பிழையை நீங்கள் சீக்கிரம் நிவிருத்தி செய்து கொள்ளாத விஷயத்தில் சர்வ நாசமடைந்து போவீர்கள். அறிவுடன் வாழுங்கள்' என்று எச்சரிக்கை குரல் கொடுக்கிறான்.

www.t.me/tamilbooksworld

தன்னுடைய சீடர் அழகிய சிங்கப் பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில், 'என் கவலைகள் இந்தியாவை மாத்திரம் பற்றியனவல்ல. சர்வ தேசங்களுக்கும் பொதுவானவை என்பதை நீ மறக்கக் கூடாது' என்று விவேகானந்தர் குறிப்பிட்டதை பாரதியால் ஏற்க முடியவில்லை. 'இந்த மகத்தான சர்வதேசிய உணர்ச்சியை அவர் இந்தியாவுக்கு வந்தவுடன் சற்றே தங்க இடம் கொடுத்தது நமது நாட்டுக்குப் பெரிய துரதிருஷ்டமாயிற்று' என்று மறுப்புரை எழுதுகிறான். நம் தேசத்தின் விடுதலையைப் பற்றிச் சிந்திக்காமல், சர்வதேசியம் பேசிய விவேகானந்தரையும் அவனால் விமர்சிக்காமல் விட முடியவில்லை. சுதேச விரோதிகளிடம் விவேகானந்தர் தன்னுடைய கடைசிக்காலத்தில் 'ஏகத்துவம்' பாராட்டத் தொடங்கியதையும் பாரதி கோடிட்டுக் காட்டி, தன்னுடைய வருத்தத்தைப் பதிவு செய்கிறான்.

'1858-ம் வருஷத்துச் சிப்பாய்க் கலகத்தின்போது ஒரு சந்நியாசியை ஓர் ஆங்கிலேய சோல்ஜர் குத்திக் கொன்றுவிட்டான். அந்த சந்நியாசி 15 வருஷ காலமாக மௌன விரதம் பாராட்டி வந்தார். 15 வருஷ காலம் வாய் மூடியிருந்த மேற்படி சந்நியாசி இந்த ஆங்கிலேயன் குத்தியவுடனே 'நீ கூட அவனே' (பிரமமே) என்று சொல்லிவிட்டுப் புன்னகையுடன்

சரீரத் தியாகம் புரிந்துவிட்டார். இவரையே தமக்கு முன்மாதிரியாக சுவாமிகள் கூறுவதுண்டு, என்று குறிப்பிடும் பாரதி, கொலை செய்த வெள்ளையனும், கொள்ளப்பட்ட சந்நியாசியும் பிரமத்தின் கூறுகளே என்று ஏகத்துவம் பேசிய விவேகானந்தரை மென்மையாக ஏளனம் செய்கிறான். தேசப் பற்றுக்கும், அதைத் தீவிரமான போக்கில் வளர்த்தெடுக்கும் அணுகுமுறைக்கும் எதிராக நிற்பவர்கள் எவ்வளவு பெரிய மகான்களாக இருந்தாலும் அவர்களையும் விமர்சிக்காமல் பாரதியின் பேனா விட்டு வைக்கவில்லை. காரணம்... சுதேசியம் தான் அவனுடைய மூச்சு. அதுதான் அவன் தழுவிக்கொண்ட உண்மையான மதம்.

‘நீ பாரதவாசி என்று கர்வம் கொண்டிரு. கர்வத்தோடு ‘நான் பாரதவாசி. ஒவ்வொரு பாரதவாசியும் என் சகோதரர்’ என்று சொல்லு. ‘மூட பாரதவாசி, தரித்திர பாரதவாசி, முசல்மான் பாரதவாசி, பிராமண பாரதவாசி, சண்டாள பாரதவாசி யாவரும் உன் சகோதரர்கள்!’ என்று சொல். நீ கந்தையை உடுத்திக்கொண்டு இருந்தாலும் என் குரல் எட்டுமளவும் ‘இந்துஸ்தான் வாசிகள் என் சகோதரர். இந்துஸ்தான்வாசிகள் என் பிராணன். இந்தியாவில் இருக்கும் தெய்வங்கள் என்னுடைய தெய்வங்கள்’ என்று சொல்... சகோதரா சொல். ‘இந்தியாதான் என் இளமையின் மெத்தை. என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி’ என்று இரவும் பகலும் தியானம் செய்’ என்று ‘இந்தியா’ இதழில் பாரதி வெளிப்படுத்தும் வேண்டுகோள் ஒன்று போதும் அவன் உள்ளத்து உணர்வுகளை நாம் அறிந்துகொள்ள!

www.t.me/tamilbooksworld

பாரதியின் தீவிரவாதம் வன்முறையன்று

இந்திய விடுதலைப் போரில் பாரதி தீவிரவாதத்தின் பக்கம் நின்றான். மிதவாதிகளை நடிப்புச் சுதேசிகள் என்று ஏளனம் செய்தான். தன்னுடைய பாடல்கள் முதன்முதலில் அச்சுவாகனம் ஏறுவதற்கு உதவிய கிருஷ்ணசாமி ஐயர் மிதவாதி வேடம் பூண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்றபோது அவருடைய செயலைக் கண்டு வெறுப்புற்று ‘விஜயா’ நாளிதழில் மிகக் கடுமையான வார்த்தைகளில், ‘எதிர்க்கிறாயா? துணை செய்கிறாயா?’ என்று தலைப்பிட்டுத் தலையங்கம் எழுதினான். முதலில் மகாத்மாமவின் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரத்தன்மை இல்லையென்று கருதி அதை எதிர்த்துச் சுதேசமித்திரனில் எழுதினான்.

‘ஒத்துழையாமையைத் தவிர தேசவிடுதலைக்குச் சரித்திர பூர்வாங்கமான வேறு வழிகள் இருக்கின்றன. இந்த ஒத்துழையாமை

முறையையே மிகவும் உக்ரமாகவும், தீர்வை மறுத்தல் முதலிய அதன் இறுதிப் படிகளை உடனே உட்படுத்தியும் அனுஷ்டித்தால், ஒருவேளை அந்நிய ராஜாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகிய பயன் அதனால் விளையக் கூடும்' என்று குறிப்பிட்டான்.

தீவிரவாதத்தின் பக்கம் நின்ற பாரதி எந்த நிலையிலும் வன்முறையை ஆதரிக்கவில்லை. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் குற்றம் சாட்டப்பெற்ற அரவிந்த கோஷ் விடுதலையானதும் 15.5.1909 'இந்தியா' இதழில், 'இவர் வெடிக்காய் வியாபாரத்தில் சம்பந்தப்பட்டிருக்க மாட்டார் என்பது நமக்கு ஆதிமுதலே நிச்சயம்' என்று பாரதி எழுதியதைச் சிந்திக்க வேண்டும். வெடிகுண்டு வீசுவதை அவன் 'வெடிக்காய் வியாபாரம்' என்று கேலி செய்கிறான்.

ஆங்கிலேயே அதிகாரி கர்சான் வைலியை லண்டனில் மதன்லால் திங்கரா என்ற தேசபக்த இளைஞன் நேருக்கு நேரே நின்று சுட்டுக்கொன்றதைப் பாராட்டி, வ.வே.சு. ஐயர் பாரதியின் 'இந்தியா'வில் எழுதினார். லண்டனிலிருந்து அவர் அனுப்பி வைத்த கட்டுரையில் 'இந்து மத ஆசாரப்படி தன்னை எரித்து விடுமாறு' மதன்லால் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த ஆங்கிலேய அதிகாரிகள் செயலைப் பற்றி விவரிக்கும்போது, 'இந்த தேசாபிமானம் மிகுந்த பாரத புத்திரரின் உடலை யாகத் தீயில் ஹவிசை உண்பதுபோல உட்கொள்ள அக்னி பகவான் தயாராக இருந்தார். அது கிடைக்கவில்லை என்பதால் கோபம் கொண்ட அக்னி பகவான் கிளாஸ்கோ பருத்திச் சாலையில் புகுந்து இரண்டரை லட்சம் பவுண்ட் பெறுமான சாமான்களை உண்டு தீர்த்துவிட்டார்' என்று எழுதியிருந்தார்.

www.t.me/tamilbooksworld

வ.வே.சு. ஐயர் அனுப்பிய செய்திக் கட்டுரை 28.8.1909 புதுவை 'இந்தியா' இதழில் வெளியானது. அடுத்த வார இதழில் பாரதி வ.வே.சு.ஐயரைக் கண்டித்துத் தலையங்கம் வரைந்தான்.

'சென்ற வாரத்தில் நமது நிருபர் ஒருவர் ஸ்ரீமான் மதன்லால் திங்கரா விஷயமாக எழுதியிருந்தார். அதை நாம் முற்றிலும் அங்கீகரிக்கவில்லை. அதில், ஸ்ரீமான் திங்கராவின் உயிர் ஏதோ இரண்டரை லட்சம் பவுண்ட் என்று ஒரு மதிப்பாகக் கூறியிருக்கிறார். மேலும் கிளாஸ்கோ பருத்திச் சாலையில் தீப்பிடித்ததைப் பற்றிச் சந்தோஷப்படுவதுபோல எழுதியிருக்கிறார். கிளாஸ்கோவில் பருத்தியாலையில் நெருப்புப் பற்றி அது நஷ்டமடைந்துவிட்டதால் திங்கரா உயிர்த்தெழுந்து விட்டாரா? நம் பாரதவாசிகளுக்கு அதனால் என்ன அனுகூலமாய்விட்டது? நாமேன் அதையோர் பழிவாங்குதலைப்போல் கொள்ள வேணும்?

அற்பத்துக்கெல்லாம் சந்தோஷித்துப் பழிவாங்கும் இழிவான குணம் ஆரியர்களுடையதல்ல. நமது நாட்டில் ஒருநாளும் கேட்டிருக்க முடியாத வெடிகுண்டு முதலிய பயங்கரமான செயல்கள் அநாகரிகமானவைகள்' என்பது பாரதியின் வன்முறைக்கு எதிரான வெளிப்பாடாகும்.

வன்முறைக்கு எதிரான பாரதியின் போக்கை மார்க்சிய ஆய்வாளர் கோ.கேசவன் 'சோசலிசக் கருத்துகளும் பாரதியாரும்' என்ற நூலில் மிகச்சரியாக வெளிப்படுத்துகிறார்.

'இவரது அமைப்பு வேலைகளிலும், எழுத்துப் பணிகளிலும் பிரசார மதிப்பை (Propaganda Value) விட கிளர்ச்சி மதிப்பே (Agitative Value) கூடுதலாக இருந்தது. இவரது செயல்வடிவம் சட்டத்துக்கு உட்பட்டு இருந்தது. எனினும், இயற்கை உரிமைகளைப் பாதிக்கும் சட்டத்துக்குக் கட்டுப்படத்தேவையில்லை என்று அதை மீற வற்புறுத்துகின்றார். மிதவாதிகளைத் 'தேசத்துரோகிகள்' என்றும், தேசியப் புரட்சியாளர்ளை 'சுதந்திர விருப்பமுள்ளவர்கள்' என்றும் தெளிவாகக் குறிப்பிடும் பாரதி, இவர்கள் இருவரின் செயல் வடிவங்களைப் புறக்கணிக்கின்றார். மனுப் போடுதலை 'தன் வீடு கொள்ளை போவதற்குத் தானே விளக்குப் பிடிக்கும் மூடத்தனம்' என்கின்றார். வெடிகுண்டு வீசுதல் போன்ற நிகழ்ச்சிகளை 'அநாகரிகமானவை' என்றும், 'நாம் முற்றிலும் ஆதரிக்கவில்லை' என்றும் குறிப்பிடுகின்றார். இவற்றைக் காணும்போது தேசியப் புரட்சியாளரிடத்தில் அனுதாபம் இருந்ததே தவிர அவர்களது நடவடிக்கைகளில் உடன்பாடு இல்லையெனத் தெரிகிறது' என்கிறார் கேசவன்.

www.t.me/tamilbooksworld

'நெல்லை மாவட்ட கலெக்டர் ஆஷ் கொலை முயற்சி குறித்து பாரதிக்கு எதுவும் தெரியாது' என்று அந்தக் கொலை முயற்சியில் வாஞ்சிநாதனுக்குத் துணை நின்ற அபிநவபாரத சமாஜத்தின் உறுப்பினர் நாகசாமியே தெரிவிக்கிறார். மனிதப் படுகொலைகளில் பாரதிக்கு ஒருநாளும் உடன்பாடில்லை என்பதுதான் உண்மை.

'என்னுடைய சொந்த அபிப்ராயப்படி, நல்ல தேசியக் கொள்கைகளை மேன்மேலும் தெளிவாகவும், உறுதியாகவும், ஜனங்களுக்குள்ளே பிரசாரம் புரிவதும், ராஜரீகச் சதுரங்க விளையாட்டில் சமாதானமாகவே, எதிரி கலங்கும்படியானதோர் ஆட்டமாடி, சரியான சமயத்தில் சுயராஜ்யத்தைக் கட்டியெடுத்துக் கொள்ள முயற்சி புரிவதுமே சரித்திர சம்மதமான உபாயங்களாகும். ஏனைய முறைகள் நாட்டைக் குழப்பத்திலே கொண்டு சேர்க்கவும் கூடும். ராஜவீதியிருக்கையிலே சந்து பொந்துகளின் வழியாக ஏன் செல்ல வேண்டும்?' (பாரதி தமிழ்) என்று

கேட்கும் பாரதி வன்முறை வழியை 'சந்து பொந்து வழி' என்று வர்ணிப்பதை கவனிக்க வேண்டும்.

மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தின் மீது முதலில் பாரதி முழு நம்பிக்கை கொள்ளாவிடினும் விரைவிலேயே காந்தியத் தலைமையின் ஆற்றலை முற்றாக உணர்ந்து 'காந்தி பஞ்சகம்' பாடுகிறான்.

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்

அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்

அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்

அறவழி யென்றுநீ அறிந்தாய்

நெருங்கிய பயன்சேர் ஒத்துழையாமை

நெறியினால் இந்தியா விற்கு

வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து

www.t.me/tamilbooksworld

வையகம் வாழ்கநல் லறத்தே

- என்று வன்முறை தவிர்த்த காந்திய அறவழிப் போராட்டமே 'நெருங்கிய பயன் சேர்க்கும்' தன்மை கொண்டதென உணர்ந்து இருகரம் விரித்து வாழ்த்தி வரவேற்கிறான். பாரதி புரட்சிக்குப் பூபாளம் பாடியவன்; ஆனால், பயங்கரவாதத்தின் நிழலையும் நிராகரித்தவன்.

மானிடர் சுதந்திரம் சார்ந்தவர்

மனிதனின் மீது பூட்டப்பட்டிருக்கும் சகலவிதமான அடிமை விலங்குகளையும் அடித்து நொறுக்க வேண்டுமென்ற ஆவேசம் பாரதிக்கு உண்டு. சுதந்திர உணர்ச்சியை மனிதனின் மதமாக உயர்த்தியவன் அவன். சுதந்திர தேவியே யாவர்க்கும் வழிபடு கடவுளாக விளங்க வேண்டும் என்று பாரதி விரும்பினான்.

வந்தே மாதர மென்போம் - எங்கள்

மாநிலத் தாயை வணங்குது மென்போம்

என்று நாட்டு வணக்கம் பாடுபவன்

வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்

வேறொன்று கொள்வாரோ? - என்றும்

ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்

அறிவைச் செலுத்துவாரோ?

என்று கேள்விக்கணை தொடுக்கிறான்.

விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும் போய்

மின்மினி கொள்வாரோ?

கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்

கைகட்டிப் பிழைப்பாரோ?

- என்று சுதந்திர உணர்வற்ற அடிமைகளைச் சாடுகிறான்.

www.t.me/tamilbooksworld

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்

மாண்பினை யிழப்பாரோ?

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்

கைகொட்டிச் சிரியாரோ?

- என்று சுதந்திரத்தின் மாண்பினை அறியாத மனிதர்களை ஏளனம் செய்கிறான்.

தண்ணீர்விட்டோ வளர்த்தோம்?

சர்வேசா இப்பயிரைக்

கண்ணீராற் காத்தோம்

கருகத் திருவுளமோ?

- என்று சுதந்திரப் பயிர் கருகிவிடக்கூடாதே என்று கண்கலங்கிக் கடவுளை வேண்டுகிறான்.

தான் நடத்திய இந்தியா இதழின் தலைப்பில் ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’ என்ற பிரெஞ்சுப் புரட்சிக்கான தாரக மந்திரத்தைப் பொறித்தவன் பாரதி. குரு கோவிந்தரைப் பற்றிய கவிதையில்,

நுமக்கினித் தருமம் நுவன்றிடக் கேண்மின்

ஒன்றாம் கடவுள், உலகிடைத் தோன்றிய

மானிட ரெல்லாஞ் சோதரர்; மானுடர்

சமத்துவ முடையார், சுதந்திரஞ் சார்ந்தவர்

- என்று உலகுக்குப் பொதுவான நான்கு தர்மங்களை உரத்த குரலில் தெளிவாகப் பிரகடனம் செய்கிறான். கடவுள் ஒருவர், மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள், ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வின்றி சமத்துவம் உடையவர்கள், எல்லா மனிதரும் சுதந்திரம் சார்ந்தவர்கள் என்று உலகின் கடைசி மனிதனின் காதுகளிலும் ஓதிவிட வேண்டும் என்ற ஆவேசத்துடன் கவிதைக் குரல் கொடுக்கிறான். பாரதி வாழ்ந்த காலத்தில் திரும்பிய பக்கமெல்லாம் பாரத மக்கள் சுதந்திரப் பேச்சில் ஈடுபட்டு நிற்கவில்லை. ஆனால், பாரதியோ சுதந்திரப் பயிரை வளர்க்கும் நோக்கில்,

www.t.me/tamilbooksworld

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு

- என்று தன் கனவைக் கவிதையாக்குகிறான். வாழ்வின் உன்னதம் மனிதன் சுதந்திரமாக வாழ்வதில்தான் இருக்கிறது என்பது அவனுடைய அழுத்தமான நம்பிக்கை. அவனைப் போல் சுதந்திரத்தைச் சுவாசமாக்கிக்கொண்ட கவிஞன் வேறெவனுமில்லை.

‘அரசியலைப் பாட்டின் பொருளாகப் புஷ்கின், ஷெல்லி, பைரன் முதலியோர் பாடியதுண்டு. ஆனால், பாரதியார் எல்லாமாகிய ஒப்பற்ற நிலையின் ஆழத்திற் புகுந்து அதுவே விடுதலை என்ற சொல்லின் பொருளாழம் எனக் காட்டுகின்ற அடிப்படையை வேறெங்கும் காண முடியாது. பிறரெல்லாம் இந்தியாவிலும் அரசியற் பாடல்கள் பாடியிருந்தாலும் அவற்றில் பல மறைந்துபோக, இவர் பாடல்களை மட்டும் நிலைத்து நிற்பதற்கு இதுவே காரணம்’ என்கிறார் தெ.பொ.மீ.

மண்ணின் சுதந்திரம் என்றும் மறையாமல் நிலைக்க வேண்டும் என்றால் மக்கள் என்ன செய்ய வேண்டும்? இதோ... பாரதி சொல்வதைக் கேளுங்கள்.

சீடர்காள்! குலத்தினும் செயலினும் அனைத்தினும்

இக்கணந் தொட்டுநீர் யாவிரும் ஒன்றே.

பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே சாதல்.

ஆரியர் சாதியுள் ஆயிரஞ் சாதி

வகுப்பவர் வகுத்து மாய்க. நீர் அனைவரும்

தருமம், கடவுள், சத்தியம், சுதந்திரம்

என்பவை போற்ற எழுந்திடும் வீரச்

சாதியொன் றனையே சார்ந்தோ ராவிர்.

'பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே சாதல்' என்பதுதான் பாரதி நமக்கு வழங்கும் மூல மந்திரம்.

www.t.me/tamilbooksworld

4



# சாத்திரம் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்...

நவீன
இந்தியாவில்
சாதி
எதிர்ப்புப்
பாடல்கள்தான்
தலைசிறந்த
பாடல்களாகும்.
ஏனெனில்,
அவைதான்
நம்மை
முதலில்
ஒரு
குறைந்தபட்ச
மனிதத்தன்மை
பெற்றவனாக
ஆக்க
முயல்கின்றன.
நாம்
ஜனநாயக
வாதியாவதும்,
சோசலிஸ்டாவதும்,
எல்லாம்
பின்னால்.

www.t.me/tamilbooksworld

சாதித்
தத்துவம்
இருக்கும்
வரையில்
இந்திய
மக்களின்
எந்தச்
சாதனையும்
நிலைத்திராது.
இதை
உணர்ந்துதான்
சாதித்
தத்துவத்தைப்
‘பேயுரைகள்’என்றும்,
‘பொய்ச்
சாத்திரம்
’என்றும்
பாரதி
சீறிச் சீறிப்
பாய்ந்து
தாக்கி
வந்தான்.
அந்த
வரிகள்
வெறும்
பாடல்
வரிகள்
அல்ல:
நமது
மனச்சாட்சியின்
உறுத்தல்கள்
அவை;
சமுதாயத்தின்
பிராயச்சித்தத்துக்குரிய
பிரார்த்தனைகள்
அவை;
மாற்றத்துக்குத்
தூண்டும்

www.t.me/tamilbooksworld

தார்க்கோல்கள்
அவை.
அவற்றுக்கு
அற்பாயுள்
கணக்கிடுகிறவர்கள்
மனச்சாட்சியைக்
கொன்று
கொண்டவர்களாகத்தான்
இருக்க
முடியும்.

- மார்க்சிய அறிஞர்
ஆர்.கே.கண்ணன்

‘சாதியின் நீதிநெறி, மதப்பாங்கு மற்றும் சமூகச் சட்டங்களை வலுவாக எதிர்க்கிற எந்தப் புதுமையையும் சாதி சிறிதளவும் சகித்துக்கொள்ளாது; அதிகாரத்துக்குக் கீழ்ப் படியாது. அவ்வாறு எதிர்த்து நிற்கும் சாதியின் உறுப்பினர்கள் சாதியை விட்டுத் தூக்கி எறியப்படும் அபாயத்துக்கு உட்பட்டவர்கள். மற்ற சாதிகளுக்குள் அனுமதிக்கப்படவோ அல்லது உள்ளிழுத்துக்கொள்ளப்படவோ வழியேதுமின்றி விதிகளின் கரங்களிலே தங்களை ஒப்படைத்தனர். சாதிச் சட்டங்கள் ஈவிரக்கமற்றவை... சாதியைத் தொடர்ந்து இனிமேலும் சுமப்பது என்பது ஏறத்தாழ இயலாத ஒன்றேயாகும். ஏனெனில், சாதியால் ஏற்படும் துன்பங்கள் மிகப்பேரளவின. சாதி என்னும் இயற்கைக்குப் புறம்பான நிறுவனத்தை ஒழித்துக்கட்ட இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன’ என்றார் அண்ணல் அம்பேத்கர்.

www.t.me/tamilbooksworld

சாதிகளின் பெருக்கத்துக்குப் பிராமணர்களைவிட, பிராமணரல்லாதவர்களே காரணம் என்கிறார் அம்பேத்கர். ‘மற்ற எந்தச் சமூகங்களையும் போலவே இந்து சமூகமும் வர்க்கங்களைக் கொண்டிருந்தது என்பதை நாம் நினைவுகூர்வது அறிவுடைமை. பண்டை நாட்களிலே அறிந்து கொள்ளப்பட்ட வகுப்புகள் பிராமணர்கள் அல்லது புரோகித வர்க்கம், சத்திரியர்கள் அல்லது ராணுவ வர்க்கம், வைசியர்கள் அல்லது வணிக வர்க்கம், சூத்திரர்கள் அல்லது கைவினைஞரும் ஏவலருமான வர்க்கம் . இது சாராம்சத்தில் ஒரு வர்க்க அமைப்பு என்று உண்மைக்கு குறிப்பிட்ட கவனம் செலுத்த வேண்டும். இந்த அமைப்பில் தனி நபர்கள் தங்கள் தகுதிக்கேற்ப வர்க்கத்தை மாற்றிக்கொள்ள முடியும். இந்துக்களின் வரலாற்றில்

ஏதோவொரு கால நிலையில் புரோகித வர்க்கம் மற்ற திரட்சியிலிருந்து தன்னைத்தானே சமூக வகையில் விலக்கிக்கொண்டது. கதவடைப்புக் கருத்தின் (Closed door policy) வாயிலாக தன்னைத்தானே ஒரு சாதியாக உருவாக்கிக் கொண்டது. சமுதாய உழைப்புப் பிரிவினை விதியின் அடிப்படையில் ஏனைய வர்க்கங்கள் சில மிகப் பெரியனவாகவும், மற்றவை மிகமிகச் சிறயனவாகவும் சிதறுண்டு போயின. இன்றைய எண்ணிலடங்கா எத்தனையோ சாதிகளை உருவாக்கியவை தொடக்கக் கருப்பைகளான வைசிய வர்க்கமும், சூத்திர வர்க்கமுமே ஆகும்' என்று அம்பேத்கர் விளக்குகிறார்.

சாதியென்னும் கொடிய நோய்

இந்து சமூகத்தைப் பீடித்த மிகக் கொடிய நோய் சாதிப்பிரிவுகள் என்பது பாரதியின் அழுத்தமான நம்பிக்கை. அவன் வாழ்ந்த காலத்தில் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகவும், பிராமண ஆதிக்கத்துக்கு எதிராகவும் அவனளவில் பாடியவரோ எழுதியவரோ எவருமில்லை. சாதிகளை ஒழிக்க முடியாவிடினும், சாதிப் பெருமைகளையாவது ஒழித்துக்கட்ட வேண்டுமென்று அவன் முடிவெடுத்ததனால்தான் பாப்பா பாட்டில் முதலில்,

www.t.me/tamilbooksworld

சாதிப் பெருமையில்லை பாப்பா-- அதில்

தாழ்ச்சி யுயர்ச்சி செய்தல் பாவம்

நீதி, தெளிந்த மதி, அன்பு-- இவை

நிறைய உடையவர்கள் மேலோர்

- என்று எழுதினான். ஆனால், சாதிப் பெருமைகளை ஒழித்தால் மட்டும் போதும் என்ற நிலை அவன் நெஞ்சுக்கு நிறைவு தரவில்லை. சாதிகளையே அடியோடு வேரறுக்க வேண்டும் என்ற ஆவேசமும் அவனுள் பொங்கியது. அதனால் முதலில் எழுதியதை மீண்டும் திருத்தி எழுதினான்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

-என்று எழுதியதோடு அடுத்த இரண்டு வரிகளிலும் மாற்றம்செய்து சிந்தனையைச் சீரமைக்கிறான்.

*நீதி உயர்ந்த மதி, கல்வி - அன்பு*

*நிறைய உடையவர்கள் மேலோர்*

- என்று திருத்தம் செய்கிறான். கல்வியின் மூலமே குழந்தைகளுக்கு நீதியும், உயர்ந்த மதியும் வந்து வாய்க்கும் என்று தெளிந்தவன் கல்வியைக் கொண்டு வந்து கவிதையில் இணைக்கிறான். சமநீதியும், பேதமற்ற மதியும் சாதிப் பேயை விரட்டக் கூடுமென்று நம்புகிறான். நீதியும், உயர்ந்த மதியும், கல்வியும், அன்பும் நிறைய உடையவர்கள் மட்டுமே மனிதரில் மேலோர் என்று பிரகடனம் செய்கிறான் பாரதி.

யானை, குதிரை போன்ற விலங்குகளுக்கும் சாதி கற்பித்த சமூக நியதியின் மீது கவிஞனுக்கு கட்டற்ற கோபம் வருகிறது. ‘சாதிக் குழப்பம்’ என்ற கட்டுரையில் தன்னுடைய விமர்சனத்தை ஏளனம் ததும்ப வெளிப்படுத்துகிறான்.

‘யானையை எடுத்தால் அதில் பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர்! குதிரையிலும் அப்படியே! வானத்திலுள்ள கிரகங்களிலும் அதே மாதிரி பிரம்ம, சத்திரிய முதலிய சாதி பேதங்கள். ரத்தினங்களிலும் அப்படியே! இங்ஙனம் சாதிக் கொள்கை வேரூன்றிக் கிடக்கும் நாட்டில் மனுஷ்ய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை நிலைநிறுத்துவது என்றால் அது சாதாரண வேலையா? கொஞ்ச சாதியா? அவற்றில் உட்பிரிவுகள் கொஞ்சமா? பறை பதினெட்டாம், நூளை நூற்றெட்டாம்! அதாவது பறையர்களுக்குள்ளே 18 பகுதிகளும், நூளையர்களில் 108 பகுதிகளும் இருக்கின்றனவாம். மேலும் பறையன், பள்ளன், சக்கிலியன் எல்லோரும் வெவ்வேறு சாதிகள்; ஒன்றுக்கொன்று பந்தி போஜனம் கிடையாது. பெண் கொடுக்கல் வாங்கல் கிடையாது. கேலி; கேலி; பெருங்கேலி’ என்று மனம் நோகிறான்.

உழைக்கும் வர்க்கம் தாழ்த்தப்பட்டதும், குறைந்த கூலிக்கு அவர்கள் உழைப்பு உயர் சாதியினரால் சுரண்டப்பட்டதும் பாரதியின் இதயத்தை ரணப்படுத்தின.

‘பெரும்பாலும் தாழ்ந்த சாதியர்களே அதி ஏழைகளாக இருக்கிறார்களென்பது மறுக்க முடியாத விஷயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்தி வரும் வகுப்பினருக்குள்ளே அதிக வலுவு ஏற்படும் அநீதி உலக முழுவதிலும் இருக்கிறது. எனினும் நம்முடைய தேசத்தைப் போல்; இத்தனை மோசமான நிலைமை வேறெங்குமில்லை’ என்றவன், தாழ்த்தப்பட்ட

www.t.me/tamilbooksworld

மக்களுக்கு கல்வி மறுக்கப்படும் கொடுமையைக் கோடிட்டுக் காட்டுகிறான்.

'ஆதிகால அறிவுப் பயிற்சியுடைய வகுப்பினர் கைத்தொழிலாளிகளுக்குக் கல்வி ஏற்படாதபடியாக வேலை செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். எழுத்துத் தெரிந்த சூத்திரனை மிகவும் தொலைவில் விலக்கி விட வேண்டும் என்ற விநோத விதியொன்று மனு ஸ்ம்ருதியிலே காணப்படுகிறது' என்று சாத்திரங்களின் பெயரால் இழைக்கப்பட்ட சமூக அநீதியைத் தோலுரித்துக் காட்டும் பாரதி,

*சூத்திரனுக் கொரு நீதி- - தண்டச்*

*சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி*

*சாத்திரம் சொல்லிடு மாயின் - -அது*

*சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்*

*- என்று எரிமலையெனப் பொங்குகிறான் பாரதி.*

www.t.me/tamilbooksworld

*மனிதரில் ஆயிரம் சாதி - என்ற*

*வஞ்சக வார்த்தையை ஒப்புவ தில்லை*

*- என்று பேசும் பாரதி,*

*ஒன்றுண்டு மானிடச் சாதி - பயின்று*

*உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்*

*- என்று வேற்றுமை காணும் அஞ்ஞானம் களைந்து, ஒற்றுமை நாடும் ஞானம் போதிக்கிறான். உயர்வும் தாழ்வும் மனிதனின் பண்பு சார்ந்ததேயன்றி, சாதி சார்ந்ததில்லை என்பதை அனைவரும் உணர்வதற்காக, தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்த நந்தனைப் பார்ப்பானாகப் படம்பிடிக்கிறான்.*

*நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் - இந்த*

*நாட்டினில் இல்லை குணம் நல்லதாயின்*

எந்தக் குலத்தின ரேனும் - உணர்

வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்

- என்பதுதான் பாரதியின் பார்வை.

கோத்த பொய் வேதங்களும் - மதக்

கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்

மூத்தவர் பொய்ந்நடையும் - இள

மூடர்தம் கவலையு மவள் புனைந்தாள்

- என்று 'கண்ணன் பாட்டில்' வேதங்களையே விமர்சிக்கும் பாரதி,

மேலவர் கீழவரென்றே - வெறும்

வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்

www.t.me/tamilbooksworld

போலிச் சுவடியை யெல்லாம் - இன்று

பொசுக்கி விட்டா லெவர்க்கும் நன்மையுண் டென்பான்

- என்று கண்ணன் கூற்றாகத் தன்னுடைய எண்ணத்தைப் பதிவு செய்கிறான். அதனால்தான் டாக்டர் மு.வரதராசனார், 'பிறப்பால் சாதி உண்டென்று நம்பி உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்று பேசி வந்த இருண்ட உள்ளம் படைத்த மக்களுக்கு ஒளி உதவி, சாதிப் பேச்சே பாவம் என்று வற்புறுத்திய கவிஞர் பாரதி' என்கிறார்.

சாதிப்பிரிவுகள் சொல்லி - அதில்

தாழ்வென்றும் மேலென்றும் சொள்வார்

நீதிப் பிரிவுகள் செய்வார்- - அங்கு

நித்தமும் சண்டைகள் செய்வார்

- என்று பாடும் பாரதி,

சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு

தன்னில் செழுத்திடும் வையம்;

ஆதர வுற்றிங்கு வாழ்வோம் - தொழில்

ஆயிரம் மாண்புறச் செய்வோம்

- என்று அமைதி தவழும் அன்பு சார்ந்த சமூக வாழ்க்கையை மனிதர்கள் அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்துகிறான். ‘ஒருவருக்கொருவர் ஆதரவாக வாழ்வதுதான் மானிட வாழ்க்கை; எந்தத் தொழிலும் இழிதொழில் அல்ல’ என்ற உண்மையை வலியுறுத்துகிறான். அறம் சார்ந்த வாழ்வை மண்ணுலகில் இறுதி மூச்சு வரை பிறழாமல் நடத்தும் மனிதனே மேற்குலத்தான் என்று விளக்குவதற்காக,

வையகம் காப்பவ ரேனும் - சிறு

வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்

பொய்யக லத்தொழில் செய்தே - பிறர்

www.t.me/tamilbooksworld

போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்

- என்று முழங்குகிறான்.

பாரதி பார்ப்பனீயத்தின் பாதுகாவலனா?

சாதிக் கொடுமைகளுக்கு எதிராக எழுத்து யுத்தம் நடத்திய பாரதியைச் சிலர் பார்ப்பனீயத்தின் பாதுகாவலன் என்றும் வர்ணாசிரம தர்மத்துக்கு வரவேற்பு ராகம் வாசித்த சனாதனி என்றும் பழிதூற்றுகின்றனர். வர்ணாசிரம வகுப்பு வேற்றுமைகளுக்கு ஆதரவாக அவன் பாடினான் என்றும், உரைநடையில் கட்டுரைகளாக எழுதினான் என்றும் ஆதாரங்களை அவர்கள் அடுக்குகின்றனர். கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்டவனுக்குப் பூணூல் அணிவித்து அவனைப் பிராமணன் ஆக்கிய பாரதியின் செயல், சரிந்து கொண்டிருந்த சனாதன தர்மத்தை அழிந்து விடாமல் காப்பதற்கான முயற்சியின் வெளிப்பாடேயன்றி, அதிலொன்றும் எந்தப் புரட்சியும் பூத்துவிடவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு பார்ப்பானைப் பறையனாக்காமல், ஒரு பறையனுக்குப் பூணூல் போட்டதிலிருந்து பார்ப்பன குலமே உயர் குலம் என்ற பாரதியின் மனோபாவம் பளிச்செனத் தெரிவதாக அவர்கள் வாதம் செய்கின்றனர்.

வேத மறிந்தவன் பார்ப்பான் - பல

வித்தை தெரிந்தவன் பார்ப்பான்

நீதி நிலைதவ றாமல் - தண்ட

நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

பண்டங்கள் விற்பவன் செட்டி - -பிறர்

பட்டினி தீர்ப்பவன் செட்டி

தொண்டரென் றோர்வகுப் பில்லை - தொழில்

சோம்பலைப் போல் இழி வில்லை.

நாலு வகுப்பும் இங் கொன்றே - இந்த

நான்கினில் ஒன்று குறைந்தால்

www.t.me/tamilbooksworld

வேலை தவறிச் சிதைந்தே - செத்து

வீழ்ந்திடும் மானிடச் சாதி

- என்று பாரதி வர்ணாசிரமத்தின் வகுப்பு ஏற்பாடுகளை ஆதரித்துப் பாடினான் என்பது மறுக்க முடியாத உண்மை.

‘சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஒருயிர். இப்படி இருக்க, நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமான ஆசாரச் சுவர்கள் கட்டி, ‘நான் வேறு சாதி, என் மைத்துனன் வேறு சாதி. இருவருக்குள் பந்தி போஜனம் கிடையாது. அவனை சாதிப் பிரஷ்டம் பண்ண வேண்டும்’ என்பது சுத்த மடமை... தமிழ்நாட்டில் சாதி சம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசடவென்று நொறுங்கி விழுகின்றன’ என்று எழுதும் பாரதிக்கு சாதி வேற்றுமையில் உடன்பாடில்லை என்று தெளிவாகிறது. சாதி சம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசடவென்று நொறுங்கி விழவேண்டும் என்று அவன் கனவு காண்பதும் புரிகிறது.

சாதிகளற்ற சமத்துவ சமுதாயம்தான் பாரதியின் லட்சியக் கனவு. ஆனால், தொழில் அடிப்படையில் வர்ணாசிரமம் பிரித்து வைத்த வகுப்புகள் நீடிப்பதே சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானம் தகர்ந்து

விடாமல் இருப்பதற்கான வழி என்பது அவனுடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கை விவேகானந்தருக்கு இருந்தது. இதே நம்பிக்கை மகாத்மா காந்திக்கும் இருந்தது. இவர்கள் மூவரும் சாதி பேதமற்ற வர்ணாசிரம வகுப்புப் பிரிவுகளை ஆதரித்தவர்கள் என்ற உண்மையை மறைத்துப் பயனில்லை.

மகாத்மாவும் ஜீவாவும்

மகாத்மா காந்தி காரைக்குடிக்கு வருகை தந்தபோது சிராவயல் காந்தி ஆசிரமத்தில் தோழர் ஜீவானந்தத்தைச் சந்தித்தார். காந்தியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆசிரமம் நடத்திய காந்தி பக்தர் ஜீவானந்தம் காந்தியை விட்டு விலகியதற்கு இந்தச் சந்திப்பில் இருவருக்கும் நிகழ்ந்த உரையாடலே காரணமாக அமைந்தது.

சாதுர்வர்ண்யம் மாயா ஸ்ருஷ்டம்

குணகர்ம விபாகச

- என்று பகவத் கீதையில் ‘ஞான கர்ம சந்யாச யோகம்’ பகுதியில் வரும் வரிக்கு மகாத்மாவிடம் விளக்கம் கேட்டார் ஜீவா.

www.t.me/tamilbooksworld

‘ ‘குணத்துக்கும் செய்கைக்கும் ஏற்ப நான்கு வர்ணங்களைப் படைத்தேன்’ என்று பகவத் கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ‘சத்வ குணம் நிரம்பியவன் பிராமணன்; சத்வ குணத்துடன் சிறிது ரஜோ குணம் கொண்டவன் சத்திரியன்; ரஜோ குணம் அதிகமாகவும், சத்வ குணம் குறைவாகவும், தமோ குணமும் சேர்ந்தவன் வைசியன்; ரஜோ குணம் குறைவாகவும், தாமச குணம் அதிகமாகவும் உள்ளவன் சூத்திரன்’ என்று குணங்களையும், பண்புக்கேற்ற செயல்களையும் கொண்டு நான்கு வர்ணங்கள் பிரிக்கப்படுவது உண்மையானால் சத்வ குணம் நிறைந்த நீங்கள் பிராமணர் என்றுதானே பொருள் கொள்ள வேண்டும்’ என்று காந்தியிடம் ஜீவா கேட்டார்.

ஜீவாவின் விளக்கத்தை மகாத்மா காந்தி ஏற்க மறுத்தார். பிராமண தர்மத்துக்கேற்ப நடக்காதவன் கெட்ட பிராமணன் என்றும், வைசிய தர்மத்தின்படி நடக்கும் தான் நல்ல வைசியன் என்றும் காந்தி கொடுத்த விளக்கம் ஜீவாவுக்கு ஜீரணமாகவில்லை. பிறப்பின் அடிப்படையில் வகுப்பை நிர்ணயிக்கும் காந்தியின் சனாதனம் ஜீவாவை காந்தியாரிடமிருந்து விலகிப் பெரியாரின் பக்கம் கொண்டு வந்து நிறுத்தியது.

‘பிறப்பை அனுசரித்து வர்ணத்தை நிர்ணயிப்பது சிறிதும் பொருந்தாது. அத்யாத்ம வித்தைக்கு ஏற்ப நான்கு வர்ணங்கள் மனபரிபாகத்தை ஒட்டியனவாம். அதன்படி நான்கு சகோதரர்களுக்கு இடையில் மனபரிபாகத்துக்கு ஏற்ப ஒருவன் பிராமணனாகவும், இன்னொருவன் சத்திரியனாகவும், மற்றொருவன் வைசியனாகவும், வேறு ஒருவன் சூத்திரனாகவும் இருக்க முடியும்... வாழ்க்கை முறையில் ஒரு வர்ணம் மற்றொரு வர்ணமாகப் பரிணமிப்பதும் சர்வ சாதாரணம்’ என்று சித்பவானந்தர் கீதையின் ‘சாதுர்வர்ண்யம் மயா சிருஷ்டம், குணகர்ம விபாகச’ என்ற வரிக்கு விளக்கம் தருகிறார். விவேகானந்தருக்கும் பாரதிக்கும் இந்த விளக்கம்தான் உடன்பாடு.

விவேகானந்தரும் வர்ணாசிரம தர்மமும்

‘சத்திரியனான விசுவாமித்திரன் தன் வாழ்க்கை ஒழுக்கத்தால் பிராமணனாகவும், பிராமணனுக்குப் பிறந்த பரசுராமன் தன் செய்கையால் சத்திரியனாகவும் மாறினர். வர்ணங்களைப் பிறப்பு நிர்ணயிப்பதில்லை. அனைவரும் ஒழுக்கத்தில் சிறந்த பிராமணர்களாக வேண்டும் என்பதுதான் சமூகத்தின் உயர்ந்த லட்சியம்’ என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திய விவேகானந்தர் பிறப்பில் பிராமணரில்லை.

www.t.me/tamilbooksworld

‘சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உரிய வழி, மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பதன்று. கீழ்ச்சாதியினரை மேல் சாதியினரின் நிலைக்கு உயர்த்துவதுதான் சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உரிய வழியாகும். நமது லட்சியத்தின் மேல்படியில் பிராமணன் இருக்கிறான்; கீழ்ப்பகுதியில் சண்டாளன் இருக்கிறான். சண்டாளர்கள் அனைவரையும் பிராமணர் நிலைக்கு உயர்த்துவதே நாம் செய்ய வேண்டிய வேலையாகும். உயர்சாதி மக்களின் வலிமை முழுவதும் அவர்கள் பெற்றிருக்கும் கல்வியறிவிலும் பண்பாட்டிலும் அடங்கியிருக்கிறது. தாழ்ந்த சாதி மக்களும் அவற்றைக் கைக்கொள்வதொன்றே சாதி வித்தியாசத்தை நீக்கிச் சாதிச் சமத்துவத்தை ஏற்படுத்தும் வழியாகும்’ என்கிறார் விவேகானந்தர்.

பிராமணனுக்கு மகனாகப் பிறந்த ஒரே காரணத்தினாலேயே அவனைப் பிராமணன் என்று விவேகானந்தர் அங்கீகரிக்கவில்லை, ‘பிராமணன்’ என்ற சொல் அவரளவில் உயர்ந்த ஒழுக்கத்தின் குறியீடு. இதோ... விவேகானந்தரே அதைப் பற்றி விரிவாக விளக்குகிறார்...

‘உயர்ந்த பிறப்பைப் பற்றிய நம் கொள்கை மற்றவர்களிலிருந்து வேறானது. நம் கொள்கை ஆன்மிகப் பண்பாடும், துறவும் அமைந்த

பிராமமணனாகும். பிராமமணக் கொள்கை என்று சொல்வதன் மூலம் நான் எதைக் குறிப்பிடுகிறேன்? உலக ஆசை ஒரு சிறிதும் இல்லாத உண்மையான ஞானம் மிக அதிகமாக இருக்கின்ற கொள்கையைத்தான் நான் பிராமணர் கொள்கை என்று கூறுகிறேன். இதுதான் இந்து இனத்தின் லட்சியம்.'

'பிராமணன் என்பவன் தன் சுயநலம் அனைத்தையும் கொன்று விட்டவனாகவும், அன்பின் சக்தியையும், ஞானத்தின் சக்தியையும் அறிந்து கொள்வதற்காக உபதேசித்து வாழ்பவனாகவும், செயல்புரிபவனாகவும் இருக்கும்போது... ஒரு நாடு முழுவதுமே இத்தகைய ஆன்மிகத்தாலும், ஒழுக்கத்தாலும், நல்ல குணங்களாலும் முழுமை பெற்ற ஆண், பெண்களால் அதாவது பிராமணர்களால் மட்டுமே நிரம்பியிருக்கும்போது அந்த நாடு சாதாரண மனிதர்களுக்குரிய சட்டங்கள் அனைத்துக்கும் மேலாக இருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?' என்று கேட்கும் விவேகானந்தர் 'ஆதியில் ஒரேயொரு சாதிதான் இருந்தது. அதுதான் பிராமண சாதி. அந்த நிலை மீண்டும் திரும்ப வேண்டும்' என்கிறார்.

www.t.me/tamilbooksworld

'சாஸ்திரங்களில் நாம் சத்திய யுகத்தில் ஒரேயொரு சாதி இருந்ததாகப் படிக்கிறோம். அந்த ஒரே சாதி இந்த பிராமணர்கள்தாம். மகாபாரதத்தில் ஆரம்ப காலத்தில் உலகம் முழுவதும் பிராமணர்களாலேயே நிரம்பி இருந்தது என்றும், அவர்கள் கெட்டுப்போக ஆரம்பித்ததும் பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டனர் என்றும், மறுபடியும் முதல் யுகம் வரும்போது எல்லோரும் பிராமணர்களாக மாறிவிடுவர் என்றும் கூறப்பட்டுள்ளதை நாம் படிக்கிறோம். யுக வட்டம் இப்போது முழுமையடைகின்ற நிலைக்கு வந்துள்ளது. இந்த உண்மையில் உங்கள் கவனத்தைச் செலுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன். எனவே, சாதி வேற்றுமையைத் தீர்க்க வேண்டும் என்னும் நம் முயற்சி, ஏற்கெனவே உயர்ந்த சாதியில் உள்ளவர்களைக் கீழான சாதிக்கு இழுப்பதாக இருக்கக்கூடாது' (இந்தியத் தாயின் பணிக்கு இளைஞர்களே வருக- பக். 102-103) என்ற விவேகானந்தரின் பார்வை பாரதியைப் பெரிதாகப் பாதித்துவிட்டது.

விவேகானந்தர் வழியில் பாரதி

'கடவுளால் மனிதனுக்கு வழங்கப்பட்ட சமூக அமைப்புகளிலேயே மிகச் சிறந்த ஒன்று இந்தியாவின் வர்ணாசிரம முறை என்று நாங்கள் நம்புகிறோம். அதனுள் ஏற்பட்ட பல தவிர்க்க முடியாத குறைகளாலும், வெளிநாட்டவரின் கொடுமைகளாலும், எல்லாவற்றுக்கும் மேலாக

பிராமணர் என்ற பெயருக்கே பொருத்தம் இல்லாத பல பிராமணர்களின் அறியாமையினாலும், அகம்பாவத்தினாலும் இந்தியாவின் சிறந்த சமுதாய அமைப்பான இந்த வர்ணாசிரம முறை தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதில் பெரும் தடைகளைச் சந்தித்து வந்துள்ளது. இவற்றையெல்லாம் மீறி வர்ணாசிரம முறை இந்தியாவில் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறது. எதிர்காலத்தில் இந்திய மக்களை அவர்களின் குறிக்கோளை நோக்கி அழைத்துச்செல்லப் போகிறது' என்று வர்ணாசிரம அமைப்பைத் தாங்கிப் பிடிக்கிறார் விவேகானந்தர். 'விவேகானந்தர் சொல்லிய உபாயம் நல்ல உபாயம்' என்று வழிமொழிகிறான் பாரதி.

'கீழ்ச் சாதியினரை நல்ல சம்ஸ்காரங்களில் பிராமணர்களாக்கிவிட முடியுமென்பதற்கு நம்முடைய வேத சாஸ்திரங்களில் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. அதன்படி இந்தியா முழுவதையும் பிராமண தேசமாகச் செய்துவிட்டால் நல்லதென்பது என்னுடைய அபிப்ராயம். எந்த சாதியாக இருந்தாலும் சரி அவன் மாமிசபட்சணத்தை நிறுத்தும்படி செய்து, அவனுக்கு ஒரு பூணூல் போட்டு, காயத்ரி மந்திரம் கற்பித்துக்கொடுத்துவிட வேண்டும். பிறகு, அவன் பிராமணனாகவே கருதப்பட வேண்டும். இதுதான் விவேகானந்தர் சொல்லிய உபாயம். கூடியவரை நல்ல உபாயம்கூட. ஆனால், மேல் வகுப்பினர் தங்கள் உயர்வை மறந்து கீழ்வகுப்பினருடன் கலத்தல் இதனினும் சிறந்த உபாயமாகும்' என்று 'சாதிக் குழப்பம்' கட்டுரையில் பாரதி எழுதுகிறான்.

www.t.me/tamilbooksworld

கனகலிங்கத்துக்குப் பூணூல்

வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்த மகாகவி, விவேகானந்தரின் உபாயத்தை நல்ல உபாயம் என்று வரவேற்று எழுதுவதோடு நின்றுவிடாமல், கனகலிங்கம் என்ற அரிஜன இளைஞருக்குப் பூணூல் அணிவித்துப் பிராமணனாக்கினான். 'என் குருநாதர் பாரதியார்' என்ற நூலில் கனகலிங்கம் அந்த நிகழ்வை உருக்கமாக விளக்குகிறார். வீட்டுக்கூடத்தில் லட்சுமி, சரஸ்வதி, கிருஷ்ணன் படங்கள் மாட்டியிருந்த இடத்தில் பராசக்தியை தியானித்துப் பாடிவிட்டுக் கனகலிங்கத்தைக் கிழக்கு முகமாய் உட்காரச் சொன்னாராம் பாரதி.

'நான் உட்கார்ந்ததும், அந்த வீரவிழியால் ஒரு பார்வை பார்த்துவிட்டுக் குருநாதர் தம் திருக்கரத்தால் என் நெற்றியிலும், புயத்திலும், மார்பிலும் திருநீற்றுக் காப்பு இட்டார். பிறகு என்னை

மண்டியிட்டு உட்காரச் சொன்னார். கையில் பூணூலை எடுத்துக் கொண்டு சூரிய வழிபாடு செய்து வெகுநேரம் ஜபம் செய்து முடித்ததும் எனக்குப் பூணூலை அணிவித்தார். நான் உடனே சாஷ்டாங்கமாக விழுந்து பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்தேன். குருநாதர் என்னை ஆசீர்வதித்து, 'இன்று முதல் நீ பிராமணன்!' என்று உரத்த குரலில் கோஷித்தார். இனி யாராகிலும் என்ன சாதி என்று கேட்டால், 'நான் பிராமணன்' என்று தைரியமாகச் சொல்லு' என்று கட்டளையிட்டார். 'அப்படி ஆகிவிடலாமா?' என்று யாராவது கேட்கத் துணிந்தால், 'அது எனக்குத் தெரியாது. என் குரு பாரதியாரைக் கேளுங்கள். அவர் உங்கள் ஐயத்தைத் தெளிவிப்பார் என்று பதில் சொல்லிவிடு' என்பதும் எனக்கு பாரதியார் இட்ட கட்டளை' என்கிறார் கனகலிங்கம்.

புதுவை தேச முத்துமாரியம்மன் சன்னதியில் அர்ச்சகராக இருந்த நாகலிங்கம் என்ற வள்ளுவப் பண்டாரத்தைத் தன்னுடைய 'அருமைப்பிள்ளை போலவும், பிரிய சீடனாகவும் நடத்திய பாரதி, அந்த நாகலிங்கத்துக்கும் பூணூல் போட்டு, அருகில் அமர்ந்து சாப்பிட்டதாக நெஞ்சுருகிச் சொல்கிறார் கனகலிங்கம். மதுரை மீனாட்சி மீதும், காஞ்சி காமாட்சி மீதும் பாடல் புனையாத பாரதி, தாழ்த்தப்பட்டோர் பகுதியில் வைத்து வணங்கிய தேச முத்துமாரியம்மன் மீது,

www.t.me/tamilbooksworld

தேடியுனைச் சரணடைந்தேன்,

தேச முத்து மாரி!

கேடதனை நீக்கிடுவாய்,

கேட்டவரம் தருவாய்!

- என்று எழுதி நாகலிங்கத்திடம் கொடுத்ததையும் கண் கலங்கக் கூறுகிறார் கனகலிங்கம்.

அரிஜனங்களுக்கு விருந்து

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதி எப்படி அதைத் தன் வாழ்க்கையில் செயற்படுத்தினான் என்பதையும் கனகலிங்கம் நெகிழ்ச்சியுடன் விளக்குகிறார்.

'நாள் தவறாமல் பாரதியார் வீட்டுக்குப் போய் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்த நான் அன்றும் அங்கே போயிருந்தேன். எதிர்பார்த்தபடி ஐந்து அரிஜன விருந்தினர்களும் மகிழ்ச்சியுடன் நமஸ்கரிக்க, இவர் மிக்க

மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றார். எல்லோரும் வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார்கள். பாரதியாரின் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் தம்ளர்களில் தண்ணீர் கொண்டு வந்து வைக்க, எல்லோரும் கை அலம்பிக்கொண்டு, பாரதியார் மத்தியிலும், மற்ற ஐவரும் இடதுபக்கமும், வலதுபக்கமுமாக அமர்ந்தார்கள். அம்மையார் எல்லோருக்கும் இலை போட்டுப் பரிமாறிவிட்டுப் பின்கட்டுக்குப் போய்விட்டார்.'

'எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஜேம்ஸ் சாமுவேல் தம்ளரைத் தூக்கிக் குடிக்கும் பழக்கம் இல்லாததால், மார்பிலும் கழுத்திலும் தண்ணீரை ஊற்றிக் கொண்டார். அது மற்றவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. பாரதியாரோ அனுதாபத்துடன், 'சாமுவேல்! ஏன் தூக்கிச் சாப்பிட்டீர்? அச்சமின்றி வழக்கம்போல் பருகலாமே!' என்றார். அந்த அன்புச்சொல் எங்களை உருக்கிவிட்டது. எல்லோரும் சாப்பிட்டு எழுந்திருக்கும்போது அந்துவேன் அர்லோக் சாப்பிட்ட இலையைக் கையில் எடுத்தார். உடனே குருநாதர், 'யாரும் இலையைத் தொட வேண்டாம்' என்று சொல்லி, 'செல்லம்மா' என்று கூப்பிட்டு 'இலைகளை எடும்' என்றார். அம்மையார் ஒருவித வெறுப்பும் இல்லாமல் அப்படியே செய்தார். சாதி கர்வமும் தீண்டாமையும் தலைவிரித்துப் பேயாட்டம் ஆடிய அந்த நாளில் பாரதியார் இப்படியெல்லாம் அரிஜனங்களுக்குத் தமது இல்லத்தில் மட்டுமல்ல, இதயக் கோயிலிலும் பிரவேசம் அளித்து அன்பு விருந்து செய்தார்' என்று விவரிக்கும் கனகலிங்கம் தாழ்த்தப்பட்டோர் கோயில் பிரவேசத்துக்காக பாரதி புதுவையில் மேற்கொண்ட முயற்சியையும் விளக்குகிறார்.

www.t.me/tamilbooksworld

கோயில் பிரவேசம்

'அந்தக் காலத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்றையும் கொள்கைகளாகக் கொண்ட குடியரசின் கீழிருந்த புதுவை நீதி ஸ்தலங்களிலேயே சாதி வித்தியாசங்கள் இருந்தன என்றால் கோயில், ஹோட்டல், க்ஷவரக் கூடம், நாடகக் கொட்டகை முதலான இடங்களில் சொல்லவும் வேண்டுமா? சாதி வேற்றுமைகள் தலைவிரித்தாடிய அந்தக் காலத்தில் கூண்டில் அடைபட்டிருந்த கிளியைப் போலிருந்த பாரதியாரால் என்ன செய்ய முடியும்? தேர்தல் காலத்தில் எங்கும் அடிதடி நடக்கும். பாரதியார் எதற்கும் அஞ்சாமல், சாதி வித்தியாசம் பார்க்கும் மடமையை விளக்கி அரிஜனங்களை ஏன் கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று கேள்வி கேட்டு, அனுமதிக்க வேண்டும் என்பதற்குத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி, 'கோயில் திருத்தம்' என்ற

நோட்டீஸ் எழுதி துணிவுடன் வெளியிட்டார். அதில் குவளைக் கண்ணனை கையொப்பமிடச் செய்தார்' என்று விளக்கும் கனகலிங்கம், தாழ்த்தப்பட்டவர்கள் இன்று கோயிலுக்குள் செல்லும் சூழல் கனிந்ததைக் குறிப்பிட்டு, பாரதியின் அன்றைய முயற்சிக்கு நன்றி செலுத்துகிறார்.

சமதர்ம பூமி எது?

பாரதி நின்ற இடத்தில் தீண்டாமையின் நிழல்கூடப் படிந்ததில்லை என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைத் தன் நூலில் பதிவு செய்கிறார் கனகலிங்கம்.

'ஒரு சமயம் பாரதியார் என்னை 'சுந்தரேசய்யர் என்ற தமது பிராமண நண்பர் வீட்டுக்கு வந்து தம்மைச் சந்திக்கும்படிச் சொல்லியிருந்தார். நான் அங்கே சென்றதும், வீட்டுக்குள் புகுந்து விடாமல், தெருவில் நின்று கொண்டே மேல்மாடியை நோக்கி, 'சுவாமி!' என்று உரத்த குரலில் கூப்பிட்டேன். 'உள்ளே வா!' என்று பாரதியார் சத்தம் கொடுத்தார். அந்த நாளில் புதுவை சாதி பேத உணர்ச்சிக்கு ஒரு நிலைக்களமாக இருந்ததால், பாரதியார் கூப்பிட்டும் நான் உள்ளே நுழைந்து விடவில்லை.

www.t.me/tamilbooksworld

பாரதியார் மேல் மாடத்துக்கு முன்புறமாக வந்து நின்றுகொண்டு, 'உள்ளே வா!' என்று சற்றுக் கோபமாய்க் கர்ஜித்தார். அப்பால் தயங்காமல் நான் மேல்மாடிக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வீட்டின் சொந்தக்காரரும், வேறு மூன்று பிராமணர்களும் இருந்தார்கள். பாரதியார் என்னைக் கண்டதும், 'இன்றுமுதல் நான் எந்த இடத்தில் இருக்கிறேனோ, அந்த இடத்தில் தீண்டாமைப் பிணி இருக்கவே இருக்க முடியாது!' என்று ஆவேசத்துடன் கூறினார். உடன் இருந்த மற்ற பிராமணர்களின் முகக்குறியும் பாரதியாரின் வார்த்தையை ஆதரிப்பதாகவே மலர்ச்சி பெற்றது.

பாரதியார் ஆனந்தமாகப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு எத்தனையோ தடவை மெய்சிலிர்த்துப் பரவசமாகி இருக்கிறேன். அன்று பாரதியாரின் தர்மாவேசமும், 'பாரதி இருக்கும் இடத்தில் தீண்டாமை எப்படி இருக்க முடியும்?' என்று பொருள்படப் பேசிய வீர தோரணையும் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தன. ஆம், உண்மைதானே! ராமன் இருக்குமிடம் அயோத்தி என்பது போல பாரதி இருக்குமிடம் சமதர்மபூமிதான்' என்ற கனகலிங்கத்தின் வாக்கு சந்தேகத்துக்கு இடமில்லாத சத்திய வாக்கு.

நடமாடும் அழுகல் சவங்கள்

‘இந்த நூலை, பாரத நாட்டில் உழவுத்தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்த தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்’ என்று தன்னுடைய ‘ஆறிலொரு பங்கு’ நூலில் குறிப்பிடுகிறான் பாரதி. பள்ளரையும் பறையரையும் பரிசுத்த தன்மை வாய்ந்தவர்கள் என்று வர்ணிக்கும் மகாகவி அவர்களை சூத்திரர் பட்டியலில் அடைத்து விடாமல், வைசிய சகோதர்கள் என்று அடைமொழி தந்து அழைக்கிறான். பாரதிக்கு பிறவி சார்ந்த சாதிப் பாகுபாடு பிடிக்கவில்லை. ஆனால், தொழில்சார்ந்த வர்ணப்பாகுபாடு அவனுக்குச் சரியான சமூக ஏற்பாடாகப்படுகிறது. விவேகானந்தரை இந்த விஷயத்தில் அப்படியே அவன் பின்பற்றுகிறான்.

‘ஒரு சாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு சாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தில் உயர்வு-தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம். மதவிரோதங்கள் இருக்கலாகாது’ என்று சாதி-வர்ணம் சம்பந்தப்பட்ட தன் கொள்கையைக் குழப்பத்துக்கு இடமில்லாமல் தெளிவுபடுத்துகிறான் பாரதி.

www.t.me/tamilbooksworld

‘பிராமணன் பிறப்பதில்லை. பண்பட்ட மனதும், சுயநலமற்ற சிறந்த வாழ்க்கை முறையும் எவனிடம் உள்ளதோ, அவனே பிராமணன்’ என்பதுதான் பாரதிக்கும் விவேகானந்தருக்கும் வாய்த்த பிராமணக் கொள்கை. வாழ்க்கை நெறிமுறைகளிலிருந்து வழுவிய பிராமணர்களை இருவரும் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

‘இந்தியாவின் உயர்வு வகுப்பு மக்களே! உங்களுக்கு உயிர் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்திய மம்மியின் சவம் போலத்தான் நீங்கள் இருக்கிறீர்கள். ‘நடமாடும் அழுகல் சவங்கள்’ என்று உங்கள் மூதாதையர் வெறுத்து ஒதுக்கினார்களே, அப்படிப்பட்ட மக்களிடையேதான் இந்தியாவில் எஞ்சியுள்ள வீரிய சக்தியில் சிறிதளவு காணப்படுகிறது. ஆனால், நீங்கள்தாம் உண்மையில் நடமாடும் பிணங்களாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். எலும்புமயமான உங்கள் விரல்களில் விலைமதிக்க முடியாத வைரமோதிரங்கள் (ஆன்மிகச் செல்வம்) உள்ளனவே, அவற்றை உங்கள் முன்னோர் பண்டைக்காலத்தில் பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். இப்போது நாற்றமடிக்கும் உங்கள் பிணம் புராதனமான நிதி நிறைந்த பெட்டிகளைக் காத்துத்

*தழுவிக்கொண்டிருக்கிறது’ (புதிய இந்தியாவைப் படைப்போம்-பக்.77) என்று கடுமையான வார்த்தைகளால் நெறி வழுவிய பிராமணர்களைச் சாடுகிறார் சுவாமி விவேகானந்தர்.*

*சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்*

*சகுன மந்திரந் தாலி மணியெலாம்*

*யாது தர்ம முறையெனல் காட்டிலர்.*

*தீத்தி றன்கொள் அறிவற்ற பொய்ச்செயல்*

*செய்து மற்றவை ஞான நெறியென்பர்*

*- என்று பிராமண குலத்தின் செய்கைகளைச் சுட்டெரிக்கும் பாரதி, தன்னுடைய தந்தையே பிராமண தர்மத்துக்கு மாறாகப் பொருளாசைக் கொண்டு தொழில் முயற்சியில் ஈடுபட்டதை வன்மையாக விமர்சித்து,*

*பார்ப்பனக் குலங் கெட்டழி வெய்திய*

www.t.me/tamilbooksworld

*பாழடைந்த கலியுக மாதலால்*

*வேர்ப்ப வேர்ப்பப் பொருள் செய்வ தொன்றையே*

*மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன்*

*- என்று ‘சுயசரிதை’யில் பாடுகிறான்.*

***யார் பிராமணன்?***

*‘யார்தான் பிராமணன்? எவனொருவன் இரண்டற்றதும், பிறவி, குணம், தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம்போல கலந்திருப்பதும், அளவிடக்கூடாததும், அனுபவத்தால் உணரத்தக்கதுமாகிய இறுதிப் பொருளை, நேருக்கு நேராகத் தெரிந்து காமம், குரோதம் முதலிய குற்றங்கள் இல்லாதவனாக, பாபம், மாற்சரியம், விருப்பம், ஆசை, மோகம் முதலியவை நீங்கியவனாக, டம்பம், அகங்காரம் முதலியவை பொருந்தாத நெஞ்சமுடையவனாக இருக்கின்றானோ, இங்ஙனம் கூறப்பட்ட இலக்கணம் உடையவனே பிராமணனென்பது சுருதி, ஸ்மிருதி, புராண, இதிகாசமென்பவற்றின் அபிப்பிராயமாகும். மற்றபடி ஒருவனுக்கு பிராமணத்துவம் சித்தியாகாது*

என்பது உபநிஷத்து.'

'பிராமணராக வேண்டுவோர் மேற்கூறப்பட்ட நிலைமையைப் பெற முயற்சி செய்யக்கடவர். சத்திரியர், வைசியர், சூத்திரர் முதலிய மற்ற லௌகிக வர்ணங்களுக்கும் இது போலவே தக்கவாறு லட்சணங்கள் அமைத்துக்கொள்க. அந்தந்த இலக்கணங்கள் பொருந்தியவர்களே அந்தந்த வர்ணத்தினரென்று மதிக்கத்தக்கவர்கள். அந்த இலக்கணங்கள் இல்லாதவர்கள் அவற்றையடைய முயற்சி செய்ய வேண்டும். போலீஸ் வேவுத் தொழில் செய்பவன் பிராமணன் ஆக மாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் சத்திரியன் ஆகமாட்டான். சோம்பேறியாக முன்னோர் வைத்துவிட்டுப்போன பொருளையழித்துத் தின்பவன் வைசியன் ஆகமாட்டான். கைத்தொழில்களை எல்லாம் இறக்கக் கொடுத்துவிட்டுச் சோற்றுக்குக் கஷ்டமடைவோர் சூத்திரர் ஆகமாட்டார்கள். இவர்களெல்லாம் மேம்பாடுடைய ஆரிய வர்ணங்கள் நான்குக்கும் புறம்பாகிய நீசக் கூட்டத்தார். நமது தேசம் முன்போலக் கீர்த்திக்கு வரவேண்டுமானால் உண்மையான வகுப்புகள் ஏற்பட வேண்டும். பொய் வகுப்புகளும், போலிப் பெருமைகளும் நசிக்க வேண்டும்' (பாரதியார் கட்டுரைகள்-சமூகம்) என்கிறான் பாரதி.

www.t.me/tamilbooksworld

'சாத்வீக குணங்கள் நிரம்பிய, தவவாழ்க்கை மேற்கொள்பவனே பிராமணன்' என்று பகவத் கீதை வகுக்கும் இலக்கணப்படி விவேகானந்தரும் பாரதியும் உருவாக்கிய பிராமணக் கொள்கையின்படி அளந்தால் இந்த மண்ணில் ஒரு பிராமணனையும் காண முடியாது. தங்கள் சமகாலத்தில் வாழ்ந்த பிராமணர்கள் மீது பாரதிக்கும் விவேகானந்தருக்கும் எள்ளளவும் மதிப்பில்லை. சுயநலம் தவிர்த்த , சமூக மக்களின் நலனுக்காகவே தவமியற்றுகிற, உயர்ந்த வாழ்க்கை ஒழுக்கங்களை உயிரினும் மேலாகப் பாவித்துப் பின்பற்றுகிற சான்றோராக அனைவரையும் மாற்றிவிட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஆசை. கனகலிங்கத்துக்குப் பூணூல் போட்ட பாரதியின் நோக்கம், பிராமண குலத்தில் பிறந்த ஒரு காரணத்துக்காகவே சாதித் திமிரில் திரிந்தவர்களின் தலையில் ஓங்கியடித்து, 'யாரும் பிராமணன் ஆகலாம்' என்று உணரச் செய்வதுதான் என்ற புரிதல் வரவேண்டும். பாரதியின் செய்கைக்கு உள்நோக்கம் கற்பிப்பது பண்புடைமையாகாது.

நன்றிகெட்ட பாதகர்கள்

'இந்த நாட்டில் லட்சோப லட்சம் ஏழை மக்கள் பசிப்பிணிக்கும், அறியாமைக்கும் இரையானவர்களாக இருக்கும் வரையில் அவர்களுடைய உழைப்பின் பயனைக் கொண்டு கல்வி கற்று

அவர்களையே கவனிக்காமல் இருக்கும் ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி என்றே சொல்வேன். துன்பத்தில் ஆழ்ந்துள்ள ஏழைகளை வதைத்துப் பெற்ற பணத்தைக்கொண்டு ஆடை ஆபரணங்களால் தங்களைச் சொகுசாக அலங்கரித்துத் திரிகிறவர்கள், 'பசி, பசி' என்று காட்டுமிராண்டிகள் போல் வாழும் அந்த இருபது கோடி மக்களுக்காக எதுவும் செய்யாவிட்டால், அவர்களை நன்றி கெட்ட பாதகர்கள் என்றே நான் கூறுவேன்'

'எல்லா உயிர்களையும் உன்னைப்போலவே கருது' (ஆத்மவத் சர்வபூதேஷு) என்ற அறிவுரை வெறுமனே புத்தகத்தில் மட்டும் அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதானா? பசித்த வயிறுக்கு ஒரு கவளம் சோறு போட முடியாத அவர்களால் எப்படி முக்தியை வாரிக் கொடுக்க முடியும்? பிறருடைய மூச்சுக்காற்றுப் பட்டாலே தாங்கள் அசுத்தமாகி விடுவதாக நினைப்பவர்கள் எப்படி மற்றவர்களுக்குப் பரிசுத்தத் தன்மையை வழங்குவார்கள்? 'என்னைத் தீண்டாதே!' என்ற கொள்கையைப் பிடித்துக் கொண்டிருப்பது ஒருவித மனோவியாதியே ஆகும்' என்று பொங்கிய சுவாமி விவேகானந்தரை வர்ணப் பகுப்பை ஏற்றதனாலேயே நாம் பிற்போக்குவாதி என்று ஒதுக்கித் தள்ளுவது முறையன்று.

www.t.me/tamilbooksworld

சாத்திரம் இன்றேல் சாதியில்லை

பழங் கோத்திரங்கள் சொல்லு மூடர்தம்- -பொய்மைக்

கூடையில் உண்மை கிடைக்குமோ?

-என்றும்,

சந்ததம் பொய்யென்று உரைத்திடும்- -மடச்

சாத்திரம் பொய்யென்று தள்ளடா

-என்றும்,

வேதங் கெட்டு வெறுங்கதை மலிந்தது

போதச் சுடரைப் புகையிருள் சூழ்ந்தது

-என்றும்,

சாத்திரம் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்

சாத்திரம் இன்றேல் சாதி யில்லை

- என்றும்,

சூத்திரனுக் கொரு நீதி- - தண்டச்

சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி

சாத்திரம் சொல்லிடு மாயின்- - அது

சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்

- என்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிராமண குலத்தில் பிறந்து, அந்தக் குலத்தின் பாதுகாப்புக் கவசங்களாக விளங்கிய சாத்திரங்களையே தகர்த்தெறியத் துணிந்த முதல் மகா கவிஞனை, 'பாரதி இருக்குமிடம் சமதர்ம பூமி' என்று ஒரு தாழ்த்தப்பட்ட கனகலிங்கமே உள்ளம் உருகி வாக்குமூலம் வழங்கிடும் வகையில் வாழ்ந்த ஓர் அரிய மனிதனை, அவனுடைய உயர்வு தாழ்வற்ற வர்ணப் பார்வைக்காகப் பார்ப்பனச் சனாதனி என்று பழிப்பதைவிட ஒரு பாவச் செயல் வேறெதுவுமில்லை.

www.t.me/tamilbooksworld

பாரதியின் பொய்யான நம்பிக்கை

'சமரச ஞானம் இல்லாவிட்டால் எந்த சித்தாந்தமும் நாளடைவில் பொய்யாகவும், குருட்டு நம்பிக்கையாகவும், வீண் அலங்காரமாகவும் முடிந்து ஜனங்களை மிருங்களைப் போல் ஆக்கிவிடும்' என்று நெஞ்சார நினைத்து எழுதியவன், வர்ணாசிரம தர்மத்துக்கும் சமரச ஞானத்துக்கும் சம்பந்தமே இல்லை என்பதை உணராமல் போனதற்கு இந்து மதத்தின் மீது அவனுக்கிருந்த ஆழமான நம்பிக்கை முக்கிய காரணமாக இருக்கலாம். பாரதியும், விவேகானந்தரும், மகாத்மா காந்தியும் சமய நல்லிணக்கம் உடையவர்களாக இருந்தபோதிலும் அடிப்படையில் அவர்கள் இந்து மதப் பற்றாளர்களாகவே விளங்கினர். 'சாதி சமூகத்தின் ஏற்பாடே தவிர, சமயத்தின் ஏற்பாடல்ல' என்று முழங்கியவர் விவேகானந்தர். 'இந்து சமயத்தைப் பற்றியிருக்கும் தொழுநோய் தீண்டாமை' என்று இதயம் நொந்து சொன்னவர் காந்தி. 'ஜீவ ஐக்கியமும், ஜீவ சமத்துவமுமே இந்து மதத்தின் வேர்க்கொள்கை' என்று உரத்த குரலில் ஊருக்குச் சொன்னவன் பாரதி.

'ஆண் பெண் சமத்துவமே தர்மமென்று தெரிகிறதா? அப்படியானால் வாருங்கள்; மாதர்களை லட்சக்கணக்காக விடுதலை செய்வோம். சாதி பேதங்கள் பிரயோஜனம் இல்லை என்று தெரிந்ததா? நிற வேற்றுமைகளும், தேச வேற்றுமைகளும் உபயோகம் இல்லாதன என்று தெரிந்ததா? நல்லது. வாருங்கள். கோடிக்கணக்காக சமத்துவ நெறியில் பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லட்சக்கணக்கான மக்கள் கூடிநின்று தகர்ப்போம்' (பாரதியார் கட்டுரை- - தத்துவம்) என்று பால்வேற்றுமை, சாதி வேற்றுமை, நிற வேற்றுமை, தேச வேற்றுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவன் வர்ணம் வகுத்த வகுப்புகளால் வேற்றுமை வளராது என்று நம்பியதுதான் தவறு.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்

சேர்ந்திட லாமென்றே யெண்ணி யிருப்பார்

பித்த மனித ரவர் சொலுஞ் சாத்திரம்

பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்

www.t.me/tamilbooksworld

- என்று சாத்திரங்களைப் 'பேயுரை' என்று பழித்தொழிக்கும் பாரதி, அந்த சாத்திரங்கள் வகுத்த வர்ணங்களை மட்டும் மாற்றமின்றி ஏற்கிறான்.

'நாலு சாதிதான் உண்டு. பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர். படித்தவன் பிராமணன், வீரன் சத்திரியன், தந்திரசாலி வைசியன், தொழிலாளி சூத்திரன். இது எந்த தேசத்திலும் உண்டு. எந்த காலத்திலும் உண்டு . இதை மாற்றவே முடியாது' என்று 'சாதிப்பிரிவு' கட்டுரையில் ஆணித்தரமாக எழுதுவது நமக்கு வியப்பைத் தருகிறது. நாலாயிரம் சாதிகளில் சிக்கிச் சீரழிவதைவிட, வேலைப் பிரிவுகளின் அடிப்படையில் நான்கு சாதிகள் இருப்பது உத்தமம் என்று பாரதி முடிவெடுக்கிறான். உலகம் முழுவதும் இந்த வேலைப் பிரிவுகள் இருக்கும் என்பது அவனுடைய தீர்மானம். ஆனால், வர்ணாசிரமம் வெறும் வேலைப் பிரிவுகளாக நின்று விடுவதில்லையே!

காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்

ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய்- - எந்த

நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை

- என்று மிகத் தெளிவாகப் பேசும் பாரதி, ஒரு காலத்தில் சமூகத்தின் உற்பத்தி முறைக்கு உதவியாக இருந்த வேலை சார்ந்த வர்ணப்பிரிவு எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரும் என்று சிந்தித்தது முரண்பாடு.

‘பழைய மதம் உண்மை என்று சொல்லிவிட முடியாது. மனித வர்க்கம் நாளேற, நாளேற உண்மையைத் தெரிந்துகொள்கிறது. பாட்டன் நம்பியதை நாம் நம்ப வேண்டும் என்பது குழந்தைச் சட்டையை பெரியவன் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது போலாகும்’ என்ற கன்பூஷியஸின் பொன்மொழியை நாம் நினைவில் நிறுத்துவது நல்லது.

வர்ணப் பகுப்பை வரவேற்ற பாரதி பிராமண தர்மத்தைப் பாதுகாக்க முயன்றவன் என்ற முடிவுக்கு நாம் வரக் கூடாது.

‘பாரதியிடத்தில் பார்ப்பனத் தன்மை எள்ளளவும் கிடையாது. ‘பார்ப்பானை ஐய்யரென்ற காலமும் போச்சே’ என்று பெரியாருக்கு முன்பே முரசு கொட்டிச் சொன்னவன் பாரதி. நான் புரட்சிக் கவிதைகள் எழுதக் கற்றுக் கொண்டதே அவரிடம்தான்’ (பாரதிதாசன் பார்வையில் பாரதி - -பக்.160) என்று பாவேந்தர் பாரதிதாசனே ஐயத்துக்கு இடமின்றி மிக அழுத்தமாகத் தெளிவுபடுத்திய பின்பு பாரதிக்கு வேறு யாருடைய சான்றிதழும் தேவையில்லை.

www.t.me/tamilbooksworld

5



# பித்த மதங்களிலே தடுமாறிப் பெருமையழிவீரோ?

www.t.me/tamilbooksworld

நான்
அறிந்த
அளவில்
பல
மொழிகளையும்,
இலக்கிய
வளத்தையும்,
நீண்ட
வரலாற்றுச்
சிறப்பையும்
கொண்ட
மொழிக்
குடும்பங்கள்
முதல்
முதலாகச்
சுதந்திரமாக
வாழும்
உரிமையைப்
பெற்ற
இந்தியாவின்
ஒற்றுமையைப்
பற்றியும்,
எட்டு

சதவிகிதத்துக்கும்
குறைவான
கல்வி
அறிவைக்
கொண்ட
தற்குறிச்
சமுதாயத்தின்
கல்வி
வளர்ச்சி
பற்றியும்,
அடிக்கடி
பஞ்சத்தில்
வாடிக்கொண்டிருந்த
இந்த
நாட்டில்,
கைத்தொழில்
வளர்ச்சி
மட்டுமின்றி,
அறிவியல்-
www.t.me/tamilbooksworld
தொழில்நுட்ப
வளர்ச்சியின்
அடிப்படையில்
தொழில்
முன்னேற்றம்
பற்றியும்,
எண்ணற்ற
மூடப்பழக்க
வழக்கங்களில்
ஆழ்ந்து
கிடந்த
மக்களின்
விழிப்பு
உணர்வு
பற்றியும்,
சாதியின்
பெயரால்
நடந்த,
நடக்கும்

கொடுமைகள்
பற்றியும்,
சாதியை
அறவே
ஒழிக்க
வேண்டிய
தேவை
பற்றியும்
ஒரே
சமயத்தில்
அனைத்தையும்
முன்வைத்து
ஆவேசத்துடனும்,
அவசர
வேகத்துடனும்
இந்தியாவில்
பாடிய
ஒரே
தேசியக்
கவி
மகாகவி
பாரதிதாசன்.

மற்ற
கவிஞர்கள்
ஒன்றைத்
தொட்டிருந்தால்
மற்றொன்றைப்
பற்றி
எண்ணியிருக்க
மாட்டார்கள்.
ஒன்றில்
முன்னேற்றக்
கருத்துக்
கொண்டிருந்தால்
மற்றொன்றில்
பிற்போக்குவாதிகளாக
இருந்திருப்பார்கள்.
மகாகவி

www.t.me/tamilbooksworld

என்ற
தகுதியுடன்
கவித்துவம்
குறையாது
விடுதலை
பெற்ற
இந்தியாவின்
எதிர்காலம்
பற்றிய
சிந்தனைகளை
முன்
வைத்த
மாபெரும்
தேசியக்
கவி
பாரதி.
ஆயிரம்
சூரியன்கள்
ஒன்று
சேர்ந்தது
போன்ற
வெளிச்சத்துடன்
பாரதி
இந்தியாவின்
பிரச்னைகளைப்
பார்த்தார்.

www.t.me/tamilbooksworld

- அறிவியல் அறிஞர்
வா.செ.குழந்தைசாமி.

‘பிற நாடுகளில் மதம் என்பது வாழ்க்கையின் எத்தனையோ அம்சங்களுள் ஒன்று. உண்மையைச் சொல்வதானால், அது மிகச் சாதாரண அம்சமே... இங்கே இந்தியாவிலோ நாட்டின் இதயமே மதத்தால்தான் உருவாகியுள்ளது. இதுவே முதுகெலும்பு. இதுவே அடிப்படை. இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் நமது தேசிய வாழ்வாகிய கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. அரசியல், அதிகாரம், ஏன் அறிவுகூட இரண்டாம் பட்சமே. மதம் ஒன்றே முக்கியமானதாக இங்குக் கருதப்படுகிறது... இந்திய வாழ்க்கை வாழ்ந்ததும், வளம் பெற்றதும்

மதம், ஆன்மிகம் என்ற அடிப்படை மீது மட்டுமே. இனியும் அது அவ்வாறே வாழும், வளம் பெறும்' என்று அழுத்தம் திருத்தமாக அடித்துச் சொன்னார் சுவாமி விவேகானந்தர்.

'நமது நாட்டின் வாழ்க்கை மதத்தில்தான் அமைந்திருக்கிறது. அதன் மொழியும் மதம்தான்' என்று உரத்த குரலில் உரைத்த விவேகானந்தர், தன் வாழ்காலத்தில் இந்து மதத்தில் படிந்திருந்த களங்கங்களைப் புனிதப் போர்வையால் மறைக்க முயலவில்லை. இந்துக்கள் தங்கள் முன்னோர் வகுத்த மார்க்கத்திலிருந்து வழுவி, வேண்டாத சடங்குகளைச் சமயமென்று தழுவி நின்றதைக் கண்டு அவர் கலங்கினார்.

'உங்கள் சிறப்புத் துறையான மதத்திலோ மிகவும் பயங்கரமான வீழ்ச்சியே தென்படுகிறது. தண்ணீரை வலது கையால் குடிப்பதா, இடது கையால் குடிப்பதா என்பன போன்ற அதிமுக்கியமான பிரச்னைகளை விவாதிப்பதில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்த ஓர் இனத்திடமிருந்து வேறு நாம் எதைத்தான் எதிர்பார்க்க முடியும். நாட்டின் மிகச் சிறந்த மேதைகள் நூற்றாண்டுகளாகச் சமையலறையைப் பற்றியும் நான் உங்களைத் தொடலாமா, நீங்கள் என்னைத் தொடலாமா. அப்படி தொட்டுவிட்டால் என்ன பிராயச்சித்தம் என்பது பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அந்த இனத்துக்கு அதைவிடப் பெரிய சீரழிவு வேறென்ன வேண்டும்? என்று அவர் மனம் குமுறினார்.

www.t.me/tamilbooksworld

'வாழும்போது ஒரு கவளம் சோற்றுக்கு வழிகாட்டாத கடவுள், செத்தபின்பு சொர்க்க சுகம் தருவான் என்பதை எப்படி நம்ப முடியும்?' என்று கேட்ட வித்தியாசமான சந்நியாசி விவேகானந்தர். இந்தியாவின் நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றால், 'ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட வேண்டும்; கல்வி எங்கும் பரவ வேண்டும்; புரோகிதரின் ஆதிக்கம் என்ற தீமை விளக்கப்பட வேண்டும்; எல்லோருக்கும் சிறந்த உணவும், நல்ல வாய்ப்பு வசதிகளும் இருக்க வேண்டும்' என்று வழிகாட்டிய துறவி அவர்.

'வயிற்றுக் கடவுள் பூசையே இப்போது முதன்மையான தேவையாகும். முதலிலே கூர்மாவதாரமாகிய சாமிக்கு, அதாவது வயிற்றுச் சாமிக்கு உணவைப் படைத்துச் சாந்தப்படுத்த வேண்டும். இவ்விதம் செய்யாமல் வெற்று மதப் பிரசாரத்தில் ஈடுபடுவீர்களானால், உங்களுடைய மத போதனைகளுக்கு ஒருவரும் செவி சாய்க்க மாட்டார்கள்' என்று பேசிய விவேகானந்தர், 'முதலில் மக்களுக்கு உணவு, அடுத்ததுதான் ஆன்மிகம்' என்று விளக்கினார். 'தேசம் குடிசையில் இருக்கிறது. அந்தக் குடிசைவாழ்

மக்களுக்கு எவரும் எதுவும் செய்யவில்லையே' என்று ஏங்கினார்.

தரித்திர தேவோ பவ

'எல்லாவற்றிலும் முதற் பங்கு ஏழை எளியவர்களுக்குத்தான் தரப்பட வேண்டும். அவ்விதம் தந்தது போக எஞ்சியிருப்பதைப் பெறவே நமக்கு உரிமை உண்டு. முதலில் நம்மைச் சுற்றி இருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுங்கள்' என்ற விவேகானந்தர், 'உலக நன்மைக்காக சொல், செயல், சிந்தனை முழுவதையும் தியாகம் செய்துவிட வேண்டும். மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ (உன் தாயைத் தெய்வமாகக் கருது, உன் தந்தையைத் தெய்வமாகக் கருது) என்று நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஆனால், நான் தரித்திர தேவோ பவ! மூர்க்க தேவோ பவ! என்று கூறுகிறேன். ஏழை, மூர்க்கன், அஞ்ஞானி, துன்பப்படுபவன் ஆகியோர் உங்களுடைய தெய்வங்களாக இருக்கட்டும். இவர்களுக்குச் செய்யும் தொண்டுதான் மிகவும் தலைசிறந்த ஆன்மிகம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்' என்று ஆன்மிகத்தின் ஆழ்ந்த அர்த்தத்தை அனைவருக்கும் அறிவுறுத்தினார்.

'எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ, அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர் அனைவரும் துராத்மாக்களே ஆவர். நான் தத்துவ ஞானியோ, ஆத்ம ஞானியோ இல்லை. நான் ஏழை, ஏழைகளை நேசிக்கிறேன். அவ்வளவுதான்' என்று நெகிழ்ந்த விவேகானந்தர் சாதி, மதங்களின் பெயரால் ஏழைகளைச் சுரண்டியவர்களைக் கடுமையாகச் சபிக்கிறார்.

www.t.me/tamilbooksworld

'புரோகிதத் தொழில் இந்தியாவைப் பிடித்திருக்கும் ஒரு சனி. தன்னுடைய சகோதரனை ஒருவன் தாழ்த்திவிட்டு, தான் மட்டும் தாழ்வடைவதிலிருந்து எவனாவது தப்பித்துக் கொள்ள முடியுமா? ஒருவன் தனக்குத் தானே தீங்கு விளைவித்துக் கொள்ளாமல் மற்றொருவனுக்குத் தீங்கு விளைவிக்க முடியுமா? பிராமணர்களும், சத்திரியர்களும் செய்த கொடுங்கோன்மை கூட்டு வட்டியோடு அவர்கள் தலையில் மறுபடியும் விழுந்திருக்கிறது. ஆயிரம் ஆண்டுகள் அடிமைத்தனமும் இழிவும்தான் அவர்கள் கர்மவினையின் பலன்' என்று சாடுகிறார் சுவாமிஜி.

மதம் என்றும், சமயமென்றும், ஆன்மிகம் என்றும் விவேகானந்தர் வெவ்வேறு பதங்களைப் பயன்படுத்தினாலும் 'அனைவரும் பரம்பொருளின் அம்சங்கள்' என்பதே அவருடைய வேதாந்தக் கொள்கை. 'எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான்' என்பதே

அவர் கண்ட அத்வைதம். இந்தியாவின் பெருமைக்கு இந்த ஆன்மிகப் பார்வையே அடிநாதம் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

சனாதனப் போர்வையில் சாதிகளின் இருப்பிடமாக மதத்தை மாற்றுவதில் அவருக்கு உடன்பாடில்லை. ‘சமயத்துறையில் சாதி என்பதே கிடையாது. சாதி என்பது வெறும் சமூக ஏற்பாடே’ என்று அவர் வெளிப்படையாக விளக்கினார்.

‘நமது நாட்டு மக்கள் நாளுக்கு நாள் தாழ்ந்து சென்று கொண்டு இருக்கிறார்கள். கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் சாபம் நம் தலை மீது இருந்து கொண்டிருக்கிறது. தெளிந்த ஆற்று நீர் அருகிலேயே இருக்கும்போது சாக்கடை நீரை நாம் அவர்களுக்குக் குடிப்பதற்குக் கொடுத்து வந்திருக்கிறோம். நிறைந்த செல்வத்தின் மத்தியிலேயே இருந்து கொண்டு கோடானுகோடி மக்களை நாம் பட்டினி போட்டு வாட்டியிருக்கிறோம். கோடிக்கணக்கான மக்களிடம் நாம் அத்வைதத்தைப் பற்றிக் கேவலம் வாயால் பேசி, மனதில் வெறுப்பை மட்டுமே கொண்டு இருந்திருக்கிறோம். லோகாசாரம் என்ற பெயரில் நமது நாட்டின் கோடானுகோடி பாமர மக்களுக்கு நாம் பெருங்கொடுமைகளை இழைத்து வந்திருக்கிறோம். அத்வைதத்தை, அதாவது நாம் அனைவரும் அந்தப் பரம்பொருளின் அம்சங்கள் என்ற கருத்தை எள்ளளவும் நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றாமல், வெறும் வாயளவில்தான் பேசி வந்திருக்கிறோம்’ (புதிய இந்தியாவைப் படைப்போம்) என்ற விவேகானந்தர் இன்றைய இந்து மதத்தின் இரண்டு பக்கங்களையும் தோலுரித்துக் காட்டினார்.

‘இந்து மதத்தைப் போல மனித குலத்தின் மேன்மையை உயர்வுபடுத்திக் கூறும் மதம் இந்தப் பூவுலகில் பிறிதொன்றில்லை. இந்து மதத்தைப் போல் இப்போது நடைமுறையில் ஏழை எளியவர்களை மிதித்து நசுக்கும் மதமும் வேறொன்றில்லை. நமது இந்து மதம் இப்போது எங்கே இருக்கிறது தெரியுமா? ‘என்னைத் தீண்டாதே’ என்பதில்தான் இருக்கிறது.வேறெங்கும் இல்லை’ என்ற விவேகானந்தரோடு பாரதியின் பார்வை வர்ணம், சாதி, மதம் ஆகியவற்றில் பெருமளவு ஒன்றிப் போகிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

நாத்திகவாதம்

‘சாதி மதங்களைப் பாரோம்’ என்ற பாரதி அடிப்படையில் இந்து

www.t.me/tamilbooksworld

மதத்தின் மீது ஆழமான பிடிப்புள்ளவர். ஆனால், சமயநல்லிணக்கத்தை அவர் வாழ்வில் இறுதிவரை கடைப்பிடித்தார். ‘வருங்கால இந்தியாவை நிர்மாணிப்பதில் முதல் காரியம் சமய ஒற்றுமையே’ என்பது விவேகானந்தரின் வாக்குமூலம். உலகில் எத்தனை மதங்கள் உள்ளனவோ, அவையனைத்தும் அழிவற்ற ஒரே சனாதன மதத்தின் வெவ்வேறு வடிவங்களே என்று கண்டு, அனைத்து மதத்தினருக்கும் இடையில் நல்லுறவை நிலைநிறுத்துவதே ராமகிருஷ்ண பரமஹம்சரின் நோக்கம்.

‘பித்த மதங்களிலே தடுமாறிப் பெருமை அழிவீரோ’ என்ற பாரதி நாத்திகனில்லை. இளம் பருவத்தில் பாரதிக்கு நாத்திகச் சிந்தனை இருந்ததாக அவன் மனைவி செல்லம்மா பாரதி, பாரதியார் சரித்திரத்தில் பதிவு செய்கிறார். ‘காளைப் பருவமானதாலும், பண்படாத சுதந்திர வீறு படைத்த மனமாகையாலும் அவருக்கு நாத்திக வாதத்தில் பற்றுண்டாயிற்று. அதைப் பற்றிய நூல்களை வாசிக்கலானார்’ என்று செல்லம்மா குறிப்பிட்டாலும் பாரதியின் சிந்தையில் நெடிது நாள் நாத்திகம் ஆதிக்கம் செலுத்தவில்லை.

தன்னுடைய சுயசரிதையில், ‘பொய்மைசேர் மதியினிற் புலை நாத்திகம் கூறுவர்’ என்று நாத்திகவாதத்தைக் கடுமையாக விமர்சிக்கிறான் கவிஞன். விவேகானந்தரும் தன் இளமைக் காலத்தில் நாத்திகவாதத்தில் மனதைப் பறிகொடுத்தார். உருவமற்ற பரம்பொருளைப் பற்றிய பிரக்ஞை இருவருக்கும் இருந்தது. ஆனால், இருவரும் உருவ வழிபாட்டை எதிர்க்கவில்லை. உருவ வழிபாடு ‘கீழ்நிலை பக்தி’ என்று விவேகானந்தரால் வர்ணிக்கப்பட்டாலும், அதை அவர் ஆதரிக்கவே செய்தார்.

www.t.me/tamilbooksworld

‘உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாத நான் இறுதியில் உருவ வழிபாட்டிலேயே உள்ளம் தோய்ந்து நின்ற ராமகிருஷ்ணரையே என் குருவாக ஏற்றுக்கொண்டேன்’ என்ற விவேகானந்தர் உருவ வழிபாட்டை எதிர்த்தவர்களுக்கு உரிய முறையில் விளக்கம் தர முயன்றார். அதற்காக அவர் இந்து மதத்தில் அடர்ந்து படர்ந்து கிடந்த மூடநம்பிக்கைகளை அங்கீகரிக்கவில்லை.

‘மூடநம்பிக்கைகளை உடைய முட்டாள்களாக இருப்பதைவிட நீங்கள் நாத்திகர்களாக இருப்பதையே நான் விரும்புகிறேன். ஏனென்றால் நாத்திகனிடம் உயிர்த்துடிப்பு இருக்கிறது. அவனிடம் நீங்கள் ஏதாவது நல்லதை உருவாக்க முடியும். ஆனால், மூடநம்பிக்கை மட்டும் நுழைந்துவிடுமானால் சிந்திக்கும் திறன் போய்விடுகிறது, மூளை

மழுங்கிவிடுகிறது. வாழ்க்கை சீரழிவுப் பாதையில் போக ஆரம்பித்துவிடுகிறது' என்று அவர் விளக்கம் தந்தார்.

மூடபக்திகளுக்கு கணக்கு வழக்கில்லை

'சுத்த அறிவே சிவம்' என்று எண்ணிய பாரதி, மூட நம்பிக்கைகளின் முடைநாற்றத்தை மனித மனங்களிலிருந்து முற்றாக அகற்ற முனைப்பாகப் போராடியவன். இந்து மதப் பற்றாளனாக இருந்த பாரதி சமயத்தையும் சடங்குகளையும் பிரித்துப் பார்த்தான். சடங்குகளே சமயமாகிவிட்ட கொடுமையை அவன் பழித்தான்.

'நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடைபெறும் மூடபக்திகளுக்கு கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும், விவகாரங்களுக்கும் ஏற்படும் விக்கினங்களுக்கு எல்லையில்லை.

இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செய்கைகளுக்கும் நாள், நட்சத்திரம், லக்னம் முதலியன பார்த்தல், சவரம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றால், அதற்குக்கூட நம்மவர் மாசப் பொருத்தம், பட்சப் பொருத்தம், திதிப் பொருத்தம், நாள் பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது' (மூடபக்தி) என்கிறான்.

www.t.me/tamilbooksworld

கல்வி அறிவு வந்து சேர்ந்தால் இந்த மூடநம்பிக்கைகள் ஓரளவு விலகக் கூடும் என்று சிந்தித்த பாரதி, தன் சமகாலத்து அறிவு ஜீவிகளிடமும் மூடநம்பிக்கைகள் ஆழமாக வேரூன்றியிருப்பதை நினைந்து வருந்துகிறான். 'சென்ற நூறு வருஷங்களாக இந்த நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூடபக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை' என்று எழுதுகிறான்.

இன்றும் படித்தோரிடையே மூடநம்பிக்கைகள் மதத்தின் துணையோடு வலிமையாகப் படிந்து கிடக்கின்றன.

பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்

பொய்மை யாகிப் புழுவென மடிவர்

என்று பாடும் பாரதி,

சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்

சகுன மந்திரத் தாலி மணி யெலாம்

யாத்தெனைக் கொலை செய்தன ரல்லது

யாது தர்ம முறையெனல் காட்டிலர் (சுயசரிதை)

- என்று பேசுகிறான்.

மாயாவாதம் மண்ணுக்குத் தேவையில்லை

‘பிரும்மம் சத்யா; ஜகத் மித்யா’ என்பது சங்கரரின் கோட்பாடு. ‘பரம்பொருள் ஒன்றுதான் அழியாத உண்மை. மற்ற அனைத்தும் அழியக் கூடியவை. அவை நிலைத்திருப்பதுபோல் தோற்றம் தருவது வெறும் மாயை. இந்த உலகம் பொய். நாம் வாழும் வாழ்க்கை பொய். மாயையிலிருந்து விடுபடுவதே முக்தி’ என்பது சங்கரரின் சித்தாந்தம். இது புத்த மதக் கோட்பாட்டுக்கு நெருக்கமானது என்பதால் சங்கரரின் அத்வைதம் ‘பிரசன்ன பௌத்தம்’ என்று வைணவர்களால் அழைக்கப்பட்டது. அத்வைதத்தை ஏற்றுக்கொண்ட விவேகானந்தர் உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்ட வேதாந்தத்தை விரித்துரைத்தவர். உலக வாழ்க்கை பொய் என்று புறம்தள்ளாதவர். பாரதி இந்த மாயாவாதத்தை மிகவும் வன்மையாக எதிர்த்து எழுத்துப் போர் நடத்தியவன்.

www.t.me/tamilbooksworld

‘தங்கச்சிலை போலே நிற்கிறாள் மனைவி. நமது துயரத்தின் போதெல்லாம் கண்ணீர் விட்டாள். இன்பத்தின் போதெல்லாம் உடல் பூரித்தாள். அவள் பொய்யோ? பெற்றோரைக் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யோ? தேள் பொய்யென்றால் அது கொட்டினால் வலிக்கிறதே அது பொய்யோ?’ என்று கேள்விக்கணை தொடுக்கும் பாரதி தன்னுடைய தனித்துவம் மிக்க அமரப்படைப்பான ‘ஞான ரதத்’தில் கந்தர்வலோகத்துப் பர்வதகுமாரியின் வாய்மொழியாக, ‘போகநிலை நன்றாக உணர்ந்தவர்களுக்கு அத்வைத ஞானம் இயற்கையிலேயே உண்டாகும். போகமறியாதவர்கள் பேசும் அத்வைதம் பொய். உங்கள் மண்ணுலகத்திலே அந்த ஞான நடிப்பு மிகுதியாக உண்டு’ என்று எழுதிச் செல்கிறான். ‘உலகம் பொய். வாழ்வு பொய். இல்லற இன்பம் பொய்’ என்று பேசுவது ‘ஞான நடிப்பு’ என்கிறான் மகாகவி.

மாயாவாதம் உழைப்பை மறுதலிக்கும்; சோம்பலை வளர்க்கும்; சோம்பேறிகளைச் சாமியார்கள் போர்வையில் சுற்றச் செய்யும் என்ற

உண்மைதான் மானுடம் பாடிய மகாகவிஞனை மாயாவாதத்தை எதிர்க்கச் செய்தது.

‘புத்தமதம் இழைத்த பெருந்தீங்கு யாதெனிலோ, இடைக்காலத்து மாயாவாதத்தை நம்முள்ளே எழுப்பிவிட்டது. உபநிஷத்துகளிலும் வேதத்திலும் ‘மாயா’ என்ற சொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக் காலத்தில் மாயை பொய்யென்றதொரு வாதம் உண்டாயிற்று. இதனால் ஜகத் பொய்; தேவர்கள் பொய்; சூர்ய நட்சத்திரங்கள் பொய்; பஞ்சபூதம் பொய்; பஞ்சேந்திரியம் பொய்; மனம் பொய்; சைதந்யம் மாத்திரம் மெய். ஆதலால், இந்த உலகத்துக் கடமைகளெல்லாம் எறிந்துவிடத் தக்கன. இதன் இன்பங்கள் எல்லாம் துறந்துவிடத் தக்கன என்றதொரு வாதம் எழுந்தது. இவ்வுலக இன்பங்களெல்லாம் அசாசுவதம்; துன்பங்கள் சாசுவதம். இத்தகைய உலகத்தில் நாம் எந்த இன்பங்களையும் தேடப் புகுதல் மடமையாகும். எனவே, எந்தக் கடமைகளையுஞ் செய்யப் புகுதல் வீண் சிரமமாகும் என்ற கட்சி ஏற்பட்டது’ என்று பகவத் கீதை முன்னுரையில் தன் மாயாவாத எதிர்ப்பைத் தெளிவுபடுத்தும் பாரதி உலக இன்பங்களைத் துறப்பது எளிதன்று என்கிறான்.

www.t.me/tamilbooksworld

‘இவர்கள் எல்லா இன்பங்களையும் துறந்துவிட்டதாக நடிக்கிறார்களேயன்றி, இவர்கள் அங்ஙனம் உண்மையில் துறக்கவில்லை. இந்த உலகத்தில் ஜீவர்கள் எல்லா இன்பங்களையும் துறப்பது சாத்யமுமில்லை. கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம்பேறிகளாகத் திரிதல் சாத்யம்; அது மிக சுலபமுங்கூட. இந்தச் சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய சுகமாகக் கருதியே அனேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. இவர்கள் கடமைகளைத் துறந்தனரேயன்றி இன்பங்களைத் துறக்கவில்லை’ என்று தெளிவாக விளக்கும் பாரதி, வாழ்வையே துறந்துவிட்டதாக நடிப்பவர்களுக்கு எதிராக மிகச் சரியான வாதத்தை வைக்கிறான்.

‘உணவின்பத்தைத் துறந்துவிட்டார்களா? சோறில்லாவிட்டால் உயிர்போய்விடுமே என்றால், அப்போது நீங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தொழில் செய்து ஜீவிக்க வேண்டும். ஆடையின்பத்தை இவர்கள் துறக்கவில்லை; ஸ்நான இன்பத்தைத் துறக்கவில்லை; புகழின்பத்தைத் துறக்கவில்லை; உயிரின்பத்தைத் துறக்கவில்லை; வாதின்பத்தைத் துறக்கவில்லை; அவர்களில் முக்கியஸ்தர்களாகிய மடாதிபதிகள் பணவின்பத்தையும் துறக்கவில்லை’ என்று பொய்மை மாயாவாதிகளின் போலி வேதாந்த முகத்திரையைத் தன் கூர்மையான விமர்சனக் கத்தியால் கிழித்தெறிகிறான் பாரதி.

‘பொய்யோ மெய்யோ?’ என்ற அவனுடைய கவிதை ஒன்றே போதும் மாயாவாதத்தின் ஆணிவேரை அறுத்தெறிய!

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே

நீங்களெல்லாம்

சொற்பனந் தானோ? - பல

தோற்ற மயக்கங்களோ?

கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே

நீங்க ளெல்லாம்

அற்ப மாயைகளோ? உம்முள்

ஆழ்ந்த பொருளில்லையோ?

- என்று கேட்கிறான் கவிஞன். நிற்பதும், நடப்பதும், பறப்பதும் கனவா? கற்பதும், கேட்பதும், கருதுவதும் பொய்யா? சிந்தையில் தெளிவுள்ளவர்களுக்கு இந்தக் கேள்விகளுக்குள் புதைந்திருக்கும் நியாயம் புரியும்.

www.t.me/tamilbooksworld

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே

நீங்க ளெல்லாம்

கானலி னீரோ? - வெறுங்

காட்சிப் பிழைதானோ?

போனதெல்லாம் கனவினைப்போற்

புதைந்தழிந்தே போனதனால்

நானுமோர் கனவோ? - இந்த

ஞாலமும் பொய்தானோ?

- என்று இயற்கையின் பல்வேறு வடிவங்களைக் கானல் நீராக,

காட்சிப் பிழையாகப் பொய்யுரைத்து, மானிட வாழ்வையும், பிரபஞ்ச தரிசனத்தையும் மாயத் தோற்றங்களாக நிறுவ முயலும் மதங்களை ஏற்க மறுக்கும் மகாகவி,

காண்பதுவே யுண்மை கண்டாய்

காண்பதல்லா லுறுதியில்லை

காண்பது சக்தியாம் - இந்தக்

காட்சி நித்தியமாம்

- என்று சத்தியம் செய்து மாயாவாதம் என்ற அழுகுணிச் சித்தாந்தத்துக்குச் சாவுமணி அடிக்கிறான்.

இல்லறமா? துறவறமா?

மனித வாழ்க்கையில் இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா? என்ற கேள்வி நீண்ட நெடுங்காலமாகவே இந்த மண்ணில் இருந்து வருகிறது. வள்ளுவர் முதல் விவேகானந்தர் வரை துறவின் பெருமையைப் புகழ்ந்து போற்றினாலும், இல்லறத்தை இழித்துப் பழிக்கவில்லை. பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற மூன்று வாழ்க்கை நிலைகளுக்கும் இல்லறமே உறுதுணையாகிறது என்ற பொருளில்,

www.t.me/tamilbooksworld

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை (இல்வாழ்க்கை)

- என்று வள்ளுவம் வழங்குகிறது. சனாதன தர்மத்தை எள்ளளவும் ஏற்க மறுப்பவர்கள் ‘இயல்புடைய மூவர்க்கும்’ என்று பெற்றோர், மனைவி, மக்களையே வள்ளுவர் குறிப்பிடுகிறார் என்று பொருளுரைப்பதும் உண்டு.

‘இல்லறத்தானாக விரும்பினால் உன் வாழ்வை மற்றவர் நன்மைக்காக ஒரு பலியாக அர்ப்பித்து விடு. துறவு வாழ்வைத் தேர்ந்தெடுத்தால் அழகையோ, பணத்தையோ, பதவியையோ ஏறெடுத்தும் பார்க்காதே. அவரவர் நிலையில் அவரவர் பெரியவரே’ என்பது விவேகானந்தரின் வாக்கு.

ஆனால், இல்லறம் துறந்து துறவு நெறியை மேற்கொள்ளும்

மனிதர்களை பாரதி மதிக்கவில்லை.

‘பெண்டு பிள்ளைகளைத் துறந்துவிட்ட மாத்திரத்தாலேயே ஒருவன் முக்திக்குத் தகுதி உடையவனாகிவிட மாட்டான். பெண்டு பிள்ளைகளையும், சுற்றத்தாரையும், இனத்தாரையும், நாட்டாரையும் துறந்து செல்பவன் கடவுளுடைய இயற்கை விதிகளைத் துறந்து செல்லுகிறான். ஜனசமூக வாழ்க்கையைத் துறந்து செல்வோன் வலியில்லாமையால் அங்ஙனம் செய்கிறான். குடும்பத்தை விடுவோன் கடவுளைத் துறக்க முயற்சி பண்ணுகிறான்’ என்று எழுதிச் செல்லும் பாரதி, இல்லறத்தைத் துறப்பவன் இறைவனையே துறப்பதாக ஓர் புதிய சிந்தனையை வெளிப்படுத்துகிறான்.

‘ஒருவனுக்கு மனைத்துறவைக் காட்டிலும் அதிகத் துன்பம் விளைவிக்கத்தக்க செய்கை வேறொன்றுமில்லை. இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை. கற்புடைய மனைவியுடன் காதலுற்று, அறம் பிறழாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் ஸ்வர்க்க வாழ்க்கைக்கு ஒப்பானதாகும். ஒருவனுக்குத் தன் வீடே சிறந்த வாசஸ்தலம்; மலையன்று. வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமையில்லாதவன் மலைச் சிகரத்தையடுத்ததொரு முழையிலே கடவுளைக் காண மாட்டான். கடவுள் எங்கிருக்கிறார்? எங்கும் இருக்கிறார். மலைச் சிகரத்திலே மாத்திரமா இருக்கிறார்? வீட்டிலும் இருக்கத்தான் செய்கிறார்’ என்று இல்லறத்தின் மேன்மையை நிலைநிறுத்துகிறான்.

www.t.me/tamilbooksworld

வேதகாலத்திலேயே துறவு கொண்டாடப்பட்டதாக விவேகானந்தர் கூறுவதை பாரதி புறந்தள்ளிவிடுகிறான். வேதங்களை விட உபநிடதங்களையே ஆழமாகப் பயின்ற விவேகானந்தருக்கு வேதரிஷிகளைப் பற்றித் தெரியவில்லை என்கிறான். ‘விவேகானந்தரின் அறிவுக்கு எல்லையே இல்லை’ என்று வியந்து புகழ்ந்துரைக்கும் பாரதி, யாரையும் எல்லா நிலைகளிலும் கண்மூடிப் பின்பற்றும் மூட பக்தனில்லை என்பதை உணர்த்திவிடுகிறான்.

‘வேதகாலத்தில் இந்தத் துறவு வழி இந்துக்களுக்குள்ளே கிடையாது. வேதகாலத்தில் சந்நியாசம் நமக்குள்ளே இருந்திருப்பதாக சுவாமி-விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர் முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்துகொண்டு, மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர்... புலன்களை அடக்கியாளும் பொருட்டாக, அக்காலத்து ரிஷிகள் பிரமசாரிகளாக இருந்து நெடுங்காலம் பலவகைக் கடுந் தவங்கள் செய்ததுண்டு. ஆனால், குறிப்பிட்ட காலம் வரை தவங்கள் செய்து முடித்துப் பின்பு

இல்வாழ்க்கையுட் புகுதலே மகரிஷிகளுக்குள் வழக்கமாக நடைபெற்று வந்தது. மகாபாரதத்திலும், மற்றைப் பூர்வ புராணங்களிலும் வேதரிஷிகளைப் பற்றிய கதைகளும் சரித்திரங்களும் ஒரே சித்தாந்தமாக வேதரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலைநிறுத்துகின்றன. மேலும், சுவாமி விவேகானந்தர் வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உபநிஷத்துகளையே முக்கியமாகப் பயின்றவர்' என்பது பாரதி தரும் விளக்கம்.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்

எங்கள் இறைவா!

- என்று இன்பம் ததும்பும் உலக வாழ்க்கையை ஈடுபாட்டுடன் ரசித்த கவிஞன் துறவுக்கு முக்கியத்துவம் தந்த புத்தரையும், அவருடைய போதனைகளையும்கூட விமர்சிக்காமல் விட்டுவிடவில்லை.

'பாரத தேசத்தில் புத்தமதம் ஜீவகாருண்யம், சர்வஜன சமத்துவம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படி செய்தது. ஆனால், உலக வாழ்க்கையில் ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மேலோர் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கி வைத்து, உலகமெல்லாம் பொய்மயம் என்றும், துக்கமயம் என்றும் பிதற்றிக் கொண்டு வாழ்நாள் கழிப்பதே ஞானநெறியாக ஏற்படுத்தி, மனுஷ நாகரிகத்தை நாசம் செய்ய முயன்றதான குற்றம் புத்தமதத்துக்கு உண்டு. அதை நல்ல வேளையாக இந்தியா உதறித்தள்ளிவிட்டது' என்கிறான்.

www.t.me/tamilbooksworld

காவித் துணிவேண்டா

கற்றைச் சடைவேண்டா

பாவித்தல் போதும்

பரமநிலை யெய்துதற்கே

சாத்திரங்கள் வேண்டா

சதுமறைக ளேதுமில்லை

தோத்திரங்க ளில்லையுளந்

தொட்டுநின்றாற் போதுமடா

- என்பதுதான் பாரதியின் கொள்கை.

கிருதயுகம் எழுக...

பௌராணிக மரபுப்படி யுகங்கள் நான்கு வகைப்படும். அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் எனப்படும். முதல் யுகமாகிய கிருத யுகம் அறநெறி வழுவாத மக்களை உடையது. இந்த யுகத்தில் வாழ்பவர்க்கு வயது ஒரு லட்சம் வருடம். இடையில் எக்காரணத்தாலும் மரணம் இல்லை. பிள்ளைகள் பெற்றோரையும், மூத்தோரையும் மதித்துப்போற்றுவர். பெண்கள் கற்பிற் சிறந்து காணப்படுவர். பிறர் பொருளை எவரும் விரும்பார்; மற்றவர்க்குத் துன்பம் செய்யார்; செய்த உதவியை மறவார்; நோயினால் துன்புறார்; கல்வி, கொடை, தெய்வபக்தியில் சிறந்து விளங்குவர். மாதம் மும்மாரி தவறாது பொழியும். பூமியோ முயற்சியின்றியே விளைச்சலைத் தரும். வேதியர் வேதவேள்வி புரிவர். அரசர்கள் முறை தவறாது ஆட்சி செய்வர். வணிகர் அறநெறிப்படிப் பொருளைத் தேடி நல்வழியில் பயன்படுத்துவர். சூத்திரர் உழுது பயிரிட்டு, அநீதிகளையோம்பி அறம் புரிந்து வாழ்வர். வருணப் பிரிவுகள் நான்கு மட்டுமே இருக்கும். அவற்றுள் வேற்றுமை இருக்காது.

www.t.me/tamilbooksworld

திரேதாயுகத்தில் அறம் கொஞ்சம் குன்றும். தீமை துளிர்விடும். துவாபரயுகத்தில் நன்மையும் தீமையும் சேர்ந்து காணப்படும். அறத்தின் வலிமை குறையும். கலியுகத்தில் தீமை தலைநிமிர்ந்து நிற்கும். மனிதர்க்கு ஆயுள் நூறு ஆண்டு. எந்த நிலையிலும் இறப்பு உண்டு. மனிதர்கள் கருணையும், நல்லறிவும் இழப்பர்; சினவயப்படுவர்; மூத்தோர்சொல் கேளார்; தவம் விரும்பார்; பிறர் பொருளை நாடுவர்; ஒழுக்கம் இழப்பர்; கற்புடைமங்கையின் கற்பைக் குலைப்பர்; நன்றி மறப்பர்; விருந்தோம்பல் கைவிடுவர்; பொய், கொலை, களவு, பொறாமை, மதம், காமம் போன்றவற்றில் ஆழ்ந்து நற்செயல்களைத் துறப்பர். பெண்கள் அச்சம், மடம், நாணம் போற்றார்; பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் பாசத்துடன் பேணார். பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திர வருணங்கள் கெட்டுக் கலப்புறும். ஆட்சி கெட்டு மக்கள் கலகத்தால் இறப்பர். புன்மையும், சூதும் நிறைந்த இந்தக் கலியுகம் 4 லட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள் நடக்கும். கலியுகம் முடிந்து மீண்டும் கிருதயுகம் பிறக்கும். மகாபாரதப் போரின் முடிவில் கலியுகம் பிறந்தது. பௌராணிகக் கணக்கில் கலியுகம் முடிந்து 5 ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அப்படியென்றால், அறம் சிறக்கும் கிருதயுகம் மீண்டும் எழ 4

லட்சத்து 27 ஆயிரம் ஆண்டுகள் காலம் காத்திருக்க வேண்டும். ஆனால், பஞ்சாங்கக் கணக்கை பாரதி பொருட்படுத்தவில்லை. 'புதிய ஆத்திசூடி'யில் 'சோதிடம்தனை இகழ்' என்றும், 'வேதம் புதுமை செய்' என்றும் சொன்னவனல்லவா அவன்!

பொலிக! பொலிக! பொலிக!

போயிற்று வல்லுயிர்ச் சாபம்

நலியும் நரகமும் நைந்த;

நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை;

கலியும் கெடும்; கண்டு கொண்மின்

- என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலிருந்தும், புராண நம்பிக்கைகளிலிருந்தும் கிருதயுகத்தைச் சுவீகரித்துக் கொண்டவன் பாரதி என்கிறார் தொ.மு.சி.ரகுநாதன். 'மத நம்பிக்கைக்கும், புராண நம்பிக்கைக்கும் பயன்பட்டு வந்த கிருதயுகக் கருத்தை, பாரதி முதன்முதலாகத் தேசியப் போராட்டத்துக்கான அரசியல் கருத்தாகப் பயன்படுத்துகிறான். மேலும், தேச விடுதலைப் போரானது கலியுகம் மறைந்து கிருதயுகம் அருகில் வருவதற்கான ஒரு சுபசூசகமாகவும் அவனுக்குத் தோன்றுகிறது...' என்றும் ரகுநாதன் குறிப்பிடுகிறார். (பாரதியும் ஷெல்லியும் - பக். 114)

www.t.me/tamilbooksworld

பொய்க்குங் கலியை நான் கொன்று

பூலோகத்தார் கண் முன்னே

மெய்க்குங் கிருத யுகத்தினையே

கொணர்வேன் தெய்வ விதியிஃதே

- என்று சூளுரை செய்யும் கவிஞன், 'கலியின் வலியை வெல்லலாகாது' என விளம்புகின்ற மனிதர்களை 'நாசங் கூறு நாட்டு வயித்தியர்' என்று ஏளனம் செய்கிறான்.

கலியைப் பிளந்திடக் கை ஓங்கினோம்- - நெஞ்சில்

கவலை இருளணைத்தும் நீங்கினோம்

- என்ற பாரதியின் கூற்றில் ‘கலியை வெல்லலாகும்’ என்ற நம்பிக்கை சுடர்விடுகிறது.

...துயர்கள் தொலைந்திடுக!

தொலையா இன்பம் விளைந்திடுக!

வீழ்க கலியின் வலியெல்லாம்!

கிருத யுகம்தான் மேவுகவே!

- என்று ‘விநாயகர் நான்மணிமாலை’யில் தன் கிருதயுகம் காணும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறான்.

பாரதி விரும்பும் கிருதயுகம்தான் எது? அவனுடைய விருப்பப்படி அது எப்போது வந்து சேரும்? புராணங்களும் பஞ்சாங்கமும் சொல்வதுபோல் அறத்தின் ஆட்சி நடக்கும் கிருதயுகம் சக்கர சுழற்சியில் 4 லட்சத்து 27 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்புதான் வாய்க்குமா? சாத்திரங்கள் விதித்த விதிப்படிதான் சகலமும் நடக்கும் என்று பாரதி நம்புகிறானா? மதநம்பிக்கை அவனுள் மூடநம்பிக்கையாக முகிழ்க்கிறதா? இதோ... பாரதியே பதில் சொல்கிறான்:

www.t.me/tamilbooksworld

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.

தமிழ் மக்களிலே பலருக்கு ஜ்வரம் உண்டாகிறது

நாள்தோறும் சிலர் இறந்து போகிறார்கள்.

மிஞ்சியிருக்கும் மூடர் ‘விதிவசம்’ என்கிறார்கள்.

ஆமடா, விதிவசந்தான்.

அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது

ஈசனுடைய விதி...

உண்மையான சாஸ்த்ரங்களை வளர்க்காமல்

இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத்

தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை

மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்களே (காட்சி-காற்று)

கலியுகம் நீங்கி, கிருதயுகம் பிறப்பதற்கு மகாகவி மண்ணில் ‘மனிதம்’ செழிக்க வேண்டும் என்கிறான். இங்கே பாரதி மதம் பேசவில்லை; மனிதம் பேசுகிறான். வேறு எவனும் பேசாததைப் பேசுகிறான். யாரும் கண்டறியாத கிருதயுகத்தை நம் கண்முன்னே காட்டுகிறான்.

‘பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ அதுவரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினாற் கலி இல்லை. உலகம் முழுதும் கலி இல்லை. ‘உலகம் முழுதும் அநியாயத்தை விட்டுச் சமீப காலத்தில் நீங்குமென்று நினைக்க ஏதும் இல்லை. ஆதலால், கிருதயுகம் வரப்போவதில்லை. நாம் மாத்திரம் ஏன் நியாயம் செய்ய வேண்டும்?’ என்று விபரீதமாக யோசித்து எவனும் தான் நடக்கும் அநியாய வழியிலே தொடர்ந்து செல்லக்கூடாது . எவன் அநியாயத்தை விடுகிறானோ, அவனுக்குக் கிருதயுகம் அந்த க்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் சந்தேகம் இல்லை’ (பாரதியார் கட்டுரைகள் - ‘இனி’)

www.t.me/tamilbooksworld

‘நான் கிருதயுகத்தை ஆக்ஞாபிக்கிறேன். ஆதலால், கிருதயுகம் வருகிறது. எந்த ஜந்துவும் வேறு எந்த ஜந்துவையும் இம்சை பண்ணாமலும், எல்லா ஜந்துக்களும் மற்றெல்லா ஜந்துக்களையும் தேவதாரூபமாகக் கண்டு வணங்கும் படிக்கும் விதியுண்டானால் அதுதான் கிருதயுகம். அதை நான் செய்வேன்’ (‘சும்மா’ - பாரதியார் கதைகள்)

‘ஏழை பாடு எப்போதும் கஷ்டம். பணக்காரனுக்குப் பலவித சௌக்கியங்களுண்டு. கோயில் காத்தவனுக்குப் பஞ்சமில்லை. சாமிகள் முக்கால்வாசிக்குக் குறையாமல் பாதி கல்; பாதி சாமி. முழுச்சாமி இருந்து கோயில் நடத்தினால் உடனே கிருதயுகம் பிறந்து விடாதா?’ (பழைய உலகம் - சமூகம்) என்று கட்டுரையிலும், கதையிலும், கவிதையிலும் கிருதயுகக் கனவை விதைப்பவன் அது மரமாக வளர்வதற்கு மனிதப் பண்புகள் சிறக்க வேண்டும் என்கிறான். ‘மனிதர் நோக மனிதர் பார்க்கும்’ வழக்கம் இல்லாத வாழ்க்கைதான் கிருதயுகத்தின் தோரண வாயில் என்று சுட்டிக் காட்டுகிறான்.

நல்ல குணங்களே நம்மிடை அமரர்

பதங்களாம், கண்டீர், பாரிடை மக்களே!

கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த

விரதம் நான் கொண்டனன்

(விநாயகர் நான்மணி மாலை)

- என்று பிரகடனம் செய்யும் பாரதியின் கிருதயுகம் மனிதரின் உயர்பண்புகளின் மீதுள்ள நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு எழுந்து நிற்கும் லட்சியக் கோபுரமேயன்றி மதத்தை மையமாகக் கொண்டது அன்று.

'ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால், அவனைப் பார்த்துப் பத்துப் பேர் உடனே நொறுக்கி விடுவார்கள். இங்ஙனம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடியாக மனித சாதியில் சத்யயுகம் பரவுதலடையும் காலம் ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது. இதில் சந்தேகமில்லை' ('இனி' - தத்துவம்) என்று சொல்லும் பாரதிக்கு இந்த மனிதர்கள் மேல்தான் எவ்வளவு நம்பிக்கை! பாரதியின் கிருதயுகம் அன்பு சார்ந்தது. அன்புதான் மதமென்றால் அந்த மதம் தான் பாரதியின் மதம்.

www.t.me/tamilbooksworld

பாரதியின் கடவுள் கொள்கை

வேதங்களையும், உபநிடதங்களையும் ஆழமாக உள்வாங்கி, அவை தந்த சிந்தனையின் அடிப்படையில் பரம்பொருளைப் பற்றிய உண்மையை உணர்ந்தவன் பாரதி. உருவ வழிபாட்டை பாரதி ஏற்றுக்கொண்டாலும், உருவமற்றது பரம்பொருள் என்ற புரிதல் அவனுக்குள் இருந்தது. பாரதியின் கடவுள் கொள்கையை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்க்கு அவன் பலவிடங்களில் முன்னுக்குப் பின் முரண்படுவது போலத் தோன்றும். கடவுள் உண்டு என்பதில் அவனுக்கு ஆழமான நம்பிக்கை இருந்தது.

உயிர்களிடத்தி லன்பு வேணும் - தெய்வம்

உண்மை யென்று தானறிதல் வேணும்

- என்று பாப்பாவுக்குப் பாடம் போதிப்பவன் பாரதி.

தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு

தீங்குவர மாட்டாது பாப்பா

- என்று சொல்வதன் மூலம் தெய்வத்தின் துணையிருந்தால் தீங்கொன்றும் நேராது என்று அனைவருக்கும் அவன் அறிவுறுத்துகிறான்.

'தமிழருக்கு' எழுதிய கட்டுரையில், 'தமிழா, தெய்வத்தை நம்பு, பயப்படாதே, உனக்கு நல்ல காலம் வருகிறது' என்று கட்டியங் கூறுகிறான். 'நம்பிக்கை' என்ற கட்டுரையில், 'பக்தியாவது தெய்வத்தை நம்புதல்; குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தை நம்ப வேண்டும்... தெய்வம் கொடுக்காவிட்டாலும் அதை நம்ப வேண்டும்' என்று உறுதிபடச் சொல்கிறான்.

அழியாத அஜந்தா ஓவியமாக தமிழுக்கு அவன் தந்த 'ஞானரத'த்தில் கந்தர்வலோகப் பர்வதகுமாரி தன்னிடம், 'தோழா, மனங்கொண்டது தெய்வம். நீ எந்த வடிவத்திலே தெய்வத்தை வணங்குகிறாயோ, தெய்வம் உனக்கு அந்த வடிவமாக வந்து அருள் செய்கின்றது. தெய்வமென்பது யாது? தெய்வமென்பது ஆதர்சம்; தெய்வமென்பது சித்த லட்சியம். தெய்வமென்பது உண்மை. தெய்வமென்பது வனப்பு' என்று கூறுவதாகக் கடவுள் கருத்தைப் பதிவு செய்கிறான். நவதந்திரக் கதைகளுள் ஒன்றான 'தட்டிக்கொண்டான் செட்டி' கதையில் 'தெய்வ பக்திக்கு நல்ல பயனுண்டு. ஆனால், அதனுடன் விவேகம் சேர்ந்திருக்க வேண்டும்' என்று விளக்குகிறான்.

www.t.me/tamilbooksworld

பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி

பூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம்

- என்று இறைவனிடம் ஆட்படுதலை வாழ்வின் முக்கிய நோக்கமாக அறிவிக்கும் மகாகவி,

பக்தியினாலே - இந்தப்

பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி

சித்தந் தெளியும் - இங்கு

செய்கை யனைத்திலுஞ் செம்மை பிறந்திடும்

வித்தைகள் சேரும் - நல்ல

வீர ருறவு கிடைக்கு மனத்திடைத்

தத்துவ முண்டாம் - நெஞ்சில்

சஞ்சல நீங்கி யுறுதி விளங்கிடும்

- என்று பக்தியினால் மனிதர்க்கு ஏற்படும் பயன்களைப் பட்டியலிடுகிறான்.

உருவ வழிபாடு ஏன்?

‘கடவுளைக் கல்லிலும் தொழலாம்; பதுமையிலும் தொழலாம்; அந்த சர்வமாகிய கடவுளைப் பெண்ணிலும் தொழலாம்; ஆணிலும் தொழலாம்’ என்று பதஞ்சலி யோக சூத்திரத்துக்கு எழுதிய உரையில் பாரதி உருவ வழிபாட்டை வரவேற்கிறான். கோயிலின் அவசியத்தையும் அவன் அங்கீகரிக்கிறான்.

‘கடவுள் எங்கும் இருக்கிறாரே. எல்லாம் கடவுள் தானே. ஊருக்கு நடுவில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு. அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிடவேண்டும் என்ற நியமம் எதற்காக? என்றால், ஜனங்களுக்குள் ஐக்யம் ஏற்படுத்துவதற்காக... ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டு, தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடம் உண்டாகுமென்று கருதி முன்னோர் கோயில் வகுத்தார்கள். ஊரொற்றுமை கோயிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலைவைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக!’ (பாரதியார் கட்டுரைகள் - ‘இனி’) என்ற பாரதியின் கருத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

www.t.me/tamilbooksworld

மூர்த்தி, தீர்த்தம், தலத்தின் பெருமை, சக்தி குறித்து சனாதன மொழியில் பாரதி பேசவில்லை. ஆகமவிதிப்படி அமைக்கப்பட்ட ஆலயத்தில்தான் ஆண்டவன் இருந்து இன்னருள்புரிவான் என்று அவன் சொல்லவில்லை. எல்லா மனிதர்களும் ஓரிடத்தில் கூடித் தொழுவதால் ஆன்மவொருமை ஏற்படும் என்பது அவனுடைய சமூகநலன் சார்ந்த சிந்தனை. ஒற்றுமையினும் மேலான ஒருமையை நோக்கி உயிர்கள் நடக்க ஆலயம் வழியமைக்கும் என்பது அவனுடைய நம்பிக்கை.

உருவ வழிபாட்டில்கூட அவன் குடும்ப உறவுகளைத்தான் தேடுகிறான். ‘கவனி! நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆணாகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம் உன் தாய்,

மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய். அவளைப் போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளிவீச நாம் பார்க்க வேண்டும் என்பது குறிப்பு. ஆண் தெய்வமெல்லாம் நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள்; அடைய வேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன.

சிவன் நீ; சக்தி உன் மனைவி.

விஷ்ணு நீ; லட்சுமி உன் மனைவி.

பிரம்மா நீ; சரஸ்வதி உன் மனைவி.

இதைக் காட்டி மிருக நிலையிலிருந்து மனிதரைத் தேவநிலையிற் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம். இதைப் பூசாரிகள் மறைக்கிறார்கள்' (இனி) என்று எழுதுகிறான்.

www.t.me/tamilbooksworld

'கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லது என்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது... யோக்யதை இல்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் பகவான் அந்தக் கல்லை விட்டுப் போய்விடுவார். அது மறுபடி சாதாரண ரஸ்தா உருளை ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்துவிடும்' (இனி) என்று சடங்குகளை சமயமாக்கிப் பிழைப்பு நடத்தும் மலினமான மதவாதிகளின் முகத்தில் கரி பூசுகிறான் கவிஞன்.

உபநிடதங்களின் சாரமாகிய வேதாந்தச் செய்திகளை உலகம் முழுவதும் சுமந்து சென்ற சுவாமி விவேகானந்தர் உருவ வழிபாடே உன்னதம் என்று போற்றவில்லை. அதே நேரத்தில் உருவ வழிபாட்டின் அவசியத்தையும் அவர் உணராமலில்லை.

'வழிபாடுகள் எல்லாவற்றுள்ளும் மிகத் தாழ்ந்தது உருவ வழிபாடு என்று நமது சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இது தவறல்ல; செய்யத் தகாததும் அல்ல. உருவ வழிபாட்டில் எவ்வளவோ பழக்க வழக்கங்கள் புகுந்துவிட்டன. எனினும், நான் அதைக் குறை கூறமாட்டேன்... சகோதரர்களே! புற உதவி எதுவுமின்றி, உருவ வழிபாடின்றி, நிர்குண வழிபாடு செய்யும் திறமை உங்களுக்கிருந்தால்

அவ்வாறே செய்யுங்கள். ஆனால், அவ்வாறு செய்ய முடியாதவர்களை ஏன் கண்டிக்கிறீர்கள்?' என்று கேட்கிறார் விவேகானந்தர்.

'மிகப் பழங்காலத்திலிருந்தே பெரும்பாலான மக்களுக்கு ஒரு மனிதன் தேவை என்பதை உள்ளுணர்வால் நம் மகான்கள் அறிந்திருந்தனர். அவர்களுக்கு ஏதாவது ஒரு உருவக் கடவுள் கண்டிப்பாக வேண்டும். உருவமற்ற கடவுளை முழக்கம் செய்த புத்தர் மறைந்து ஐம்பதாண்டுகள் ஆவதற்கு முன்பே அவருடைய சீடர்கள் உருவமற்ற கடவுள் கொள்கையிலிருந்து உருவமுள்ள கடவுளாக அவனையே உற்பத்தி செய்துவிட்டார்கள். உருவக் கடவுள்கள் அவசியம். அதே நேரத்தில் நல்ல உருவக் கடவுளை உருவாக்குவதை விட்டுவிட்டு உருவ வழிபாடு என்ற பெயரில் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் தகுதியற்ற மனித வழிபாடாகவே அமைந்துள்ளன' (இந்தியத் தாயின் பணிக்கு இளைஞர்களே வருக!) என்று வருந்தும் விவேகானந்தரும் பாரதியும் ஒரே நேர்க்கோட்டில் பயணம் செய்கின்றனர்.

ஒன்று பரம்பொருள்; நாமதன் மக்கள்

சரஸ்வதி தேவியின் புகழ், வேலன் பாட்டு, லட்சுமி பிரார்த்தனை, காளி காதல், நவராத்திரிப் பாட்டு, விநாயகர் நான்மணிமாலை, கண்ணன் பாட்டு, சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம் என்று ஆயிரம் வடிவங்களில் ஆண்டவனை அடையாளப்படுத்திப் பரவசத்துடன் பாடிய பாரதிக்குப் பரம்பொருள் ஒன்று என்று புரியாமல் இல்லை.

www.t.me/tamilbooksworld

'ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி' என்பது ரிக்வேதத்தின் அழியா வாசகம். 'உண்மை ஒன்றே. அது பல வடிவங்களில் அழைக்கப்படுகிறது' என்கிறது முதல் வேதம். 'பெயர்கள் வேறு. ஆனால், இருப்பது ஒன்றுதான்' என்ற இந்தச் சின்னஞ்சிறு வாக்கியத்தில்தான் இந்திய மண்ணின் ஆன்ம தரிசனம் வெளிப்படுகிறது. இதைப் பற்றிக் குறிப்பிடும்போது விவேகானந்தர்...

'இந்தக் கருத்து இந்த நாட்டின் ரத்தத்துடன் ரத்தமாக மாறும்வரை, ரத்தக் குழாய்களில் ஓடும் ஒவ்வொரு சொட்டு ரத்தத்தோடு ரத்தமாகக் கலக்கும் வரை, உயிருடன் கலந்து உயிராக மாறும் வரை, அந்த உயிர் உண்டாக்கப்பட்டிருக்கிறதே அந்தப் பொருள்களின் பகுதிகள் அனைத்திலும் பகுதிகளாக மாறும்வரை, இந்தக் கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வந்தது. அந்தக் காரணத்தால் இந்த நாடு மிகவும் ஆச்சரியகரமான பொறுமை உடைய நாடாக மாற்றப்பட்டுவிட்டது. உலகில் உள்ள எல்லாச் சமயங்களையும், சமய

உட்பிரிவுகளையும் வரவேற்கின்ற தனி உரிமையைப் பெற்றிருக்கிறது' என்று பெருமிதம் கொள்கிறார்.

'பரம்பொருள் ஒன்றே' என்ற கடவுட் சிந்தனை வேதகாலத்தில் இருந்தே தொடர்ந்திருக்கிறது என்றும், பழமையான இந்த மரபின் பார்வை இதுதான் என்றும் ராகுல சாங்கிருத்தியாயன் உறுதிப்படுத்துகிறார்.

'ரிக் வேதத்தின் பழைய மந்திரங்களில் இந்திரன், சோமன், வருணன் என்று பாடப்பட்டது. எல்லா வலிமையும் பெற்ற ஒரேயொரு கடவுளைப் போற்றும் நிலை தோன்றவில்லை. ஆனால், ரிக் வேதத்தின் கடைசி மந்திரங்களில் பல கடவுள் நம்பிக்கைக்குப் பதில் ஒரே கடவுளை நம்பும் மாற்றத்தைக் காணமுடிகிறது' (இந்து தத்துவ இயல்) என்று அவர் சொல்வது கவனத்துக்குரியது.

'பரம்பொருள் ஒன்று' என்பதுதான் வேதாந்தத்தின் உட்கருத்து, அதனால்தான், விவேகானந்தர், நீ உண்மை சிவபக்தனாக இருந்தால் சிவனை ஒவ்வொருவரிலும், ஒவ்வொன்றிலும் காண வேண்டும். எந்தப் பெயரிலும், எந்த வடிவிலும் அமைந்த கடவுளுக்குச் செய்யப்படும் ஒவ்வொரு வழிபாடும் அந்த ஒரே கடவுளுக்கே செய்யப்படுகிறது. காபாவை நோக்கி மடிகின்ற கால்கள், சர்ச்சில் முழந்தாளிடும் கால்கள், புத்தரின் கோயிலில் மண்டியிடும் கால்கள், அவர்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், உணர்ந்தாலும் உணராவிட்டாலும், எந்தெந்த வடிவங்களில் எந்தெந்தப் பெயர்களில் அவர்கள் மலர்களை அர்ச்சித்தாலும், அவை அனைத்தும் அந்த ஒரே கடவுளின் திருவடிகளில்தான் இடப்படுகின்றன. ஏனெனில், அந்த ஒருவர்தான் எல்லோருடைய கடவுள்' என்று தெளிவுபடுத்துகிறார்.

www.t.me/tamilbooksworld

விவேகானந்தரைப் போலவே வேதங்களிலும், உபநிடதங்களிலும் பாரதியும் ஆழமாக ஈடுபட்டவன்; இறைவன், பிரபஞ்சம், உடல், உயிர் அனைத்தும் ஒன்றே என்ற அத்வைதத்தின் அடிநாதம் அறிந்தவன்; அஹம் பிரம்மாஸ்மி (நானே பிரம்மம்) தத்துவமஸி (நீ அது ஆகிறாய்) சர்வம் பிரம்ம மயம் ஜகத் (உலகம் முழுதும் பிரம்ம மயம்) என்ற உபநிடதங்களின் மகாவாக்கியங்களின் உண்மைப் பொருளுணர்ந்தவன். அந்த உண்மைப் பொருளைத்தான்,

உள்ள தனைத்திலு முள்ளொளியாகி

யொளிர்ந்திடு மான்மாவே இங்கு

கொள்ளற் கரிய பிரமமென் றேமறை

கூவுதல் கேளீரோ? (அறிவே தெய்வம்)

- என்று பாட்டில் விளக்குகிறான்.

யாரும் பணிந்திடும் தெய்வம்- - பொருள்

யாவினும் நின்றிடும் தெய்வம்

பாருக்குள் ளேதெய்வ மொன்று - இதிற்

பற்பல சண்டைகள் வேண்டாம் (முரசு)

- என்று உலக மக்களுக்கு ஞானம் போதிக்கிறான்.

தெய்வம் பல பலச் சொல்லிப் - பகைத்

தீயை வளர்ப்பவர் மூடர்

www.t.me/tamilbooksworld

உய்வ தனைத்திலு மொன்றாய் - எங்கும்

ஓர் பொரு ளானது தெய்வம் (முரசு)

- என்று இறைமைக் கொள்கையை வரையறை செய்கிறான்.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி

யலையும் அறிவிலி காள் பல்

லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுண்

டாமெனில் கேளீரோ?

- என்று அறிவைத் தெய்வமென வேதங்கள் போற்றுவதாக அறிவிக்கிறான்.

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்

சுருதிகள் கேளீரோ?- - பல

பித்த மதங்களி லேதடு மாறிப்

பெருமை யழிவீரோ?

- என்று ஓங்கிக் குரல் கொடுக்கும் பாரதி 'பரம்பொருள் ஒன்று' என்று அறிந்துகொள்ளும் அறிவே 'சுத்த அறிவு' என்று சுருதிகள் கூறுவதாக விளக்கம் தருகிறான்.

தான் மரணத்தைத் தழுவுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு ஈரோடு-கருங்கல் பாளையத்திலுள்ள வாசகசாலையில் 1921 ஆகஸ்ட் முதல் வாரத்தில் 'மனிதனுக்கு மரணமில்லை' என்ற தலைப்பில் பேசியபோது 'ஒன்று பரம்பொருள்' என்ற தத்துவத்தை விளக்கினான்.

'ஓம் நமசிவாய, ஹரி ஹரி, ராம ராம, சிவ சிவ, ஓம்சக்தி என்ற மொழிகளெல்லாம் ஒரே பரம்பொருளையே குறிக்கின்றன. எல்லா மதங்களின் சாரமும் இதுதான். பூமியிலே கண்டமைந்தது மதங்கள் கோடி. யாவினுக்கும் உட்புதைந்த கருத்து ஒன்றே. ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார். எப்போதும் கருணை மனத்திசைத்துக் கொள்ள வேண்டும். பேருயர்ந்த யெஹோவா, அல்லா நாமம் பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும். பூமியிலே வழங்கிவரும் மதத்துக்கெல்லாம் ஒரே பொருள்தான். சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே; தத்வமஸி; தத்வமஸி; நீயே அக்தாம்' என்று பேசியவன் பதஞ்சலி யோக சூத்திரத்துக்கு எழுதிய உரையிலும்,

www.t.me/tamilbooksworld

பூமியிலே வழங்கி வரு மதத்துக் கெல்லாம்

பொருளினை நாமிங் கெடுத்துப் புகலக் கேளாய்

சாமி நீ, சாமி நீ, கடவு ணீயே

தத்வ மஸி, தத்வ மஸி, நீயே தெய்வம்

பூமியிலே நீ கடவு ளில்லை யென்று

புகல்வது நின் மனதுள்ளே புகுந்த மாயை

சாமி நீ, யம் மாயை தன்னை நீக்கி

ஸதா காலம் 'சிவோஹ'மென்று ஸாதிப்பாயே

- என்ற தன் பாடலை மேற்கோள் காட்டுகிறான்.

ஆதிசங்கரரின் அத்வைதம்

உபநிடதங்கள் வழங்கும் உயர்ந்த சிந்தனையே தத்வமஸி. தத்வமஸி என்றால் 'நீ அதுவாக இருக்கிறாய்' என்று பொருள். 'கடவுளும் நீயும் வேறு வேறல்ல' என்பது அதன் உட்கருத்து. பூமி, உயிர், உடல் அனைத்தும் பிரம்மத்தின் அம்சங்கள் என்ற சிந்தனை வேரிலிருந்து பழுத்ததே சங்கரரின் 'அத்வைதம்' என்ற கனி.

உயிர்களும், உயிரற்றவையும் பிரம்மத்தின் அங்கங்களே என்ற அத்வைதக் கொள்கையை (அத்வைதம் - இரண்டற்றது) உருவாக்கிய சங்கரர், வழியில் வந்த சண்டாளனை 'அப்பால் போ' என்று அதட்டியதும், சூத்திரர்கள் வேதமோத அருகதையற்றவர்கள் என்று புறக்கணித்ததும், அவர் வடித்த கொள்கையை அவரே பின்பற்றவில்லை என்பதற்கான சான்றுகளாகும். சங்கரரின் அத்வைதத்தை ஏற்றுக்கொண்ட விவேகானந்தரும் பாரதியும் அவருடைய பிராமணத்துவத்தை அங்கீகரிக்கவில்லை.

'சங்கரரின் அறிவு வாள்முனை போன்று கூர்மையானது. அவர் நல்ல சிந்தனையாளர்; பேரறிஞர்; சந்தேகமில்லை. ஆனால், அவரிடம் அவ்வளவு பரந்த நோக்கம் இல்லை. அவரது இதயமும் அப்படியே இருந்தது என்றுதான் தோன்றுகிறது. அதனுடன், தான் ஒரு பிராமணன் வேறென்ன? பிராமணன் அல்லாதவன் பிரம்மஞானம் பெற முடியாது என்பதை எவ்வளவு திறம்பட வேதாந்த சூத்திர விளக்கவுரையில் எழுதுகிறார்! என்ன சாதுரியமான வாதங்கள்! முற்பிறவியில் பிராமணராக இருந்ததால்தான் சூத்திரத் தாய்க்குப் பிறந்த விதுரர் பிரம்மஞானம் பெற்றதாகக் கூறுகிறார். சரி. இப்போது ஒரு சூத்திரன் பிரம்மஞானம் பெற்றால் சங்கரர் கருத்துப்படி அவன் போன பிறவியில் பிராமணனாக இருந்ததால்தான். அப்படித்தானே! கடவுளே! பிராமணத்துவத்தை ஏன் இப்படி இழு இழுவென்று இழுக்க வேண்டும்? (எனது சிந்தனை) என்று ஆதங்கப்படுகிறார் விவேகானந்தர்.

www.t.me/tamilbooksworld

சங்கரரின் வேற்றுமையுணர்வைச் சாடுகின்ற சுவாமி, புத்தரின் அணுகுமுறையைப் போற்றுகிறார். 'புத்தரின் இதயத்தைப் பார், அவரது கொள்கையான 'பஹுஜன ஹிதாய பஹுஜன ஸுகாய'- பலருடைய நன்மைக்காகவும், பலருடைய மகிழ்ச்சிக்காகவும்' என்பது எவ்வளவு மகத்தானது! எவ்வளவு பரந்த இதயம்! ஓர் ஆட்டுக்குட்டியின் உயிரைக் காப்பாற்றத் தமது உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த அவரது இதயத்தைப் பார்' (எனது சிந்தனை- - பக். 119) என்று நெஞ்சம் நெகிழ்கிறார்.

'பார்ப்பானும் கடவுளின் ரூபம். பறையனும் கடவுளின் ரூபம்' என்று பகவத் கீதை முன்னுரையில் பாரதி குறிப்பிடுவதுதான் உண்மையான அத்வைதம். அவனுக்கு உலகத்து உயிர், உயிரற்ற பொருள்கள் அனைத்துமே ஆண்டவனின் அம்சங்களாகவே காட்சி தந்தன. பேதமற்ற ஞானமே பாரதிய தரிசனம்.

இவ்வுலகம் ஒன்று

ஆண், பெண், மனிதர், தேவர்,

பாம்பு, பறவை, காற்று, கடல்

உயிர், இறப்பு - இவை யனைத்தும் ஒன்றே.

ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலையருவி,

குழல், கோமேதகம் - இவ் வனைத்தும் ஒன்றே.

இன்பம், துன்பம், பாட்டு,

www.t.me/tamilbooksworld

வண்ணான், குருவி,

மின்னல், பருத்தி - இஃதெல்லாம் ஒன்று.

மூடன், புலவன், இரும்பு, வெட்டுக்கிளி -

இவை ஒரு பொருள்.

வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் - -

இவை ஒரு பொருளின் பல தோற்றம்.

உள்ள தெல்லாம் ஒரே பொருள், ஒன்று.

இந்த ஒன்றின் பெயர் 'தான்' (ஆத்மா)

தானே தெய்வம்.

தான் அமுதம். இறவாதது (காட்சி - இன்பம்)

- என்று 'காட்சி' என்ற புதுக்கவிதை வடிவத்தில் கருத்தை

விதைத்தவன், அதற்கு முன்பு மரபுக் கவிதை வடிவில் அதே கருத்தை முன்வைக்கிறான்.

உயிர்களெலாந் தெய்வ மன்றிப் பிற வொன்றில்லை;

ஊர்வனவும் பறப்பனவு நேரே தெய்வம்!

பயிலு முயிர் வகைமட்டு மன்றி யிங்கு

பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வங் கண்டீர்.

வெயிலளிக்கு மிரவி, மதி, விண்மீன், மேகம்

மேலுமிங்கு பல பலவாந் தோற்றங் கொண்டே

இயலுகின்ற ஜடப்பொருள்க ளனைத்துந் தெய்வம்

எழுதுகோல் தெய்வ மிந்த எழுத்துந் தெய்வம்

(பாரதி அறுபத்தாறு)

www.t.me/tamilbooksworld

சமய நல்லிணக்கம்

‘பல பித்த மதங்களிலே தடுமாறிப் பெருமை அழிவீரோ?’ என்று பாடும் பாரதி அடிப்படையில் மதவிரோதி அல்லன். எல்லாச் சமயங்களின் உண்மைகளையும் நேசிக்கும் உள்ளம் அவனுக்கிருந்தாலும், சமயக் காழ்ப்பற்றவனாக அவன் திகழ்ந்தாலும், தந்தை வழியாக தன்னைச் சேர்ந்த இந்து மதத்தின் மீது அவனுக்குத் தனிப்பற்று இருந்தது உண்மை.

‘இந்து மதம் ஒன்று. ஆகவே வைஷ்ணவ சமயாசாரியர், சைவ சமயாசாரியர், சங்கரமடத்தார் முதலிய குருக்களெல்லாம் தமது பிரதிநிதிகள் மூலமாக ஒன்றுகூடி யோசனை செய்து, இந்துக்களுடைய ஜனத்தொகை குறையாமல் பாதுகாப்பதற்கு வழி செய்ய வேண்டும். பிற மதங்களிலிருந்து ஜனங்களை நமது கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு வழிகளென்ன என்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். தெய்வம் இந்துக்கள் மீது கடைக்கண் செலுத்திவிட்டது. நாம் கும்பிடும் சிலைகளெல்லாம் வெறும் கல்லும் செம்புமல்ல. மனிதர்களாலே சீர்படுத்த முடியாதபடி அத்தனை கெட்ட நிலைமையில் இந்துக்கள் வீழ்ந்த சமயத்தில் மேற்படி தெய்வங்கள் காப்பாற்றக் கருதி முற்பட்டு

நிற்கின்றன. நமக்குள்ளே மகாஞானிகளும், சித்த புருஷர்களும் அவதரித்து விளங்குகிறார்கள். இந்துக்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது-' (ஹிந்துக்கள் யார்? - பாரதியார் கட்டுரைகள்) என்று எழுதும் பாரதி இந்து மதம் நலிவுற்று வீழ்ந்துவிடலாகாது என்ற தன் விழைவை வெளிப்படுத்துகிறான்.

சர்வ தேசியம் பேசிய, எல்லா மதங்களும் ஒரே உண்மைப் பொருளையே நாடிச் செல்கின்றன என்று உபதேசித்த விவேகானந்தரும் இந்து சமயப் பெருமைகளைப் பறைசாற்றுவதில் தனிப்பட்ட பரவசம் காண்பதை நாம் எளிதில் உணர முடியும்.

'ஒவ்வொரு மதமும் தன்னை உலகு தழுவிய மதம் என்றே உரிமை பாராட்டுவதை நீங்கள் கேட்கிறீர்கள். ஆனால், நான் சொல்கிறேன். அப்படி ஒன்று இருக்கவே முடியாது. அப்படி ஒன்று இருந்து, அத்தகைய உரிமை கொண்டாட இயலும் என்றால், அது நமது மதமாக மட்டுமே இருக்க முடியும். வேறெந்த மதமாகவும் இருக்க முடியாது. ஏனென்றால், மற்ற மதங்கள் ஒவ்வொன்றும் மனிதர்களை, ஒருவரையோ சிலரையோ நம்பியிருக்கிறது. அந்த மதத்தினர் வரலாற்று மனிதராகக் கருதுகின்ற ஒருவரைச் சுற்றியே அந்த மதங்கள் எழுப்பப்பட்டுள்ளன... நமது மதத்தில் அவதார புருஷர்கள் எண்ணற்றோர் உள்ளனர். ஆனாலும், நமது மத உண்மைகள் அவர்கள் யாரையும் நம்பியிருக்கவில்லை' (இளைய பாரதமே எழுக - -பக். 29) என்கிறார் விவேகானந்தர்.

www.t.me/tamilbooksworld

பெற்ற தாயின் மீதும், பிறந்த பொன்னாட்டின் மீதும் தனிப்பற்று இருப்பது தவறில்லையெனில், விவேகானந்தரும் பாரதியும் இந்து மதத்தின் மீது கூடுதல் ஈடுபாடு கொண்டதும் தவறில்லை. இருவரும் குறுகிய மதக் கண்ணோட்டம் கொண்டவர்கள் இல்லை. எல்லாச் சமயங்களுக்கிடையிலும் சமரசம் காண்பதே பரமஹம்சரும் விவேகானந்தரும் கடைப்பிடித்த சமயக் கொள்கை. அனைத்து மதங்களின் மீதும் அன்பு வைத்துப் பாடியவனே பாரதி.

'புதுச்சேரியில் சம்பாகோயில் என்று அழைக்கப்பெறும் ஜன்மவிரோக்கினி மாதாவின் ஆலயத்தில் ஈஸ்டர் பண்டிகை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதைத் தமிழ்நாட்டுக் கத்தோலிக்க மதத்தினர் நன்கறிவர். இந்தப் பண்டிகை விழாவில் பாரதியார் யாதொரு வேற்றுமை உணர்ச்சியும் இன்றி இந்த மாதாகோயிலுக்குப் போவார். மனைவியாரையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போவார். வேடிக்கை பார்ப்பதற்காக அன்று; பக்தியுடனே போய் வருவதுண்டு' (என் குருநாதர் பாரதியார்) என்று நினைவுகூர்கிறார் பாரதியால் பூணூல்

அணியப்பட்ட கனகலிங்கம்.

‘புதுவையினின்று பாரதியார் திரும்பியதும் நான் அவரைச் சந்தித்தபோது, தாம் விவிலிய வேதத்தை (Bible) நூதன முறையில் மொழிபெயர்க்க உத்தேசித்திருப்பதாகக் கூறினார்’ (பாரதி -யார்? - பக். 75) என்கிறார் திரு.வி.க.வின் தொழிற்சங்கத் தோழர் வி.சக்கரைச் செட்டியார்.

‘ஏசுகிறிஸ்துவின் வார்த்தை’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய மகாகவி, ஏசு புதைக்கப்பட்ட மூன்றாம் நாள், அவர் உடம்புடன் எழுந்து விண்ணுலகம் சென்றதை மேரி மக்தலேன் விழிகளால் கண்டதைக் கவிதையாக்குகிறான்.

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்

எழுந் துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்

நேச மா மரியா மக்தலேநா

நேரிலே யிந்தச் செய்தியைக் கண்டாள்

www.t.me/tamilbooksworld

தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்

தேவர் வந்து நமக்குள் புகுந்தே

நாசமின்றி நமை நித்தங் காப்பார்

நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

- என்று பாடுபவன்,

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி

உணர்வை ஆணித் தவங்கொண் டடித்தால்

வண்மைப் பேருயிர் - யேசு கிறிஸ்து

வான மேனியில் அங்கு விளங்கும்

- என்று தத்துவ விளக்கம் தருகிறான்.

பொட்டல் புதூரில் 20-06-1920 அன்று ஞாயிறு மாலையில் தெற்குப் புதுமனைத் தெருவில் ஒரு முஸ்லிம் அவையில் ‘இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை’ என்ற தலைப்பில் பாரதி உரை நிகழ்த்தினான்.

‘இன்று மாலை எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசும் முன்பு, நான் அல்லாவின் மீது பாடிக் கொணர்ந்திருக்கும் தமிழ்ப் பாட்டை இங்கு வாசித்துக் காட்ட அனுமதி தரும்படி வேண்டுகிறேன். ஏற்கெனவே அரபி பாஷையில் பாத்திஹா (ஜபம்) ஓதி முடிந்துவிட்டது. அதற்கு அனுசரணையாக இந்தத் தமிழ்ப் பாட்டைப் பாடுகிறேன்’ (தத்துவம்- - பக். 98) என்று அறிவித்து அல்லாவின் பெருமையைக் கவிதையாக்கினான்.

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி அண்டங்கள்

எல்லாத் திசையிலுமோ ரெல்லை யில்லா வெளிவானிலே

நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்

சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்சோதி

www.t.me/tamilbooksworld

- என்று அல்லாவைப் போற்றிப் பாடுமளவுக்கு அவனுடைய உள்ளம் பரந்திருக்கிறது.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி...

ஆயிரம் தெய்வங்களை பாரதி பாட்டில் தொழுது போற்றுகிறான். அதே நேரத்தில் பரம்பொருள் ஒன்று என்பதையும் அழுத்தமாகப் பல இடங்களில் பதிவு செய்கிறான். பரம்பொருள் ஒன்றுதான் என்று தேர்ந்து தெளியும் அறிவைத் சுத்த அறிவென்று சொல்லி, வேற்றுமையொழித்து ஒருமையில் கூடும் அந்த அறிவையே தெய்வமென்று இனங் காட்டுகிறான். பாமர உள்ளத்துக்குப் பரம்பொருள் ஒன்று என்றும், அது நிர்குணம் கொண்டதென்றும், அதற்கு எந்தக் குறிப்பிட்ட வடிவமும் இல்லையென்றும், இயற்கையின் பேராற்றலாக அது இயங்குகிறதென்றும் சொல்லிப் புரிய வைப்பது சிரமம் என்பதால், அவர்கள் எளிதில் காட்சிப்புலனில் கண்டு பக்தியில் கலக்க உதவும் வடிவங்களை அவன் வாழ்த்துகிறான்.

எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்

எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று

கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென்று அறிவீர்

- என்ற வள்ளலாரின் பார்வை பாரதியிடமும் இருந்தது.

தேவநெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்

விளம்பும் நெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்

ஓதுகின்ற சூதனைத்தும்...

- என்று வள்ளலார் பொய்மையைப் போற்றும் சாத்திரங்களைச் சாடுவது போன்றே பாரதியும்,

கொடுமதப் பாவிகள் குறும்பெலாம்...

- என்றும்,

பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்

பொய்மை யாகிப் புழுவென மடிவர்

www.t.me/tamilbooksworld

- என்றும் பல இடங்களில் சாத்திரப் பேயைச் சமூகத்தின் பாழ்வெளியிலிருந்து விரட்ட எழுத்துப் போர் நடத்துகிறான்.

ஔவையாரின் ‘ஆத்திசூடி’யில் சமூக வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் பொருந்தாத சில கருத்துகளைக் கண்டவன் அவற்றைக் களைந்து, புதியவழி காட்டும் நோக்கில் ‘புதிய ஆத்திசூடி’ புனைந்தான்.

ஔவையார் ஆத்திசூடியில் இறைவாழ்த்தில் சிவனைப் போற்றுகிறார். ‘ஆத்திசூடி’ என்பதே சிவனைத்தான் குறிக்கும். ஆனால் ‘புதிய ஆத்திசூடி’ எழுதிய பாரதி,

ஆத்தி சூடி யிளம்பிறை யணிந்து

மோனத் திருக்கு முழுவெண் மேனியான்,

கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்பேன்,

மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்.

ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்

உருவகத் தாலே யுணர்ந்துண ராது

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்

ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;

அதனினை கண்டார் அல்லலை யகற்றினார்;

அதனருள் வாழ்த்தி யமரவாழ் வெய்துவோம்.

- என்று நூலின் காப்புச் செய்யுளில் பரம்பொருளை ஒளியுறும் அறிவாய் இலங்கும் ஆற்றலை வாழ்த்தி வழிபடுகிறான். பிறை சூடிய சிவனையும், பாற்கடலில் படுத்திருக்கும் திருமாலையும், நபிகளார் தொழுதேத்திய அல்லாவையும், ஏசுவின் பரமபிதாவையும் சர்வ சமய சமரச நோக்கில் போற்றி, அவர்கள் அனைவரும் ஒரே பரம்பொருள் என்ற உண்மையை உணர்த்துகிறான்.

மாடனைக் காடனை வேடனைப் போற்றி

மயங்கும் மதியிலிகாள் - எதனூடும்

www.t.me/tamilbooksworld

நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்று

ஓதியறியீரோ!

- என்று பல சிறு தெய்வ வழிபாடுகளை மறுதலித்து அறிவுத் தெய்வத்தை ஆராதிக்கும் பாரதி, 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்' என்ற நாவுக்கரசர் வழி நடக்கிறான்.

'புதிய ஆத்திசூடி'யில் சமயங்களின் ஒருமையைச் சாற்றிய மகாகவி 'விநாயகர் நான்மணி மாலை'யில்,

விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,

நாராயண னாய் நதிச்சடை முடியனாய்,

பிற நாட்டிருப்போர் பெயர் பல கூறி

அல்லா யெஹோவா எனத் தொழுதன்புறும்

தேவருந் தானாய், திருமகள், பாரதி,

உமையெனுந் தேவிய ருகந்தவான் பொருளாய்

உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல்

- என்று உலக சமயங்கள் அனைத்தையும் ஒருமையை நோக்கி நடத்த முயல்கிறான். ஒன்று பரம்பொருள் என்று உணர்த்த முயல்கிறான்.

ஈசன் எங்கிருக்கிறான்?

பக்தி செய்து பிழைக்கச் சொன்ன, பயன் கருதாமல் உழைக்கச் சொன்ன பாரதி ஆழ்ந்த இந்து மதப் பற்றாளனாக ஓரிடத்திலும், பல்வேறு உருவ வழிபாட்டில் உளமுருகி நிற்பவனாக ஓரிடத்திலும், சுத்த அறிவே சிவமென்று கூறும் சுருதிகளைக் கொண்டாடுபவனாக ஓரிடத்திலும், பொய்மைச் சாத்திரக் குப்பைகளை வள்ளலார் வழியில் பழித்தொதுக்குபவனாக ஓரிடத்திலும்,

மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து

வெறுங் கதைகள் சேர்த்து - பல

www.t.me/tamilbooksworld

கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை

காட்டவும் வல்லீரோ?

- என்று கள்ள மதங்களுக்கும், பல தெய்வ வழிபாட்டுக்கும் எதிராகப் புரட்சிக்குரல் கொடுக்கும் கலகக்காரனாக ஓரிடத்திலும் தோற்றம் காட்டுபவன். கடவுள் வழிபாட்டையும் சமூக நலனுக்காக, மனிதநேயப் பண்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்வதை மட்டும் நாம் மறவாமல் கணக்கில் வைத்துக்கொள்ள வேண்டும்.

'கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லை என்று நம்பலாமா? கவனி. அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளே இருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அநந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது.

இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து, தன்னிடத்தில் உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ, அவனே கண்ணுடையவன் என்பது முன்னோர் கொள்கை. உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை,

ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்...' என்றுரைக்கும் மகாகவி.

'கோயிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள் புரியும். துளிகூட, ஓர் அணுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாது என்று ஒருவன் பரிபூரண சித்தி அடைவானாகில், அவனே ஈசுவரன்' என்று மானுடம் தோய்ந்த பக்தி மார்க்கத்தை இந்த மண்ணில் வளர்க்கும் வேள்வியில் ஈடுபட்டான்.

சுவாமி விவேகானந்தர், 'எனது பாரத புத்திரர்களே, இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள் யாரெனில், பாரத தேசத்தின் முப்பது கோடி ஜனங்களே. இவர்களெல்லாம் மகா சக்தியின் ஆவிர்ப்பாவங்கள். இவர்களை நீங்கள் ஆராதனை செய்ய வேண்டும்; இவர்களுக்கே தொண்டு செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் சிறந்த மதம் வேறு கிடையாது' என்றுரைத்ததில் மனம் ஈடுபட்டு 10-.4.-1909 'இந்தியா' இதழின் தலையங்கத்தில் அதை மேற்கோள் காட்டும் பாரதிக்கு மனிதம்தான் மதம். அவனை ஒரு மனுநீதிக் காவலனாகவோ, இந்து மத வெறி பிடித்த மூடச் சனாதனியாகவோ, வருணாசிரமத்தின் வாயிற்காவலனாகவோ வர்ணிக்க முயல்பவர்கள், ரோஜாவின் இதழ் உதிர்த்து, முள்ளை மூக்கில் வைத்து வாசம் பார்க்கும் மனநோயாளிகள்.

www.t.me/tamilbooksworld

# 6



# பெண்மை வாழ்கென்று கூத்திடுவோம்...

முதன்
முதலாக
ஜனங்களையும்,
ஜன
சமுதாயத்தையும்
பாடியவன்
பாரதி.
புலவர்கள்
அரசர்களையும்,
கடவுளர்களையும்
பாடி
அலுத்துப்
போனவர்கள்.
ஜனங்கள்
கேட்டு
அலுத்துப்போனவர்கள்.
பாரதி,
ஜனங்களுக்குப்
பாட்டிசைத்தான்.
அதைக்
கேட்ட
ஜனங்கள்
தாங்களும்

www.t.me/tamilbooksworld

பாட்டுக்குரியவர்களா
என்று
அதிசயித்து
ஆனந்தம்
அடைந்தார்கள்.
பாரதி
தேசத்தைப்
பாடினான்;
அதிலும்
பெண்ணைப்
பாடினான்;
அதிலும்
பெண்ணினுள்
விளங்கும்
சக்தியைப்
பாடினான்.
பாரதியார்
பாட்டுக்கு
www.t.me/tamilbooksworld
இம்மூன்றும்
உடலும்,
உயிரும்,
ஆத்மாவும்
போல.
இவ்விஷயமும்,
இவ்விஷயத்தின்
கருத்தும்,
கருத்தின்
கருவும்
தமிழுக்கே
புதியவை;
தமிழ்ச்
சாதியை
வாழ்விக்க
வந்தவை

- -ஓ.வி.அளகேசன்

பெண்ணென்று பூமிதனிற் பிறந்துவிட்டால் - மிகப்

பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்

- என்று பெண்கள் நிலைகண்டு நெஞ்சம் புண்ணாகி நெக்குருகிப் பாடினான் பைந்தமிழச் சாரதி பாரதி.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆணாதிக்கக் கொடுமைகளுக்குப் பெண் தொடர்ந்து ஆளாகி வருகிறாள். அன்று முதல் இன்று வரை பெண்ணை ஒரு போகப்பொருளாக மட்டுமே பார்த்தும், பயன்படுத்தியும் வரும் பெரும்பான்மை ஆண்களுக்கு, அவளும் தம்மைப்போல் ஆசாபாசங்கள் நிறைந்த ஒரு சக உயிர் என்றுணர்ந்து மதிக்கும் மனோபாவம் இன்று வரை பழகிவரவில்லை.

இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வோர் ஆணின் கால்களிலும், கைகளிலும் அரசியல், சமூக, பொருளாதார விலங்குகள் பலவந்தமாகப் பூட்டப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் மேல் 'தீண்டாமை' என்னும் நான்காவது விலங்கு சேர்த்துப் பூட்டப்பட்டுள்ளது. ஆனால், ஒரு தலித் பெண்ணுக்கோ இவற்றோடு 'ஆணாதிக்கம்' என்ற ஐந்தாவது விலங்கும் கூடுதலாக இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

www.t.me/tamilbooksworld

காலங்காலமாக நம்முடைய மதங்களும், சாத்திரங்களும், புராண இதிகாசங்களும், இலக்கியங்களும் பெண்ணுக்கு அடிமை விலங்கு பூட்டியே அழகு பார்த்தன. பெண்ணை ஆண்களின் உடற்பசிக்கு உணவாகும் ஒரு நுகர்பொருளாகவே ஆண்டவன் படைத்திருப்பதாக அவையனைத்தும் திட்டமிட்டுச் சாதிக்க முயன்றன.

இந்து மதத்தின் முக்கிய கடவுள்களான சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவருக்கும் ஆண் இன்றிப் பெண் குழந்தை பிறந்ததாகப் புராணங்கள் பேசவில்லை. ஆண் தெய்வத்துடன் சேர்வதற்குப் பெண் தெய்வம் தவமிருந்தாள். பெண் தெய்வத்துடன் இணைவதற்கு ஆண் தெய்வம் தவமிருந்ததாய் தகவல் இல்லை.

வேதகாலத்தில் பெண்ணுக்கு ஓரளவு உரிமை இருந்திருக்கிறது. இறைவழிபாட்டில் பெண்ணுக்குரிய முக்கியத்துவம் வழங்கப் பட்டது. 'வீட்டையும், கணவரையும், பெற்றோரையும் ஆள்பவள் பெண்' என்கிறது ரிக் வேதம். கல்வியும் பண்பாடும் மிக்கவராக பெண்கள் அன்று விளங்கினர். ரிக் வேதத்தின் பத்தாவது பகுதியில் 145 முதல் 159 வரை உள்ள சுலோகங்கள் பெண்களால் பாடப்பட்டவை. ரோமாஸா, இந்திராணி, லோபமுத்திரா, ஊர்வசி, சாரதா, சாவித்திரி என்று இருபது பெண்புலவர்கள் இருந்தனர். உலகச் சமயங்களின் சாரத்தைத்

தெளிவதற்கு மிதிலையில் ஜனகன் கூட்டிய அறிஞர் அவையில் வேத வித்தாக விளங்கிய யாக்ஞவல்கியருக்கு எதிராக அறிவுப் போர் நடத்தியவள் கார்கி என்ற பெண். பிரம்மம் குறித்த ஞான தேடலில் கணவர் யாக்ஞவல்கியருடன் கை கோத்து நடந்தவள் மைத்ரேயி.

காலநடையில் சாத்திரங்களின் வடிவில் பெண்களுக்கு எதிராகச் சனாதனச் சதிவலை விரிக்கப்பட்டது. ஆணுக்கு பெண் அடிமை என்ற ஆதிக்கச் சிந்தனை சிறகு விரித்தது. மனுஸ்மிருதி, மைத்ரேயினி சம்ஹிதை, வசிஷ்ட பௌத்யாயன சூத்திரம், விஷ்ணு ஸ்மிருதி போன்றவை பெண்ணுக்கு அடிமை விலங்கிட்டு வீட்டில் சிறை வைக்கும் சூழலை உருவாக்கின. 'மனைவிக்கென்று தனியாக சமயச் சடங்குகள் இல்லை. கணவனுக்குத் தொண்டு செய்வதன் மூலமே அவள் சொர்க்கம் செல்ல முடியும். ஒழுக்கமற்ற, பண்பற்ற காமுகனாகக் கணவன் இருந்தாலும், மனைவி அவனைக் கடவுளாகப் போற்ற வேண்டும். பிறந்தகத்தின் பெருமை பேசி, கணவனுக்குப் பணிய மறுப்பவளைப் பொது இடத்தில் பார்வையாளர்கள் முன்பு நாய்க்கு இரையாக்க வேண்டும்' என்றெல்லாம் மனுதர்மம் மானுட தர்மத்துக்கு மாறாகச் சட்டம் செய்தது.

www.t.me/tamilbooksworld

'பார்த்தா! கீழான பிறவியர்களான பெண்டிர், வைசியர், சூத்திரர் ஆகியோரும் என்னைச் சார்ந்தபின் நிச்சயமாகப் பரகதி அடைகின்றனர்' என்று பரந்தாமன் பகர்ந்ததாகப் பகவத் கீதை பறைசாற்றுகின்றது. 'பேதைமையே பெண்டிரது இயல்பு. பெண்மக்களை கீழான பிறவியர் என்பது இயற்கைக்கு ஒத்ததொரு சொல்லாகும்' என்று சித்பவானந்தர் விளக்கம் தருகிறார். இதுதான் பெண்ணைப் பற்றிய இந்து மதச் சிந்தனை.

உலகின் மற்ற மதங்களும் பெண்ணுக்குப் பெருமை சேர்த்து விடவில்லை. பெண்ணைப் பொறுத்தவரை மதம் சமத்துவக் கதவுகளைச் சாத்தியே வைத்தது. யூத மதத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள பத்துக் கட்டளைகள் ஆணுக்கு மட்டுமே சொல்லப்பட்டவை. பத்தாவது கட்டளை பணியாட்கள், வீட்டு விலங்குகள் ஆகியவற்றோடு சேர்த்துப் பெண்ணைப் பட்டியலிடுகிறது.

'ஆதாமின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டவள் பெண். அவனை விலக்கப்பட்ட கனியைப் புசிக்கச் செய்தவள் ஏவாள். அதனால், பெண் அசுத்தமானவள். ஆணை மயக்கி அவனுக்கு வீழ்ச்சியை வழங்கியவள் பெண். பூமியின் பாவங்களுக்குப் பெண்ணே பிறப்பிடம். நரகத்துக்கு அவளே நுழைவாயில்' என்ற பார்வை

கொண்டது கிறிஸ்துவம்.

‘பெண் மறுத்துப் பேசாமல் ஆணின் அறிவுரையை ஏற்க வேண்டும். ஆணுக்குப் பெண் கற்பிப்பதையும், அவன் மீது அதிகாரம் செலுத்துவதையும் அனுமதிக்க முடியாது. ஏனெனில், ஆண்டவரால் முதலில் படைக்கப்பட்டவன் ஆதாம். அதன் பின்பு படைக்கப்பட்டவளே ஏவாள்’ என்று திமோத்தியுக்கு எழுதிய முதல் திருமுகத்தில் பெண்ணடிமைச் சிந்தனைக்கு உரம் சேர்த்தவர் புனித பவுல்.

மற்ற மதங்களைவிட ஓரளவு பெண்ணுக்கு உரிமை வழங்கியது இஸ்லாம். ஆனாலும், அதுவும் ஆணுக்குப் பெண் சமம் என்று அறிவுறுத்தவில்லை. ‘உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளை நிலங்களாவர். நீங்கள் விரும்பும் முறையில் உங்களுக்குரிய விளைநிலங்களுக்குச் செல்லுங்கள்’ என்று கூறும் திருமறை, ‘பொதுவான நியதிப்படி ஆண்கள் மீது பெண்களுக்குச் சில உரிமைகள் உள்ளன. அவை பெண்கள் மீது ஆண்களுக்குள்ள சில உரிமைகளைப் போன்றவை. ஆயினும், ஆண்களுக்குப் பெண்களை விட ஒருபடி உயர்வுண்டு’ என்று வலியுறுத்துகிறது.

www.t.me/tamilbooksworld

‘எல்லா இடங்களுக்கும் கடவுளால் தீர்க்கதரிசிகள் (நபிகள்) அனுப்பிவைக்கப்பட்டனர். கடவுளின் கடைசி தீர்க்கதரிசி முகமது நபிகள்’ என்று கூறும் இஸ்லாம் மார்க்கத்தில் பிறந்த ஹெச்.ஜி.ரசூல் என்ற கவிஞர்

இத்தனை இத்தனை

ஆண் நபிகளுக்கு மத்தியில்

ஏன் வாப்பா இல்லை

ஒரு பெண் நபி?

- என்று ஒரு புதிய சிந்தனைக்குக் கவிதை வடிவம் கொடுத்தபோது பள்ளிவாசல்கள் அவருக்கெதிராகப் போர்க் கோலம் பூண்டன.

பொதுவாக மதங்களின் நியதிகளிலிருந்து மாறுபட்ட புத்தம் கூட தொடக்கத்தில் பெண்ணுக்கு இளைப்பாறுதல் தர மறுத்தது. புத்தரின் தந்தை சுத்தோதனன் மறைவுக்குப் பின்பு விதவையான பிரஜாபதி கௌதமி புத்த சமயத்தில் சேர விரும்பியபோது புத்தர்

சம்மதிக்கவில்லை. மூன்று முறை அவள் முயன்றும் 'சங்கத்தில் பெண்களைச் சேர்ப்பதில்லை' என்ற கொள்கையிலிருந்து புத்தர் விலகவில்லை. வைசாலியில் அவர் தங்கியிருந்தபோது கபிலவஸ்துவிலிருந்து பெண்கள் பலருடன் கூந்தல் மழித்து, காவி தரித்து, கண்களில் நீர் வழிய, கால் கடுக்க நடந்து வந்தாள் கௌதமி. புத்தரின் அணுக்கச் சீடர் ஆனந்தரைச் சந்தித்துத் துறவுக்கு அனுமதி கேட்டாள் கௌதமி. ஆனந்தர் புத்தரிடம் சென்றார். 'சின்னஞ்சிறு வயதில் நீங்கள் தாயை இழந்த பின்பு உங்களை அன்போடு வளர்த்த சிற்றன்னைக்கு நீங்கள் மனமிரங்க வேண்டும்' என்று மன்றாடினார். 'ஆனந்தா! பெண்களுக்குச் சங்கத்தில் இடம் தராமல் இருந்தால் இந்த மதம் ஆயிரம் வருடங்கள் வாழும்; இடம் தந்தால் 500 ஆண்டுகள் மட்டுமே புத்தம் நிலைக்கும்' என்றார் புத்தர். ஆனாலும், அன்னைக்காக அவர் அனுமதியளித்தார். அன்று முதல் பௌத்தம் ஒடுக்கப்பட்ட பெண்களின் பெருமூச்சாக, இதயமற்ற உலகின் இதயமாக மாறியது.

சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும்கூட பெண்ணை ஒரு போகப்பொருளாகவே பார்த்தனர். பெண் போகத்துக்குரிய பொதுவுடைமைப் பொருள் என்பதுதான் சாக்ரடீஸ் சிந்தனை. 'பெண்ணாகப் பிறக்காமல் ஆணாகப் பிறந்ததற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்று சொன்னவர்தான் பிளேட்டோ. 'இயற்கையின் விதிக்கேற்ப ஒன்று ஆள்கிறது. இன்னொன்று ஆளப்படுகிறது. பெண் எப்போதும் ஆணால் ஆளப்படுபவள்' என்றார் அரிஸ்டாடில்.

www.t.me/tamilbooksworld

கிரேக்கத்தில் பேச்சுக்கலையின் தந்தையாகப் போற்றப்பட்ட டெமஸ்தனீஸ். 'சட்டபூர்வமான வாரிசுகளை வயிற்றில் சுமக்கவும், வீட்டைப் பராமரிக்கவும் ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள். பணிப்பெண்களைக் காமக் கிழத்திகளாக்கிக் கொள். அழகும், அறிவும் மிக்க மகளிரைக் காதலியராக்கிக் கொள்' என்று 'வாழும் வழி' காட்டினார்.

புராண - இதிகாசங்களின் போதனை

நம் மண்ணில் தோன்றிய புராண- இதிகாசங்கள் கற்பென்னும் வேலியிட்டு ஆணுக்குப் பெண்ணை அடிமையாக்கின. பெருநோய் பீடித்த கணவனின் காமநோய் தீர அவனைக் கூடையில் வைத்து ஆசைநாயகியின் இருப்பிடம் நோக்கிச் சுமந்து சென்ற நளாயினியின் வழியில் நடப்பதுதான் கற்பிற் சிறந்த பெண்டிரின் கடமை என்று பெண்ணுக்குப் புராணங்கள் போதித்தன.

தன்னுடைய கணவன் குருடன் என்பதால் ஆட்சி நிர்வாகத்தை அவள் சார்பாகத் தானேற்றுச் சிறப்பாக நடத்தினாள் காந்தாரி என்று கதை சொல்லாமல், கணவனால் காணமுடியாத உலகத்தைத் தான் மட்டும் காண்பது தகாது என்று துணியால் தன் கண்களை மறைத்து வாழ்ந்தாள் என்று சொல்வதுதான் மகாபாரதம். ‘கிடைத்தது எதுவானாலும் அதை ஐவரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்’ என்று அன்னை சொன்னதற்காகப் பாஞ்சாலியை ஐவரும் மணந்து வாழ்ந்ததைப் பெருமை பொங்கப் பேசுவதுதான் நம் இதிகாசம்.

அரக்கன் ராவணனால் சிறைப்பட்டு, அசோகவனத்தில் ஆற்ற முடியாத சோகம் சுமந்து, கைப்பிடித்த கணவனின் வருகைக்காகக் காத்திருந்த சீதையை அக்கினிப் பிரவேசம் செய்து கற்பின் தூய்மையை உலகுக்குக் காட்டும்படி கட்டளையிட்ட காகுத்தனின் ஆணாதிக்கச் சிந்தனைக்கு அரியாசனம் தந்ததுதான் ராமாயணம்.

எந்த மதத்தையும் ஒரு பெண் தோற்றுவிக்கவில்லை. எந்தப் புராண, இதிகாசங்களையும் பெண் படைக்கவில்லை. எந்தச் சட்டமும் அவளால் எழுதப்படவில்லை. எந்தத் தத்துவத்துக்கும் பெண் தாயாகவில்லை. எந்த மதத்திலும் தீர்க்கதரிசியாக ஒரு பெண் மண்ணுலகில் வந்து மனிதர்க்குப் போதிக்கவில்லை. அன்று முதல் இன்று வரை இது முற்ற முழுக்க ஆண்களின் உலகம்.

www.t.me/tamilbooksworld

இலக்கியத்தில் பெண்

தமிழர் வேதம் என்று போற்றப்படும் திருக்குறள், பெண்ணின் பெருமை பேசுவதை யாரும் மறுக்க முடியாது. ஆனாலும், ‘பெண்வழிச் சேரல்’ அதிகாரத்தில் வரும்,

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்

வேண்டாப் பொருளும் அது. (901)

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்

பெண்ஏவல் செய்வார்கண் இல். (909)

குறட்பாக்கள் வள்ளுவர் காலத்துப் பெண்ணைப் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடுகள்.

வள்ளுவருக்கு வாய்த்த உரையாசிரியர் பரிமேலழகரோ அப்பழுக்கற்ற

ஆணாதிக்கவாதி. 'அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்ற குறளுக்கு, 'அறிவறிந்த என்றதனான், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது' என்றும், 'சான்றோன் எனக் கேட்ட தாய்' என்று முடியும் குறளுக்கு, 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய்' என்றும் உரையெழுதிப் பெண்ணுக்கும், அறிவுக்கும் தொடர்பில்லை என்ற தன் எண்ணத்தின் வண்ணத்தை வெளிப்படுத்தியவர் பரிமேலழகர்.

அவர் மீது பெண்ணியவாதிகள் பழிதூற்றிப் பயனில்லை. தமிழின் பழநூலாகப் போற்றப்படும் தொல்காப்பியமே அறிவும், வலிமையும் ஆடவர்க்கு; அச்சமும் நாணமும் பெண்டிர்க்கு என்றுதான் எல்லை வகுத்தது.

பெருமையும் உரனும் ஆடுஉமென

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப

(தொல்காப்பியம் - களவியல்)

www.t.me/tamilbooksworld

- என்பது சூத்திரம்.

பெண் கற்பைப் போற்றித் துதிக்கும் சிலப்பதிகாரத்தில் ஆண் கற்பு அழுத்தமாக வலியுறுத்தப்படவில்லை. கோவலன்-மாதவி உறவை இளங்கோவடிகள் வன்மையாகக் கண்டிக்கவில்லை. கண்ணகியைக் கண்ணீரில் மிதக்கவிட்டு, மாதவியிடம் மையலுற்றுக் கிடந்த கோவலனை 'விடுதலறியா விருப்பினன் ஆயினன், வடு நீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து' என்றுதான் மென்மையாக இளங்கோவால் சொல்ல முடிந்தது.

'முத்தும், சந்தனமும், குழலிசையும் போன்று பெண்ணும் ஒரு நுகர்பொருளே. பெற்றவர்க்குப் பெண்ணால் பயனில்லை. அவளைக் கைப்பிடித்தவனுக்கே அவள் பயன்படுவாள்' என்கிறது பாலைக்கலிப் பாடல். அன்று வேர்விட்டு வளர்ந்த ஆணாதிக்கச் சிந்தனை இன்றுவரை ஆயிரம் கிளை விரித்து ஆலமரமாக விழுதூன்றிவிட்டது.

பாரதியிடம் ஆணாதிக்கம்

'பெண் விடுதலை' பாடுவதற்கு முன்பு பாரதியும் 'ஆண்' என்ற

அகந்தையுடன்தான் தன் மனைவி செல்லம்மாளை நடத்தியிருக்கிறான். பெண்கள் குறித்து அவனுக்கேற்பட்ட மனமாற்றத்துக்கு அடிப்படையாக ஒரு சுவையான சம்பவத்தை விவரிக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். செல்லம்மாளும் குழந்தைகளும் ஊரில் இல்லாத ஒரு நாள் இரவு பாரதியுடன் தங்குவதற்கு அவருடைய வீட்டுக்குச் சென்றார் பாவேந்தர். பாரதி இரவுப் பொழுதிலும் படிப்பதும் எழுதுவதுமாக இருந்தான். பாவேந்தர் படுத்ததும் உறங்கி விட்டார்.

நடுநிசியில் பாரதி பாவேந்தரை எழுப்பி, 'பாலைக் காய்ச்சிக் குடிக்க நான் அடுப்பில் காகிதங்களைக் கொளுத்தினேன். நீண்ட நேரமாகியும் பால் சூடேறவில்லை' என்றான். பாவேந்தர் எழுந்து சென்று அடுப்பில் எரிந்து கிடந்த சாம்பலைத் தள்ளி, வேறு தாள்களைப் புதிதாகப் போட்டுக் கொளுத்திப் பார்த்தார். நினைத்தபடி பால் சூடாகவில்லை.

பாரதி சிரித்தபடி, 'சுப்புரத்தினம்! பெண்கள் செய்யும் வேலை அனைத்தையும் ஆண்கள் செய்வது சுலபமில்லை. அவை மிகச் சாதாரணம் என்று நினைத்திருக்கிறோம். இந்த மாதிரி வேலைகளைப் பெண்கள் அதிகமாக 4 மணியிலிருந்து இரவு 11 மணி வரைக்கும் செய்து நம்மை போஷிக்கிறார்கள். இதற்கிடையில் நாம் அவர்களை அடிக்கிறோம். அதட்டுகிறோம். நான்கூட செல்லம்மாவை அடிக்கிறேன். அதெல்லாம் கூடாது. நாமும் உழைக்கிறோம். பெண்களும் உழைக்கிறார்கள். குடும்பம் நடக்கிறது' என்றான். 'அந்தச் சிந்தனைத் தந்த பாதிப்பில்தான் மறுநாள் காலையில் 'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!' என்று பாடத் தொடங்கினான்' என்கிறார் பாவேந்தர்.

www.t.me/tamilbooksworld

நிவேதிதா தேவியின் அருளுரை

தேசவிடுதலைப் போரில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பாரதி 1905-ல் காசியிலும், 1906-ல் கல்கத்தாவிலும் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்கச் சென்றபோது நிவேதிதா தேவியை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அந்தச் சந்திப்பே மகாகவியைப் பெண்விடுதலை பற்றிப் பெரிதாகச் சிந்திக்கச் செய்தது. 'இந்திய மண்ணில் பாரதியைப் போல் புதுமைப் பெண்ணை யாரும் உருவாக்கிக் காட்டவில்லை' என்ற புகழுரைக்கு அடித்தளமானது நிவேதிதாவின் அருளுரையே.

நிவேதிதாவின் இயற்பெயர் மார்கரெட் எலிசபெத் நோபிள். அவர் ஐரிஷ் பெண்மணி. விவேகானந்தரின் முதல் பெண் சீடர். இந்தியாவின்

முன்னேற்றத்துக்குத் தம்மை நிவேதனப் பொருளாகப் படைத்துக்கொண்டதால் அவரை விவேகானந்தர் ‘நிவேதிதா’ என்று பெயரிட்டு அழைத்தார்.

பாரதி நிவேதிதாவைச் சந்தித்தபோது ‘சாதி மதம் பிறப்பு காரணமான அநாகரிக வேற்றுமைகளை மறந்துவிடு. பெண்மக்களைத் தாழ்வாக நினைக்காதே. மனைவியைக் காமத்துடன் நோக்காதே. மாதர்களை இருட்டில் தள்ளிவிட்டு அவர்கள் அறியாமல் ஆண்கள் மட்டும் மேலான நிலைக்கு ஒருபோதும் வரமுடியாது என்பதை உணர்ந்து கொள்’ என்ற உபதேசத்தை உள்வாங்கினான். இறுதிமூச்சு நிற்கும் வரை அன்னையின் அருளுரையிலிருந்து எள் மூக்கின் முனையளவும் பாரதி வழுவவில்லை.

திலகரிடம் தீவிர பக்தி கொண்ட பாரதி தான் வெளியிட்ட ‘ஸ்வதேச கீதங்கள்’ இரு பதிப்பிலும் நிவேதிதாவுக்கே நூலைச் சமர்ப்பணம் செய்தான். திலகரையும் மீறிய பக்தியுணர்வு பாரதிக்கு நிவேதிதாவிடம் இருந்தது.

www.t.me/tamilbooksworld

‘கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வேதச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை சமர்ப்பிக்கிறேன்’ என்று 1908-ல் வெளியிட்ட நூலில் சமர்ப்பண உரை எழுதினான் பாரதி. ‘நிவேதிதா தேவி துதி’ என்ற பாடலில்,

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்

கோயிலாய் அடியேன் நெஞ்சில்

இருளுக்கு ஞாயிறா யெமதுயர்நா

டாம்பயிர்க்கு மழையா யிங்கு

பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்

பெரும்பொருளாய்ப் புன்மைத் தாதச்

சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய்

நிவேதிதையைத் தொழுது நிற்பேன்

- என்று மனம் நெகிழ்கிறான்.

'நாகரிக வளர்ச்சியிலே ஸ்திரீகளுக்குரிய ஸ்தானம்' என்ற கட்டுரையில், 'சகோதரி நிவேதிதா தேவி சில நற்போதனைகள் கூறி வருமிடையே, அந்த அம்மை சொன்னார்: 'ஐயா, மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு, அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்துவிட முயல்வது வீண் முயற்சி. அது ஒருபோதும் நடக்கமாட்டாது' என்றார். இந்த வசனத்தை ஒவ்வொரு தேசாபிமானியும் மனதிலே பதித்துக் கொள்ளும்படி விரும்புகிறோம்' என்று குறிப்பிடுகிறான்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவி லோங்கியிவ் வையந்த ழைக்குமாம்

பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்

போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்

www.t.me/tamilbooksworld

- என்று பாடுபவன்,

அறிவு கொண்ட மனித வுயிர்களை

அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்

- என்று பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகப் பேசுகிறான்.

'இன்று தமிழ்நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுதிலும், பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்துக்குப் பிறப்பிடம்' என்று தெளிவுபடுத்தும் கவிஞன்,

'ஸ்திரிகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரி அடிமையில்லை. உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே; விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே...இரண்டும் பரிபூரணமான சமானம்: பெண்ணே அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்' என்று 'தமிழ்நாட்டின் விழிப்பு' என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறான். பெண்ணை வாழ்க்கைத் துணை

நலம் என்றார் வள்ளுவர். பாரதியோ அவளை உயிர்த்துணை என்கிறான்.

கல்வித் தோணியே பெருந்துணை

‘மனித நாகரிகங்கள் ஆண் மக்களின் உதவி கொண்டு பிறப்பிக்கப்படுகின்றன. அப்பால் பெரும்பாலும் பெண்களாலேயே காக்கப்படுகின்றன’ என்பது நம்பிக்கை. ‘தமிழ்நாட்டு மாதர் சம்பூர்ணமான விடுதலை பெற வேண்டுவராயின் அதற்குக் கல்வித் தோணியே பெருந்துணையாம்’ என்று பெண்களின் முன்னேற்றத்துக்கு வழி காட்டுபவன், ‘அறிவு திறந்தால் பிறகு விடுதலைக் கோட்டையைக் கைப்பற்றுதல் அதிசுலபமாகிவிடும்’ என்று இறுதிப் பயனையும் எடுத்துரைக்கிறான்.

‘ஆண் மக்களுக்கு சமமான கல்வித் திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும் வரை, ஆண் மக்கள் பெண் மக்களைத் தக்கபடி மதிக்க மாட்டார்கள்; தாழ்வாகவே நடத்துவார்கள்’ என்று உண்மை நிலையை உரைக்கும் பாரதி, மனிதர்கள் பெண்களை இழிவாக நடத்தாமல் இருக்க உபாயம் ஒன்றை உணர்த்துகிறான்.

www.t.me/tamilbooksworld

‘இந்த விஷயம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு மூன்று விதமான உபாயங்களிருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர வேறெல்லாவிதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து’ என்று கல்வியின் இன்றியமையாமையைப் பெண்கள் அறிய வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறான். ஆயிரத்தில் ஒரு பெண் கூடக் கல்வியறிவு பெறாத காலத்தில், வீட்டை விட்டு வெளியே காலெடுத்து வைக்கவும் அனுமதிக்கப்படாத சமூகச் சூழலில் பாரதி எவ்வளவு புரட்சிகரமாகச் சிந்தித்திருக்கிறான்!

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்

றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற

விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார் - என்றும்,

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்

மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே

வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை

வெட்டிவிட் டோமென்று கும்மியடி

- என்றும் பெண்கள் ‘விடுதலைக் கும்மி’யடித்துப் பாடுவதாக பரவசம் கொள்கிறான் பாரதி.

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்

பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்

இளைப்பில்லை காணென்று கும்மியடி

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்

வேண்டி வந்தோமென்று கும்மியடி

www.t.me/tamilbooksworld

சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந்தெய்வச்

சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்.

- என்று பாடியவன் தெய்வமாக்கவியாக இருந்ததனால்தான் அவன் கண்ட கனவு காலநடையில் நனவாக மாறியது.

‘வீட்டை விட்டு வெளியே சென்று பெண் கல்வி கற்றால், அவள் நிச்சயம் ஒழுக்கம் தவறிவிடுவாள்’ என்ற ஆந்தைக் கூச்சலுக்கு பாரதி ஆணியறைந்தாற் போல் பதிலளித்தான். ‘இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு, பெண்கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறிவிடுவார்களென்று தமிழ்நாட்டில் பலர் கூறினர். இப்போதோ, பெண்கல்வி தமிழ்நாட்டில் சாதாரணமாகப் பரவியிருக்கிறது. அண்டச் சுவர்கள் இன்னும் இடிந்து போகவில்லை. இதுவரை கூடிய மட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன. ஆனால், இப்போது பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு லோகமும் கட்டாயம் இடிந்து பூமியின் மேல் விழும் என்றும், வால் நட்சத்திரம் வகையறாக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாகிவிடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள்’ என்று எள்ளல் சுவையுடன் எழுதுகிறான்.

பெண்கல்வி பற்றி விவேகானந்தர்

பாரதியை போல் பெண்கல்விக்காகவும், பெண்ணுரிமைக்காகவும் வலிமையாக வாதாடியவர் விவேகானந்தர். பால்யத்தில் திருமணம் செய்யாமல் படிக்கும் பெண்களுக்குச் சமூகத்தில் மரியாதை இருக்காது என்றும், அவர்களை மணமுடிக்க யாரும் முன்வரமாட்டார்கள் என்றும் ஒரு சீடர் தன் அச்சத்தைத் தெரிவித்தபோது சுவாமி விவேகானந்தர்,

‘நீ இன்னும் நம் சமுதாயத்தின் போக்கைப் புரிந்துகொள்ளவில்லை. படித்த, நல்ல பண்புகளோடு கூடிய இந்தப் பெண்களுக்குக் கணவன் கிடைக்கவில்லை என்று ஒருபோதும் வராது. ‘தசமே கன்யகா ப்ராப்தி’ - பத்து வயதில் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்றெல்லாம் சாஸ்திரங்கள் கூறுவதை இப்போதும் யாரும் பின்பற்றுவதில்லை. இனியும் பின்பற்றமாட்டார்கள்...உண்மையான துணிவோடு துவக்கப்படும் நல்ல காரியங்களுக்கு ஏற்படும் எதிர்ப்புகள், அதை ஆரம்பிப்பவர்களின் ஆற்றலைத்தான் அதிகமாக்கும். தடைகளையோ எதிர்ப்புகளையோ சந்திக்காத காரியங்கள் மனிதர்களை மரணத்தின் பாதைக்கே அழைத்துச் செல்லும். போராட்டம்தான் வாழ்க்கையின் அடையாளம்’ (எனது சிந்தனைகள்) என்று விளக்கம் தந்தார்.

www.t.me/tamilbooksworld

பெண்ணைச் சக்தியாக வழிபட்ட பரமஹம்சரின் சீடரான விவேகானந்தர், ‘எல்லா நாடுகளுக்குள்ளும் நமது நாடு பலவீனமாகவும், பின்தங்கியும் இருப்பதற்கு என்ன காரணம்? சக்தி (பெண்) நம் நாட்டில் அவமானம் செய்யப்படுவதுதான் அதற்குக் காரணம். கடினமான விதிகளால் பெண்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்ம்ருதி முதலிய நீதி நூல்களை எழுதி ஆடவர் பெண்களை யந்திரங்கள் ஆக்கிவிட்டார்கள்.

‘யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே, ரமந்தே தத்ர தேவதா’ - ‘எங்கெல்லாம் மாதர் உயர்வாக நடத்தப்படுகிறார்களோ, அங்கெல்லாம் தேவர் மகிழ்ச்சியுடன் வாசம் செய்வார்கள்’ என்று புராதன மனு கூறியுள்ளார். நாமோ பெரும் பாவிகள் நாம் மாதர்குலத்தை ‘வெறுக்கத்தக்க அற்பமான புழு பூச்சிகள், நரகத்தின் வாயில்கள்’ என்றெல்லாம் அழைத்ததுதான் நம் நாடு தாழ்ந்து அதோகதியை அடைந்திருப்பதற்குக் காரணம்’ (புதிய இந்தியாவைப் படைப்போம்) என்று மனம் பதறுகிறார்.

பாரதியைப் போன்றே விவேகானந்தரும் கல்வி ஒன்றே பெண்கள் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் என்று வலியுறுத்துகிறார். ‘பெண் மக்கள் சம்பந்தமான பல முக்கிய பிரச்னைகள் உண்டென்பது உண்மையே. ஆனால், கல்வி என்னும் மந்திரத்தால் தீர்த்து வைக்க

முடியாதது அவற்றில் எதுவுமில்லை... உங்கள் பெண் மக்களுக்குக் கல்வியளியுங்கள். பின்னர், அவர்கள் போக்கில் விட்டுவிடுங்கள். தங்களுக்கு என்னென்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று அவர்களே சொல்வார்கள். அவர்களைப் பொறுத்த விஷயங்களில் தீர்ப்புச் சொல்ல உங்களுக்கென்ன அதிகாரம்?' என்று கேட்கிறார்.

கற்புநிலையென்று சொல்லவந்தால்...

'பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும், பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை' என்றும், 'அறத்தை விட்டுத் தீநெறியில் நின்றவர் எல்லாரிலும், பிறன் மனைவியை விரும்பி அவனுடைய வாயிலில் சென்று நின்றவரைப் போல் அறிவிலிகள் இல்லை' என்றும் அறத்துப்பால் - இல்லறவியலில் வள்ளுவர் 'பிறனில் விழைவதை' வன்மையாகக் கண்டிக்கிறார். ஆனால், தமிழ் இலக்கிய உலகில் கற்பை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக்கிக் கவிதையிலும் கட்டுரையிலும் அதற்காக அழுத்தமாகப் போராடிய முதல் படைப்பாளி பாரதியே.

'உடற் பிரேமையைக் காட்டிலும் அறிவுப் பிரேமை விசேஷமானதென்றும், அறிவுப் பிரேமையைக் காட்டிலும் 'உயிர்க் காதல்' அல்லது 'ஆத்மப் பிரேமை' சிறந்ததென்றும் இனிது விளங்கும். இந்த ஆத்மப் பிரேமையைத்தான் கற்புடைமை என்று சொல்லுகிறார்கள்' என்று 'காதல்' கட்டுரையில் கற்புடைமைக்கு ஒரு புதிய விளக்கத்தைக் கொடுக்கிறான் பாரதி. 'கற்பு உடல் சார்ந்ததன்று; உணர்வு சார்ந்தது' என்பதுதான் கவிஞன் கருத்து. கணவன் மீது மனைவியும், மனைவி மீது கணவனும் 'ஆத்மப் பிரேமை' கொண்டுவிட்டால் அடுத்தவரிடம் உடலையோ, உள்ளத்தையோ இழப்பதற்கான வாய்ப்பில்லை. இந்த 'ஆத்மப் பிரேமை' இருவருக்கும் பொது என்பதுதான் கவிஞன் கட்சி.

www.t.me/tamilbooksworld

'பெண்களுக்குக் கற்புநிலை எத்தனை அவசியமோ, அத்தனை ஆண்களுக்கு அவசியமில்லையென்று நினைப்பதைப் போல் மூடத்தனம் வேறு கிடையாது. வண்டியிழுக்கும் மாடுகளிலே ஒரு மாடு காலொடிந்து கண் தெரியாமலிருக்கும் பட்சத்தில் மற்றொரு மாடு எவ்வளவு நன்றாக இருந்தும் என்ன பிரயோஜனம்? ஆண்கள் ஒருவிதமான கட்டுப்பாடு இல்லாமலிருக்கும் நாட்டிலே பெண்கள் நன்நெறியிலே நிற்பது சாத்தியமில்லை என்பது மகாமூடனுக்குக் கூட எளிதில் விளங்கக் கூடும்' என்கிறான் மகாகவி.

‘பதிவிரதை’ என்ற தலைப்பில் பாரதி எழுதியிருக்கும் கட்டுரை ஆண்கள் அனைவருக்கும் சென்று சேரவேண்டிய செய்தியை விளக்குகிறது. கற்பைப் பொதுவாக்க முயலும் கவிஞன் மிகக் கடுமையான வாதத்தை வைக்கிறான். இதுபோன்று பாரதி வேறெந்த இடத்திலும் இவ்வளவு வன்மையாகத் தன் கருத்தைப் பதிவு செய்ததில்லை.

‘ஸ்திரிகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால், ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரிகளின் பதிவிரதத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக்குறைய தன் இனத்து ஸ்திரிகளைப் பதிவிரதை என்று நம்புகிறான்... அட பரம மூடர்களா, ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரிகள் எப்படி பதிவிரதைகளாக இருக்க முடியும்?’ என்று கேட்கும் பாரதி ஒரு கற்பனை கணக்கைப் போட்டு ஒவ்வொருவன் கன்னத்திலும் அறைகிறான்.

‘கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம், ஒரு பட்டணத்தில் லட்சம் ஜனங்கள், ஐம்பதினாயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினாயிரம் பேர் பெண்கள், அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்திரிகளை இச்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அதிலிருந்து குறைந்தபட்சம் நாற்பத்தையாயிரம் ஸ்திரிகள் பர புருஷரின் இச்சைக்கிடமாக வேண்டும். இந்தக் கூட்டத்தில்; இருபதினாயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே, குறைந்தபட்சம் இருபதினாயிரம் ஸ்திரிகள் வ்யபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினாயிரம் வ்யபசாரிகள் நூறு பேர்தான் தள்ளப்படுகிறார்கள. மற்றவர்கள் புருஷனுடன் வாழ்கிறார்கள். ஆனால், அவளவளுடைய புருஷனுக்கு மாத்திரம் அவளவள் வ்யபசாரி என்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லையென்று சும்மா இருப்பாருமுளர்.’

‘ஆகவே, பெரும்பாலோர் வ்யபசாரிகளுடனேதான் வாழ்கிறார்கள். இதனிடையே பதிவிரத்யத்தைக் காப்பாற்றும் பொருட்டு ஸ்திரிகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும், கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகின்றன. சீச்சீ! மானங்கெட்ட தோல்வி ஆண்களுக்கு! அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை’ என்று போலிச் சமூக வாழ்க்கையின் ஒரு பகுதியை வெளிப்படையாகத் தோலுரித்துக் காட்டுகிறான் மகாகவி. இதையேதான் கவிதையிலும்

www.t.me/tamilbooksworld

சொல்கிறான்.

ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால்

அப்போது பெண்மையும் கற்பழிந்திடாதோ?

நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்

நலமான கூரையும்தான் எரிந்திடாதோ?

பேணுமொரு காதலினை வேண்டி யன்றோ

பெண் மக்கள் கற்பு நிலை பிறழுகின்றார்?

காணுகின்ற காட்சியெலாம் மறைத்து வைத்துக்

கற்பு கற்பு என்றுலகோர் கதைக்கின்றாரே!

(பாரதி அறுபத்தாறு)

www.t.me/tamilbooksworld

- என்று கற்பைப் பெண் மக்கள் மீது மட்டும் சுமத்தும் சமத்துவமற்ற ஆணாதிக்கத்தின் ஆணிவேரை அறுத்தெறிவதற்காகவே,

கற்பு நிலை என்று சொல்ல வந்தார் - இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

- என்று பெண்களை விடுதலைக் கும்மியடித்துப் பாட வைக்கிறான் பாரதி.

விடுதலைக் காதல்

பாரதியை சமுதாயக் கண்ணோட்டத்தில் சிந்தனையளவில் பெரிதாகப் பாதித்த கவிஞன் ஷெல்லி. இருவரும் ஆணாதிக்கத்தில் இருந்து பெண்ணை விடுவிக்கப் பேராயுதமாகக் கவிதையைப் பயன்படுத்தியவர்கள். ஆதிக்கம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை அடியோடு தகர்ப்பதற்கு முனைந்த ஷெல்லி பாரதியைப் பெரிதாகப் பாதித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

‘பெண்ணும் ஆணும் நம்பிக்கையோடும், காதலோடும் சமத்துவமாக, சுதந்திரமாக, தூய்மையாக இணைந்து தருமத்தின் மலைப்பாதைகளில்

*நடைபோடுவார்கள்'*

('Woman and man in confi dence and love, Equal and free and pure together trod The mountain - paths of Virtue...')

*- என்று சமத்துவக் குரல் கொடுக்கும் ஷெல்லி,*

*'ஒரு பெண் அடிமையாக இருக்கும்போது, ஆண் மட்டும் எப்படி சுதந்திரமாக இயங்க முடியும்?'*

('Can man be free if woman be a slave?')

*- என்று கேட்டவன்.*

*'புரட்சிப் புலவனான பாரதி உருவாக்கிக் காட்டும் புதுமைப் பெண் இந்திய மண்ணில் அதற்கு முன் வேறு எவரும் உருவாக்கிக் காட்டாத படைப்பாகும். சொல்லப் போனால், பாரதியின் புதுமைப் பெண் பல்வேறு அம்சங்களிலும் ஷெல்லி படைத்த சித்னாவின் வாரிசு என்றே கூற வேண்டும்' என்கிறார் 'பாரதியும் ஷெல்லியும்' என்ற ஒப்பாய்வுப் படைப்பில் ரகுநாதன்.*

www.t.me/tamilbooksworld

*பெண்விடுதலை பற்றிய கருத்தோட்டத்தில் ஷெல்லியுடன் பெருமளவில் ஒத்துப்போகும் பாரதி, ஷெல்லியின் கட்டற்ற விடுதலைக் காதலை அங்கீகரிக்கவில்லை.*

*'ஆணும், பெண்ணும் தங்களுக்குப் பொதுவான அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து, சட்டவரம்புக்குட்படாத காதல் மூலம், தங்கள் துயரத்துக்கு மாற்றான ஆறுதலைத் தாராளமாகப் பெறலாம்'*

('...Man and woman Their common bondage burst, may freely borrow From lawless love a solace for their sorrow')

*- என்று திருமண பந்தத்துக்கு எதிராக, கட்டுப்பாடற்ற காதலை ஆதரிக்கும் ஷெல்லியின் போக்கு இந்திய மண்ணின் மரபார்ந்த குடும்ப வாழ்க்கை முறைக்கு எதிராக இருப்பதை உணர்ந்த பாரதி அந்தக் கருத்தை முற்றாக மறுதலிக்கிறான். இங்கே ரகுநாதன் லெனின் வெளிப்படுத்திய கருத்தைத் தன் நூலில் மிகப் பொருத்தமாகப் பதிவு செய்திருப்பதைப் பாராட்டியே ஆகவேண்டும்.*

*'இந்தத் தண்ணீர்க் கோப்பைக் கொள்கை முற்றிலும் மார்க்சிய*

விரோதமானது. மேலும், சமூக விரோதமானது என்றே நான் கருதுகிறேன். உடலுறவு வாழ்க்கையில் வெறும் இயற்கையை மட்டும் கருதிப் பார்க்கக்கூடாது. கலாசாரத் தன்மைகளையும், அவை உயர்ந்தனவா, தரம் தாழ்ந்தனவா என்றும் பார்க்க வேண்டும்.

ஆண், பெண் பாலர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளும் உறவுகள் சமுதாயப் பொருளாதாரத்துக்கும், உடல் தேவைக்கும் இடையே நிகழும் சக்திகளது விளையாட்டின் வெளியீடு மட்டும் அல்ல. தாகம் தணிக்கப்படவேண்டும் என்பது உண்மைதான். என்றாலும், ஒரு சகஜமான மனிதன் சகஜமான சந்தர்ப்பங்களில் ஒரு சாக்கடையின் மீது படுத்து, குட்டையிலுள்ள தண்ணீரை, அல்லது பல உதடுகள் பட்டு விளிம்பெல்லாம் கறை படிந்துவிட்ட கோப்பையிலுள்ள தண்ணீரை அருந்துவானா?

சமுதாய அம்சம் எல்லாவற்றிலும் மிக முக்கியமானதாகும். தண்ணீரை அருந்துவது ஒரு தனிநபர் விவகாரம் என்பது உண்மையே. ஆயினும், காதலில் இரு உயிர்கள் சம்பந்தப்பட்டுள்ளன. மேலும், மூன்றாவது ஒரு புதிய உயிரும் தோன்றுகிறது. இதுதான் அதற்கு அதன் சமுதாய உள்ளடக்கத்தை வழங்குகிறது. இதுவே சமுதாயத்தின்பால் ஒரு கடமையையும் தோற்றுவிக்கிறது' (லெனின் பற்றிய நினைவுக் குறிப்புகள்).

www.t.me/tamilbooksworld

லெனின் சிந்தித்தபடியே பாரதியும் சிந்தித்திருக்கிறான். 'விடுதலைக் காதலாகிய கொள்கை, மனை வாழ்க்கைக்கு பொருந்தாது. மனை வாழ்க்கை ஒருவனும் ஒருத்தியும் நீடித்து ஒன்றாக வாழாவிட்டால் தகர்ந்து போய்விடும். இன்று வேறு மனைவி; நாளை வேறு மனைவி என்றால், குழந்தைகளின் நிலைமை என்னாகும்? குழந்தைகளை நாம் எப்படி சம்ரக்ஷணை பண்ண முடியும்? ஆதலால், குழந்தைகளுடைய சம்ரக்ஷணையை நாடி ஏகபத் நீ வ்ரதம் சரியான அனுஷ்டானம் என்று முன்னோரால் ஸ்தாபிக்கப்பட்டது...' என்று 'குடும்பக் கல்வி' கட்டுரையில் குறிப்பிடுகிறான் பாரதி.

பாரதியின் புதுமைப் பெண் கட்டற்ற காதல் வாழ்க்கையை வரவேற்பவள் அல்ல. ஆணின் தொடர்பின்றியே வாழ்வதுதான் பெண்ணின் பெருமை என்று விடுதலைக் கீதம் இசைப்பவள் இல்லை. கற்பு என்பது ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் 'ஆத்மப் பிரேமை' என்று விளக்கும் பாரதியின் புதுமைப் பெண் கற்பை ஒரு வேண்டாத வேலியாக நினைத்து அதைத் தாண்டத் துடிப்பவளும் இல்லை.

'நமது தேசத்து ஸ்திரிகள் இப்போது கொண்டிருக்கும் கற்பு, அடக்கம், ஒழுக்கம் முதலியன மாறிப்போய்விட வேண்டுமென்பது நமது கருத்தில்லை. இவர்களை இன்னும் சுயாதீனம், சுதந்திரம், அஞ்சாமை, தேசபக்தி முதலியவற்றிலே அவசியப் பயிற்சி பெறச் செய்ய வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை' என்று எழுதும் பாரதி உள்ளக் காதலுக்கும், உடல்வெறிக்கும் இடையிலுள்ள பேதத்தை அறிந்தவன். அதனால்தான்,

*குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்*

- என்று புதுமைப் பெண்ணை நம் பண்பாட்டுப் பழமை மாறாமல் பேசச் செய்கிறான்.

*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*

*நிலத்தில் யார்க்குமஞ் சாத நெறிகளும்*

*திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்*

*செம்மை மாதர் திறம்புவதில்லையாம்*

www.t.me/tamilbooksworld

- என்று புதுமைப் பெண்ணின் சுயேச்சையும் சுதந்திரமும் அவளுடைய செம்மை சார்ந்த அறத்தை அழித்துவிடுவதில்லை என்று சத்தியம் செய்கிறான்.

*காத லொருவனைக் கைப்பிடித் தேயவன்*

*காரியம் யாவினுங் கைகொடுத்து*

*மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்*

*மாட்சி பெறச்செய்து வாழ்வமடி*

- என்று பழமைப் பண்புகளுக்கும், புதுமை பொலியும் உரிமைகளுக்கும் பாலமிடுகிறான்.

ஷெல்லியின் கவியாற்றலில், சமூகச் சிந்தனைகளில் முழுமையாக மனம் பறிகொடுத்த பாரதி, 'அச்சமும் நாணமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று சொல்லி, காலம் காலமாக ஆண் வர்க்கம் போற்றிய 'உயிரினும் சிறந்தன்று நாணே' என்று தொல்காப்பியம்

வகுத்த வரையறையைத் தகர்த்தெறிந்தவன். ஆனால் 'கூடுவிட்டுக் கூடு பாயும்' ஷெல்லியின் விடுதலைக் காதலைப் 'பொய்மைக் காதல்' என்று பழிக்கிறான் நம் புதுமைக் கவிஞன். மானுடத்தின் பண்பாட்டு நெறிகளைப் புதுமைப் போர்வையில் பழித்தொதுக்குவதில் பாரதிக்கு அணுவளவும் உடன்பாடில்லை.

காதலிலே விடுதலை என்றாங்கோர் கொள்கை

கடுகி வளர்ந் திடுமென்பார் யூரோப்பாவில்;

மாதரெலாம் தம்முடைய விருப்பின் வண்ணம்

மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்;

பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே

பிரியம் வந்தால் கலந்து அன்பு பிரிந்துவிட்டால்

வேதனை யொன் றில்லாதே பிரிந்து சென்று

www.t.me/tamilbooksworld

வேறொருவன் தனைக் கூடவேண்டு மென்பார்

வீரமிலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்;

விடுதலையாங் காதலெனிற் பொய்மைக் காதல்

சோரரைப்போ லாண்மக்கள் புவியின்மீது

சுவைமிக்க பெண்மை நல முண்ணுகின்றார்

காரணந்தான் யாதெனிலோ ஆண்க ளெல்லாம்

களவின்பம் விரும்புகின்றார், கற்பே மேலென்

றீரமின்றி யெப் போது முபதேசங்கள்

எடுத்தெடுத்துப் பெண்களிட மியம்புவாரே

(பாரதி அறுபத்தாறு)

- என்று கடுமையாகத் தன் கருத்தைக் கவிதையாக்கிவிடுகிறான் பாரதி.

விவேகானந்தர் மீது விமர்சனக் கணை

கணவனை இழந்த விதவையின் மறுமணத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு முன்பு குரல் கொடுத்த மிகச் சில சிந்தனையாளர்களுள் மகாகவியும் ஒருவன். பால்ய விவாகம் நடந்து, பருவ வயதை அடைவதற்கு முன்பே கைப்பிடித்த கணவனை இழந்து, காலமெல்லாம் உடலின்பம் துறந்து, உணர்வுகளைச் சிதைத்தழித்துச் சிதைநெருப்பில் வேகும் வரை வாழ்வே கனத்த சுமையாக, கசந்த நினைவுகளுடன் நாட்களை நகர்த்தும் பெண்களின் மறுவாழ்க்கைக்காக முனைந்து போராடியவன் பாரதி.

கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு

வேரில் பழுத்த பலா - மிகக்

கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்

வடிகின்ற வட்ட நிலா

www.t.me/tamilbooksworld

- என்று உள்ளம் உருக விதவையரின் நிலையைக் கவிதையில் வடித்த பாவேந்தர் பாரதிதாசன்,

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்

அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?

பேடகன்ற அன்றிலைப் போல், மனைவி செத்தால்

பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்!

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?

பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,

பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

- என்று ஆணாதிக்க சமூகத்தின் முகத்திரையைக் கிழித்து, உள்ளே மறைந்திருக்கும் அருவருப்பான நிஜமுகத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். பாரதி, தன் சீடர் பாவேந்தருக்குத் தந்த சீதனம் இந்தச்

சமூகப் பார்வை.

இளம் குழந்தைகளுக்குப் பால்ய விவாகம் நடத்தி மகிழும் மூடத்தனத்தை பாரதி வன்மையான வார்த்தைகளால் தாக்கித் தகர்க்க முயல்கிறான்.

பாலருந்து மதலையர் தம்மையே

பாதகக் கொடும் பாதகப் பாதகர்

மூலத்தோடு குலங் கெடல் நாடிய

மூட மூட நிர்மூடப் புலையர் தாம்

கோலமாக மணத்திடைக் கூட்டு மிக்

கொலையெனுஞ் செயலொன் றினை யுள்ளவும்

சால வின்னுமோ ராயிர மாண்டிவர்

தாதராகி யழிகெனத் தோன்றுமே (சுயசரிதை)

www.t.me/tamilbooksworld

- என்ற கவிதையில் 'பாதகக் கொடும் பாதகப் பாதகர்' என்றும் 'மூட மூட நிர்மூடப் புலையர்' என்றும் பாரதி பயன்படுத்தும் பதப்பிரயோகங்களில் அவனுடைய கோபத்தின் நிறம் தெரிகிறது.

'கணவனை இழந்த மாதர், அவர்கள் கணவரை இழந்தார்களேயன்றி, உடம்பை இழக்கவில்லை; மனுஷ்ய இருதயத்தை இழந்துவிடவில்லை; காம விருப்பத்தை இழக்கவில்லை; காமக் கருவிகளை இழக்கவில்லை. அவர்கள் கல்லாகிவிடவில்லை; மண்ணாகிவிடவில்லை' என்று கைம்பெண்களின் நிலையை விளக்கும் கவிஞன்,

'கைம்பெண்களின் கண்ணீரைத் துடைக்கவும், தாய் தந்தையற்ற குழந்தைகளின் வயிற்றுக்குச் சோறிடவும் வழிகாட்டாத தெய்வத்தையேனும், மதத்தையேனும் நான் நம்ப மாட்டேன்' என்று விவேகானந்தர் உரைத்ததை மேற்கோள் காட்டுகிறான்.

'உங்கள் பெண்மக்களின் நிலைமையை உங்களால் உயர்த்த முடியுமா? முடியுமென்றால், வருங்காலத்தில் நீங்கள் க்ஷேமம் அடைவீர்களென்று நம்புதற்கிடமுண்டு. இன்றேல், இப்போதுள்ள கீழ்நிலையிலேயே இருக்க

வேண்டியதுதான்’ என்று பெண்கள் நிலை உயர உபதேசித்த விவேகானந்தர்,

‘நீங்கள் எப்போதும் பெண்கள் மீது குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, அவர்களுடைய முன்னேற்றத்துக்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்..? எந்த நாடு பெண்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையோ, எந்தச் சமுதாயம் பெண்களை மேன்மைப்படுத்தவில்லையோ அந்த நாடும், சமுதாயமும் எப்போதும் உயர்வடைந்ததில்லை; இனிமேலும் எதிர்காலத்தில் உயர்வடையப் போவதில்லை’ என்று பெண்களின் உயர்வுக்காக உரத்த குரல்கொடுத்த சுவாமி,

‘பெண்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான பிரச்னைகள் பல உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், கல்வி என்னும் மந்திரத்தால் தீர்த்து வைக்க முடியாத பிரச்னை அவற்றில் எதுவுமே இல்லை. உங்கள் பெண் மக்களுக்கு முதலில் கல்வியை அளியுங்கள். பின்னர், அவர்கள் போக்கில் விட்டு விடுங்கள். பிறகு தங்களுக்கு என்ன என்ன சீர்திருத்தங்கள் வேண்டும் என்று அவர்களே சொல்வார்கள். மாதர் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு நீ யார்? நீ என்ன, அவர்களைப் படைத்த ஆண்டவனா? கையைக் கழுவிக்கொண்டு விலகி நில். அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வார்கள்’ (புதிய இந்தியாவைப் படைப்போம்) என்று கூறுவது வியப்பைத் தருகிறது. பிரச்னையிலிருந்து சுவாமி தப்பிச்செல்வதாகவே பாரதிக்குப்படுகிறது.

www.t.me/tamilbooksworld

‘ ‘இந்தப் பெண் அல்லது அந்தக் குழந்தையின் முன்னேற்றத்துக்கு நான் வழி வகுப்பேன்’ என்று யாராவது சொல்லத் துணிவானானால் அது தவறு. முற்றிலும் தவறு. விதவைகளின் பிரச்னை பற்றியும், பெண்கள் நிலையைப் பற்றியும் எனது கருத்து என்ன என்று என்னை மீண்டும் மீண்டும் கேட்கிறார்கள். அவற்றுக்கான பதிலை இப்போது ஒரேயடியாகக் கூறிவிடுகிறேன். நான் என்ன விதவையா? பெண்ணா? என்னிடம் இந்த அசட்டுக் கேள்விகளை ஏன் திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள்?’ (புதிய இந்தியாவைப் படைப்போம்) என்று விவேகானந்தர் சொன்னது பாரதியைச் சுட்டது.

‘நீ கடவுளைத் தேடி எங்கும் போகவேண்டாம். ஏழைகள் எல்லோரும், கஷ்டப்படுவோர் எல்லோரும், பலகீனர் எல்லோரும் கடவுளல்லரா? அவர்களை ஏன் முதலாவது பூஜை செய்து கும்பிடக் கூடாது? கங்கைக் கரையிலே தண்ணீருக்காகக் கிணறு வெட்டப் போவதேன்?’ என்று

கேட்கும் சுவாமிக்குக் 'கைம்பெண்களின் கண்ணீர் கண்ணில் படவில்லையா?' என்ற பதைப்பு எழுகிறது பாரதிக்கு. 'கைம்பெண்களிடத்திலும் கடவுளம்சம் இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் நம்முடைய பிரம்மத்துக்குப் புறம்பானவர்களல்லர்' என்ற சிந்தனை சுவாமிக்குள் ஏன் எழவில்லை? என்று பாரதி யோசிக்கிறான்.

'சுவாமி விவேகானந்தர் இந்தியாவில் சீர்திருத்தக் கட்சியிலே சேர்ந்தால் தம்முடைய மடத்துக் கொள்கைகள் பரவ இடமிராதென்ற எண்ணத்தாலும், இயற்கையிலே தமக்குள்ள சந்யாசப் பைத்தியத்தாலும் கைம்பெண்களுக்கு விவாகம் நடத்திவைக்க வேண்டுமென்ற விஷயத்தில் மிகவும் அசிரத்தையுடன் பேசுகிறார். அமெரிக்கா ஸ்திரிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசிய கதையெல்லாம் அவருக்கு இந்தியா ஸ்திரிகளின் பரிபூரண சுதந்திரத்தைப் பற்றிப் பேசுமிடத்தே கொஞ்சம் மழுங்கிப் போய் விடுகிறது' என்று தான் பெரிதாக மதித்துப் போற்றிய விவேகானந்தரையே விமர்சிக்கத் துணிகிறான் மானுடம் போற்றிய மகாகவி.

'நம் நாட்டில் விதவா விவாகத்தைத் தடுத்திருக்கும் விஷயத்தைக் குறித்துப் பேசுவோம். இதன் சம்பந்தமான விதியைப் புகுத்திய ரிஷிகள் தீயோர்களென்று நினைக்கக் கூடாது. பெண்களைப் பரிபூரணமாக அடக்கியாள வேண்டுமென்ற விருப்பம் ஆண்களுக்கிருந்தாலும், அந்தக் காலத்திலிருந்த ஜனசமூக அவசரமொன்றின் உதவியைக் கொள்ளாமல் அவர்களால் இந்தச் சட்டம் செய்திருக்க முடியாது. இந்த வழக்கத்தைப் பற்றி இரண்டு விஷயங்கள் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கன. 1. விதவா விவாகம் தாழ்ந்த சாதியாருக்குள்ளே நடைபெற்று வருகிறது. 2. மேல் சாதியாருக்குள்ளே ஆண்களின் தொகையைக் காட்டிலும் பெண்களின் தொகை அதிகமாக இருக்கிறது' என்று விளக்கும் விவேகானந்தர்,

www.t.me/tamilbooksworld

'ஒவ்வொரு கன்னிகைக்கும் மணம் புரிவிப்பதால் தனித்தனி ஒவ்வொரு புருஷன் கிடைப்பதே அரிது. அப்படியிருக்க, ஒருத்திக்கே ஒருவன் பின் ஒருவராக இரண்டு மூன்று கணவர் கிடைப்பதெப்படி? ஆதலால், ஜனசமூகமானது ஒரு கட்சி கஷ்டப்பட விதித்திருக்கிறது. அதாவது, ஒரு முறை கணவனுடையவளாக இருந்தவளுக்கு இரண்டாம் கணவன் கிடையாதென்று விதி செய்திருக்கிறது...' என்று விதவை மறுமணத்துக்கு மாறாகக் கருத்து வழங்கியதை பாரதியால் ஜீரணிக்க முடியவில்லை.

எந்த விவேகானந்தரின் அறிவையும், ஆற்றலையும், ஆன்மிக சக்தியையும் வானளாவ பாரதி புகழ்ந்தானோ அந்த ஆன்மிக ஞானிக்கு

எதிராகப் பொங்கி எழுகிறான்.

‘விவேகானந்தர் மகா நீசத்தனமான வழக்கமொன்றுக்குத் தம்மையறியாமலே பொய் முகாந்தரங் கூறத் தலைப்பட்ட இடத்தில் முக்கியமான விஷயமொன்றை மறந்து போய்விட்டார்’ என்று குற்றம் சாட்டும் கவிஞன், ‘ஜனசங்கையா ஸ்திரிகளுடைய ஆபரணங்களைக் கழற்றி, அவர்களுடைய தலையைச் சிரைக்க வேண்டுமென்று சொல்கிறது? ஜனசங்கையா விதவைகள் ஒரு நேரந்தான் சாப்பிடலாமென்று விதித்தது? கைம்பெண் முகத்தில் விழிப்பதும், வீதியில் செல்லும்போது ஒருவனுக்குக் கைம்பெண் எதிர்ப்படுவதும் அபசகுனமென்று ஜனசங்கையா தீர்மானித்தது? ஜனசங்கையாம்... நொண்டிக் கதை!’ என்று பொங்கி வெடிக்கிறான்.

‘நான் எத்தனை கிழவனானபோதிலும், புதுக் கன்னிப் பெண்ணைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், ஸ்திரிகளுக்கு விவாக விஷயத்தில் ஆண்களுடனே சமத்வம் கிடையாதென்றும், ஸ்திரி ஒருவனுடைய சேர்க்கைக்காகக் கொள்ளப்படும் சமான சகியாகாமல், விலையடிமை மாத்திரமே ஆவாளென்றும் கருதி, ‘ஸ்திரி, சூத்திரர்கள்’ என்று தம் ஸ்திரிகளைத் தம்மைக் காட்டிலும் இழிந்த குலத்தாராகப் பாராட்டும் வகுப்பினருக்குள்ளேயே கைம்பெண்களுக்கு மற்ற ஸ்திரிகளைக் காட்டிலும் கூட அதிகமான கஷ்டங்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன’ என்று விவேகானந்தர் வைத்த சொத்தை வாதத்துக்கு எதிராகத் தன் நிலையைத் தெளிவாக்குகிறான் மகாகவி.

www.t.me/tamilbooksworld

சமூகத்தில் முரண்பட்ட முகங்களைச் சரிப்படுத்த நடத்திய எழுத்து யுத்தத்தில் அவன் எந்தப் பெரிய மனிதருக்காகவும் சற்றும் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மகத்தான சமூக லட்சியங்களே அவனுடைய எழுத்து வேள்வியின் இலக்குகளாக இறுதி வரை இருந்தன.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி

பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக் குள்ளே சில மூடர் - நல்ல

மாதர் அறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்

காட்சி கெடுத்திட லாமோ?

பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்

பேதைமை அற்றிடும் காணீர்

- என்று பாடிய கவிஞனுக்குப் பழமைப் போக்கில் பெண்களின் சமத்துவத்துக்கும் முன்னேற்றத்துக்கும் எதிராக எள் மூக்கின் முனையளவு கருத்தை உதிர்ப்பவர் எவராயினும் அவருக்கெதிராக மூர்த்தண்யமாகப் போராடத் தயக்கம் விளைந்ததே இல்லை.

மகாத்மாவின் கருத்தை மறுத்த மகாகவி

மகாத்மா காந்தி நடத்திய 'நவஜீவன்' இதழில் கைம்பெண்களின் எண்ணிக்கை வளர்ந்து வருவதைக் குறிப்பிட்டு ஒருவர் மனம் வருந்தி எழுதியிருந்தார். அதைப் பற்றி மகாத்மா கருத்து தெரிவித்து எழுதியபோது 'பால்ய விவாகத்தை நிறுத்திவிட வேண்டும். 15 வயதுக்குட்பட்ட கைம்பெண்களும், மற்ற இளமையுடைய கைம்பெண்களும் புனர்விவாகம் செய்துகொள்ள இடம் கொடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார். ஆனால், 'இந்த உபாயங்களை விருப்பமுடையோர் அனுசரிக்கலாம் என்றும், தமக்கு இதை அனுசரிப்பதில் விருப்பமில்லையென்றும், தம் குடும்பத்திலேயே பல விதவைகள் இருக்கலாமென்றும், அவர்கள் புனர் விவாகத்தைப் பற்றி யோசிக்கவே மாட்டார்களென்றும், தாமும் அவர்களை மறுமணம் செய்து கொள்ளும்படி கேட்க விரும்பவில்லை' என்றும் காந்தி விளக்கியிருந்தார்.

www.t.me/tamilbooksworld

காந்தியின் குறிப்பும் விளக்கமும் பாரதியின் பார்வையில் பட்டது. 'வாழ்க நீ எம்மான்' என்றும், 'மகாத்மா நீ வாழ்க, வாழ்க' என்றும் வாழ்த்துப்பா எழுதிய கவிஞன் காந்தியின் கருத்தை வரவேற்கவில்லை.

'ஆண் மக்கள் புனர்விவாகம் செய்து கொள்ளுவதில்லை என்ற விரதம் பூணுதலே விதவைகளின் தொகையைக் குறைக்கும் அருமருந்தாகும்' என்று 'காந்தி அபிப்ராயப்படுகிறார். இந்த விநோதமான உபாயத்தை முதல் முறை வாசித்துப் பார்த்தபோது எனக்கு ஸ்ரீமான் காந்தியின் உட்கருத்து இன்னதென்று விளங்கவில்லை. அப்பால் இரண்டு நிமிஷம் யோசனை செய்து பார்த்த பிறகுதான் அவர் கருத்து இன்னதென்பது தெளிவுபடலாயிற்று' என்று எழுதும் பாரதி தனக்குக் கிடைத்த தெளிவைப் பற்றிக் குறிப்பிடுகிறான்...

‘அதாவது, முதல் தாரத்தைச் சாகக் கொடுத்தவன் பெரும்பாலும் கிழவனாகவே இருப்பான். அவன் மறுபடி ஒரு சிறு பெண்ணை மணம் புரியுமிடத்தே அவன் விரைவில் இறந்து போய், அந்தப் பெண் விதவையாக மிஞ்சி நிற்க இடமுண்டாகிறது. ஆதலால், ஒரு முறை மனைவியை இழந்தோர் பிறகு மணம் செய்யாதிருப்பதே விதவைகளின் தொகையைக் குறைக்க வழியாகும் என்பது ஸ்ரீமான் காந்தியின் தீர்மானம்...’ என்று விளக்க முற்படும் பாரதி காந்தியின் கருத்தைக் கேலி செய்கிறான்.

‘ஸ்திரி விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால் காந்தி புருஷ விதவைகளின் (அதாவது, புனர்விவாகமின்றி வருந்தும் ஆண் மக்களின்) தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார். இதினின்றும், இப்போது ஸ்திரி விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்வது போல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்’ என்பவன்,

‘வயது முற்றிய ஆண் மக்கள் மணம் புரிந்துகொள்ளக் கூடாதென்று தடுக்க எவனுக்கும்; அதிகாரம் கிடையாது. எனவே, எவ்வகையாலே நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாயவிரோதமானது; சாத்தியப்படாதது; பயனற்றது’ என்று முற்றாக மறுத்துரைக்கிறான்.

‘விதவைகளின் தொகையைக் குறைப்பதற்கும், அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வழிதான் இருக்கிறது. அதை நம்முடைய ஜனத் தலைவர்கள் தைரியமாக போதிக்க வேண்டும். அதை ஜனங்கள் எல்லோரும் தைரியமாக அனுஷ்டிக்க வேண்டும்.’ என்று உபதேசிக்கும் பாரதி, ‘விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரை புனர்விவாகம் செய்து கொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத் தக்க மாதரை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும்’ என்று கொஞ்சமும் சாத்திர நிர்ப்பந்தங்களுக்காகப் பூசி மெழுகாமல் வெட்டொன்று, துண்டிரண்டு என்று தீர்வைத் தருகிறான்.

‘பால்ய விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாம் என்று ஸ்ரீமான் காந்தி சொல்கிறார். ஆனால், அதைக்கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியம் இல்லை; மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச்

www.t.me/tamilbooksworld

செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்துக்குத் தகுந்த மாற்று. மற்றப் பேச்செல்லாம் வீண் கதை' என்று 'விதவைகளின் நிலைமை' கட்டுரையில் முற்றுப்புள்ளி வைக்கிறான்.

பாரதியை விமர்சிக்கும் பெண்ணியவாதிகள்

நம் வாழ்காலத்தில் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரைப்போல் பெண்ணுரிமைக்குப் போராடிய மனிதர் வேறு யாருமில்லை. வழிவழியாக மதங்களின் பேரால் போற்றப்பட்டு வந்த மரபுகளை எல்லாம் உடைத்தெறிவதற்காகத் தன் வாழ்க்கையையே ஒரு போர்க்களமாக்கிக் கொண்ட பெரியார், 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற கருத்தாழம் மிக்க நூலில் பதிவு செய்திருக்கும் கருத்துகள் அனைத்தும் புரட்சிகரமானவை. அவர் ஒரு நாத்திகவாதி என்பதால் பெண்ணுரிமைக்காக உரத்துக் குரலெழுப்பிய அவருடைய சிந்தனைகளைச் சனாதனிகள் சகித்துக் கொள்ளவில்லை. பாரதி ஓர் சமயம் சார்ந்தவனாக இருந்ததனால், அவன் பூணூலை அறுத்தெறிந்த பின்பும், அவனுக்குப் பூணூல் போட்டே பார்த்துப் பழகியவர்கள் பெண்ணுரிமைக்காக பாரதி ஆற்றிய அரும்பணியைப் பாராட்டத் தயாராக இல்லை.

www.t.me/tamilbooksworld

'காமம் செப்பாது கண்டது மொழிதல்' தமிழகத்தில் இல்லாமற்போனது வருந்தத்தக்கது. பெரியாரின் பெண்ணுரிமைப் போரைப் பற்றிக் குறிப்பிடாமல் பேசுவதும் எழுதுவதும் எவ்வளவு பாவமோ, அவ்வளவு பாவம் புதிதாகப் பூத்திருக்கும் பெண்ணியவாதிகள் பாரதியைப் பழிப்பதும்.

நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பிராமண குலத்தில் பிறந்து, அந்தக் குலம் மனுநீதியின் பேராலும், சாத்திரங்களின் துணையாலும் எழுப்பியிருந்த அநீதிக் கோட்டைகளைத் தகர்த்துத் தரைமட்டமாக்கிய பாரதியைப் பழிப்பவர்களின் நேர்மை, நியாயத் தராசில் நிறுத்திப் பார்க்க வேண்டிய ஒன்று.

பாரதி பெண்ணின் கற்பு குறித்து எழுதியதும், விடுதலைக் காதலை மறுத்து ஒதுக்கியதும், கட்டற்ற காற்றைப் போல் எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுபட்டு விலகி, மனம் போன போக்கில் பெண் வாழ்வதற்கு வழியமைப்பதே உண்மையான பெண் விடுதலை என்ற புரிதலோடு பேனா பிடித்தவர்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால், 'பெண் விடுதலை' என்பது ஆணைப் பழிப்பதும், குடும்ப உறவை

மறுப்பதும், நினைத்தபடி வாழத் துடிப்பதும் அல்ல.

‘தமிழ்நாட்டு மாதர் சம்பூர்ணமான விடுதலைப் பெற வேண்டுவராயின் அதற்குக் கல்வித் தோணியே பெருந்துணையாம்.’

***

‘பலவித சாஸ்திரங்கள் படித்துத் தேறுங்கள், தமிழ்ச் சகோதரிகளே! அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளிநாடுகளுக்குப் போய், கீர்த்தி சம்பாதித்துக் கொண்டு வாருங்கள் (ஆண்கள் கடல் கடந்து போவதே சாஸ்திர விரோதம் என்று தடைபோட்ட காலத்தில் பெண்களை வெளிநாடு செல்லும்படி வேண்டிக் கொண்டவன் பாரதி) விடுதலை தெய்வம் உங்களைத் தழுவும் பொருட்டு இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு காத்து நிற்கிறது. தமிழ் மாதர்களே! மனம் சோர்ந்துவிடாதீர்கள். உங்களுக்கு நல்ல காலம் வருகிறது; வந்துவிட்டது; நீங்கள் விடுதலை பெறுவீர்கள்; உங்களால் உலகம் மேன்மையுறும்.’

***

www.t.me/tamilbooksworld

‘பெண்விடுதலையின் பொருட்டாக தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்குப் பராசக்தி துணை புரிவாள்.’

***

‘‘பரிபூரண சமத்துவமில்லாத இடத்தில் ஆண் மக்களுடன் நாம் வாழமாட்டோம்’ என்று சொல்வதால், நமக்கு நம்முடைய புருஷர்களாலும், புருஷ சமூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையோவாயினும், எத்தன்மை உடையனவாயினும், அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும் நாம் அஞ்சக் கூடாது.’

***

‘மனிதர் கீழே மனிதர் இருப்பதைக் காட்டிலும் சாதல் சிறந்தது. ஆணுக்காண் அடிமைப்பட்டிருக்கும் அநியாயத்தைக் காட்டிலும், ஆணுக்குப் பெண் அடிமைப்பட்டிருக்கும் அநியாயம் மிக மிகப் பெரிது.’

***

‘பெண்களுக்குக் கற்புநிலை எத்தனை அவசியமோ, அத்தனை ஆண்களுக்கு அவசியமில்லையென்று நினைப்பதைப் போல் மூடத்தனம்

வேறு கிடையாது.'

***

'பெண்களுக்கு விடுதலை உண்டானால் ஒழிய விவாக சம்பந்தமான ஆயிரத்தெட்டு ஊழல்கள் நீங்க வழியில்லை.'

***

'பெண்களை மிருகங்களாக வைத்து, ஆண்கள் மட்டும் மகரிஷிகளாக மாற முயலுதல் மூடத்தனம். பெண்மை உயராமல் ஆண்மை உயராது' என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாரதி பெண்ணுரிமையை நிலைநாட்ட முயன்றிருக்கிறான். இதுபோன்று அன்று பெண்ணுக்காக எந்த நேரமும் சிந்தித்து எழுதியது இவனன்றி வேறு யார்?

பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை யென்றால்

பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை

***

www.t.me/tamilbooksworld

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்

***

மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்

வைய வாழ்வு தன்னில் எந்த

வகையினும் நமக்குளே

தாதர் என்ற நிலைமை மாறி

ஆண்களோடு பெண்களும்

சரிநிகர் சமானமாக

வாழ்வம் இந்த நாட்டிலே!

***

உயிரைச் சேர்க்கும் உயிரினைக் காத்திடும்

உயிரினுக் குணவா யின்ப மாகிடும்

உயிரினு மிந்தப் பெண்மை இனிதடா

***

சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந்தெய்வச்

சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்

***

மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்

www.t.me/tamilbooksworld

மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்

***

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா

பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா

***

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா

மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்

கலி யழிப்பது பெண்க ளறமடா

- என்றெல்லாம் பாரதிக்கு முன்னாலே பெண்ணுக்காகப் பரிந்து, நெஞ்சம் நெகிழ்ந்து பாடியவன் யார்?

பெண் விடுதலை பெற மனித சமூகம் உடனே செய்ய வேண்டிய காரியங்கள் என்று, மோசஸின் ‘பத்து கட்டளைகள்’ போன்று பாரதி

பத்து கட்டளைகளைப் பிரகடனம் செய்கிறான்:

1. பெண்களை ருதுவாகுமுன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

2. அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.

3. விவாகம் செய்துகொண்ட பிறகு, அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.

4. பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்கு சமபாகம் கொடுக்க வேண்டும்.

5. புருஷன் இறந்த பின்பு ஸ்திரி மறுவிவாகம் செய்துகொள்வதைத் தடுக்கக் கூடாது.

6. விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரிகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடங் கொடுக்க வேண்டும்.

www.t.me/tamilbooksworld

7. பெண்கள் கணவனைத் தவிர, வேறு புருஷருடன் பேசக்கூடாதென்றும், பழகக்கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிட வேண்டும்.

8. பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

10. தமிழ்நாட்டில் ஆண் மக்களுக்கே ராஜரிக சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே, அது பெண்களுக்கு வேண்டுமென்று இப்போது கூறுதல் பயனில்லை. எனினும், சீக்கிரத்தில் தமிழருக்கு சுய ராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.

இந்த 125 ஆண்டு காலநடையில் இதுவரை எந்தப் பெண்ணியவாதியும் பாரதி சிந்தித்த பெண்ணுரிமைகளுக்கு மேலாகப்

புதிதாய் சிந்தித்துவிடவில்லை. அந்த மகாகவியின் பிரகடனத்தின்படி பத்து உரிமைகளும் பெண்களுக்கு முழுமையாக வந்து சேர்ந்துவிட்டால் அதைவிடப் பெண்விடுதலை வேறெதுவுமில்லை.

வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்

(குறுந்தொகை - 135)

- என்ற சங்கப் பாடலில் மனையில் தங்கியிருப்பதற்கு மட்டுமே மகளிர் உரிமை படைத்தவர்கள் என்பதை 'மனையுறை மகளிர்' குறிக்கின்றது.

மனைக்கு விளக்காகிய வாள்நுதல் (புறநானூறு - 314)

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே (புறம் - 312)

மகனை வயிற்றில் சுமந்து பெற்று வளர்ப்பது மட்டுமே தாயின் கடமை என்கிறது புறநானூறு. இதுதான் வழிவழியாகத் தமிழரின் பண்பாட்டுப் பார்வை. இதற்கு மேல் பெண்ணுரிமை குறித்து யாரும் பெரிதாகச் சிந்தித்துவிடவில்லை. மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், திரு.வி.க.வும் பெண்களைப் போற்றினர் என்பது உண்மை. ஆனால், பாரதி போன்று வேறு யாரும் பெண்ணுரிமைக்காகப் படைநடத்தவில்லை. பாரதிக்குப் பின்பு பாவேந்தரும், பெரியாரும் பெண்களின் உரிமை காக்க முறையே இலக்கிய, அரசியல் களத்தில் இடையறாது போராடினார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

'ஆணெனும் அரக்கனாக வாழ்வதிலும் பெண்ணெனும் தெய்வமாக வாழ்வதில் எனக்கு மிகுந்த விருப்புண்டு. பெண்ணைக் கடவுளாகக் கருதிப் போற்றுவதினுஞ் சிறந்த தவம் பிறிதொன்றிருக்கிறது என்று எனக்குத் தோன்றவில்லை. பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண் மகன் கடமை. பெண் இல்லையேல் உலகேது? உயிரேது? அன்பேது? கடவுளேது?

ஆண் மக்களே... உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது. உங்களைப் பெற்றவள் பெண். உங்களை வளர்ப்பவள் பெண். உங்களோடு வாழ்பவள் பெண். உங்களைப் பொன்னாக்கிடுபவள் பெண். பெண்ணால் நலனடையும் நீங்கள் அப்பெண்ணுலகையா வெறுப்பது? துறப்பது? உலகில் ஆண்மகன் எவன்? பெண்ணின் பெருமை உணர்ந்தவனே ஆண்மகனாவான்' என்று கல்லும்

www.t.me/tamilbooksworld

உருகுகிறாற்போல் கனிவாகப் பெண்ணினத்துக்காகப் பேசியவர் திரு.வி.க. அந்த ‘தமிழ்த்தென்றல்’ திரு.வி.க., ‘தமிழ்நாட்டில் தோன்றிய புலவருள் பெண்ணுரிமைக்குப் போராடிய வீரருள் தலைசிறந்து விளங்குபவர் பாரதியாராவார். அவருள்ளமெல்லாம் பெண்ணுரிமை மீது தவழ்ந்து நின்றது’ என்று பரவசத்துடன் பாராட்டுகிறார். இதைவிட வேறெந்தப் பாராட்டு வேண்டும் பாரதிக்கு!

‘பாஞ்சாலி சபதம்’ பாடியதேன்?

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்

திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்

ஆழமும் விரிவும் அழகுங் கருதியும்

எல்லை யொன்றின்மை யெனும் பொருளதனைக்

கம்பன் குறிகளாற் காட்டிட முயலு

முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழ்ச்

www.t.me/tamilbooksworld

சாதியை யமரத் தன்மை வாய்ந்தது வென்

றுறுதி கொண்டிருந்தேன்... (விதியே, விதியே)

- என்று பாடுகிறான் பாரதி,

‘தமிழச் சாதி சாகாவரம் பெற்ற சாதி. காரணம், தமிழனிடம்தான் திருக்குறளும், சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் இருக்கின்றன’ என்று கொண்டாடியவன் அவன். இதிகாசங்களில் ஒன்றான ராமாயணத்தைத் தமிழில் தந்ததற்காக வியந்து வியந்து கம்பனைக் கொண்டாடியவன். கதைப்பாடல் (epic fragments) பாட முற்படும்போது மகாபாரதத்தைக் கையில் எடுக்கிறான். காரணம், மண்ணுரிமையைப் பற்றியும், பெண்ணுரிமையைப் பற்றியும் பாடுவதற்கான களம் பாஞ்சாலி துகிலுறியப்படும் காட்சியில் கவிஞனின் மனக் கண்ணில் படுகிறது. பாஞ்சாலியைப் பெண்ணுரிமைக்குப் போராடும் ஒரு படிமமாகப் பயன்படுத்துகிறான் பாரதி.

நாயகர் தாந்தம்மை தோற்றபின் - என்னை

நல்கும் உரிமை அவர்க்கில்லை - புலைத்

தாயத்திலே விலை பட்டபின் - என்ன

சாத்திரத் தாலெனைத் தோற்று விட்டார்?

- என்று பாரதியின் பாஞ்சாலி துரியோதனன் அவையில் துகிலுறியப்படும் நிலையில் கேள்வி கேட்கிறான்.

பாண்டவர்கள் ‘தாயத்திலே விலைப்பட்டவர்’ என்று பேசும் பாஞ்சாலி, அடிமைகளுக்கு மனைவியின் மீது உரிமை கிடையாது என்றுணர்த்த விரும்பி, தன்னைப் ‘புவி தாங்கும் துருபதன் கன்னி நான்’ என்று அறிமுகம் செய்கிறாள்.

‘ஒருவனுக்குச் சொந்தமாக ஆடு, மாடு, வீடு போன்ற ஆயிரம் உடைமைகள் இருக்கலாம். ஆனால், மனைவி கணவனின் உடைமைப் பொருள் இல்லை’ என்று தெளிவுபடுத்தவே பாரதி பாஞ்சாலியைத் ‘துருபதன் கன்னி நான்’ என்று பேசவைக்கிறான். ‘பாண்டவர்க்கு மனைவியானாலும், தான் ஒரு சுயேச்சையான அரச மகள். அந்த அரச மகளை அடிமைப்படுத்த, கட்டிய கணவர் உட்பட யாருக்கும் உரிமையில்லை’ என்கிறாள் பாரதியின் பாஞ்சாலி.

www.t.me/tamilbooksworld

நாட்டை அடிமைப்படுத்திய போதும், தம்பியர் தம்மை அடிமைப்படுத்திய போதும் பொறுமை காட்டிய வீமன், பாஞ்சாலியைத் தருமன் பகடையாக வைத்து தோற்றதும்,

துருபதன் மகளைத் - திட்டத்

துய்ந னுடற் பிறப்பை

இரு பகடை யென்றாய் - ஐயோ!

இவர்க் கடிமை யென்றாய்!

இது பொறுப்ப தில்லை - தம்பி!

எரி தழல் கொண்டு வா

கதிரை வைத் திழந்தான் - அண்ணன்

கையை எரித் திடுவோம்

- என்று எரிமலையாகப் பொங்குகிறான். வியாசனிலும், வில்லிபுத்தூராரிலும் இப்படி வீமன் தருமனைப் பேசவில்லை. ஆனால், பெண்ணை ஒரு பொருளாகப் பாவித்துப் பகடையாக்கிய படுபாதகச் செயலைத் தருமன் செய்தபோது, பாரதியின் வீமன் கையை எரிக்கத் துடிக்கிறான். அங்கே வீமனா பேசுகிறான்? இல்லை. பெண்ணுரிமை காக்கப் புறப்பட்ட பாரதி பேசுகிறான். இளங்கோ அடிகளுக்குப் பின்னால், ஒரு சமூக லட்சியத்துக்காகவே பெண்ணைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்ட பாஞ்சாலி சபதத்தை பாரதி படைத்திருக்கிறான்.

கவிதை, கதைப்பாடல், கட்டுரை என்று வெவ்வேறு வடிவங்களில் பாரதியின் பெண்ணுரிமைச் சிந்தனை சிறகடிக்கிறது. அதனால்தான் திரு.வி.க., 'அவர் உள்ளமெல்லாம் பெண்ணுரிமை மீது தவழ்ந்து நின்றது' என்று 'ஆழ்ந்திருக்கும் கவியுளம் கண்டு' மொழிந்தார். பெண்மை வாழ்கென்று நாம் பாரதி வழி நின்று வாழ்த்துவோம்!

www.t.me/tamilbooksworld

# 7



## சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே...

தமிழ்
மொழியைத்
தமிழாக்க
வந்த
தவப்புதல்வன்
பாரதி.
தமிழர்கள்
மறந்து
விட்ட
தமிழ்
இன்பத்தை
மீட்டும்
உணர்த்தப்
பிறந்த
ஒப்பிலாப்
புலவன்
பாரதி.
எல்லாப்
புலவர்களும்
'வாழி '
பாடியிருக்கிறார்கள்.
பாரதி
பாடுகின்ற

www.t.me/tamilbooksworld

‘வாழி
’யைப்
பாருங்கள்.

‘வாழிய
செந்தமிழ்!
வாழ்கநற்
றமிழர்!

வாழிய
பாரத
மணித்திரு
நாடு! ’

என்று
‘வாழி
’யை
ஆரம்பித்த
வேறொரு
புலவனைக்
காட்டுங்கள்.
இப்படி
ஆரம்பித்த
‘வாழி ’ப்
பாட்டின்
அர்த்தத்தைக்
கவனிக்க
வேண்டும்...
தமிழின்
நல்லறிவும்,
தமிழர்களுடைய
நற்குணமும்
வாழ்ந்தால்தான்
இந்த
‘பாரத
மணித்திருநாடு
’என்ற
இந்தியா
வாழும்.
ஏனெனில்,

www.t.me/tamilbooksworld

தமிழ்
மொழியில்தான்
இந்த
பாரத
நாட்டின்
நல்லறிவு
நிறைந்திருக்கிறது.
இந்த
பாரத
நாட்டின்
நல்லறிவாகிய
ஞானத்தைத்
தமிழனுடைய
வாழ்க்கையிலேதான்
அதிகமாகக்
காணலாம்.
அதனால்,
தமிழும்
தமிழனும்
வாழ்ந்தால்தான்
இந்தியா
வாழும்.
தமிழ்மொழி
வாழவில்லையானால்
இந்திய
நாகரிகம்
இறந்து
விடும்
என்பது
இதிலுள்ள
தீர்க்கதரிசனம்.

- நாமக்கல் கவிஞர்
வெ.ராமலிங்கம் பிள்ளை.

**த**மிழுக்குப் புதிய உயிரும், உருவமும், உள்ளடக்கமும் கொடுத்து அதை நவீனப்படுத்தியவன் பாரதி. பழம்பெருமை பேசிக்கொண்டு இருப்பதால் தமிழ் வளர்ந்து விடாது என்று உண்மை பேசியவன் அவன்.

www.t.me/tamilbooksworld

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டுமென்றும், இறவாத புகழுடைய புது நூல்கள் நம் தாய்மொழியில் படைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய அவன்தான், எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவையும் தமிழில் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான். மேற்கில் வளரும் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் கலைகளனைத்தும் தமிழில் இடம்பெற வேண்டும் என்று பாட்டுத் தவமியற்றிய பைந்தமிழ்ச் சாரதி நம் பாரதி.

பாரதி பிராமணனாகப் பிறந்ததனாலும், வடமொழியை அவன் தமிழோடு சேர்த்துப் போற்றியதாலும், 'பிராமணத் தமிழில்' கட்டுரைகள் தீட்டியதனாலும் சிலருக்கு அவன் தீண்டப்படாதவன் ஆனான். பாரதியை இனப்பகையோடு பார்க்கப் பழகிவிட்ட சில தீவிரத் தமிழ்த் தேசியவாதிகள் அவன் மீது சற்றும் பொருந்தாத பிராமணிய மேலாண்மைச் சாயத்தைப் பூசி மகிழ்கிறார்கள். ஆனால், தமிழையே மூச்சாக சுவாசித்த பாவேந்தருக்கு இந்த பாரதியே ஆதர்சம் என்பதை ஏனோ அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

பாரதியை விட தமிழ்ப்பற்றாளன் யார்?

www.t.me/tamilbooksworld

சொல்லி லுயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத்

தொழுது படித்திடடி பாப்பா

- என்று குழந்தைப் பருவத்திலேயே தாய்மொழியாம் தமிழை இறைமை நிலையில் வைத்து அன்றாடம் பக்தியுடன் தொழுது படிக்க வேண்டும் என்று போதிக்கும் பாரதி,

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற

தாயென்று கும்பிடடி பாப்பா

- என்று வயிற்றில் சுமந்த அன்னையையும், வாழ்க்கை முழுவதும் சுமக்கும் மண்ணையும் சேர்த்து நெஞ்சில் நிறுத்திக் கும்பிடத் தூண்டுகிறான்.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

- என்று ஒவ்வொரு வரியிலும் தமிழனுக்கு மொழி, இனம், நாடு குறித்த பார்வை எப்படி இருக்க வேண்டுமென்று பாடம் நடத்துகிறான் பாரதி. முதலில் என்னுடைய தாய்மொழியின் நலன், அடுத்து என் மொழி பேசும் இனத்தின் நலன், அவற்றிற்கடுத்தே தேசத்தின் நலன் என்று தெளிவுபடுத்துகிறான். தேச நலனைக் காட்டி, தாய்மொழியையும், தமிழினத்தையும் புறந்தள்ள பாரதி தயாராக இல்லை. பாரதியின் வடமொழி நேசத்தை வைத்துக்கொண்டு அவனை வேற்றாளாகப் பாவித்துப் பழிதூற்றுவது பண்புடைமையாகாது. பாரதியும் விவேகானந்தரும் வடமொழியைப் பெரிதாகப் போற்றியதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

'நீங்கள் ஏன் சமஸ்கிருத பண்டிதர்கள் ஆகக்கூடாது? இந்தியாவிலுள்ள எல்லா சாதிகளுக்கும் சமஸ்கிருத கல்வி அளிப்பதற்காக நீங்கள் ஏன் கோடிக்கணக்கான பணம் செலவு செய்யலாகாது? இவற்றை நீங்கள் செய்து முடிக்கும்போது, பிராமணனுடன் சமமாகிறீர்கள். இந்தியாவில் செல்வாக்குப் பெறும் ரகசியம் அதுவேயாகும். இந்தியாவில் சமஸ்கிருதமும் மரியாதையும் பிரிக்க முடியாதவையாக இருக்கின்றன. நீங்கள் சமஸ்கிருதக் கல்வி பெற்றவுடன் உங்களுக்கு விரோதமாக யாரும் எதுவும் சொல்லத் துணியார்கள்' (நமது தாய்நாடு) என்கிறார் விவேகானந்தர்.

www.t.me/tamilbooksworld

'இயலுமானால் நம் நாட்டிலுள்ள அனைவரும் சமஸ்கிருத வல்லுனராக வேண்டும்... சமஸ்கிருத வார்த்தைகளின் ஒலியே நம் இனத்துக்கு ஒரு மதிப்பையும், ஆற்றலையும் வலிமையையும் தருகிறது' (இளைய பாரதமே எழுக) என்று சொல்லும் சுவாமி விவேகானந்தரிடம் ஒரு குறிப்பை நாம் காண வேண்டும். சமஸ்கிருதம் தெய்வமொழி என்றும், அதைச் சண்டாளர்கள் காதில் கேட்பதே பாவமென்றும் மனுதர்மம் தடைவிதிக்கும்போது, தாழ்த்தப்பட்ட சாதியினரும் பிராமணருக்குச் சமமாக சமூகத்தில் இடம்பெற சமஸ்கிருதம் படிப்பதே சிறந்த வழி என்று உணர்த்துகிறார். சாதிகளிடையே சமத்துவம் காணும் விவேகானந்தரை நாம் நெஞ்சில் வைத்துப் போற்றினாலும், சமஸ்கிருதத்தை இந்தியாவின் பொதுமொழியாக்க அவர் முயல்வதை நம்மால் ஏற்கவியலாது. சமஸ்கிருதம் அறிதலே மரியாதையை அடையும் வழி என்ற அவர் கூற்றில் பழமைச் சனாதனச் சிந்தனையே பல்லிளிக்கிறது.

விவேகானந்தர், அரவிந்தர் ஆகிய இருவரின் செல்வாக்கை பாரதியின் சிந்தனைகளில் நாம் எளிதில் இனங்காண முடியும். ஆன்மிக உலகின் இரண்டு துருவ நட்சத்திரங்களாக பாரதி அவர்களைப் பார்க்கிறான்.

விவேகானந்தரின் சில பழமைக் கருத்துகள் மீது பாரதிக்கு மிகக் கடுமையான விமர்சனம் உண்டு. ஆனால், அரவிந்தர் மீது அவன் வெளிப்படையாக எந்த விமர்சனத்தையும் வைத்ததில்லை. விவேகானந்தரும் அரவிந்தரும் வடமொழியே பண்டைக்காலம் முதல், பொது மொழியாக இருந்ததாகக் கூறுவதில் பாரதிக்கும் உடன்பாடு உண்டு.

‘நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமும்கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் சமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று, மற்ற சாதாரண பாஷைகளெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை என்கிறோம்’ (பாரதியார் கட்டுரைகள்) என்கிறான் பாரதி. பாரதிக்கு எதிரான விமர்சகர்களுக்கு இதுபோன்ற குறிப்புகள் தீனியாகிவிடுகின்றன. பாரதியின் எல்லாக் கருத்துகளையும் நாம் கண்மூடிப் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயமில்லை. நாம் ஏற்றுக் கொள்கிறார்போல் முரண்படுவதற்கு இடமேயன்றி கருத்துகளை வழங்கியவர்கள் உலகில் ஒருவரும் இல்லை.

www.t.me/tamilbooksworld

இந்தியாவுக்குப் பொது மொழி எது? என்பதில் பாரதிக்கு இருந்த குழப்பத்தையும், முரண்பாட்டையும் ‘பாரதியின் மொழிச் சிந்தனைகள்’ என்ற ஆய்வு நூலில் எம்.ஏ.நுஃமான் அவனுடைய இரண்டு மாறுபட்ட குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்துகிறார். ‘தமிழர்களாகிய நாம் ஹிந்தி பாஷையிலே பயிற்சி பெறுதல் மிகவும் அவசியமாகும். இந்தியா பலவித பிரிவுகளை உடையதாக இருந்தபோதிலும், உண்மையிலே ஒன்றாக இருப்பதற்கிணங்க, அதிலுள்ள வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு பாஷைகளிருந்த போதிலும், முழுமைக்கும் ஒரு பொது பாஷை வேண்டும். தமிழர்களுக்குத் தமிழும் ஹிந்தியும் என, இவ்வாறே எல்லா வகுப்பினரும் அறிந்திருப்பார்களேயானால் நமக்குப் பொது பாஷை ஒன்றிருக்கும்’ (ஹிந்தி பாஷைப் பக்கம் - இந்தியா 1906 டிசம்பர் 15) என்று நம் தேசத்தின் பொது மொழியாக ஹிந்தி இருப்பதே சாத்தியமானது என்று எழுதும் பாரதி,

‘இந்தியாவுக்குப் பொது பாஷையாகிய ஹிந்தியை வழங்கலாமென்று காந்தி முதலிய பல பெரியோர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால், பாரத தேசபக்த சிரோ ரத்னமென்று கூறத்தக்க அரவிந்த் கோஷ் முதலிய வேறு பலர் சமஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொது பாஷையென்றும், நாம் அதைப் புதிதாக அங்ஙனம் சமைக்க

வேண்டியதில்லை என்றும், ஏற்கெனவே ஆதிகாலந்தொட்டு அதுவே பொது பாஷையாக இயல்பெற்று வருகிறது என்றும் சொல்லுகிறார்கள்' (இந்தியாவுக்குப் பொது பாஷை - சுதேசமித்திரன் 1921) என்று அரவிந்தரின் வழியில் வடமொழியைப் பொது மொழியாகக் கொள்வதே பொருத்தமானது என்கிறான்.

இந்த இரண்டு முரண்பட்ட கருத்துகளையும் தன்னுடைய நூலில் பதிவு செய்த நுஃமான், 'அரவிந்தரின் கொள்கை பாரதி மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம். பாரதிக்கு இயல்பாகவே இருந்த வடமொழிப் பற்றும் இதற்கு ஒரு காரணமாகலாம். தமிழை ஒரு பிராந்திய மொழியாகவும் (Regional Language) வடமொழியை ஒரு அகில இந்திய மொழியாகவும் (All India Language) பாரதி கருதியுள்ளான்' என்று மிகச்சரியாகக் குறிப்பிடுகிறார்.

'தமிழ்நாட்டில் தமிழ் சிறந்திருக்க, பாரத தேசம் முழுவதும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மென்மேலும் ஓங்குக. எனினும், தமிழ்நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக' என்ற பாரதியின் குறிப்பை நுஃமான் தன் முடிவுக்கு ஆதாரமாக்குகிறார்.

www.t.me/tamilbooksworld

இந்தியாவின் பொது மொழியாகத் தமிழை பாரதி சிந்திக்கவில்லை என்பதற்காக அவனைத் தமிழ்ப்பற்றாளன் இல்லையென்று யாரும் அவசரப்பட்டு அறிவித்துவிட முடியாது. ஆன்மிக உணர்வில் இணைந்திருக்கும் இந்திய மக்களுக்கிடையே இணைப்புப்பாலமாக வடமொழிதான் இருக்க முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்திய விவேகானந்தரும், அரவிந்தரும், பாரதியும் இந்து சமயச் சார்பாளர்கள் என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். அரசியல், சமூக, பொருளாதார காரணிகளின் நிர்ப்பந்தத்தைக் கணக்கில் கொள்ளாமல், மதம் சார்ந்த உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வடமொழியைப் பொது மொழியாக இந்த மூவரும் அங்கீகரிக்க முனைந்ததில் அறிவியல் பார்வை அறவே இல்லை. பல்வேறு இன, மத, மொழிகளைப் பின்பற்றும் மக்களின் கூட்டமைப்பாக இருக்கும் இந்தியாவின் பொது மொழியாக இந்தியோ, வடமொழியோ திணிக்கப்படுவது தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும். பொது மொழி குறித்த பாரதியின் பார்வை தெளிவற்றது.

'தமிழ்நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்று தழைக்க வேண்டும்' என்பதில் பாரதி தன்னளவில் ஓர் இயக்கமாகவே செயற்பட்டிருக்கிறான்.

தமிழ் மீது அவனுக்கிருந்த எல்லையற்ற காதலை நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் காணும்போது, தமிழ் வெறி தலைக்கேறிய ஒரு தீவிரமான தாய்மொழிப்பற்றாளனை, பற்றின் வரம்பு கடந்த ஒரு வெறிபிடித்த தமிழனைத் தரிசிக்க முடிகிறது.

'தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும். தம்பி... நான் ஏது செய்வேனடா; தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு சாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு சாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது'

'தம்பி... தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது. அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது. தமிழ்நாட்டில் ஒரே சாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் சாதி. அது ஆர்ய சாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது...' (19 ஜுலை 1915-ல் எழுதிய கடிதம்) என்று நீள்கிறது பாரதி பரலி. சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம். உள்ளத்தின் ஆழத்தில் தமிழுணர்வு ஊறிக் கிடந்தாலன்றி இப்படியொரு கடிதத்தை யாராலும் எழுதவியலாது.

www.t.me/tamilbooksworld

பாரதி பார்வையில் தமிழபிமானி

'தமிழ் வாழ்க' என்று வெற்றுக்குரல் கொடுப்பவரும், 'தமிழுக்கு உயிரைத் தருவேன்' என்று நரம்பு புடைக்க மேடையில் நாக்கு யாகம் நடத்துபவரும் உண்மையில் தமிழபிமானியாக மாட்டார்கள் என்பது பாரதியின் எண்ணம்.

'தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்கள் எல்லாம் தமிழ் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர்

பேசும்போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி...' ('தெலுங்கர் மகா சபை' கட்டுரை).

'பள்ளிக்கூடத்து சாஸ்திரங்கள் தமிழ் பாஷையில் கற்றுக் கொடுக்கும் முயற்சி' இன்று வரை நிறைவேறவில்லை. தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் ஆங்கிலம் கலவாமல் நல்ல தமிழில் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் காலநடையில் காணாமற்போய்விட்டது. 'Tomorrow evening five o'clock beach-ல meet பண்ணுவோம்' என்றுதான் இப்போது படித்த தமிழர்கள் 'தங்கிலீஷ்' பேசுகிறார்கள்.

ஆங்கிலம், பிரெஞ்சு, வடமொழி, இந்துஸ்தானி, உருது, ஓரளவு தெலுங்கு என்று பலமொழி அறிந்த பாரதி 'தமிழில் பேசுவேன், தமிழில் எழுதுவேன், தமிழிலேயே சிந்தனை செய்வேன்' என்று சத்தியம் செய்கிறான். 'தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால், சகல சாஸ்திரங்களும், தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லாம் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதை அனுசரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை' என்று வருந்தி எழுதுகிற பாரதியைத் தமிழ்ப் பற்றாளர்களில் சிலர் தங்கள் சித்தாந்தக் கண்ணாடி மூலம் பார்ப்பனனாகப் பார்த்துப் பழிப்பது மாபெரும் பாவம்.

www.t.me/tamilbooksworld

கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'மாடர்ன் ரெவ்யூ' என்ற மாத இதழில் திருநெல்வேலி இந்து கல்லூரியின் வரலாற்றுப் பேராசிரியர் ஒரு கடிதம் எழுதுகிறார். 'கல்வி நிலையங்களில் வரலாறு பாடத்தை ஆங்கிலத்தில் கற்பிப்பதை விட தேசிய மொழிகளில் கற்றுக்கொடுத்தால் மாணவர்களுக்கு நல்ல பயன் விளையும்' என்று யதுநாத சர்க்கார் என்பவர் எழுதிய கருத்தை மறுத்து இந்து கல்லூரிப் பேராசிரியர் நீலகண்ட அய்யர் தம் கருத்தை வெளியிடுகிறார்.

'எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிக பயன்படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும், வழக்குப் பிழைகளும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷ் நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை விவரிக்கும்போது

எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது' என்று எழுதிய நீலகண்ட அய்யரை பாரதி 'தமிழ்' என்ற கட்டுரையில் வன்மையாகக் கண்டிக்கிறான். 1916-ல் கல்கத்தா இதழில் ஒரு ஆங்கில அபிமானம் கொண்டு தமிழுக்கு எதிராக எழுதிய பேராசிரியரின் குறிப்பை மறுத்து பாரதியைப் போன்று எழுதியவர் வேறு யார்?

'இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்ட அய்யரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சரித்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!! ' என்று ஏளனம் செய்கிற பாரதி, அந்த மனிதரின் அறியாமையைக் கடுமையாக விமர்சனம் செய்கிறான்.

'இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப்போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் சாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து சாதியாரெல்லாம் நம்மை அறிவிலும், சாஸ்திரங்களிலும், பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து சாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை; வாலில்லாக் குரங்குகளில்லை; நமக்கு பாஷைகள் இருக்கின்றன. நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புகளைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது' என்கிறான் மனம் நிறைந்த வேதனையுடன் மகாகவி.

www.t.me/tamilbooksworld

'என்னுடைய சொந்த அபிப்ராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன். உலகத்திலுள்ள சாதியார்களிலே ஹிந்து சாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து சாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை' என்ற பாரதியின் வார்த்தைகளை ஆழ்ந்து படிக்க வேண்டும். அவனுக்குப் பழக்கமுள்ள நாலைந்து பாஷைகளில் சமஸ்கிருதம் ஒன்று. ஆனால், தமிழைப்போல் வலிமையும் திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வடமொழி உட்பட வேறொன்றுமில்லை என்பதுதான் இங்கே

உட்கருத்து.

‘இந்த நிமிஷம் தமிழ் சாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகிலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் சாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால், போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்யமில்லை. நாளை வரப்போவது சத்யம். மிகவும் விரைவிலே தமிழன் ஒளி உலகம் முழுவதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும் இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்’ என்ற பாரதியை நீலகண்ட அய்யரோடு ஒரே தட்டில் வைத்து நிறுத்திப் பார்ப்பது நியாயந்தானா? யோசிக்கட்டும். யோசிக்கும் வேளையில்தான் உண்மை வெளிப்படும்.

‘தென்றலுடன் பிறந்த பாஷை’ என்ற தலைப்பில் ‘இந்தியா’ இதழில் (1906 செப்டம்பர் 29) எழுதிய கட்டுரையில், ‘பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர்கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அன்னிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகி, தமிழ் மொழியே இறந்து போய்விட வேண்டுமென்று கூறுவதைக் கண்டித்தேன்’ என்றும், ‘பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாது என்பது நெடுங்காலமாக வழங்கி வரும் உண்மையாகும்’ என்று சொல்லி, ‘தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்களோ அந்த பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும், அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றேனும் சிறிதும் முயல்வதில்லை’ என்று மனம் வெதும்புகிறான்.

www.t.me/tamilbooksworld

‘தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களில் சிறுபாலார் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள்’ என்று 1906-ல் சுதேசமித்திரனில் வார்த்தைக்கு வார்த்தை பாரதி எழுதியது இன்றைய சூழலுக்கும் பொருந்துவது வேதனை தரும் விஷயம்.

‘மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்களல்லவோ? தலைமுறை தலைமுறையாக எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசி வரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகிறது. மனித அறிவு வளர்ச்சிக்கு பாஷை ஒரு

கண்ணாடி ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வரவர அந்த நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்து வருகிறது' என்று விளக்கும் பாரதி, 'தமிழில் நவீனக் கலைகள் இடம்பெறவில்லை. புதிய கலைச்சொற்கள் தோன்றவில்லை, இலக்கியப் பயனன்றி இதில் வேறொன்றுமில்லை' என்று குற்றப்பட்டியல் வாசிப்பவர்களுக்குச் சரியாகச் சூடு கொடுக்கிறான்.

'கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ்நாட்டிலே தொழில் வகைப்படும். ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்து விடும். இப்படிக்கின்றி இந்த பாஷையையே ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லுவது மிக மூடத்தனம் அல்லவா?' என்று மொழியின் மேலுள்ள எல்லையற்ற காதலால் எவ்வளவு தெளிவாகப் பேசுகிறான் மகாகவி!

பத்திரிகைத் தமிழ்

www.t.me/tamilbooksworld

தமிழகம் கண்ட கவிஞர்களில் முதன்முதலாக உலகளாவிய அறிவும், பரந்துபட்ட பார்வையும் பாரதிக்கு வாய்த்ததற்கு அவனுடைய பத்திரிகைப் பணியே முதற்காரணம். பத்திரிகையாளனாகவும் கவிஞனாகவும் ஒரே நெரத்தில் இரு வெவ்வேறு தளங்களில் இயங்கியவன் அவன். தமிழ் நடையை எளிமைப்படுத்திய பெருமை அவனுக்கே உரியது.

'கூடியவரை பேசுவதுபோலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி, எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது...' என்பது பாரதியின் கருத்து. அவனுடைய வாழ்காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் தரம் பாராட்டுகிறாற்போல் இல்லை. சமூக நோக்கம் சிறிதுமின்றி, தவறான தமிழ்நடையில் குப்பைகளைச் செய்திகளாக நிரப்பும் போக்கு பாரதி காலந்தொட்டு இன்று வரை மாறவில்லை.

ஒரு சிறந்த பத்திரிகையாளனாக விளங்கிய நம் மகாகவி, 'பத்திராதிபர்கள் கொஞ்சம் மனமிரங்கியும், ஜனங்களிடமிருந்து தாம் திரவியம் வாங்குவதைக் கருதியும் இயன்ற வரை தமது தொழிற்கூடங்களிலே நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்த மனிதர்களை

நியமிப்பது தர்மமாகும். தமிழர்கள் சுதந்திரமுடையவர்களாகவும், தமிழ்நாடு முன்போல நாகரிகமுடையதாகவும் இருந்தால் பத்திராதிபர்களாகிய நாம் எல்லாம் இப்போதிருப்பதுபோலச் சாய்நாற்காலியில் இன்புற வீற்றிருக்க முடியாது. நம்மை நமது தகுதி நோக்கிப் பஞ்சாலைகளில் வேலைக்கனுப்பியிருப்பார்கள்' என்கிறான். சுதந்திர இந்தியாவிலும் பஞ்சாலைகளில் வேலை பார்க்கும் தகுதியுள்ளவர்களே பத்திரிகையாளர்களாக நீடிப்பதுதான் பரிதாபம்.

எழுத்துச் சீர்திருத்தம்

ஒரு மொழி காலத்தின் தேவைக்கேற்ப தன்னுள் மாற்றங்களுக்கு இடம் அளித்தால் மட்டுமே நீடித்து வாழும். மாற்றத்திற்குட்படாத எதுவும் மரணத்தைத் தழுவும். மாற்றமே வளர்ச்சியின் அடையாளம். தமிழின் வரிவடிவங்களில் அவ்வப்போது சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தமிழில் எழுத்துக் குறை இருப்பதாக பாரதி உணர்ந்தான். தமிழிலுள்ள எழுத்துக் குறையை அரவிந்தர் ஏளனம் செய்ததாக ஒரு சம்பவத்தை அவன் குறிப்பிடுகிறான்.

கல்கத்தாவில் அரவிந்தர் இருந்தபோது தமிழ் கற்க விரும்பினாராம். தமிழறிந்தவர் மூலம் அவர் தமிழ் படித்தாராம். ஒருநாள் ஒரு தமிழ்ப் பத்திரிகையை அவர் படித்தபோது, 'பீரேந்திரநாத் தத்த குப்தர் வழக்கு' என்ற தலைப்பில் கட்டுரையைக் கண்டாராம். தமிழ் ஆசிரியரிடம் அதைக்காட்டி அரவிந்தர் 'இதென்ன?' என்று கேட்டதும், அவர் இது ஒரு பெங்காளிப் பெயர் என்று சொல்லி, வங்கமொழி உச்சரிப்பில் Birendranath Dutta Kuptar என்று வாசித்தாராம். 'ஆங்கிலம் தெரியாத தமிழர் இந்தச் சொல்லை எப்படி வாசிப்பார்?' என்று அரவிந்தர் கேட்டபோது, Pirendiranata Tatta Kuptar என்றுதான் வாசிப்பார் என்றாராம் ஆசிரியர். 'அரவிந்தர் இதை அடிக்கடிச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்' என்கிறான் பாரதி.

www.t.me/tamilbooksworld

தமிழிலுள்ள இந்த எழுத்துக் குறையைத் தவிர்க்க சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியம் என்றுணர்ந்த பாரதி, 'ஏற்கெனவே நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக்கொள்ளக்கூடிய சில குறிகள் தயார்செய்து வைத்திருக்கிறேன். ஆனால், இந்தப் புதிய வழியைத் தமிழ்நாட்டுப் பத்திராதிபர்களும், பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்த பிறகுதான் ஏற்படும்' என்று குறிப்பிடுகிறான். ஆனால், 'அவரது குறிப்பு முறை

எங்கும் வெளியிடப்படாததால் நமக்குக் கிடைக்காமற் போய்விட்டது நமது துரதிர்ஷ்டமாகும்' என்கிறார் ரா.அ.பத்மநாபன்.

போகச்சொல் விதவைப் பசங்களை

ஞானரதம் போலொரு நூல் எழுது தற்கு

நானிலத்தில் ஆளில்லை; கண்ணன் பாட்டுப்

போல் நவிலக் கற்பனைக்குப் போவ தெங்கே?

புதிய நெறிப் பாஞ்சாலி சபதம் போலே

தேனினிப்பில் தருபவர் யார்?

- என்று வியந்து பாராட்டுகிறார் பாவேந்தர்.

'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம். பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்' என்று பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில் எழுதும் பாரதி,

www.tamilbooksworld

'தமிழ் சாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இந்தத் தொழிலிலே தூண்டினாளாதலின் இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்' என்று தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான். எந்த நல்ல முயற்சிக்கும் உடனே ஆதரவு வழங்கும் பண்பற்ற இந்த மண்ணில் பாஞ்சாலி சபதத்தின் முதற்பகுதி பாரதியால் வெளியிடப்பட்டபோது, பெரிய ஆதரவு ஒன்றும் கிட்டவில்லை.

அடிமை இந்தியாவில் சுதந்திரப்போரில் ஈடுபட்ட காங்கிரஸின் தலைமை காந்தியிடம் முற்றாக வந்து சேர்வதற்கு முன்பு அயர்லாந்துப் பெண்மணி அன்னி பெசன்ட் மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார். வெள்ளையரிடம் விசுவாசமுள்ள பெண்மணியாகவே பாரதி அவரைப் பார்த்தான். இங்கிலாந்தில் அன்னி பெசன்ட் அரவிந்தரை ஓர் அழிவுச் சக்தியாக வர்ணித்ததையும், தான் நிறுவிய இந்து கல்லூரியில்

முதல்வராக ஓர் இந்தியரை நியமிக்க மறுத்து, ஆங்கிலேயர் ஒருவரை அவர் முதல்வராக நியமித்ததையும் வன்மையாகக் கண்டித்து 1909 அக்டோபர் ‘விஜயா’ இதழில் பாரதி எழுதினான்.

இந்தியர்களில் சிலர் அன்னி பெசன்டை வழிகாட்டியாகவும், ஆரிய ரிஷிகளின் பிரதிநிதியாகவும் ஏற்றுக் கொண்டாடியதை ஏளனம் செய்த பாரதி, அந்த அம்மையாரை மறைமுகமாகத் தாக்கிக் கேலி செய்து ‘பொன்வால் நரி’ (The Fox with the Golden Tail) என்ற கதையை ஆங்கிலத்தில் எழுதினான் பாரதி. இந்த நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. பலர் பாராட்டிக் கடிதங்கள் எழுதினர்.

சென்னை மயிலாப்பூரில் வசித்துவந்த தேசபக்தர் டாக்டர் எம்.சி.நஞ்சுண்ட ராவ் என்பவர் 500 பிரதிகள் அனுப்பி வைக்கும்படி வேண்டியும், அந்த நூலைப் பாராட்டியும் கடிதம் அனுப்பினார். பாரதி கடிதத்தைப் படித்துக் கடுங்கோபம் கொண்டான். பக்கத்தில் இருந்த குவளைக் கண்ணனிடம், ‘போகச் சொல்லு விதைவைப் பசங்களை! நான் என்னுடைய சொந்த பாஷையில் என் முழு மூளையையும் கசக்கிப் பிழிந்து ‘பாஞ்சாலி சபதம்’ என்னும் புஸ்தகம் எழுதியிருக்கிறேன். அது நன்றாக இருக்கிறதென்று ஒருவனும் ஒரு கடிதமும் எனக்கு எழுதவில்லை. அந்தப் புஸ்தகத்தை நீ ஒருவன்தான் படிக்கிறாய்’ என்று பொங்கினான் மகாகவி.

www.t.me/tamilbooksworld

‘பாரதியார் எழுதிய கையெழுத்துப் படிகள் அங்குமிங்குமாகக் கிடக்கும். ஒருநாள் அவர் எழுதப் பயன்படுத்தும் விசிப்பலகையிலுள்ள டிராயரை இழுத்துப் பார்த்தபோது, ‘பாஞ்சாலி சபதம்’ என்னும் கையெழுத்துப் படிவம் இருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பாடல்கள் மிக எளிமையாகவும புரியும்படியாகவும் இருந்தன. அதேசமயம் மிகச் சுவையாகவும் இருந்தன. இப்படி எளிதில் புரியும்படியான கவிதையை நான் பார்த்ததே இல்லை. புரியும்படி எளிதாகக் கவிதை எழுத முடியும் என்று நான் நினைத்ததில்லை.

பாரதியாரின் கையெழுத்துப் படி என் கவிதைப் போக்கில் பெரிய மாறுதலை உண்டாக்கியது; சுப்பிரமணிய துதியமுது எழுதிய சுப்புரத்தினத்தை பாரதிதாசனாக்கியது. ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்ற பாடல் ‘பாஞ்சாலி சபதம்’ கையெழுத்துப் படியைப் படித்தபின் எழுதியது’ என்று வாக்குமூலம் வழங்கியிருந்தார் பாவேந்தர். அந்தப் ‘பாஞ்சாலி சபதம்’ தன் வாழ்காலத்தில் தமிழரிடையே பெரிதாக வரவேற்கப்படவில்லை என்ற பெருவருத்தம் பாரதிக்கு இறுதிவரை இருந்தது.

தமிழனுக்கு இரும்புக் காது

பாரதி காலத்துக் கச்சேரி மேடைகளில் தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனங்கள் கொடிகட்டிப் பறந்தன. எல்லா மேடைகளிலும் ஒரு சில கீர்த்தனங்களே வெவ்வேறு இசைக்கலைஞர்களால் திரும்பத் திரும்ப பாடப்பட்டன. இன்று வரை இந்தப் போக்கில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. தமிழகத்தில் தமிழிசை ஒலிக்கவில்லையே என்று எந்தத் தமிழனும் பாரதிக்கு முன்பு தார்மீக ஆவேசத்துடன் போர்க்கொடி தூக்கவில்லை. தேசப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் அற்றுப் போன அற்ப மனிதர்களாக நம் தமிழர்கள் சீரழிந்து சிதைந்து போனதை பாரதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மழை பெய்கிறது.

ஊர்முழுவதும் ஈரமாகிவிட்டது.

தமிழ் மக்கள் எருமைகளைப்போல எப்போதும்

ஈரத்திலேயே நிற்கிறார்கள். ஈரத்திலேயே

உட்காருகிறார்கள், ஈரத்திலேயே நடக்கிறார்கள்

ஈரத்திலேயே படுக்கிறார்கள். ஈரத்திலேயே சமையல்,

ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்பட மாட்டான் (காட்சி-காற்று) என்று புதுக்கவிதை வடிவத்தில் புலம்புகிறான்.

'முத்துசாமி தீட்சிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக சங்கதிகளுடன் பாடுவோரே முதல் தர வித்வான். இந்தக் கீர்த்தனங்களெல்லாம் சமஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துகளையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்' தெரிய நியாயமில்லை.'

'நானும் பிறந்தது முதல் இன்று வரை பார்த்துக்கொண்டே

www.t.me/tamilbooksworld

வருகிறேன். பாட்டுக்கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ சமனா மெவறா, மரியாத காதுரா, வரமு லொ ஸகி...' ஐயையோ, ஐயையோ, ஒரே கதை. எந்த ஜில்லாவுக்குப் போ. எந்த கிராமத்துக்கு போ. எந்த வித்வான் வந்தாலும் இதே கதைதான்.

'தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுகளை கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். தமிழிலே புதிய மெட்டுகளில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும்... தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீண்டும் மீண்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது சாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்' என்று தன் கவலையை வெளிப்டுத்துகிறான் கவிஞன்.

'சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப்போம்' என்று பாடியவன் தான் பாரதி. சமஸ்கிருதம் இந்தியாவின் பொதுமொழியாக இருப்பது சிறப்பு என்று பரிந்துரைத்தவன்தான் மகாகவி. ஆனால், அந்தச் சுந்தரத் தெலுங்கும் சமஸ்கிருதமும் தமிழரிடையே செல்வாக்குச் செலுத்தி நம் தாய்மொழியாம் தமிழைத் தெருவில் நிறுத்த பாரதி ஒருபோதும் ஒப்பவில்லை. தமிழ்மண்ணில் எல்லா நிலைகளிலும், சகல தளங்களிலும் தமிழன் ஆட்சியே நடக்க வேண்டும் என்பதே அவனுடைய பெருங்கனவு.

www.t.me/tamilbooksworld

தமிழா! தமிழில் பேசு

உலகத்திலேயே தன்னுடைய தாய்மொழியில் சரியாகப் பேசவராது என்று பெருமை பொங்கச் சொல்லிப் பூரிக்கும் இனம் தமிழினம்தான். 'தமிழ் பேசுவது தற்குறித்தனம்; ஆங்கிலம் பேசுவதே அறிவின் அடையாளம்' என்ற அடிமை மனோபாவம் இன்று படித்த தமிழரிடையே மண்டிக்கிடக்கிறது. தாயைப் புறக்கணிப்பதும், தாய்மொழியைப் புறந்தள்ளுவதும் மன்னிக்கவே முடியாத மிக மோசமான பாவங்கள் என்ற புரிதல் இன்று நம் இளைஞர்களிடையே இல்லை. 'தமிழ் படித்தால் சோறு கிடைக்குமா?' என்று கூச்சமற்றுக் கேட்கிறான் தமிழன். உடற்பசியும், உணவுப் பசியும்தான் வாழ்க்கையெனில், விலங்குக்கும் மனிதனுக்கும் இடையில் வேறுபாடே இல்லை. பண்பாட்டை, வாழ்க்கை விழுமங்களை அவனவன் தாய்மொழியின் மூலம்தான் எந்த மனிதனும் பெற முடியும்.

பாரதி ஒரு சங்கற்பம் செய்தான். 'இயன்றவரை தமிழே பேசுவேன். தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வதும் தமிழிலே செய்வேன்' என்று அவன் நேர்ந்துகொண்ட சத்தியத்தின்படியே நடந்தான். வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்தவன் அல்லவா அவன்! பாரதியார் வாழ்க்கை வரலாற்றை வடித்துக்கொடுத்த வ.ரா.தான் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நினைவுகூர்கிறார்.

பாரதி புதுவையில் இருந்தபோது அவனைப் பார்க்க வ.ரா. சென்றார். முதன்முதலில் பாரதியின் வீட்டில் வ.ரா. அவனைச் சந்திக்கிறார். 'பாரதியாரை நமஸ்கரித்த என்னை, அவர் தூக்கி நிறுத்தியதும், 'யார்?' என்று கேட்டார். தமிழில் பதில் சொல்லியிருக்கலாமே. இங்கிலீஷ் படித்த கர்வம் ஆளை எளிதிலே விட்டு விடுமா? நான் இங்கிலீஷைப் பொழிய ஆரம்பித்தேன். 'அடே பாலு! வந்தவர் உனக்கு இணையாக இங்கிலீஷ் பொழிகிறாரடா! அவரிடம் நீ பேசு. எனக்கு வேலையில்லை' என்று உரக்கக் கத்தினார். அப்பொழுதுதான் அவருடைய மனவேதனை எனக்கு ஒருவாறு அர்த்தமாயிற்று.'

'ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்? என்ற வருத்தக் குரலுடன் என்னைக் கேட்டார். எனக்கு அழுகை வந்துவிட்டது. நேரே பதில் சொல்ல நா எழவில்லை?' என்று வ.ரா. அந்த முதல் சந்திப்பை விவரிக்கிறார்.

www.t.me/tamilbooksworld

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்ற அவரது பாட்டின் உண்மையைத் தமிழ் மக்களுக்கு அறிவிக்கத் தமது வாழ்நாளையெல்லாம் செலவிட்டார். தமிழைப் போன்ற உன்னத பாஷை வேறில்லை. 'பச்சைத் தமிழிலே நினை. ஆங்கிலத்தில் நினைத்துப் பின் மொழிபெயர்க்காதே' என்று தம்மிடம் பேசும் நண்பர்களுக்குச் சொல்வார். தம்மை அடுத்தோரும், தம் வீட்டிலுள்ளோரும் தமிழன்றி வேறு பாஷை பேசச் சம்மதிக்க மாட்டார்' (என் தந்தை- - சில நினைவுகள்) என்று பாரதியின் மகள் சகுந்தலா பாரதி தன் தந்தையின் தமிழ்ப் பற்றைப் பதிவு செய்திருக்கிறார்.

வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ

வீட்டு வார்த்தை கற்சிலாய் போபோபோ

- என்று பாடி, தாய்மொழியறியாத தமிழரை இந்த மண்ணிலிருந்து கழுத்தைப் பிடித்து வெளியேற்றத் துடித்தவனல்லவா பாரதி!

தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்டார்

இங்கமரர் சிறப்புக் கண்டார்

- என்று கவிதை பாடிக் களித்தவனல்லவா அவன்! ‘இறப்புக்குப் பின்பு விண்ணில் சொர்க்கத்தைத் தேட வேண்டியதில்லை. இருக்கும்போதே இந்த மண்ணில் நாம் அனைவரும் சொர்க்க சுகம் பெறலாம். அதற்கு ஒரே வழி தாய்மொழியாம் தமிழமுதைச் சுவைப்பதுதான்’ என்று பாரதிக்கு முன்னால் இப்படிப் பரவசத்துடன் மொழிந்தவர் யார்?

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி

வாழிய வாழியவே

..........................................

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி

என்றென்றும் வாழியவே

www.t.me/tamilbooksworld

- என்று இந்த மகாகவியைப் போல் தமிழை வாழ்த்தி முதலில் ஆனந்தக் கூத்தாடியவர் யார்?

மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த

மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!

இந்த வசையெனக்கெய்திட லாமோ!

- என்று இதயம் முழுவதும் ரணமாகி, நெருப்பில் விழுந்த புழுவாகத் துடித்த புலவன் யார்?

சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் - கலைச்

செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்!

- என்று தமிழை வளர்க்கும் வழியைக் காட்டிய அறிஞன் யார்?

செந்தமிழ் நாடெனும் போதினிலே- - இன்பத்

தேன் வந்து பாயுது காதினிலே- - எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே- - ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே

- என்று மொழிப்பற்றை முன் நிறுத்தி நாட்டுப்பற்றை நலியாமல் வளர்த்த தேசபக்தக் கவிஞன் யார்?

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும் வகை செய்தல் வேண்டும்

- என்று தமிழிலக்கிய உலகில் முதன்முதலில் ஆசைப்பட்ட படைப்புலகப் பிரும்மா யார்?

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

www.t.me/tamilbooksworld

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

- என்று ஒவ்வொரு தமிழனுக்கும் மொழிப்பற்றை ஊட்டியவன் யார்?

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

- என்று பாடிப் பழம்பெருமை பேசிக் காலம் கழித்த தமிழறிஞர்களுக்கு மொழி வளர்ச்சிக்கான புதிய பாதையைப் போட்டுக் கொடுத்த புதுமைக் கவிஞன் யார்? பாரதி! பாரதி! பாரதி!

பாரதியைப் பழிப்போர் பார்வைக்கு

‘தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்’ என்றவன் பாரதி. ‘தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவ

வேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டும்' என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியவன் அவன்.

'தமிழ்நாட்டில் தேசியக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும், தமிழ் ஒருவித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால் அது 'தேசியம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும்' என்று அவன் விளக்கினான். ஆனால், சுதந்திர இந்தியாவில் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும், தமிழ்நாட்டில் தமிழ் ஒருவித உபபாஷையாகக்கூட நேற்று வரை இல்லாமல் எல்லாம் ஆங்கிலமயமாகவும் இருந்ததை-இருப்பதை என்னென்று சொல்வது? இன்றுதான் தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் ஒரு மொழிப் பாடமாகப் பயிலும் சூழல் கலைஞரால் கனிந்திருக்கிறது.

சமஸ்கிருதத்தை பாரதி போற்றினான் என்பதற்காகவும், இந்து சமயச் சார்புடன் சில கருத்துகளை எழுதினான் என்பதற்காகவும் அவனுடைய தமிழ்ப்பற்றை, தமிழுக்கு அவன் ஆற்றிய தொண்டினை யாரும் மறுத்துரைக்க முடியுமா? ஹிந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்றும், வலிமையான மத்திய அரசு அமைய வேண்டும் என்றும் வாதாடியவர் அம்பேத்கர் என்பதற்காக, ஒடுக்கப்பட்ட சமூகத்துக்காக அவர் ஆற்றிய அரும்பணிகளை, அவருடைய போராட்ட வாழ்க்கையை மனச் சான்றுக்கு மாறாக யாராவது பழிக்கக்கூடுமா? 'தமிழ்' காட்டுமிராண்டி மொழி' என்று பேசிவிட்டதற்காகப் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் தன்னலமற்ற தியாக வாழ்க்கையை வன்மத்துடன் எந்த மனிதனாவது விமர்சித்தல் தகுமா?

www.t.me/tamilbooksworld

சுரைக்கொடி கூரை முழுவதும் தாவிப் படர்ந்தாலும், அதனுடைய வேர் மண்ணில் நிலைத்திருப்பதுபோல், பாரதியின் சிந்தனை முழுவதும் தமிழில், தமிழரில் நிலைத்திருந்தது. அதனால்தான், தமிழைப் பாடுபொருளாக வைத்துப் பாட்டிலக்கியம் படைத்த பாவேந்தர்,

பயிலுறும் அண்ணன் தம்பி- - அக்கம்

பக்கத் துறவின் முறையார்

தயைமிகு உடையாள் அன்னை - என்னைச்

சந்ததம் மறவாத் தந்தை

குயில்போற் பேசிடும் மனையாள் - அன்பைக்

கொட்டி வளர்க்கும் பிள்ளை

அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்

அறிவினில் உறைதல் கண்டீர்

- என்று தமிழை மட்டுமே உயிராகவும் உறவாகவும் போற்றிய பாவேந்தர் ‘தமிழ் பாரதியால் தகுதி பெற்றது’ என்றார். தமிழுக்குப் புதிய உயிர் கொடுத்த பாரதிக்கு இதுதான் ஆழ்ந்த அர்த்தமுள்ள பாராட்டு!

www.t.me/tamilbooksworld

# 8



# கனவு மெய்ப்பட வேண்டும்...

*‘யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை’ என முப்பெரும் புலவர்களை அறிமுகம் செய்வார் நம் கவிஞர். உண்மையில் அந்த வரிசையில் நான்காவதாகப் ‘பாரதிபோல் ’ என்றும் பெருமையோடு அவர் பெயரைப் பேசி மகிழலாம். இந்த மகாகவியின் வாழ்வும், இணையற்ற அவரது வாக்கும் அவரை நம் ஆதர்ச குருநாதராக ஏற்றுக்கொள்ளும்படி கட்டளை இடுகின்றன...*

www.t.me/tamilbooksworld

*பழமையைச் செழுமை செய்து, புதுமையை வளமை செய்து, புனைவியலில் நடப்பியலைக் கலந்து புதிய மொழியைத் தன் கவிதைப் பட்டறையில் வார்த்தெடுத்து, மாநிலமும் மானுடமும் பயனுற வாழ்வதற்குத் தன் படைப்புகளை அர்ப்பணித்து - பெரிதினும் பெரிது கேட்ட இந்த மகாகவி தமிழ் இலக்கிய வரலாற்றில் நான்காவது சிகரமாக ஓங்கி நிற்கிறான்.*

- ‘மகாகவி’யில் சிற்பி பாலசுப்பிரமணியம்

**பா**ரதிக்கு இந்தியச் சமூகத்தின் எதிர்காலம் குறித்து எண்ணற்ற கனவுகள் இருந்தன. தமிழகத்தில் தொடங்கி, இந்தியாவெங்கும் விரிந்து, சர்வதேச மனிதர்களையும் அவனுடைய கனவுகள் ஆரத் தழுவி அரவணைத்துக் கொண்டன. மதம், இனம், மொழி, நாடு கடந்து எல்லா எல்லைகளிலும் அவனுடைய கனவுப் பறவை சிறகடித்துப் பறந்தது. அவனுடைய கனவுகள் நிறைவேற முடியாத நெட்டைக் கனவுள் இல்லை. தனி மனித வாழ்விலும், சமுதாய தளத்திலும் நாம் அனைவரும்

உண்மையான ஈடுபாட்டுடன் முயன்றால் அவனுடைய எல்லாக் கனவுகளும் நிச்சயம் ஒரு நாள் நிறைவேறக் கூடும்.

பாரதியின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஒன்றுவிடாமல் சேர்த்துப் படித்தால் அவனுடைய லட்சியக் கனவுகள் எவையென்று எளிதில் நாம் இனங்காண முடியும். 1. மண் விடுதலை 2. பெண் விடுதலை 3. சாதிகளிடையே சமத்துவம் 4. மதநல்லிணக்கம் 5. பொருளாதார சமத்துவமும் சகோதரத்துவமும்தான் அவன் கண்ட சமூகக் கனவுகள். கவிதைகளில் இவைதான் அவனுடைய பாடுபொருள். கட்டுரைகளில் இவையே அவனது பேசு பொருள்.

மண் விடுதலை

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்று மாபெரும் லட்சியங்கள் பிரெஞ்சுப் புரட்சிக்கு அடித்தளமிட்டன. இந்தக் கொள்கைக் கோஷங்கள் சுதந்திர தாகத்தை ஒவ்வொருவருக்குள்ளும் தணியாத தாகமாக வளர்த்தெடுத்தன. தமிழ் இலக்கிய உலகம் கண்ட முதல் தேசிய விடுதலைக் கவி பாரதிக்கு இந்த மூன்று தாரக மந்திரங்களும் உயிர் மூச்சாக மாறின. பாரதியை சமூக நோக்கில் மிகப் பெரிதாகப் பாதித்த ஷெல்லியே பிரெஞ்சுப் புரட்சி பெற்றெடுத்த குழந்தைதான்.

www.t.me/tamilbooksworld

‘உயிருள்ள வரை இன்பத்துடன் வாழ விரும்புதல் மனுஷ்ய ஜீவனுடைய கடமை. இன்பத்துக்கு முதல் அவசியம் விடுதலை. அடிமைகளுக்கு இன்பம் கிடையாது’ என்று அழுத்தமாக அறிவுறுத்தும் மகாகவி, ‘சுதந்திரக் கொள்கை உடையவன் தன் ஆத்மாவைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றையும் இழந்துவிடச் சித்தமாக இருக்க வேண்டும்’ என்கிறான். அதனால்தான், தான் 1906-ல் தொடங்கிய ‘இந்தியா’ இதழின் தலைப்பில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மானுடத்தின் மூன்று மாபெரும் கோட்பாடுகளைப் பொறித்தான். ‘மானிடர் சுதந்திரம் சார்ந்தவர்’ என்று குருகோவிந்தரின் கூற்றாகத் தன் லட்சியத்தை வெளிப்படுத்தினான். மேலை நாடுகளில் பொங்கித் ததும்பிய சுதந்திர உணர்ச்சி இந்தியர் இதயங்களிலும் பல்கிப் பெருக வேண்டும் என்ற தவிப்பில்,

மேற்றிசை பல நாட்டினர் வீரத்தால்

போற்றி நின்னைப் புதுநிலை எய்தினர்

கூற்றினுக்கு உயிர் கோடி கொடுத்தும் நின்

பேற்றினைப் பெறுவேம் எனப் பேணினர்

- என்று 'சுதந்திர தேவி துதி'யில் பாடுகிறான் பாரதி.

உயிர் கோடி கொடுத்தும் சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்று ஏன் சொல்கிறான்? சமத்துவமும் சகோதரத்துவமும் சமூகத்தில் நிலைக்க வேண்டுமென்றால் முதலில் சுதந்திரக் காற்று வீச வேண்டும் என்ற உண்மையைப் பாமரர்களுக்கு உணர்த்த முற்படுகிறான்.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு- - நாம்

எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு

- என்று பாடி, சுதந்திரம் வந்தால்தான் சமத்துவம் உறுதிப்படும் என்ற ரகசியத்தை வெளிப்படுத்துகிறான்.

நாமிருக்கு நாடு நமதென்ப தறிந்தோம் - இது

www.t.me/tamilbooksworld

நமக்கே யுரிமையா மென்ப தறிந்தோம் - இந்தப்

பூமியி லெவர்க்குமினி அடிமை செய்வோம் - பரி

பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்

- என்று படைத்த பரம்பொருளைத் தவிர வேறெவர்க்கும் அடிமைப்பட்டு வாழ்வதில்லை என்ற பிரகடனத்தைப் பாரத மக்கள் பார் முழுதும் பறைசாற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறான். சுதந்திரம் வந்து சேர்ந்தால்தான் 'ஏற்பாரைப் பணிகின்ற காலமும், ஏய்ப்போருக்கு ஏவல் செய்யும் காலமும் போகும்' என்று அடிமைச் சேற்றில் அழுந்திக் கிடக்கும் மனிதர்க்கு அறிவு வெளிச்சம் காட்டுகிறான். 'எல்லோரும் ஒன்றென்னும் காலமும், ஏமாற்றுந் தொலைகின்ற காலமும்' சுதந்திர தேவி கண் விழிக்கும்போது தான் மனித சமூகத்துக்குச் சாத்தியமாகும் என்று கோடிட்டுக் காட்டுகிறான்.

'வெள்ளையர் பிடியிலிருந்து விடுபட்டு, நம்மை நாமே ஆள்கின்ற ஆட்சிமுறை கனியும்போது 'ஏழையென்றும், அடிமையென்றும், சாதியில் இழிவுகொண்ட மனிதரென்றும்' இந்தியாவில் யாரும் இருக்க மாட்டார்கள். 'திறமை கொண்ட, தீமையற்ற தொழில் புரிந்து தேர்ந்த

கல்வி, ஞானமெய்தி,' வறுமையின் நிழல் படாமல் மக்கள் அனைவரும் வளத்துடன் வாழ்வார்கள்' என்று பாரதி கனவு கண்டான். மனிதரின் எல்லா நலத்துக்கும் வளத்துக்கும் சுதந்திரமே ஆதாரம் என்று அவன் திடமாக நம்பினான். 'நல்லோர் பெரியோராகப் போற்றப்படுவார்கள்; நயவஞ்சகக்காரர்கள் நாசமுற்று அழிவார்கள்' என்று உறுதிகொண்டான்.

புதிய ருஷ்யா பூத்ததும் இந்தியாவிலேயே முதன்முதலாக அதை வரவேற்றுக் கவிதை பாடிய பெருமை பாரதிக்கே உண்டு. 'ஜார் மன்னன் ஆட்சி வீழ்ந்தது போல் இந்தியாவில் வெள்ளையர் ஆட்சி வீழ வேண்டும். அங்கு முதன் முதலில் பொதுவுடைமை அரசு உருவானது போல், மக்கள் அரசு இங்கேயும் மலர வேண்டும்' என்ற தாகமும் தவிப்பும் அவனை உந்தியதால்தான்,

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு

மேன்மையுறக் குடிமை நீதி

கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்

றுலகறியக் கூறி விட்டார்

அடிமைக்குத் தளையில்லை, யாருமிப் போ

தடிமையில்லை அறிக! என்றார்

இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்

கிருதயுகம் எழுக மாதோ!

- என்று உணர்ச்சி பொங்கப் பாடினான். 'யாரும் யாருக்கும் அடிமையில்லை' என்பதுதான் சுதந்திரத்தின் அடிநாதம். 'குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு' என்ற ஜனநாயக நடைமுறைக்கு வரவேற்பு வாயில்தான் சுதந்திரம். சுதந்திரக் கோயிலில்தான் சமத்துவமும் சகோதரத்துவமும் தெய்வங்களாகக் கொலுவீற்றிருக்க முடியும். அதற்காகத்தான் நாட்டு விடுதலையை ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊட்டுவதற்குப் பாட்டுத் தவமிருந்தான் பாரதி.

www.t.me/tamilbooksworld

அடிமைத்தனத்தை எந்த வடிவில் இருந்தாலும் அழித்து ஒழிப்பதைத்தான் பாரதி தன் ஒரே லட்சியப் பணியாக நெஞ்சில் நேர்ந்து

கொண்டான். வெள்ளையனிடம் கறுப்பன் அடிமைப்பட்டுக்கிடந்தான். ஆணிடம் பெண் அடிமைப்பட்டு வாடினாள். உயர்சாதி ஆணவத்தில் ஊறிக்கிடந்தவர் கால்களில் தாழ்த்தப்பட்டவன் அடிமையாக அழுந்திக் கிடந்தான். பெரும்பான்மையின் கீழ் சிறுபான்மை அடிமைப்பட்டு நலிவுற்றது. மதபீடம் மூடநம்பிக்கைகளைப் பாமரரிடையே வளர்த்து அவர்கள் உரிமைகளைப் பறித்து அடிமைகளாக்கியது. இத்தனை அடிமைத்தனங்களுக்கும் எதிராக உலகத்தில் ஒரே நேரத்தில் இலக்கிய யுத்தம் நடத்தியவன் பாரதி ஒருவன்தான். எல்லா அடிமைத்தனங்களிலிருந்தும் மனிதர்கள் உடனே விடுதலை அடைய வேண்டும் என்று தவித்தவன்,

'இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமதப்படுத்தி வைப்பதால், அந்தக் காரியம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும்போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப் போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும்' என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். (மூடபக்தி - -தத்துவம்)

www.t.me/tamilbooksworld

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று

- என்று தன் கண் முன்னாலேயே சுதந்திரத்தை அடைந்துவிட்டது போல் பாவனை செய்து பாடுவதில் 'சுதந்திரம் விரைவில் வந்தே தீரும்' என்ற தளராத நம்பிக்கையும், அதை விரைவுபடுத்தும் அவனது அவசரமும் தெரிகின்றன. ஏன் இந்த அவசரம்? 'நூறு வயதுண்டு என்பதேனும் நல்ல நிச்சயமாக இருந்தால் குற்றமில்லை. நூறு வருஷங்களில் எவ்வளவோ காரியம் முடித்துவிடலாம். 'அடுத்த நிமிஷம் நிச்சயமில்லை' என்று தீர்ந்துவிட்டால் எதைக் கொண்டாடுவது? இது கட்டி வராது' என்று காரணம் சொல்கிறான் கவிஞன்.

'நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம். அதுவரை நாம் சாகமாட்டோம். நம் இச்சைகள், நம்முடைய தர்மங்கள் நிறைவேறும் வரை நமக்கு மரணமில்லை' (தத்துவம்) என்று சொல்லும் பாரதியிடம்தான் எவ்வளவு நம்பிக்கை!

பாரதி கண்ட கனவுகளில் ஒன்று- - ஒன்று மட்டும் பலித்துவிட்டது. ஆம், இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டது... அந்த மகாகவி

*மரணத்தைத் தழுவி 26 ஆண்டுகள் முடியும் நிலையில்! ஆனால் ஏழையென்றும், அடிமையென்றும், சாதியில் இழிவு கொண்ட மனிதரென்றும் யாரும் இல்லாத இந்தியாவை சுதந்திரம் சமைத்துத் தரும் என்ற பாரதியின் கனவு நிறைவேறியதா? நல்லவர் வாழவும், தீயவர் வீழவும் வழி பிறந்துவிட்டதா? அரசியல் சுதந்திரம் சமூக, பொருளாதார சுதந்திரங்களைச் சாதித்துவிட்டதா? 'ஒருவருடைய கண்களிலிருந்தும் ஒரு துளி கண்ணீர் வழியாத சமூகத்தையே நான் சந்திக்க விரும்புகிறேன்' என்ற காந்தியின் கனவு நிறைவேறும் நாளில்தான் பாரதியின் கனவும் மெய்ப்படும்.*

*நெஞ்சிலுரமு மின்றி*

*நேர்மைத்திரமு மின்றி*

*வஞ்சனை சொல்வாரடீ - கிளியே!*

*வாய்ச்சொல்லில் வீரரடீ!*

*உப்பென்றும் சீனியென்றும்*

www.t.me/tamilbooksworld

*உள்நாட்டுச் சேலையென்றும்*

*செப்பித் திரிவாரடீ - கிளியே!*

*செய்வ தறியாரடீ!*

*தேவியர் மானமென்றும்*

*தெய்வத்தின் பக்தியென்றும்*

*நாவினாற் சொல்வதல்லால் - கிளியே!*

*நம்புத லற்றாரடீ!*

*அச்சமும் பேடிமையும்*

*அடிமைச் சிறுமதியும்*

*உச்சத்திற் கொண்டாரடீ - கிளியே!*

*ஊமைச் சனங்களடீ!*

சொந்தச் சகோதரர்கள்

துன்பத்திற் சாதல்கண்டும்

சிந்தை யிரங்காரடீ - கிளியே!

செம்மை மறந்தாரடீ!

- என்று பொய்மையும் போலித்தனமும் மிக்க நடிப்புச் சுதேசிகளை 15.6.1907 'இந்தியா'வில் பாரதி படம் பிடித்துக் காட்டினான். சுதந்திரம் கிடைத்து 60 ஆண்டுகள் கடந்த பின்பு நாடு முழுவதும் சகல தளங்களிலும் நடிப்புச் சுதேசிகளைத்தான் நம்மால் பெருமளவில் பார்க்க முடிகிறது.

'சுயராஜ்யம் உடனே சிறந்த அரசையும், நிறைந்த மகிழ்ச்சியையும் தந்துவிடாது. நமக்குச் சுதந்திரம் கிடைத்ததும் தேர்தல், ஊழல், அநீதி, செல்வம் மிக்கவர்களின் கொடுங்கோன்மை ஆதிக்கம், திறமையற்ற நிர்வாகம் ஆகியவை நம் வாழ்வை நரகமாக்கும். முந்தைய அரசின் நீதி, திறமையுள்ள நிர்வாகம், அமைதி, பெருமளவு ஊழலற்ற நடைமுறையைக் கழிவிரக்கத்துடன் மக்கள் எண்ணிப் பார்ப்பார்கள். அகௌரவத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் நாம் விடுதலை பெற்றது மட்டுமே சுதந்திரத்தின் ஒரே பயன்பாடாக இருக்கும்' என்று ராஜாஜி 1922-ல் வேலூர் சிறையில் இருந்தபோது சிறைக் குறிப்பில் எழுதியது இன்று நடைமுறை உண்மையாகி, அவருடைய அரசியில் தீர்க்கதரிசனத்துக்குச் சாட்சியாக விளங்குகிறது.

www.t.me/tamilbooksworld

இந்திய விடுதலைக்கு முன்பு நேருவின் இடைக்கால அமைச்சரவையின் நிர்வாகம் நடந்தபோது அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தில் உறுப்பினர்களை நோக்கி அவர், ஓர் உருக்கமான வேண்டுகோளை வைத்தார். 'சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் நோக்கம் பசித்துக் கிடப்பவர்க்கு உணவும், ஆடையற்று நிற்பவர்க்கு உடையும், தன் திறமைக்கேற்ப வளர்ச்சியைப் பெறுவதற்கு ஒவ்வொரு இந்தியருக்கும் முழுமையான வாய்ப்பும் வழங்குவதாக அரசமைப்புச் சட்டம் இருக்க வேண்டும்' என்ற நேருவின் கனவு இன்று வரை நிறைவேறவில்லை.

சட்டமன்றம் ஜனநாயகத்துக்கும், அமைச்சரவை அறிவார்ந்த நிர்வாகத் திறனுக்கும், நீதிமன்றம் நம் நாகரிக வளர்ச்சிக்கும் அளவுகோல்களாக அமைய வேண்டும் என்ற ஆசை நிராசையாகி

விட்டது.

நாட்டைவிடக் கட்சி பெரியதாகவும், கட்சியைவிட அதன் தலைவர்கள் பெரியவர்களாகவும் மாறிவிட்ட சூழலில் மக்களின் வாழ்க்கை நரகமாக நடந்துகொண்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் சமூக, பொருளாதார, அரசியல் நீதியும், எண்ணம், பேச்சு, கோட்பாடு, மதம், வழிபாடு ஆகியவற்றில் முழு உரிமையும், வாழ்க்கை நிலையிலும், வாய்ப்புகளிலும் சமத்துவமும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும் என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சமூக நீதி இன்று வரை சாத்தியப்படவில்லை. எல்லா மக்களுக்கும் வாழ்விலும், வாய்ப்புகளிலும் சமத்துவம் இன்னமும் வந்து சேரவில்லை.

பலாத்காரம், வன்முறையற்ற அரசியலமைப்பு, சுரண்டலற்ற சமத்துவ சர்வோதய சமுதாய அமைப்பு, சத்தியம் சார்ந்து அன்பை வழிபடும் வாழ்வியல் முறை, கட்டாய உடலுழைப்பில் உணவு தேடும் மனோபாவம், எளிய இன்பம், சமய சகிப்புத் தன்மை ஆகியவை மகாத்மா காந்திக்கும், மகாகவி பாரதிக்கும் பொதுவான லட்சியக் கனவுகள். இவையனைத்தும் நனவாக ஒழுக்கமும், நேர்மையும், சமூகப் பொறுப்பு உணர்வும் மிக்க ஆட்சியாளர்கள் அதிகார நாற்காலிகளில் அமர வேண்டும்.

www.t.me/tamilbooksworld

தகுதியற்றோர் கையில் அரியாசனம்

காரணம்

தருதி அறியாசனம்

என்பதுதான் எவ்வளவு கசப்பான உண்மை!

புறத்திணை சுயம்வரமண்டபத்தில்

போலி நளன்களின் கூட்டம்

கையில் மாலையுடன்

குருட்டுத் தமயந்தி

- என்ற அப்துல்ரகுமான் கவிதை, தேர்தல் களத்தில்

வேட்பாளர்களைப் போலி நளன்களாகவும், வாக்காளர்களைக் கையில் மணமாலையுடன் நிற்கும் குருட்டுத் தமயந்திகளாகவும் மிகச் சரியாகச் சிந்திக்கிறது.

பாரதி ஆசை ஆசையாகக் கண்ட அரசியல் சுதந்திரக் கனவு அரைகுறையாகவாவது நனவாகிவிட்டது. ஆனால், அந்த அரசியல் சுதந்திரத்தின் அடிப்படை நோக்கங்கள் தொடக்கத்திலேயே தகர்ந்துவிட்டன. கிராம அமைப்புகளிலிருந்து அதிகாரம் தொடங்கப்பட வேண்டும் என்ற காந்தியின் ஆசை நிராசையாகிவிட்டது. கீழிருந்து மேலே அதிகாரம் பரவலாவதற்குப் பதிலாக, மேலேயே அதிகாரம் குவிந்துவிட்டது. ஜனநாயகக் குழந்தை பிறந்தபோதே அதன் சுவாசப்பைகள் சுருங்கிவிட்டன.

நாட்டு ராஜ நீதி - மனிதர்

நன்கு செய்யவில்லை

- என்று கவிக் கூற்றாகப் பாஞ்சாலி சபதத்தில் தன் கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்யும் பாரதி,

www.t.me/tamilbooksworld

ஓரஞ் செய்திடாமே - தருமத்

துறுதி கொன்றிடாமே

சோரஞ் செய்திடாமே - பிறரைத்

துயரில் வீழ்த்திடாமே

ஊரை யாளுமுறைமை - உலகில்

ஓர் புறத்துமில்லை

- என்று மிகத் தெளிவாகப் பிரகடனம் செய்கிறான். இதைப் பற்றி மேலும் விளக்கமாகப் பேசுவது ‘சாரமற்ற வார்த்தை’ என்று அவனே தனக்குள் சலித்துக் கொள்கிறான். இதற்கு மேல் பேச நமக்கும் ஒன்றுமில்லை. ‘ஓராயிரம் வார்த்தைகளைவிட ஒரு சொல் உன்னதமானது’ என்றார் விவேகானந்தர். பாரதியும் காந்தியும் காண விரும்பிய உண்மையான சுதந்திரத்தை இனியாவது அடையும் வழிமுறைகளை வாக்காளர்கள் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டும். அவரவர் விதி அவரவர் கைகளில்!

பெண் விடுதலை

உலகம் முழுதும் பெண் ஒரு தனித்துவம் வாய்ந்த, சுதந்திரமான, சொந்த ஆசாபாசங்கள் நிறைந்த சக மனுஷியாக இன்று வரை பார்க்கப்படுவதில்லை என்பதே யாரும் மறுக்க முடியாத உண்மை. ஆண், பெண்ணை - அவளுடைய அழகை - அவளுடைய உழைப்பைத் தன் சுயநலப் போக்கில் சுரண்டுபவனாகவே இருக்கிறான். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண் சமத்துவம் என்ற பேச்சுக்கே இதுநாள் வரை இடமில்லை. சமத்துவம் இல்லாத இடத்தில் சுதந்திரம் இல்லை.

சமூகத்தின் சகல தளங்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும், உரிமையிலும் கடமையிலும் சமத்துவமின்மையே நிலவுகிறது. பொருளாதார நிலையிலும், உயர்கல்வி வாய்ப்பிலும் ஆணின் இடத்தைப் பெண் அடைவதற்கு ஆயிரம் தடைகள் உள்ளன. பெண்ணை ஆண் ஆள்வதும், பாலியல் வன்முறைக்கு ஆட்படுத்துவதும், நுகர்பொருளாகவே அனுபவிப்பதும் எந்த நாகரிக சமூகத்திலும் முற்றாக மறைந்துவிடவில்லை. எந்தத் தாக்குதல்கள் எத்தனை வடிவங்களில் நடந்தாலும் முதலில் பலியாவது பெண்ணின் மனமும் உடலும்தான். பண்பாடு மிக்க பாரத மண்ணில் பெண்ணின் நிலைமை மிகவும் மோசமானது.

www.t.me/tamilbooksworld

‘பெண்ணடிமைத்தனத்துக்கும், பெண் கேவலத்துக்கும் உரிய காரணத்தை வேறெங்கும் போய் தேடத் தேவையில்லை. அது எந்த ரகசிய அறையிலும் மறைத்து வைக்கப்படவில்லை. நகைப்புக்குரிய இந்து சட்டத்தைத் தந்த மனுவே பெண்களின் வீழ்ச்சிக்கு முழுமையான காரணம்’ (இந்துப் பெண்ணின் எழுச்சியும் வீழ்ச்சியும்) என்கிறார் அம்பேத்கர்.

பெண்ணைக் கட்டிலறைக்கும் சமையலறைக்கும் இடையில் இல்லுறை மகளிராக இருத்தி வைத்து மகிழ்ந்தது இந்து சமூகம். ஆணின் வயிற்றுப் பசிக்கு அவள் உணவு சமைத்தாள். உடற்பசிக்கு அவளே அன்றாடம் உணவானாள். இந்த நிலையில் இன்றுவரை மாற்றமில்லை.

‘இந்த நாட்களில் கல்வி அறிவும், பொருளாதாரச் சுயச்சார்பும் பெற்று, எல்லாத் துறைகளிலும் பெண் தன் ஆற்றலை நிரூபிக்கும் சாதனைகள் செய்திருக்கும் போதும், பாலியல் ரீதியாக வீழ்த்தப்படும் அவலமும், மனித உணர்வுடையவள் என்ற அங்கீகாரமுமே மறுக்கப்படும் அநியாயமுமே அன்றாடம் அவள் சந்திக்கும் பிரச்னைகளாக இருக்கின்றன. ஓர் ஆண், எந்த வயதினனாக

இருந்தாலும், ஒரு பெண் தனியே அகப்படும்போது அவள் பாலியல் சார்ந்த நுகர்பொருள் சாதனம் என்ற கருத்தே எழும்படி, அவள் நிலை ஒடுக்கப்பட்டு, அதே நிலையை ஏற்று இன்னும் ஒடுங்கிப் போக வேண்டும் என்ற கருத்தே முன் வைக்கப்படுகிறது.

'இல்லையேல் முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு எல்லாக் களங்களிலும் பாலியல் சார்ந்த வன்முறைகள் நிகழக் காரணங்கள் இல்லை. கொலை என்றால் அத்துடன் வாழ்வு முடிந்து போகிறது. பாலியல் வன்முறை என்றால், அந்தத் தாக்குதலுக்கு ஆளான பெண்ணுக்கு வாழ்வும் இல்லை, முடிவும் இல்லை என்றாகிறது' (பெண்விடுதலை) என்று எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணன் சமூக ஒதுக்கு நிலைக்குள்ளாகும் பெண்களின் நிலை குறித்து விளக்குகிறார்.

எனக்கு முகம் இல்லை இதயம் இல்லை

ஆத்மாவும் இல்லை

அவர்கள் பார்வையில்

www.t.me/tamilbooksworld

இரண்டு மார்புகள் நீண்ட கூந்தல்

சிறிய இடை பருத்த தொடை

இவைகளே உள்ளன.

சமையல் செய்தல் படுக்கை விரித்தல்

குழந்தை பெறுதல் பணிந்து நடத்தல்

இவையே எனது கடமைகள் ஆகும்.

கற்பு பற்றியும் மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்

கதைக்கும் அவர்கள்

எப்போதும் என் உடலையே நோக்குவர்;

கணவன் தொடக்கம் கடைக்காரர் வரைக்கும்

இதுவே வழக்கம்.

- என்ற அ.சங்கரியின் கவிதை ஆண்களின் காமத்தையும், பெண்களின் அவலத்தையும் பாசாங்கற்ற வார்த்தைகளில் மிகவும் வெளிப்படையாகப் படம்பிடிக்கிறது.

ஆண்களுக்கு எதிரான பெண்ணியம்

'ஆணாதிக்கத்தை வேரறுத்து, அரசியல், சமூக, பொருளாதார தளங்களில் பெண்ணை ஆணுக்குச் சமமாகக் கொண்டு வந்து நிறுத்தும் கொள்கையே பெண்ணியம்' என்ற புரிதல் இப்போது எல்லை கடந்து, 'ஆண்களை எதிர்ப்பதும், ஆண்களின் உறவின்றியே பெண்கள் தனியாகச் சேர்ந்து இயங்குவதும், குடும்பம் என்ற கட்டுமானமே அடிமைத்தனத்தின் உறைவிடம் என்று முடிவெடுத்து, அதை அழித்தொழித்து முற்றாக விடுதலை பெறுவதுமே பெண்ணியம்' என்ற புதுவிளக்கம் தரப்படுகிறது.

ஆணாதிக்கத்தை ஒழித்துப் பெண்ணாதிக்கத்தை ஏற்படுத்துவது பாரதியின் நோக்கமில்லை. ஆண்களின் துணையின்றிப் பெண்கள் தனியே இயங்க வேண்டும் என்பது அவன் ஆசையில்லை. ஆணும் பெண்ணும் தங்கள் வெவ்வேறு இயல்பு உணர்ந்து, குடும்பத்திலும் சமூகத்திலும் உள்ள பொறுப்புகளை நிறைவேற்றியபடி, அவரவர் தனித்தன்மையைக் காப்பற்றிக்கொள்ள வேண்டும் என்பதே மகாகவியின் விருப்பம். ஒருவருக்கொருவர் சுதந்திரம், மரியாதை, ரசனை, அபிப்ராயங்களுக்கு மதிப்பளித்தல், பொறுப்புகளோடு உரிமைகளை நிலைநிறுத்தல், அடிப்படை மனிதப் பண்புகளைப் பராமரித்தல் போன்ற புரிந்துணர்வுடன் இயங்க வேண்டும் என்பதே பாரதி பாடிய 'புதுமைப் பெண்'ணின் லட்சியம்.

www.t.me/tamilbooksworld

'ஒருவரிடம் இல்லாதது இன்னொருவரிடம் இருக்கிறது. ஒருவர் மற்றொருவரால்தான் பூரணத்துவம் பெறமுடிகிறது. எவற்றிலும் அவர்கள் ஒரே தன்மையர் அல்லர் இருவரும் ஒருவருக்கொருவர் தருவதிலும், பெறுவதிலும்தான் இன்பமும் நிறைவும் வந்து சேர்கின்றன' என்று ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கிறார் ரஸ்கின். 'ஆணால் பெண் முழுமையடைகிறாள்; பெண்ணால் ஆண் பூரணமாகிறான். ஆணிடம் இல்லாதது பெண்ணிடமும், பெண்ணிடம் இல்லாதது ஆணிடமும் உள்ளதுதான் அதற்குக் காரணம். ஆணும் பெண்ணும் இன்பமும், நிறைவும் பெற ஒருவரை ஒருவர் சார்ந்தேயாக வேண்டும். அடுத்தவரால் மட்டுமே தரக்கூடியதை அப்போதுதான் ஆணும் பெண்ணும் பெறமுடியும்' என்பது ரஸ்கினின் உன்னதமான விளக்கம்.

(Each has what the other has not; each completes the other and is completed by the other; they are in nothing alike; and the happiness and perfection of both depend on each asking and receiving from the other what the other only can give - Ruskin)

*‘தீவிர பெண்ணியவாதிகளுக்கும், அதிதீவிரப் பெண்ணிய வாதிகளுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஆண்களால் உருவாக்கப்பட்ட அனைத்து அமைப்புகளையும், சமூக மதிப்புகளையும் உடைத்தெறிந்து ‘பெண்கள் மட்டுமே’ முழுவதும்; பெண்ணாட்சியே எதிலும் எங்கும் என்ற நோக்குடைய சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களின் ஒன்றுபட்ட குறிக்கோளாகும். அதற்கு முதற்படியாகப் பெண்களால் நடத்தப்படும் வணிகங்கள், உணவகங்கள், புத்தகக் கடைகள், பெரிய அளவிலான அலுவலகங்கள், நல்வாழ்வு மையங்கள் போன்றவற்றைத் தோற்றுவிப்பதில் அதிதீவிரம் காட்டினர்’ (பெண்ணியம் - இரா.பிரேமா) என்பது போன்ற பெண்ணிய அணுகுமுறைகளுக்கும் பாரதியின் புதுமைப் பெண்ணுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.*

*பெண்ணை வீட்டுவேலை செய்யும் ஓர் இயந்திரமாக நடத்துவதை, வெறும் போகப் பொருளாகப் பயன்படுத்துவதை, வெளியில் சுதந்திரமாக இயங்குவதை அனுமதிக்க மறுக்கும் ‘ஆண்மை’யைக் காட்டுவதை எதிர்த்தேயாக வேண்டும் என்பதில் இரு கருத்தில்லை. ‘அலுவலகத்திலிருந்து நாங்கள் வீடு திரும்பும் போது செருப்பை மட்டும் கழட்டி வாயிலில் வைப்பதில்லை; சமத்துவத்தையும் சேர்த்தே வெளியே விட்டு விடுகிறோம்’ என்ற பெண்களின் அவலக்குரலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதிலும் மறுப்பில்லை. ஆனால், அழகுப் போட்டியிலும், அரைகுறை ஆடையிலும், விடுதலைக் காதலிலும்தான் பெண் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கிறது என்ற வாதம் சரியில்லை.*

www.t.me/tamilbooksworld

*காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்*

*கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்*

*காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்*

*கானமுண்டாம் சிற்ப முதற் கலைகளுண்டாம்*

*ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!*

*அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்*

காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்

கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்!

- என்று காதலை வணங்கி வரவேற்கும் மகாகவி, ஷெல்லி விரும்பிய விடுதலைக் காதலை ஏற்கவில்லை. அதைப் 'பொய்மைக் காதல் என்று அவன் பழிக்கிறான்.

காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்!

கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்

- என்றவன் பாரதி. 'ஒழுக்கத்தினின்று எள்ளின் மூக்கத்தனையும் தவறக்கூடாது' என்று வாழ்வில் நேர்ந்துகொண்டவன் அவன். 'உண்ண உண்ணத் தெவிட்டாதது ஞானிகளுக்கு, பெரியோர்களுக்கு, துறவிகளுக்குக் கடவுள் நினைவுதான் என்பார்கள். எனக்குத் தெவிட்டாத ஒருத்தி செல்லம்மாதான்' என்று மனைவியைக் கொண்டாடிய மகாகவிஞன் பாரதி. பாவேந்தர், 'பாரதி வாழ்நாட்களில் அயல் மாதரை அன்னை என்றும், தங்கையென்றும் நினைக்கத் தவறியதில்லை. செல்லம்மா அவர்களிடம் பாரதிக்கு நீங்காத காதல் உண்டு' என்கிறார். (பாரதியாரோடு பத்தாண்டுகள்)

www.t.me/tamilbooksworld

வைய வாழ்வு தன்னில் எந்த

வகையினும் நமக்குள்ளே

தாதர் என்ற நிலைமை மாறி

ஆண்களோடு பெண்களும்

சரிநிகர் சமானமாக

வாழ்வம் இந்த நாட்டிலே

- என்பதுதான் பாரதியின் கனவு. ஆணுக்குப் பெண் 'சரி'; ஆணுக்குப் பெண் 'நிகர்'; ஆணுக்குப் பெண் 'சமானம்' என்பதுதான் அவனுடைய கட்சி.

'ஆணுக்குப் பெண் உண்மையாகவும், பெண்ணுக்கு ஆண் உண்மையாகவும் இருப்பதற்குப் பெயர்தான் கற்பு' என்பது பாரதியின்

பார்வை. கற்பு நிலை கெடாமல், குடும்ப உறவு கலையாமல், சமூகத்தின் எல்லாக் களங்களிலும் ஆண்களோடு பெண்கள் தோழமை உணர்வுடன், சமத்துவ நெறியுடன் கைகோத்து நடக்க வேண்டும் என்பதே அவனது பேரவா. ‘கண்டதே காட்சி, கொண்டதே கோலம்’ என்ற பெண்ணியவாதிகளுக்கு பாரதியிடம் இடமில்லை. ஒழுக்க வேலி கட்டி, குடும்ப உறவுகளைப் பாதுகாப்பது பெண் சமத்துவத்துக்கு எதிரானதன்று. இதற்காக பாரதியைப் ‘பழமைச் சனாதனி’ என்று பழிக்கும் அதிதீவிரப் பெண்ணியவாதிகளைப் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. ஆணின் அடிமைத் தளையிலிருந்து இக்கணமே பெண் விடுபட வேண்டும். அதற்கு பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டும்.

சாதிகளிடையே சமத்துவம்

‘இந்திய வரலாற்றில் ஒரு களங்கமாக, இந்தியப் புரட்சிக்கு ஒரு சவாலாக இன்றளவும் சாதி நிலவி வருகின்றது. உலகின் எந்தவொரு மூலையிலும் பிறக்கும் எவனொருவன் மீதும் மத, வர்க்க முத்திரைகள் மட்டுமே பதிக்கப்படுகின்றன. இந்த இரண்டையும் அவன் விரும்பினால் மாற்றிக் கொள்வதற்கு அந்தச் சமூகங்கள் கோட்பாட்டளவிலேனும் தடையேதும் விதிப்பதில்லை. ஆனால், இந்தியாவில் பிறக்கிற ஒருவன் இவை தவிர, சாதி முத்திரையையும் தரித்துக் கொண்டுதான் இந்த மண்ணில் கால் பதிக்க வேண்டியிருக்கிறது. ஏற்றத் தாழ்வான இந்தச் சமூக அமைப்பில் இதன் மூலம் அவனுக்கு ஓர் இடமும், தகுதியும் நிர்ணயிக்கப்படுகின்றன. எத்தனை முயற்சிகள் மேற்கொண்டாலும் இவற்றை மாற்றிக்கொள்ள அவன் அனுமதிக்கப்படுவதில்லை’ (சாதியும் வர்க்கமும் - -முன்னுரையில்) என்று பேராசிரியர் அ.மார்க்ஸ் மிகச் சரியாகவும் எளிமையாகவும் சாதியின் வலிமையை விளக்குகிறார்.

www.t.me/tamilbooksworld

‘சாதியின் கொடிய அம்சம் அதன் சுரண்டல் வடிவத்தில் அடங்கியுள்ளது. பிறப்பின் அடிப்படையில் தொழில்களை ஒழுங்கமைப்பது என்பதிலேயே இந்தச் சுரண்டல் அடங்கியுள்ளது. நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையிலேயே இது கருக்கொண்டாலும், திடமாக உருக்கொண்டது நிலப் பிரபுத்துவத்தில்தான். நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் வர்க்கத்தின் இடத்தைச் சாதி இப்படித்தான் நிரப்பி வந்துள்ளது’ என்று விவரிக்கும் அ.மார்க்ஸ் அந்தச் சாதி அமைப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி நிலப்பிரபுத்துவத்தால் சீரழிக்கப்பட்டனர் என்பதைக் குறிப்பிடும்போது,

‘கிராமப் பிணைப்புகளிலிருந்து சட்டபூர்வமாகப் பிரிக்கப்பட்ட, நிலமும் கருவியும் சொந்தமில்லாத, அடித்தட்டுத் தாழ்த்தப்பட்ட மக்கள் இதன் மூலம் நிலப்பிரபுத்துவம் வழங்கிய உயிர் வாழ்க்கையின் குறைந்தபட்ச உத்தரவாதத்தை இழந்தார்கள். தொழில் வளர்ச்சி இல்லாததால் இவர்கள் தொழிலாளி வர்க்கமாக உருப்பெறவும் முடியவில்லை. இது ஒருவகை உதிரி வர்க்கமயமாதலைத் (Iumperisation) தோற்றுவித்தது. விவசாய உறவுகளில் தங்கிப் போன பண்ணையடிமைகள் கொஞ்சம் கொஞ்சமாக விவசாயக் கூலிகளாக மாறத் தொடங்கினர்.’

‘விவசாய உற்பத்தியில் முதலாளிய முறை வளராமலே இது நிகழ்ந்தது. இதன் விளைவாக ஒரு புறம் தொண்டூழிய முறை தொடர்ந்தது. இன்னொரு புறம் உயிர் வாழ்க்கையின் குறைந்தபட்ச நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் கடமையில்லாமல் தொண்டூழியத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டபோது வரலாற்றில் இதுவரை காணாத பல புதிய முரண்பாடுகட்கு அது காரணமாகியது. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இது ஆலய நுழைவு, தொண்டூழிய எதிர்ப்பு, தேநீர்க் கடைகளில் சமஉரிமை கோருதல் என்கிற ஜனநாயக உணர்வுடன் கூடிய கோரிக்கைகளாக வடிவெடுத்தன’ என்று அழகாக ஆய்வு செய்கிறார்.

www.t.me/tamilbooksworld

மனித சமூகத்தில் வர்க்கங்கள் மறைந்தாலும் இந்தியாவில் சாதிகள் மட்டும் சாகாமலே இருக்கும். காரணம், இந்திய மண்ணில் அதன் கட்டுமானம் அவ்வளவு இறுக்கமானது. ‘சாதிகளை இனிவரும் காலத்திலாவது முற்றாக ஒழிக்கக் கூடுமா? என்ற கேள்விக்கு விடை காண்பது அவ்வளவு எளிதல்ல. சாதிகளிடையே சமத்துவத்தைக் கொண்டு வர முடியுமானால் அதுவே மிகப் பெரிய சாதனையாக இருக்கும்.

‘பொருளாதாரம் என்பதை எடுத்துக் கொண்டால் பெரும் சொத்துகளை உடைய ஒரு சிலரையும், மிகக் கொடிய வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏராளமானோரையும் கொண்டுள்ள சமுதாயம் நம்மிடம் உள்ளது. 1950 ஜனவரி 26-ல் நாம் முரண்பாடுகளுள்ள வாழ்க்கையில் நுழையப் போகின்றோம். அரசியலில் நமக்கு சமத்துவமும், சமுதாய- - பொருளாதார வாழ்வில் நமக்கு ஏற்றத்தாழ்வும் இருக்கும்.’

‘அரசியலில் ‘ஒரு மனிதன் - ஒரு வாக்கு’ மற்றும் ‘ஒரு வாக்கு - -ஒரு மதிப்பு’ என்ற நெறிகளை நாம் அங்கீகரிக்கப் போகிறோம். நமது

சமுதாய, பொருளாதார வாழ்விலோ, நமது சமுதாய பொருளாதாரக் கட்டமைப்பின் காரணமாக 'ஒரு மனிதன்- ஒரு மதிப்பு' என்ற நெறியை நாம் தொடர்ந்து மறுத்து வருவோம். முரண்பாடுகளுள்ள இந்த வாழ்க்கையை நாம் எத்தனை நாளைக்குத்தான் தொடர்ந்து வாழ்வது? நமது சமுதாய, பொருளாதார வாழ்வில் எத்தனைக் காலம்தான் நம்மால் சமத்துவத்தைத் தொடர்ந்து மறுத்துக் கொண்டு வர முடியும்?'

'நீண்ட காலம் நாம் அதனை மறுத்துக்கொண்டே வருவோமேயானால். நமது அரசியல் ஜனநாயகத்தை அபாயத்துக்குத்தான் உள்ளாக்குவோம். கூடிய விரைவில் நாம் இந்த முரண்பாட்டை அகற்றியாக வேண்டும். இல்லாவிட்டால், ஏற்றத் தாழ்வால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இந்த அவை கடுமையாக உழைத்துக் கட்டியெழுப்பியுள்ள அரசியல் ஜனநாயகம் என்ற கட்டமைப்பையே வெடி வைத்துத் தகர்த்துவிடுவர்' (இந்து- -இந்தி - -இந்தியா - -எஸ்.வி.ராஜதுரை) என்று அரசியலமைப்புச் சட்டத்துக்கு இறுதி வடிவம் தந்து அரசியல் நிர்ணய சபையில் 1949 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அண்ணல் அம்பேத்கர் சமத்துவ முகமற்ற இந்தியச் சமூகம் சந்திக்கவிருக்கும் எதிர்கால விளைவுகளைக் கோடிட்டுக் காட்டி எச்சரிக்கைக் குரல் கொடுத்தார்.

www.t.me/tamilbooksworld

எது பார்ப்பனியம்?

பார்ப்பனியம் என்பது எதுவென்று அம்பேத்கர் ஒரு கட்டத்தில் தெளிவாக்கினார். 'பார்ப்பனியத்தை எதிர்க்காமல், பாட்டாளி வர்க்கத்தை எவ்வாறு ஒன்றிணைக்க முடியும்?' என்று பொதுவுடைமைக் கட்சியினரைப் பார்த்துக் கேள்வி எழுப்பியபோது 'பார்ப்பனியம்' குறித்த தன் பார்வையை அம்பேத்கர் வெளிப்படுத்தினார்.

'பார்ப்பனியம் என்பதற்கு நான் கொள்ளும் பொருள் பார்ப்பனர்கள் ஒரு சமூகம் என்ற வகையில் கொண்டிருக்கும் அதிகாரம், சிறப்புச் சலுகைகள், நலன்கள் என்பன அல்ல. நான் அந்தப் பொருளில் இந்தச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. பார்ப்பனியம் என்பதற்கு நான் கொள்ளும் பொருள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உணர்வின் மறுப்பாகும். இந்தப் பொருளில் நாம் பார்த்தால் 'பார்ப்பனியம்' என்பது எல்லா வகுப்புகளிலும் கட்டுக்கடங்காதபடி இருப்பதை காணலாம்...' என்ற அம்பேத்கரின் விளக்கத்தின்படி யாரும் பாரதியைப் பார்ப்பனியத் தன்மையுடையவன் என்று பழிக்கவே முடியாது.

வாழ்நாள் முழுவதும் அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் வந்து சேர வேண்டும் என்பதற்காகவே எழுத்துத் தவமியற்றியவனைக் கனகலிங்கத்துக்குப் பூணூல் போட்டு 'இன்று முதல் நீ பிராமணன்' என்று சொல்லச் சொன்னதற்காக அவன் மீது சேற்றைப் பூசுவது சரியன்று.

'சாதிச் சண்டை போடுவதில் பயனில்லை' என்ற விவேகானந்தர் சாதிகளிடையே சமத்துவம் வாய்ப்பதற்குத் தனக்குத் தெரிந்த வழியை விளக்கினார். 'சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பதன்று; கீழேயுள்ளவர்களை மேலுள்ளவர்களின் நிலைக்கு உயர்த்துவதேயாகும். நமது லட்சியத்தின் மேல்படியில் பிராமணன், கீழ்ப்படியில் சண்டாளன்; சண்டாளனைப் பிராமணனுடைய நிலைக்கு உயர்த்துவதே நமது வேலை' என்றார் விவேகானந்தர்.

'வாழ்க்கை ஒழுக்கங்களில் தவறாமல், சுயநலமற்று, சமூக நலனுக்காகவே சர்வபரித் தியாகம் செய்பவன் எந்தச் சாதியில் பிறந்திருந்தாலும் அவனே பிராமணன்' என்பதுதான் விவேகானந்தரும் பாரதியும் ஏற்றுக்கொண்ட வரையறை. பிறப்பு வழிபட்ட சாதியமைப்பை இருவரும் ஏற்கவில்லை.

www.t.me/tamilbooksworld

பரமஹம்சரின் பிறந்த நாள் விழா நீலாம்பூர் பாபுவின் மாளிகையில் கொண்டாடப்பட்டபோது வழிபாட்டுக்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்ட விவேகானந்தர் பூணூல்களைக் கொண்டு வரச் சொன்னார். 'இத்தனை பூணூல்கள் எதற்கு சுவாமி' என்று சீடர் கேட்டதும், ஒவ்வோர் இருபிறப்பாளனும் பூணூல் அணிந்து கொள்வதற்கு உரிமை உடையவன். இதற்கு வேதங்களே பிரமாணமாக உள்ளன. 'ராமகிருஷ்ணரின் பிறந்த நாளான இந்தப் புனித நாளில் யாரெல்லாம் இங்கு வருகிறார்களோ. அவர்களுக்கெல்லாம் பூணூல் அணிவிக்கப் போகிறேன்...பிராமணரல்லாத பக்தர்களுக்குக் காயத்ரி மந்திரத்தை உபதேசி' என்றார் விவேகானந்தர்.

'துவிஜர்கள்' என்ற இருபிறப்பாளர்களுக்குத்தான் காயத்ரி மந்திரம் உபதேசித்துப் பூணூல் அணிவிக்க விவேகானந்தர் விரும்பினார். பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் மட்டுமே இருபிறப்பாளர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சூத்திரனும் பஞ்சமனும் 'இருபிறப்பாளன்' இல்லை. அவர்களுக்குப் பூணூல் அணிய வேதம் அனுமதிக்கவில்லை. சுவாமி விவேகானந்தரின் புரட்சி வேதம் அனுமதித்த எல்லையோடு நின்றது. ஆனால், பாரதி வேண்டுமென்றே

அந்த எல்லையை மீறினான். பஞ்சமராகப் பழிக்கப்பட்ட கனகலிங்கத்துக்கும் நாகலிங்கத்துக்கும் காயத்ரி மந்திரத்துடன் பூணூல் அணிவித்தான். அவனளவில் மனிதசாதி ஒரே சாதி.

அம்பேத்கர் மாநாட்டில் பூணூல்

ரத்னகிரி மாவட்ட மாநாடு 1929 ஏப்ரல் மாதத்தில் சிப்லன் நகரில் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கர் மாநாட்டுத் தலைமையுரை ஆற்றினார். ‘உங்கள் அடிமைத்தனத்தை நீங்களே அகற்ற வேண்டும். மானமிழந்து வாழ்வது ஈனத்தனமானது. சுயமரியாதையுடன் வாழ்வதற்குப் பல தடைகளைத் தகர்த்தெறிய வேண்டும்’ என்று அவர் அந்த மாநாட்டில் முழங்கினார். மாநாட்டின் முடிவில் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் பூணூல் விநியோகம் செய்யப்பட்டது. அம்பேத்கரின் நண்பர் தியோராவ் நாயக் என்ற பிராமணர் புரோகிதராக இருந்து 6000 தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதிகளுக்கு வேதமந்திரங்களுடன் பூணூல் அணிவித்தார். மதபீடங்களுக்கும், வர்ணாசிரமத்துக்கும் எதிரான கலகத்தைத்தான் அம்பேத்கர் முன்னிலையில் அன்று அரங்கேற்றினார்கள். அந்தக் கலகத்தைத்தான் அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பாரதி தனியொருவனாக வீட்டில் பிராமணர் புடைசூழ ஒரு பஞ்சமருக்குப் பூணூல் அணிவித்து நடத்திக் காட்டினான்.

www.t.me/tamilbooksworld

எந்த நிலையிலும் தங்களைச் சாதி இந்துக்கள் சமமாக நடத்தப் போவதில்லை என்று தேர்ந்து தெளிந்தபின்புதான் 1929 மே 29-ம் நாள் ஜல்கான் நகரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில், அம்பேத்கர் தலைமையில், ‘தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிச் சாதி இந்துக்கள் கவலைப்படவில்லை என்ற நிலை நீடித்தால் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் வேறு சமயத்தில் சேர்வது’ என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

‘பறையரும், புலையரும், பள்ளரும், சக்கிலியரும் நம்மைப் போல இந்துக்கள் என்பதையும், விபூதி நாமம் போட்டுக் கொண்டு நமது தெய்வங்களையே வணங்குவோர் என்பதையும் மடாதிபதி, புரோகிதர், குருக்கள் முதலியவர்கள் சற்றே மறந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது’ என்று குறிப்பிடும் பாரதி, ‘பஞ்சமரின் சேரிகளிலே கிறிஸ்துவப் பாதிரிகள் பள்ளிக்கூடங்கள் முதலியன வைப்பது போல் நமது குருக்கள் ஏன் செய்யவில்லை?’ என்று கேட்கிறான்.

‘கிராமங்களிலுள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றிப் பேசு. அவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு.

பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக்கொடு, இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. அவர்களோடு சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களை எல்லாம் உடனே ஒன்று சேர்த்து இந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள்...' என்று பாரதி காட்டும் அவசரத்தில் சாதிக் கொடுமைகளினால் இந்து மதம் சீர்குலைந்து, தாழ்த்தப்பட்டோர் வேறு சமயம் சார்வதற்குரிய சூழல் கனிந்துவிடுமே என்று கவலைப்படுவது தெரிகிறது. விவேகானந்தருக்கும், மகாத்மா காந்திக்கும்கூட இந்தக் கவலை இருந்ததை மறுப்பதற்கில்லை.

'நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற சாதியரை நாம் நேரே நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கை நீட்டாமல் இருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள்' என்று பாரதி ஒருவனால்தான் நூறாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் துணிச்சலாக எழுதவும் பேசவும் முடிந்தது.

இந்து தர்மம் நிலைக்க வேண்டும் என்று பாரதி விரும்பினான். நான்கு வகுப்புகள் நீடிப்பதே சிறந்த சமூக ஏற்பாட்டுக்கு வழி என்று அவன் நம்பினான். சாதிகளில் உயர்வு தாழ்வு கற்பிப்பதை எதிர்த்தான். சமத்துவத்துக்குச் சாதியமைப்பு மிகப் பெரிய தடை என்று உணர்ந்தான். தான் உண்மையாக உணர்ந்ததை ஒளிவு மறைவின்றி எழுத்தில் பதிவு செய்த பாரதியின் நேர்மையை நாம் பாராட்ட வேண்டும்.

www.t.me/tamilbooksworld

பாரதியும், விவேகானந்தரும், காந்தியும் வர்ணப் பிரிவுகளை வேலைப் பிரிவுகளாக வரவேற்றதுதான் மிகப் பெருந்தவறு. வர்ணப் பகுப்பு என்பது வர்ணப் பகுப்புதான். பிராமணர்கள் வெண்மை நிறம், சத்திரியர்கள் மாநிறம், சூத்திரர்கள் கறுப்பு நிறம் என்று நிறங்களை வைத்துப் பிரிவுகள் உண்டாயின. முதலில் வர்ணம் சாதியைக் குறிக்காவிடினும், காலநடையில் நான்கு வர்ணங்கள் நான்கு சாதிகளாக மாறின. வெண்மை நிறம் உயர்வாகவும், கறுப்பு நிறம் தாழ்வாகவும் கருதப்பட்டன. இந்த நான்கு சாதிகள்தான் பின்னர் நாலாயிரம் சாதிகளாக உருமாறின. சாதியொழிய வேண்டும் என்போர் வர்ணம் வாழ வேண்டும் என்பது மிகப் பெரிய முரண்பாடு. இங்கேதான் மூவரும் வழுக்கி விழுந்துவிட்டனர்.

எது எப்படியாயினும் பாரதிக்கு சாதி கிடையாது என்பது உண்மை. 'பார்ப்பானும் பறையனும் கடவுளின் ரூபமாகத்தான்' பாரதிக்குத் தெரிந்தனர். ஒருவருக்கு ஒரு நீதியென்பது சமூக நீதியாகாது என்பதை அவன் அறிவான். அதனால்தான்,

சூத்திரனுக் கொரு நீதி தண்டச்

சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி

சாத்திரம் சொல்லிடு மாயின் - அது

சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்

- என்று அவனால் ஆவேசமாகப் பாட முடிந்தது.

'சர்வ ஜீவ ஐக்கியம், சர்வ ஜீவ சமத்துவம்' வேண்டிய மகாகவி அவன். அவனுக்கு உள்ளொன்று வைத்துப் பொய் பேசத் தெரியாது. 'மடிந்தாலும் பொய் கூறேன் மானுடர்க்கே' என்று சத்தியம் செய்து, 'ஊருக்கு நல்லது சொல்ல' எழுதுகோல் எடுத்தவன் பாரதி. அவனுடைய ஆசை. சாதிகள் இல்லாத சமூகம். அந்த ஆசையின் உள்நோக்கம் 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லும்' கொடுமை அகல வேண்டும் என்பதுதான்.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றான் பாரதி. அது அவனுடைய 'உட்டோப்பியன்' கனவு என்று நனவாகும்? என்று யாருக்கும் தெரியாது. சாதிச் சான்றிதழ் கேட்டு, பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் சமயத்தில், சாதிகள் அரசியலமைப்புச் சட்டத்தினாலேயே அங்கீகரிக்கப்பட்டுவிட்ட நிலையில், சாதி பார்த்து அரசியல் கட்சிகள் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் அருவருப்பான சூழலில் 'சாதிகள் இல்லை' என்ற பாரதியின் கனவு சமீபத்தில் மெய்ப்பட வாய்ப்பில்லை. ஆனால், 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற உறுத்தல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் எழுந்தால் சாதி சமத்துவம் இன்றே சாத்தியப்படும்.

சாதி சமத்துவம் சாத்தியமானால் இரட்டைக் குவளைகள் இருக்காது. தாழ்த்தப்பட்டவர் வாயில் மலத்தைத் திணிக்கும் சாதித் திமிர் நீடிக்காது. தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர் அதிகார நாற்காலியில் அமர்வதைத் தடுக்க முயற்சிக்கும் ஜனநாயக அதர்மங்கள் அரங்கேறாது. கூலி உயர்வு கேட்டால் கூண்டோடு எரிக்கப்படும் கீழ்வெண்மணிகள் தொடராது. 'சாதி மதங்களைப் பாரோம்' என்றானே பாரதி அந்தக் கனவு மெய்ப்படுவதில் எந்தத் தடையுமில்லை. அதற்கு வேண்டியது மக்களின் மனோபாவத்தில் மாற்றம். அதற்கு இன்னும் பல பெரியார்கள் பிறக்க வேண்டும்.

மத நல்லிணக்கம்

www.t.me/tamilbooksworld

‘இந்து மதம் அவனவன் வாழ்க்கை மேம்பட வேண்டுமாயின் அதற்குப் பிறரை எதிர்பார்த்தல் அவசியமில்லை என்றும், அவனவன் செய்யும் நற்செயல்களால் இம்மையிலேயே உயர்ந்த பயன்களைப் பெறலாமென்றும் கற்பிக்கிறது. பிற பல மதங்களைக் காட்டிலும் இந்து மதத்தில் ஒருவனுக்குள்ள விசேஷ உதவி என்னவென்றால், ஒருவன் கடவுளை இறந்த பின்னால்தான் பார்க்கலாம் என்று பிற மதங்கள் சொல்வது போலன்றி, ஒருவன் கடவுளைத் தன் பக்தியின் மகிமையால் இவ்வுலகத்திலேயே பார்த்து, அவனருளால் இந்த மண்ணுலகத்திலேயே அமரத்தன்மை பெற்று நித்திய வாழ்க்கை வாழலாமென்று இந்து மதம் போதிக்கின்றது’ (இந்து மதம் - பாரதியார் கட்டுரைகள்) என்று ஓர் இந்துவாக நின்று தன் மதத்தின் பெருமை பேசுபவன்தான் பாரதி. அதற்காக எந்த மதத்தையும் மறந்தும் சிறுமைப்படுத்த முயலவில்லை. ‘பிற மதங்களும் உண்மை என்ற சமரச ஞானத்தை ஊட்டத் தவறலாகாது. இந்த சமரச ஞானம் இல்லாவிட்டால் எந்தச் சித்தாந்தமும் நாளடைவில் பொய்யாகவும், குருட்டு நம்பிக்கையாகவும், வீண் அலங்காரமாகவும் முடிந்து ஜனங்களை மிருகங்களைப் போலாக்கிவிடும்’ என்று உபதேசித்தவன் பாரதி.

www.t.me/tamilbooksworld

‘இந்துஸ்தானம் என்பது இந்துக்களின் ஸ்தானம். இது நமது தேசத்துக்கும், தேசத்திலுள்ள ஜனக் கூட்டத்துக்கும் பெயர். இந்த ஜனக் கூட்டத்துக்கு ‘பாரத சாதி’ என்றும் பெயர் சொல்வதுண்டு’ என்று பாரதி தரும் விளக்கம் நம் சிந்தனைக்குரியது.

‘கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்கள் எல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர். கிறிஸ்துவர்களாயினும், பார்சிகளாயினும், மகம்மதியராயினும், எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து, வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத சாதியிலே சேர்த்துக்கணக்கிட வேண்டும். இது ஒரே சாதி, பிரிக்க முடியாதது; அழிவில்லாதது’ என்ற (பாரத சாதி) பாரதியின் பார்வை இந்த மண்ணில் அனைவருக்கும் வரம் போல் வந்து வாய்த்துவிட்டால் மதங்களின் போரால் எந்த நாளும் மனித ரத்தம் ஓடாது.

அக்பருக்கு விழா எடுப்போம்

‘சத்ரபதி சிவாஜி தன் சைனியத்துக்குக் கூறியதாக’ மகாகவி எழுதிய கவிதையின் நோக்கம் தேசிய எழுச்சியை ஒவ்வொரு இந்தியனின்

இதயத்திலும் உண்டாக்குவதுதான். முஸ்லிம் படைக்கு எதிராகப் போர் நடத்திய சிவாஜி தன் படைவீரர்களுக்கு உணர்ச்சியை ஊட்டும் வகையில் உரை நிகழ்த்துவதாக அந்தக் கவிதை அமைந்திருக்கிறது. ஆனால், அந்தக் கவிதையில் இடம்பெற்றிருக்கும் வாசகங்கள் இஸ்லாமியர்களின் இதயங்களை ரணப்படுத்திவிடுமோ என்று அஞ்சிய பாரதி 'இந்தியா' இதழில்,

'சரித்திர சம்பந்தமான செய்யுட்கள் புனைவதில் இந்தக் காலத்துக்கு தமிழர்கள் சாதாரணமாகப் பிரவேசிப்பதில்லை. எனினும், சுதேசப் பற்று மிகுதிப்படுவதற்கு மேற்கூறிய விதமான செய்யுட்கள் மிகவும் அவசியமானவை. இந்தச் செய்யுளிலே நமது மகமதிய சகோதரர்களுக்கு விரோதமான சில வசனங்கள் உபயோகிக்க நேர்ந்திருப்பது பற்றி விசனமடைகிறோம். இந்தக் காலத்து மகமதியர்கள் பாரத பூமியின் சொந்தப் புத்திரர்கள் என்பதையும், இந்துக்களும் மகமதியர்களும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தை போல நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம்' என்று விளக்குவதுடன், 'மகமதிய நண்பர்கள் தமது விஷயத்தில் உதாசீனம் இருப்பதாக நினைக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம்' என்று வேண்டுகோள் விடுக்கிறான்.

www.t.me/tamilbooksworld

மராட்டிய மண்ணில் தேசபக்தியை மக்களிடம் பெருக்குவதற்காகத் திலகர் சிவாஜிக்கு விழா எடுத்தார். தான் தேவதா விசுவாசத்துடன் நேசித்த தலைவர் திலகர், சிவாஜிக்கு விழா எடுத்ததில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாக நினைக்கலாகாது. என்றெண்ணிய பாரதி,

'இந்த உற்சவம் நடத்தியதில் சில மகமதியருக்கு வெறுப்புண்டாகி, அதைச் சில பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள். நமது நாட்டில் தோன்றி நமது நன்மைக்குப் பாடுபட்ட மகான்களை எல்லோரும் ஒன்று சேர்ந்து பூஜிப்பதே கடமை. இதை நாமெல்லோரும் நமது மகமதிய சகோதரர்களுக்கு காரியத்தில் காட்ட, அக்பர் போன்ற மகமதிய மகான்களின் உற்சவத்தைக் கொண்டாட வேண்டும். அதனால்தான் அவர்களுக்கு முழு நம்பிக்கை உண்டாகும்' என்று வலியுறுத்துகிறார். முஸ்லிம்கள் தேசவிடுதலைப் போரில் காங்கிரஸிலிருந்து விடுபட்டு விலகி நிற்கக்கூடாது என்று எண்ணிய மகாத்மா காந்தி கிலாபத் இயக்கத்தை ஆதரித்ததையும், பாரதி 'அக்பர் போன்ற மகமதிய மகான்'களுக்கு விழாவெடுக்க வற்புறுத்துவதையும் ஒரு சேரச் சிந்திக்க வேண்டும்.

'இந்தியாவிலுள்ள முசல்மான்களில் பலர் இந்து சந்ததியர்.

அவர்களுடைய நெஞ்சில் இந்து ரத்தம் புடைக்கிறது. இங்ஙனமில்லாமல், வெறும் பட்டாணிய, அராபிய, பாரசீக, மொகலாய சந்ததியாக இருப்போரும் இந்த தேசத்தில் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக வாழ்வதால், இந்து சாதியராகவே கருதத் தக்கவர் ஆவர். எங்ஙனமெனில், ஜப்பானில் பிறந்தவன் ஜப்பானியர்; சீனத்தில் பிறந்தவன் சீனன்; இந்து தேசத்தில் பிறந்தவன் இந்து. இதர தேசங்களில் தேச எல்லையே சாதி எல்லையாகக் காணப்படுகிறது. இந்த நாட்டிலும் அதே மாதிரி ஏன் செய்யக் கூடாது' (சமூகம் - -பாரதியார் கட்டுரைகள்) என்று நம்மைச் சிந்திக்கத் தூண்டியவன் பாரதி.

புத்தர் - இயேசு - நபிகள்

'அரசு நிலைமையைத் தூவென்று துப்பி வந்து பிச்சைக்காரராகத் திரிந்த கௌதம சாக்கியர் எவ்வாறு புத்தராகிவிட்டார்? அத்தனை உயர்ந்த தெய்வ ரகசியம் அவருக்கென்ன புலப்பட்டுவிட்டது? பூலோகத்திலுள்ள மானிடர் அனைவரும் துயரம் நீங்கியிருப்பதற்கு வழி கருணை என்று அவர் அறிந்துவிட்டார். Love, Universal Love.. காதல், கருணை, தெய்வீகக் கருணை. இஃதே மானிடர் உடலையும், மனத்தையும், அறிவையும், ஆன்மாவையும் பற்றிய நோய்களுக்கெல்லாம் மருந்தென்று புத்தர் கண்டார்' என்று புத்தரைக் கொண்டாடும் பாரதி,

www.t.me/tamilbooksworld

'கிறிஸ்துவுக்கு முள்முடி தரித்துச் சிலுவையிலேற்றி அங்கந்தோறும் ஆணியறைந்து, மேலெல்லாம் காறி உமிழும்போது, அவர் 'எனது பிதாவே! இவர்கள் அறியாது செய்கின்றார்கள். இவர்களை மன்னித்தருளும்' என்று சொல்லிவிட்டு இறந்து போயினர்' என்று இயேசுவுக்காக நெஞ்சம் நெகிழ்கிறான். 'ஏசு கிறிஸ்துவின் வார்த்தை' என்று (தத்துவம்- - பாரதியார் கட்டுரைகள்) தலைப்பிட்டு அற்புதமான கட்டுரையைத் தீட்டுகிறான்.

'இடையிடையே நான் என் மனதிற்குள் முகம்மது நபி (ஸல்லல்லாஹுஅலை ஹிவசல்லம்) அவர்களைப் பற்றி சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப்பாலைவனத்தில், நள்ளிரவிலே தனிமணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக் கொண்டு போகிறார். அல்லது அங்கொரு குன்றின் மேல் ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்து பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய இருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது . வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞான ஒளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார்...' என்று பொட்டல் புதூரில் 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' என்ற

தலைப்பில் உரை நிகழ்த்தியபோது உருகுகிறான். இந்த மகாகவியின் விரிந்த மனம்தான் மக்கள் அனைவருக்கும் வாய்க்க வேண்டும்.

'பாண்டியிலே பாரதியார் பலரும் பார்க்க வேண்டும் என்றே கடைவீதி நடுவே முஸ்லிம் கடையில் தேனீர் வாங்கி அருந்துவார். அவர் ஒரு சமயம், 'என்ன சுப்புரத்தினம், என் பெண் வேறொரு தாழ்ந்த சாதியானோடு ரங்கூனுக்கு ஓடிப்போய் அங்கிருந்து எனக்கு , 'அப்பா, நான் இன்னாரோடு இங்கு சுகமே இருக்கின்றேன். அவரைத்தான் நான் விரும்புகிறேன். மணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று எழுத வேண்டும். அதைக்கேட்டு நான் ஆனந்தப்பட வேண்டும்' என்று கூறினார்' இது பாவேந்தர் பாரதிதாசன் பதிவு செய்திருக்கும் சம்பவம். இதன் மூலம் பாரதி சாதி, மதங்களை மீறி மனிதம் போற்றிய மகாகவி என்பதை அனைவரும் அறிய முடிகிறது.

மகாகவி இதோ... தன் ஆசையை, கனவை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறான்...

'மனித சாதி முழுவதையும் ஒரே குடும்பமாகக் கருதி மானிடருக்குள்ளே இயற்கையாலும், மானிடர் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளாலும், எத்தனை வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், இந்த வேறுபாடுகளைக் கருதிச் சிலருக்கு அதிக சௌகரியங்களும், பலருக்குக் குறைந்த சௌகரியங்களும், சிலருக்கு மதிப்பும், பலருக்கு அவமதிப்பும், சிலருக்கு லாபங்களும், பலருக்கு நஷ்டங்களும் ஏற்படுத்தியிருப்பது தவறு என்பதும், ஒவ்வொருவரும் சகோதரரைப் போல பரஸ்பர அன்புடனும், மரியாதையுடனும் வாழ்வதே நியாயம் என்பதும் நவீன ஐரோப்பிய சித்தாந்தங்களிலே மிகவும் முக்கியமான சித்தாந்தமாகும். இந்தக் கொள்கைக்கு எல்லா மதங்களும் சார்பாக இருப்பதை உத்தேசிக்குமிடத்தே, இது நாளடைவில் ஐரோப்பாவில் மாத்திரமின்றி உலக முழுமையிலும் பரிபூரணமாக வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. இந்த சித்தாந்தம் பரிபூரண ஐயமடைந்து மனிதருக்குள்ளே சகஜ தர்மமாக ஏற்பட்ட பிறகுதான் மானிடர் உண்மையான நாகரிகம் உடையோராவார்'

www.t.me/tamilbooksworld

பாரதியும், விவேகானந்தரும், காந்தியும் இந்து சமயத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தாலும் எல்லா மதங்களையும் நேசிக்கும் நெஞ்சம் உடையவர்களாக இருந்தனர். 'ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களே அல்லவா! ஏன் முதலில்

இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப்போதல் உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்கு ஊழியம் புரியுங்கள். அவர்களுக்காக இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்' என்ற விவேகானந்தர் எந்த மதமாக இருந்தால் என்ன? 'கதியற்ற மக்களுக்குத் தொன்டாற்றுவதே என் மதம்' என்ற மகாத்மா காந்தி இந்து மதப்பற்றாளராக இருந்ததால் மனித குலத்துக்கு எந்த வகையில் நட்டம்? 'இங்கே அனாவசியமான சாதி விரோதங்களும், அன்புக் குறைவுகளும். அவமதிப்புகளும் வளரவிடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும், உடன் பிறப்பையும் நிலைநாட்டுவது நம்முடைய கடமையன்றோ' (சமூகம்) என்று எப்போதும் மனித சமூகத்திடம் அன்பையே யாசித்த மகாகவி ஓர் இந்துவாகவும், பிராமணனாகவும் பிறந்ததனால் என்ன பிழை நேர்ந்துவிட்டது?

மதநல்லிணக்கம் என்பது மதத்துக்கு எதிரானதன்று. தான் ஒரு மதத்தைச் சார்ந்திருந்தாலும், உலகின் எல்லா மதங்களும் ஒரு பரம்பொருளைத்தான் உணர்த்துகின்றன என்ற உண்மையை உணர்ந்து, அனைத்து மதங்களையும் நேசிக்கும் நெஞ்சம் உடையவராக, அனைவரிடத்தும் பேதமற்று அன்பு செலுத்துபவராக ஒருவர் தன் வாழ்க்கையை வழி நடத்துவதே மதநல்லிணக்கத்தின் நல்லடையாளம். ஓர் இந்துவாக இருந்தபடி பாரதி அதைத்தான் செய்தான். 'ஒன்று பரம்பொருள் -நாமதன் மக்கள்' என்று ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழ அவன் வழி காட்டினான். அவரவர் மதங்களைத் தழுவியபடி இந்தியர் அனைவரும் 'பாரத சாதியாய்' வாழ வேண்டுமென்று அவன் கண்ட கனவு மெய்ப்படும் நாள்தான் இந்திய நாகரிகத்தின் திருநாள்.

சமத்துவம் - சகோதரத்துவம்

'நான் நண்பர்களே இல்லாத ஏழைகளின் நண்பன்' (I am the friend of the unfriended poor) என்றான் ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி. அவன்தான் 'அடிமையும் கொடுங்கோலனும் இரட்டைப் பிறவிகளான எதிரிகள்' (The slave and the tyrant are twin born foes) என்று தெளிவுபடுத்தி, கொடுங்கோன்மைக்கு எதிராக அடிமைத்தளையறுத்து அனைவரும் போர்க்குரல் கொடுக்கத் தன் கவிதைகளின் மூலம் தூண்டினான். சுதந்திரத்தைப் பூமியின் சொர்க்கமாக வர்ணித்து, மக்கள் சமூகம் தளைகளற்ற பூரணமான சுதந்திரத்தைத் தங்கள் விருப்பப்படி அனுபவிக்க வேண்டுமென்று அவாவியவன் அவன். அவனுடைய சமூக லட்சியங்களில் ஈடுபாடு கொண்டு 'ஷெல்லிதாசன்' என்று புனைபெயர்

www.t.me/tamilbooksworld

சூட்டி எழுதியவன் பாரதி.

ஷெல்லி நாத்திகன். பாரதி 'தமிழா! தெய்வத்தை நம்பு' என்று சொன்னவன். ஷெல்லி கட்டற்ற விடுதலைக் காதலை வரவேற்றவன். பாரதி அதைப் 'பொய்மைக் காதல்' என்று எதிர்த்தவன். மற்றபடி இருவருக்கும் இடையில் சமூக லட்சியங்களில் ஒரே மாதிரியான பார்வை இருந்தது. இருவருமே இளம் வயதில் மரணத்தைத் தழுவியவர்கள். ஷெல்லியைக் கடலின் சூறைக் காற்று பறித்துக் கொண்டது. பாரதியைக் கோயில் யானை பதம் பார்த்துவிட்டது.

ஏழைகளின் நண்பனாக ஷெல்லி குரல் கொடுத்தது போன்று, தமிழ் இலக்கிய உலகில் ஏழைகளின் நிலை கண்டு நெஞ்சுருகிப் பாடியவன் பாரதி.

*கஞ்சி குடிப்பதற் கிலார் - அதன்*

*காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்*

*பஞ்சமோ பஞ்சமென்றே - நிதம்*

www.t.me/tamilbooksworld

*பரிதவித்தே உயிர் துடிதுடித்தே*

*துஞ்சி மடிகின்றாரே - இவர்*

*துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே*

*- என்று கண்ணீர் விட்டுக் கலங்கிய மனிதநேயக் கவிஞன் அவன்.*

*ஈனப் பறையர்களேனும் - அவர்*

*எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ*

- என்று தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் துடைக்க, உயர்சாதிக் கூட்டத்திலிருந்து விடுபட்டு விலகி 'நண்பர்களற்ற ஏழைகளின் நண்பனாக' ஆதரவுக் கரம் நீட்டியவன் நம் மகாகவி.

'விதையுங்கள். ஆனால், எந்தக் கொடுங்கோலனையும் அறுக்கவிடாதீர்கள். செல்வத்தைத் தேடுங்கள். ஆனால், எந்த ஏமாற்றுக்காரனையும் குவிக்க விடாதீர்கள். ஆடைகளை நெய்யுங்கள். ஆனால், சோம்பேறிகள் அவற்றை அணிய விடாதீர்கள். ஆயுதங்களைச்

செய்யுங்கள். ஆனால், அதனை உங்கள் தற்காப்புக்காகவே தாங்கி நில்லுங்கள்' (பாரதியும் ஷெல்லியும்- - ரகுநாதன்) என்று ஷெல்லி முழங்கியதைப் போல் பாரதியும்,

ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை

ஏய்ப்போருக் கேவல்செயும் காலமும் போச்சே

- என்று ஆனந்தக் கூத்தாடுகிறான்.

விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்- - வெறும்

வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம் (சுதந்திரப் பள்ளு)

- என்று பாரதி பிரகடனம் செய்கிறான்.

அவன் இறுதியாக எழுதி, கடற்கரைக் கூட்டத்தில் அவனே பாடிய பாடல்தான் 'பாரத சமுதாயம்'. உலக சமூகத்துக்கு ஆன்மிகத்தை அள்ளிக்கொடுத்த மண் பாரதமண் என்ற பெருமிதம் பாரதிக்கு எப்போதும் உண்டு. தன்னுடைய பெருமிதத்தை, நம்பிக்கையை, சமூகம் சார்ந்த தன் லட்சியக் கனவுகளை இந்த ஒரு பாடலில் பாரதி முற்றாகச் சொல்லிவிடுகிறான்.

www.t.me/tamilbooksworld

முதலில் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்று நெஞ்சுயர்த்தி வாழ்த்துகிறான்.

அடுத்து,

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்

முழுமைக்கும் பொது உடமை

ஒப்பி லாத சமுதாயம்

உலகத்துக் கொரு புதுமை

- என்று புரட்சிக் குரல் கொடுக்கிறான். தமிழுக்குப் பல புதிய சொற்களைப் படைத்தளித்த பாரதி தந்த தனிப்பெரும் வார்த்தைக் கொடைதான் புரட்சியும் பொதுவுடைமையும். பாரதிக்கு முன்பு தமிழில் 'புரட்சி' இல்லை. தமிழரிடையே 'பொதுவுடைமை' இல்லை.

இந்திய மக்கள் அனைவருக்கும் இந்தியா பொதுவுடைமை. சிலர் மாளிகையில் வாழவும், பலர் மண்குடிசைகளில் வீழ்ந்து கிடக்கவும் விதியொன்றுமில்லை. எல்லோருக்கும் எல்லாமும் சமமாகப் பங்கிடப்படவேண்டும் என்று சோசலிசம் பேசுகிறான் மகாகவி.

வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்

இல்லை என்பதை இல்லையாகச் செய்வேன்

- என்று சத்தியம் செய்தவனல்லவா அவன்!

மனிதர் உணவை மனிதர் பறிக்கும்

வழக்கம் இனியுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும்

வாழ்க்கை இனியுண்டோ?

- என்று கேட்பதன் மூலம், இனி அந்த இழிநிலை இந்தியாவில் நீடிக்கலாகாது என்று தன் ஆசையை ஆவேசத்துடன் வெளிப் படுத்துகிறான்.

www.t.me/tamilbooksworld

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் - வெறும்

சோற்றுக்கோ வந்ததிந்த பஞ்சம்

- என்று ஏழ்மையின் கொடுமையைக் கண்டு நெஞ்சம் பதறியவன், வெற்றுச் சோற்றுக்கும் வழியற்று வாழும் மக்களைத் தன் விழிகளால் காணச் சகியாது,

இனி யொரு விதி செய்வோம் - அதை

எந்த நாளுங் காப்போம்

தனி யொருவனுக் குணவில்லை யெனில்

ஜகத்தினை யழித் திடுவோம்

- என்று சூளுரை செய்கிறான். ஒரு மனிதனுக்கு உணவு இல்லையென்றாலும் இந்த உலகை அழிக்கத் துணிந்தவனின்

அருட்கருணை, ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய’ வள்ளலாரின் உயிர்க்கருணையின் அடித்தளத்தில் விளைந்தது.

எல்லோரும் சுதந்திரமாகவும் சமமாகவும் இருக்க வேண்டும் (Let all be free and equal) என்பது ஷெல்லியின் கனவு. பாரதிக்கும் அதே கனவுதான். அனைவருக்கும் சுதந்திரமும் சமத்துவமும் இயல்பாக வந்து சேர வேண்டியவை என்று ஆன்மிக தளத்தில் நின்று பாரதி சிந்திக்கிறான்.

எல்லா உயிர்களிலும் நானே யிருக்கின்றேன்

என்றுரைத்தான் கண்ண பெருமான்

எல்லாரும் அமரநிலை யெய்துநன் முறையை

இந்தியா உலகிற் களிக்கும் - ஆம்

இந்தியா உலகிற் களிக்கும் - ஆம், ஆம்

இந்தியா உலகிற் களிக்கும்

www.t.me/tamilbooksworld

- என்று அவன் பாடியிருப்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ‘எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான்’ என்பதுதான் இந்தியா உலகுக்கு வழங்கிய உயரிய ஆன்மிகச் செய்தி. இறைவனை யாரும் பழிக்க மாட்டோம்; பகைக்க மாட்டோம்; தாழ்வாக கருதமாட்டோம்; அடிமைப்படுத்த நினைக்க மாட்டோம்; இறைவனுக்கு எதிராக வன்முறையை விதைக்கமாட்டோம்; இறைவனின் அன்பைப் பெறவே அனைவரும் விரும்புவோம்; இறைவன் மீது அன்பு செலுத்தி அகம் மகிழ்வோம். எல்லா உயிர்களிலும் அந்த இறைவனே இருக்கிறான் என்ற பேருண்மை புரிந்துவிட்டால் பால பேதம், இன பேதம், நிற பேதம், சாதி பேதம், வர்க்க பேதம் வளர்வதற்கான வழியே இல்லை. ஒருமையில் கனிவது ஞானம். வேற்றுமையில் விளைவது அஞ்ஞானம்.

ஒருமையுணர்வுதான் மனிதனை அமரனாக்கும். எல்லாரும் அமரநிலை அடையும் வழியை அன்பின் மூலம்தான் அடைய முடியும். அன்பிருக்கும் இடத்தில்தான் சமத்துவம் இருக்கும்; சமத்துவம் உள்ள இடத்தில்தான் சகோதரத்துவம் செழிக்கும். இந்த நிலை வந்துவிட்டால்,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்

*எல்லாரும் இந்திய மக்கள்*

*எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை*

*எல்லாரும் இந்நாட்டு மன்னர்*

- என்ற நிலை எளிதாக வாய்த்துவிடும் என்பதுதான் பாரதியின் பெருங்கனவு.

*நுமக்கினித் தருமம் நுவன்றிடக் கேண்மின்!*

*ஒன்றாம் கடவுள்; உலகிடைத் தோன்றிய*

*மானிட ரெல்லாம் சோதரர்; மானிடர்*

*சமத்துவம் உடையார்; சுதந்திரம் சார்ந்தவர்*

- என்பதுதான் பாரதியின் லட்சியப் பிரகடனம். அவனுடைய எழுத்து யாகத்தின் மூலமந்திரம் இந்தப் பாடலில்தான் தரிசனம் தருகிறது.

www.t.me/tamilbooksworld

*எப்பதம் வாய்த்திடுமேனும் - நம்மில்*

*யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்*

- என்பதுதான் அந்த மகாகவியின் சோசலிச தர்மம்.

*ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை*

- என்பதுதான் இந்த மண்ணுக்கு அவன் தந்த சோசலிச கோஷம்.

'சகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வரெல்லாம் திருடர்; அங்கே குருக்களெல்லாம் பொய்யர்; பண்டிதரெல்லாம் மூடர் ('புதிய உயிர்' கட்டுரை) என்பதுதான் அவன் கண்டு தெளிந்த உண்மை.

*பாரதி கம்யூனிஸ்டா? காந்தியவாதியா?*

மகாகவி பாரதி 1921-ல் மண்ணுலகிலிருந்து மறைந்தான். கம்யூனிஸ்ட் இயக்கம் இந்தியாவில் 1925-ல் தான் விழி திறந்தது. எனவே, பாரதி ஒரு கம்யூனிஸ்டா என்ற கேள்வி எழுவதற்கே வாய்ப்பில்லை. ஆனால், தமிழகத்தில் உலகளாவிய பார்வை உடைய ஒரே கவிஞனாக

அவனுடைய வாழ்காலத்தில் அவன் ஒருவன் மட்டுமே இருந்திருக்கிறான். ஒரு பத்திரிகையாளனாக இருந்ததே அவனுடைய பார்வையின் பரப்புக்கும், அறிவின் விரிவுக்கும் முதற் காரணம். இந்தியாவில் அவன்தான் முதன் முதலில் சோவியத் புரட்சியை,

ஆகாவென் றெழுந்து பார் யுகப் புரட்சி

கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்

- என்று பாட்டில் பதிவு செய்கிறான். போல்ஷ்விக்குகள் பற்றியும், லெனின் தலைமை குறித்தும் அவன் தெளிவாக அறிந்திருக்கிறான். சோவியத் புரட்சியை யுகப் புரட்சியாகக் கருதி மகிழ்ந்தவன், பின்னாளில் நிகழ்ந்த வன்முறைகளுக்கு எதிரான விமர்சனத்தை வைக்கிறான்.

'ருஷ்யாவில் லெனின், மின்த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளை நிலமும், பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடைமையாகிவிட்டது... ஆனால், இந்த முறைமை, போர் கொலை பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவி வருவது எனக்குச் சம்மதம் இல்லை... இதற்கு நாம் என்ன செய்வோம். கொலையாளிகளை அழிக்கக் கொலையைத்தானே கைக்கொள்ளும்படி நேருகிறது; அநியாயம் செய்வோரை அநியாயத்தாலேதான் அடக்கும்படி நேரிடுகிறது என்று லெனின் சொல்கிறார். இது முற்றிலும் தவறான கொள்கை...'

'எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்து, அப்படியிருக்க சமத்துவம், சகோதரத்துவம் என்ற தெய்விக தர்மங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்து வெட்டு பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச் செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கையென்று நான் நினைக்கிறேன்...கொலையாலும் கொள்ளையாலும் அன்பையும் சமத்துவத்தையும் ஸ்தாபிக்கப் போகிறோம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்று நான் கருதுகிறேன்' (செல்வம் - சமூகம்) என்று சொல்லும் பாரதி வன்முறை மூலம் வரும் சமூக மாற்றத்தை வரவேற்கவில்லை.

'தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்கவல்லதாகும். இதனை அறியாதார் உலக சரித்திரத்தையும்,

www.t.me/tamilbooksworld

இயற்கையின் விதிகளையும் அறியாதார் ஆவர்' என்ற பாரதியின் கருத்து 'நிரந்தரமான நன்மையைப் பொய்யும், வன்முறையும் கொண்டு வராது' (Permanent good can never be the outcome of untruth and violence) என்ற மகாத்மா காந்தியின் கருத்தோடு பொருந்துகிறது.

'லெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவிலே இருக்கிறோமாதலால், இந்தியாவின் சாத்யா சாத்தியங்களைக் கருதியே நாம் யோசனை செய்ய வேண்டும்' என்று தன் அபிப்ராயத்தைக் குழப்பத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தும் மகாகவி, 'கொள்கைகளும், கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க முயல வேண்டும். செல்வர்களுடைய உடைமைகளைப் பலாத்காரமாக பறித்துக்கொள்ள முயலுதல் இந்த நாட்டிலே நான் மேற்கூறியபடி பொருந்தவும் செய்யாது; சாத்யமும் இல்லை' என்று அறுதியிட்டுரைக்கிறான். கவிஞனின் இந்தக் கருத்து மகாத்மா காந்தியின் 'தர்மகர்த்தா கொள்கை'யின் விளக்கமாகவே அமைந்து விடுகிறது.

www.t.me/tamilbooksworld

'கோடிக்கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்குமென்ற நிச்சயமில்லாமலும், லட்சக்கணக்கான ஜனங்கள் ஒருவேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப் பட்டினியால் கோர மரணமெய்தும்படியாகவும் நேர்ந்திருக்கும் தற்கால நிலைமை நாம் ஒரு க்ஷணங்கூடச் சகித்திருப்பது ஞாயமில்லை' என்று அதே கட்டுரையில் எழுதும் பாரதி, 'சமத்துவம் உடனே வர வேண்டும்; ஆனால், அது வன்முறையால் வரலாகாது' என்று தீர்மானமாகச் சொல்லிவிடுகிறான். காந்தியின் கருத்தும் இதுதான்.

காந்தியின் 'தர்மகர்த்தா கொள்கை' செல்வம் நிறைந்தவர்களின் உயரிய பண்புகளின் மீதும், தாராள மனப்போக்கின் மீதும், நலிவுற்றவர்களின் நலன்களைப் பராமரிக்கவே ஆண்டவன் தமக்குச் செல்வத்தை வழங்கியிருக்கிறான் என்று எண்ணும் ஆன்மிக உணர்வின் மீதும் நம்பிக்கை கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால், காந்தியின் நம்பிக்கை அவருடைய கண்முன்னாலேயே தகர்ந்து தரைமட்டமாகி விட்டது. ஏழைகளின் வறுமையைப் போக்க எந்தச் செல்வந்தரும் தன் செல்வத்தைப் பங்குபோடத் தயாராக இல்லாதபோது, பாரதியின் சித்தாந்தமும், காந்திய நம்பிக்கையும் வெறும் காகித எழுத்தாகவே என்றும் இருக்கும்.

சட்டம்தான் சமத்துவத்தைக் கொண்டு வர முடியும். நம் அரசமைப்புச்

சட்டத்தில் திடீர் சோசலிசவாதிகளால் முகப்புரையில் (சோசலிஸ்ட் ரிபப்ளிக்) சோசலிசக் குடியரசு என்ற பதப் பிரயோகம் செய்யப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையை வரவேற்று, அன்னிய முதலீட்டுக்கு வாசல் கதவை திறந்து வைத்து, தனியார் தொழிலை ஊக்குவித்து, பொதுத்துறை நிறுவனங்களுக்கு மூடுவிழா நடத்தும் இன்றைய அரசியல் போக்கில் சோசலிசம் என்ற வார்த்தை முகப்புரையில் அதற்குரிய அர்த்தத்தை முழுமையாக இழந்து வெறும் அலங்காரச் சொல்லாகி விட்டது.

செல்வர்களின் நன்னெறியின் மீது மகாத்மாவுக்கிருந்த நம்பிக்கை மகாகவிக்கு இல்லை. அதனால்தான், ‘உலகத்துச் செல்வர் சகல ஜனங்களுக்கும் பொதுவாகிய பூமியைத் தங்களுக்குள்ளே பங்கிட்டெடுத்துக் கொண்டு, பெரும் பகுதியார் சோறின்றி மாறும்படி விடுகிறார்கள். ஏழைகளைக் காப்பாற்ற வேண்டாமா என்று கேட்டால், ‘அவர்களுடைய கர்மத்தினால் அவர்கள் ஏழையாக இருக்கிறார்கள். அதற்கு நாங்களா பொறுப்பு? நாங்களென்ன ஏழைகளுக்குக் காவலாளிகளா? என்று கேட்கிறார்கள். உலகம் மாறுகிறது. ஏழைகளுக்கு நியாயம் செய்ய வேண்டும்.

www.t.me/tamilbooksworld

‘ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாளிகள் ஒரு சபை கூடி, அந்தக் கிராமத்திலுள்ள ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய யோசனைகளை பண்ணி நிறைவேற்ற வேண்டும். அன்பினால் உலகத்தின் துயரங்களை எளிதாக மாற்றிவிடலாம். அங்ஙனம் செய்யாமல் அஜாக்கிரதையாக இருந்தால் ஐரோப்பாவைப் போல் இங்கும் ஏழை, செல்வர் என்று பிரிவு பலமடைந்து விரோதம் முற்றி, அங்கு ஜனக்கட்டு சிதறும் நிலைமையில் இருப்பதுபோல், இங்கும் ஜனசமூகம் சிதறி மகத்தான விபத்துக்கள் நேரிட இடமுண்டாகும்’ என்று எச்சரிக்கிறான் பாரதி.

‘நான்கு பன்றிகள் அல்லது நான்கு நாய்கள் கூடி யாதேனும் ஒரு ஊரில் அல்லது காட்டில் கிடைக்கக்கூடிய ஆகாரம் முழுதும் தங்களுக்கே தஸ்தாவேஜுப்படி சொந்தம் என்றும், தாங்களாக இஷ்டப்பட்டு, தாங்கள் திட்டம் செய்து கொடுக்கும் அளவுப்படிதான் மற்ற எல்லாப் பன்றிகள் அல்லது எல்லா நாய்களும் உண்ணக் கூடுமென்றும் விதி போடுகிற வழக்கம் (மனிதருக்குள் இருப்பது போல்) அந்த ஜந்துக்களிடையே காணப்படுவதில்லை. சிறு தொகையான மனிதருக்கு அடுத்த வேளை ஆகாரம் கிடைப்பது நிச்சயமாகவும், பெருந்தொகையோர்க்கு அடுத்த வேளை சோறு நிச்சயமில்லாமலும் ஏற்பட்டிருக்கும் சம்பிரதாயம் மனிதரைத் தவிர வேறெந்த சாதி

ஜீவர்களிடத்திலும் கிடையாது. காக முறவு கலந்துண்ணக் கண்டீரே' என்று கூறும் மகாகவி விலங்கிற்கும், பறவைக்கும் உள்ள பெருந்தன்மைகூட மனிதனுக்கு இல்லையே என்று வருந்துகிறான்.

காகம் மட்டும் கூடி உண்பதனால்தான் ‘காக்கை குருவி எங்கள் சாதி' என்று பாடுகிறான் நம் கவிஞன்.

கேட்காத வரத்தைக் கேட்டவன்

கடவுளை நம்பும் நாம் அனைவரும் கோயிலுக்குச் செல்கிறோம். ஆலயத்தில் நுழைந்து ஆண்டவனை வணங்குகிறோம். நாம் நடத்துவது வழிபாடா? நாம் செய்வது பிரார்த்தனையா? என்ற கேள்விகளே நமக்குள் எழுவதில்லை.

மண்ணில் உள்ள மனிதர் யாவரும் சுயநலமாகவே சிந்தித்து, சுயநலமாகவே செயற்பட்டு, சுயநலமாகவே வாழப் பழகியவர்கள். நமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தனை என்ற பெயரில் பட்டியல் போட்டுத்தான் பழக்கம். நூறு கிடைத்தால் ஆயிரம் கேட்கிறோம். ஆயிரம் கிடைத்துவிட்டால் கோடிக்கு அடிபோடுகிறோம். எனக்கு வேண்டும் என்று கேட்பதெல்லாம் பிச்சை, அடுத்தவருக்காக வேண்டுவதுதான் பிரார்த்தனை. பெர்னாட்ஷா ‘சாதாரண மனிதர்கள் பிரார்த்தனை செய்வதில்லை; பிச்சையெடுக்கிறார்கள்' (common people do not pray; the only beg) என்றார். ஆண்டவனிடம் நாம் அன்றாடம் அழுது தொழுது பிச்சையெடுக்கிறோம். பாரதியோ பிரார்த்தனை செய்கிறான்.

www.t.me/tamilbooksworld

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்

கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்

மண்மீதுள்ள மக்கள், பறவைகள்,

விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்

யாவும் என்வினையால் இடும்பை தீர்ந்தே

இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே

செய்தல் வேண்டும்...

பூமண்டலத்தில் அன்பும் பொறையும்

விளங்குக; துன்பமும், மிடிமையும், நோவும்

சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம்

இன்புற்று வாழ்க! என்பேன். இதனை நீ

திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி

'அங்ஙனே ஆகுக! 'என்பாய் ஐயனே!

(விநாயகர் நான்மணி மாலை)

மனிதர்கள் இன்பமும் அன்பும் பொங்க வாழவேண்டும் என்பதோடு பாரதியின் பிரார்த்தனை நிற்கவில்லை. பறவை, விலங்கு பூச்சி, புல், பூண்டு வரை இன்புற்று வாழ இருகரம் கூப்பி இறைவனை வேண்டுகிறான்.

www.t.me/tamilbooksworld

அடுத்தவர் நலனுக்காகப் பிரார்த்திப்பதும், அடுத்தவர் துயர் துடைக்கத் துடிப்பதும், அடுத்தவரோடு செல்வத்தைப் பகிர்வதும்தான் அர்த்தமுள்ள வாழ்க்கை என்கிறான். அதற்காக அனைவரையும் அன்புத் தவமியற்றச் சொல்கிறான்.

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே தவம் செய்தால்

எய்த விரும்பியதை யெய்தலாம் - வையகத்தில்

அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்

இன்புற்று வாழ்த லியல்பு

- என்ற வெண்பாவில் 'அன்பிருக்கும் இடத்தில்தான் இன்பமிருக்கும். அதனால் அனைவரும் இன்பம் பெறுவதற்காகவாவது அன்பு செய்யுங்கள்' என்று வேண்டுகிறான்.

துன்ப நினைவு களும்

சோர்வும் பயமு மெல்லாம்

அன்பி லழியு மடீ - கிளியே

அன்புக் கழிவில்லை காண்.

துன்பத்தையும், சோர்வையும், பயத்தையும் அன்பு அழிக்கும். ஆனால், அன்புக்கு அழிவென்பதே இல்லை என்று அடித்துச் சொல்கிறான்.

ஆவியி னுள்ளும் அறிவி னிடையிலும்

அன்பை வளர்த்திடுவோம்

***

அன்பென்று கொட்டு முரசே - அதில்

ஆக்க முண்டா மென்று கொட்டு

***

உயிர்களிடத்தி லன்பு வேணும் - தெய்வம்

உண்மை யென்று தானறிதல் வேணும்

www.t.me/tamilbooksworld

***

உமக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்

- என்று எல்லா இடங்களிலும் அன்பை விதைப்பதையே தன் எழுத்தின் வேள்வியாகப் போற்றியவன் நம் மகாகவி. ஊருக்கு உழைப்பதையே யோகமாகப் பயின்றவன் அவன்.

...உயிரெலாம்

இன்புற்றிருக்க வேண்டி நின்னிரு தாள்

பணிவதே தொழிலெனக் கொண்டு

கணபதி தேவா! வாழ்வேன் களித்தே.

- என்ற பாரதியின் ஒரே கனவு உயிர்கள் அனைத்தும் துன்பமும், வறுமையும் நீங்கி, நோவும் சாவும் இன்றி, அன்பும் இன்பமும் சிறக்க மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்பதுதான். இந்தக் கனவு நிறைவேற சாதியும், மதமும் தடைக்கற்களாக இருக்கக்கூடாது என்பது

அவன் தவம். சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் மனித சமூகத்தில் மலர்ந்து மணம் வீச அனைவரும் அன்பு செய்வதை ஒரு தொழிலாக மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் அவன் பிரார்த்தனை.

நம் உள்ளம் முழுவதும் அன்பு மயமானால் அவனுடைய கனவு அந்தக் கணமே மெய்ப்படும்!

மனதி லுறுதி வேண்டும்

வாக்கினிலே யினிமை வேண்டும்

நினைவு நல்லது வேண்டும்

நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

கனவு மெய்ப்பட வேண்டும்.

www.t.me/tamilbooksworld